உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்

சைவ எல்லப்பநாவலர்.

அருளிச்செய்த

அருணாசலபுராணம்-

மூலமும் - உரையும்.

இவை,

திருத்தணிகை

விசாகப்பெருமாளையரவர்கள்

மாணாக்கரிலொருவராகிய

திருவண்ணாமலை

[அல்லாளப்பிரபு யர்ச்சேர்வைதார்.]

அருணாசலமையரால்,

முன்பதிப்பித்தபிரதிக்கிணங்கப்

பரிசோதிக்கப்பட்டு

திருவண்ணாமலைப்படம்-க.

பிரமன்-மால்-அடிமுடியறியாதபடம்-க.

பார்வதியம்மை-திருவவதாரபடம்-க.

இடப்பாகமளித்தபடம்-க.

திருக்கண்புதைத்தபடம்-க.

ஆக-ஐந்துபடங்களுடன்.

திருவொற்றியூர்

இருசப்பமுதலியார்-குமாரர்

பரசுராமமுதலியாரது

பரப்பிரமமுத்திராக்ஷரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

௧௮௭௨ வரு

உ

சிவமயம்.

புராணத்தின் சருக்கங்களினுடைய

அட்டவணை.

சருக்கங்கள்.	பக்கம்.
பாயிரம்.	க
முதலாவது-திருநகரச்சருக்கம்	க
உ-வது-திருமலைச்சருக்கம்	உக
ங-வது-திருவவதாரச்சருக்கம்	ருஉ
ச-வது-திருக்கண்புதைத்தசருக்கம்	எசு
ரு-வது-இடப்பாகம்பெற்றசருக்கம்	கூஎ
சு-வது-வச்சிராங்கதபாண்டியன்சருக்கம்	௱௰ச
எ-வது-தீர்த்தச்சருக்கம்	௱உரு
அ-வது-திருமலைவலம்புரிச்சருக்கம்	௱உச
கூ-வது-ஆதித்தச்சருக்கம்	௱சசு
௰-வது-பிரதத்தச்சருக்கம்	௱சஎ
௰க-வது-பாவத்தீர்த்தச்சருக்கம்	௱ருங
௰உ-வது-புளகாதிபச்சருக்கம்	௱கூங

ஆகப்பாயிரமுள்படச்சருக்கம் ௰ங.

சருக்கம் அட்டவணை

முற்றிற்று.

திருவண்ணாமலை





முதலாவதுநந்திகேசுரர்-மார்க்கண்டேயருக்கு-உபதேசித்தபடம்.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருணாசலபுராணம்.

மூலமும் - உரையும்.

பாயிரம்.

விநாயகர்தோத்திரம் - கலிவிருத்தம்.

மிக்கவேதவியாசர் விளம்பிய
விகற்பத்தினைய யின்றமிழ்செய்திட
முக்கண்வெற்பினை முகமதவாரியைக்
மைக்களிற்றினைக் கைதொழுதேத்துவாம்.

(இ-ள் பொருள்)

அநேகவேதங்களை இடல் ஏகவேக உணர்ந்த வியாசரால் அருளிச்செய்யப்பட்ட ஸ்காந்தபுராணத்தில் உருத்திரசங்கிதையிலிருக்கும் இந்த அருணாசலமான்மியத்தை யிக்காலத்தில் தமிழிலே சொல்ல இச்சித்த இவ்வியல்பியன் றசொல்லும்படி அனுக்கிரகம்பண்ணுதற்கு மூன்றுகண்களையுடைய மலைபோன்றவனைச் சமுத்திரம்போன்ற மும்மதத்தையுடைய பிரகாசத்தையுடையயானைமுகமும் பெருக்கரீயனாயகனைக்கையினால் தொழுது ஸ்தோத்திரஞ்செய்வோம் என்றவாறு இடையூறில்லாமல்

(சபாபதி துதி)

மூதிருஞ்சுவைமதுரம்பெற மொழியுந்தமிழ்விரகன்புகழ்
பதிகப்புனைபவனைபயினர் பவபஞ்சனைமலன்கதி
குதிரும்படிபகிரண்ட முமூடையும்படியிலகும்படி
யதிரும்படிநடனம்புரி பதிருங்கழலதிருங்கழல்

(இ-ள்.) மிகுந்தமதுரரசமுண்டாகப்பாடுகின்ற திருஞானசம்பந்தமூர்த்திஸ்வாமிகளால் ஸ்தோத்திரம்பண்ணப்பட்ட பதிகமாகிய மாலையைத்தரிக்கின்றவராகியும் தம்மையடைந்தவர்கள் பிறவியைக்கெடுப்பவராகியும் மலரகிதராகியுமிருக்கின்ற சபாபதியினுடைய சூரியனுதிரவும் பகிரண்டமுடையவும் விளங்குகின்றபூமியதிரவும்நடனத்தைச்செய்யாநின்ற மிகவுஞ்சப்திக்கின்றவீரகண்டையைத்தரித்தபாதத்தைவணங்குவோம்-எ-று. (இச்செய்யுளுக்குப்பயனிலைவருவிக்கப்பட்டது.) (௧)

ஸ்தலமகிமை அறுசீரடியாசிரிய விருத்தம்.

இரவிகள்சந்திரர் வயிரவர்விஞ்சைய ரிமையவ ரெண்டிசையோ
ருரகருந்தவர்முனிவர்பங்கயருவணநெடுங்கொடியோர்
பரவிநெருங்கலினுலகநிறைந்தவர்பணியுமிடங்கிடையா
தரகரவென்பதுகடலின்முழங்கியதருணைவளம்பதியே.

(இ-ள்.) சூரியருஞ்சந்திரரும்வயிரவரும் வித்தியாதரரும் தேவரும் அஷ்டதிக்குப்பாலகரும் நாகலோகத்தாரும் அரியதபசிகளும் முனிவரும்பிரமாக்களும் கருடகொடியையுடையவிஷ்ணுக்களும் பரந்துநெருங்குதலினால் உலகநிறைந்து அவர்கள்வணங்குதற்கு இடங்கிடையாததாயவர்களாலேசொல்லப்பட்ட அரகரவென்கிறசப்தமானது சமுத்திரத்திலும் அதிகமாகமுழங்கும்வளப்பத்தையுடையது அருணாசலமென்னும்ஸ்தலமாம்-எ-று. (௨)

இளமுலைமங்கையர்முகமுநெருங்கியவீதிருகுழையும்பகலே
யொளிவொருசந்திரனுடனிருசெங்கதிருதயமெனுந்தனியூர்
தலையவிழுந்தொடைமகபதிதன்பதிதனபதிதன்பதியு
மளகைவளம்பதிதனிலும்வளம்பதியருணைவளம்பதியே.

(இ-ள்.) இளமையாகிய ஸ்தனங்களையுடையபெண்கள்முகங்களும் அவர்களணிந்தஇரண்டு இரத்நகுண்டலங்களும்பகலிலே பிரகாசிக்கின்றதுசந்திரனுடனே இரண்டுசூரியருதயமானார்களென்றுசொல்லும்படியாகியதுப்பற்றலுர்முறுக்கவிழ்ந்த கற்பகமாலையைத் தரித்த தேவேந்திரனுடையபட்டணமாகிய அமராவதியையுங்குபேரனுடைய நகரமாகிய அளகாபுரியைப்பார்க்கிலும்வளத்தையுடையது அருணாசலமென்னுஞ்ஸ்தலமாம்-எ-று. (௩)

பாயிரம்.

காலனெதிர்த்திடமார்பிலுதைத்தவர்காமனுருப்பொடியா
ராலமிடற்றினர்மாலைமதிக் குறையாடரவப்பணியா
ராறுமுகத்தவன்ஞான மளிப்பவனுமைசற்கரியார்
சூலமெடுப்பவர்மேவு திருப்பதிசோணகிரிப்பதியே.

(இ-ள்.) யமனெதிர்க்கமார்பி லுதைத்தவராகியும் மன்மதனுடைய் தேகத்தைப்பொடியாகச் செய்தவராகியும்விஷத்தைக்கண்டத்திலதரித்த வராகியும் மூன்றாம்பிறையை மாலையாகத்தரித்தவராகியும் ஆதிசேஷசர்ப்பத்தை ஆபரணமாகப்பூண்டவராகியும் பிரம்மாவிஷ்ணுவும் தேடுதற்கரியவராகியும் சூலத்தையெடுத்தவராகியும் விளங்குகின்றபரமசிவன் வாசஞ்செய்கின்றஅழகாகியபதி அருணாசலமென்னுந்தலமாம்.எ-று.

சந்தக்கலிவிருத்தம்-பரமசிவவணக்கம்

உறவொடுபகையறு மொருமுதலெவனெவ
னிருமையிலுலகரு ளிறையவனெவனெவன்
மறைமுடிவினிடம்வளர்பவனெவனெவன்
னறிவினிலறிபவ னடியிணைதொழுவாம்,

(இ-ள்.) உறவும்பகையுமில்லாததொப்பற்றமுதன்மையானவனெவன் சாவசங்காரமான இசைபு உலகத்தைஉண்டாக்குகிறவனெவன்வேதமுடிவிலேசகலத்தையுமறிகிறவனெவன் அப்படிப்பட்டதன்மையையுடையசிவனதுதிருவடிகளையாம் வணங்குவோம்-எ-று. (௨)

கலிநிலைத்துறை-அருணாசலஸ்துதி.

மணிகொண்டநெடுங்கடலில்விழிவளருந்திருமாலுமறையினோனும்
பணிகொண்டபாதலத்துமபூதலத்துமீதலத்தும பரிந்துதேட
வணிகொண்டபிரமாண்டகோளகைபொற்கோளகையாயழகுகாட்டக்
கனிகொண்ட வொருவரையாமொருவரையாமகலாதுகருத்திற்சேர்ப்பாம்

(இ-ள்) இரத்தினங்க ளிருப்பிடமாகிய நீண்டகடலில் நித்திரை செய்கின்றவிஷ்ணுவும்பிரம்மாவும் நாங்கள்வாசஞ்செய்கின்ற பாதாளத்திலும்பூமியிலும் மேலுலகத்திலும்வருந்தித்தேட அவர்களால்எட்டப்படாமல அழகாகியபிரமாண்டகோளகையானது பொன்னாற்செய்யப்பட்ட கோளகையாக அழகுகாண்பிக்கும்படி கொண்ட ஒப்பற்றஅக்கினிமலையாகிய பரமசிவத்தை நீங்காது இருதயத்திற் சேர்த்துக்கொள்வோம்-எ-று, (௩)

ஒருமாலைக்கரத்தினில்வைத் தொருமாலைச்சிரத்தினில்வைத்துவகை
மேழு தருமாலையிடத்தினில்வைத்தருளவாலைப்பவளச்செஞ்சயிலம்
போல, வருமாலைமுகத்தானையளித்தானை யொருமாலையகிழவேதும்
பெருமானையருணகிரிப் பெம்மானையடிபணிந்து பிறவிதீர்ப்பாம்,

(இ-ள்) தாருகாவனரிஷிகள் வரவிட்ட மானைக் கையிலே யேந்துஞ் சிரசிலே குருமான்போன்ற கங்கையைச் சடையில் வைத்தும் ஏழுலகத்தையும்பெற்ற உமாதேவியை வாமபாகத்தில் வைத்தும் அடியார்களுக்கருள் செய்கிறவரும் பவளம்போல்வருகின்ற ஆனைமுகத்தையுடைய கணபதியைப்பெற்றவரும் போர்செய்கிற ரிஷபவாகனத்தின் மேலெழுந்தருளுகின்றவருமாகிய அருணாசலஸ்தலத்தில் வீற்றிருக்கின்ற பரமசிவன்பாதத்தை வணங்கி இனிமேல்வரும்பிறப்பைத்தீர்த்துக்கொள்ளுவோம்-எ-று. (எ)

உண்ணாமுலையம்மை துதி.

காரொழுகுங் குழலாளைக் கருணைவழிந்தொழுகுமிரு கடைக்கண்ணாளை
மூரலிளநிலவொழுகப் புழுகொழுகழகொழுகு முகத்தினாளை
வாரொழுகுந் தனத்தாளை படிவொழுகி நந்தெரியாத மருங்குலாளைச்
சீரொழுகு பதத்தாளை யருணையுண்ணாமுலையாளைச் சிந்தைசேர்ப்பாம்

(இ-ள்) மேகம்போன்ற கூந்தலையும் கிருபைவழிந்தொழுகாநின்ற இரண்டு கடைக்கண்களையும் தந்தங்களின் காந்தி இளநிலவாகிய சந்திரிகைபோல் பிரகாசிப்ப புழுகு வாசிக்கின்ற அழகுபொருந்திய முகத்தையும் மிகவுச்சரித்த ஸ்தனங்களையும் அதிகவழகையுடையதாய் ஒருவருக்குந்தெரியாத இடையினையும் சிறப்புப்பொருந்திய பாதங்களையுமுடைய அருணாசலஸ்தலத்தில் வீற்றிருக்கின்ற உண்ணாமுலையம்மையை மனதில் நினைத்துக்கொள்ளுவோம்-எ-று. (அ)

யானைதிறைகொண்ட விநாயகர் துதி.

மதமூன்றுமாறுபொருவகளிற்று முகத்தானை மனதிலேதான்
பதமூன்று மறுத்தவர்க்குபய தமூன்றுங் கடந்தபதம் பாலிப்பானை
விதமூன்று புரமடித்தாளிந்தருளு மெய்க்குமுதலைவேழ்பாடேசந்
சிதமூன்று பிறப்பொழிக்குமானை யிறைகொண்டவனைச் சிந்தைசேர்ப்பாம்

(இ-ள்) மும்மதங்களும் ஆறாகிஓடுகின்ற யானைமுகமுள்ளவரும் மனதில் தம்முடைய பாதங்களைச் சிந்திக்கின்ற அரியதவத்தையுடையவர்களுக்கு நான்காம்பதமாகிய சாயுச்சியத்தைக் கொடுப்பவரும் முப்புரத்தைநீறுசெய்த சிவனாலே பெறப்பட்டவரும் ஒப்பற்ற மூன்று சஞ்சிதவினையையுடைய பிறப்பைக் கெடுக்கின்றவருமாகிய யானைதிறைகொண்டவனென்னும் விநாயகனை மனதிற்சேர்த்துக்கொள்ளுவோம்-எ

சுப்பிரமணியர் துதி.

கொந்தாருமலர்ச்சோலைபரணை நெடுங்கோபுரத்திற் குமரவேளை
வந்தாரைவாழ்விக்கவடவி தனிலுறையுமயிலினானைக்
கந்தாருகடகளிற்றுயங்கவாறுகுத்தக்குருநிழலுமங்கைகருமுன்
தந்தானையலர்க்கட்பந்தாரானைப் பணிவதாடலைமேற்கொள்வாம்

இ-ள் பூங்கொத்துக்களையுடைய சோலைசூழ்ந்த அருணாசலத்துக்கிழக்குக் கோபுரவாசலுக்கடுத்தமேல் புறத்து மண்டபத்திலிருக்கிறவரும் தம்மை

டைந்தவர்களைப் பிழைப்பிக்கச்செய்ய வடவீதியிலே வாசஞ்செய்கிற மயில்வாகனக்கடவுளும் தறியிற்கட்டப்பட்ட மதம்பொருந்திய ஐராவதத்திலேறுகின்ற தேவேந்திரனுக்குத்தெய்வலோகத்தையுங்கற்பகவிருட்சததினிழலையும் கொடுத்தவரும் கடப்பமாலையைத் தரித்தவருமாகிய சுப்பிரமணியக்கடவுளை வணங்குகிற அடியார்களுடைய பாதங்களைத் தலைமேல்வைத்துக் கொள்வோம்-என்றவாறு. (௰)

(சைவசமயாசாரியர்கள் துதி.)

வாதுகொண்டபரசமய கோளரியையடிவணங்கி வன்கற்றூணைத் தீதுகொண்டகருங்கடலைக் கடந்தசெழுந் தமிழ்க்கடலின் றிருத்தாள் போற்றி, காதுகொண்ட விழிப்பாவை திருமனைக்கெம் பெருமானைக் கால்கடேனவத், தூதுகொண்டசுந்தரனைத்தம்பிரான் றன்றோழனையாந் துதிசெய்வோமே.

(இ-ள்.) வாதுகொண்டுஜெயிக்கவந்தசமணர்களாகியயானைகளுக்குச் சிங்கமாகிய திருஞானசம்பந்தமூர்த்தி ஸ்வாமிகளது பாதத்தைவணங்கி வலியகருங்கல்லோடு சேர்த்துக்கட்டிச் சமணர்கள் சமுத்திரத்திற்போட அக்கல்லினாலேதானே அச்சமுத்திரத்தைக்கடந்த செந்தமிழ்க்கடலென்று சொல்லப்பட்ட அப்பாசுவாமிகளதுபாதத்தைவணங்கி காதளவுந்தாவிய கண்களையுடைய பரவைநாச்சியாருடைய திருமனைக்கு இரண்டுபாதங்களுமனோக நடந்தாண்டவரைத் தூதாகவனுப்பியதம்பிரான்றோழராகிய சுந்தரமூர்த்திசுவாமிகளைவணங்குவோம். (எ-று.)

(தரவு-கொச்சகக் கலிப்பா.)

அத்தனார் பெருந்துறைபுக் கரியவினைக்கடல்கடந்து
புத்தனார் மதங்கடிந்து புனிதமாகியசீவன்
முத்தனார் மாணிக்க வாசகனார்முத்திக்கு
வித்தனார் வாதவூர் வித்தகர்தாள்போற்றி.

(இ-ள்.) பரமசிவன்குருமூர்த்தமாக எழுந்தருளி யிருந்த திருப்பெருந்துறைக்குப்போய் அச்சாமியினுடைய அனுக்கிரகம்பெற்று அரிதாகிய தீவினைக்கடலைத்தாண்டி அந்தக்காலத்தில் வியாபித்திருந்தபவுத்தர்களுடைய மதத்தைக்கண்டனஞ்செய்து பரிசுத்தமாகியசீவன்முத்திதசையடைந்தவரும் அம்முத்தியாகிய வீட்டிற்கு விதையாகியும் திருவாதவூரிற்பிறந்த ஞானசொரூபராகியுமிருக்கின்ற மாணிக்க வாசகசுவாமிகளுடைய பாதத்தைவணங்குவாம்-எ-று. (௰௧)

(திருத்தொண்டர்கள் துதி.)

அறுசீரடியாசிரிய விருத்தம். (௰

மனையாளையாற்களித்துமணங்களித்தவியற்பகையார்மலர்த்தாள்போற்றி
தனையாரும்பெருமானுக செச்சிலிடுங்கண்ணப்பர் சரணம்போற்றி
வினையாளரறியாத திருநீலகண்டரடி விரும்பிப்போற்றி
எனையாளுமிளையான்றன் குடிமாறனடியிணையை யிறைஞ்சுவோமே.

(இ-ள்.) பரமசிவன் அடியார்வேடம்பூண்டுவந்து பெண்சாதியை யெனக்குக்கொடுத்துவிடென்றுகேட்க அதற்காக அதிகசந்தோஷத்தையடைந்து சுவாமிகளுக்குத்தன்மனைவியைக்கொடுத்தது அதனால் அதிக மகிழ்ச்சிபொருந்திய இயற்பகைநாயனாருடைய மலர்போன்றபாதங்களைவணங்கி தன்னையாட்கொண்ட சுவாமிக்குத் தான்தின்று ருசிபார்த்தவெச்சிலைக்கொடுத்த கண்ணப்பசுவாமிகளது பாதத்தைவணங்கி வினையையுடையவர்களறியாத திருநீலகண்டநாயனாருடையபாதத்தை மகிழ்ந்துவணங்கி அடியேனையாட்கொண்டருளும் இளையான்குடிமாறநாயனாருடைய பாதத்தைவணங்குவேன்-எ-று. (௰௩)

ஐயடிகள்காடவர்கோ னீரடியைவணங்கிமகவறுத்தெம்மாற்கு, செய்யடிசிலுடன்படைத்தார் திருவடியைத்தொழுதிறைஞ் சேரமன்சேரமான்பெரு-
மெய்யடியைப்புகழ்ந்துதெய்வவுலாசொன்னசேரனடியிருமபினுதந்தி
ப்,பொய்யடிமையிலலாத புலவர்முதலனைவரையும் போற்றுவோமே.

(இ-ள்.) ஐயடிகள்காடவர்கோனாயனாரது இரண்டுபாதத்தையும் வணங்கி எமதுசுவாமிகளுக்குப்பிள்ளையை அறுத்துச்சமைத்தகறியை மெய்விட்ட அன்னத்துடனேபடைத்த சிறுத்தொண்டநாயனாருடைய மெய்யமையாகிய பாதத்தைவந்தித்துத் தெய்வீகம்பொருந்திய உலாப்பிரபந்தம்பாடிய சேரமான்பெருமாணாயனாருடையபாதத்தை பூசையும் பணிந்து மெய்யடிமையையுடைய புலவர்கள்முதலாகிய சகலரையும் வணங்குவோம்-எ-று. (௰௪)

(நந்திகேசுரர்-துர்க்கை-கௌதமர்-சண்டேசுரர்துதி.)

நந்திதிருவடியிறைஞ்சி விநதையடிபுகழ்ந்துமறை நான்கிற்கைநதாய்
வந்தருளுங்கௌதமனார் மலரடியென்முடிக்குமுடி மாலையாக்கித்
தந்தைவிருபதஞ் சிதைத்துசிதையாதபதத்திருந்த தண்டிதாளைச்
சிந்தையிசைக்குடியிருத்தியருணகிரிநினைபவர்தாளசென்னிசேர்ப்பாம்

(இ-ள்.) நந்திகேசுரருடைய அழகியபாதங்களைத் தொழுதுதுர்க்காதேவியினுடைய பாதத்தைவணங்கி நான்குவேதத்தினின்றும் ஐந்தாம்வேதசொரூபமென்றுசொல்லப்பட்ட கௌதமருடைய தாமரைபோன்றபாதத்தை என்சிரசுக்குத்தரிக்கப்பட்ட மாலையாகச்செய்துதம்முடைய தகப்பனாரதுஇரண்டுபாதங்களையும்வெட்டி அதனால்கெடாத மோட்சபதத்திலிருந்தசண்டேசுரருடைய பாதத்தை இருதயத்திற்குடியிருக்கச்செய்து அருணாசலஸ்தலத்தை நினைப்பவருடையபாதத்தைசசிரசிற்சேர்த்துக்கொள்ளுவோம்-எ-று. (௰௫)

(அவையடக்கம்.)

தேறுகின்றகலைகலையுந் தெளிந்தசுவையிருநான்குந் திகழும்பாடல்
கூறுகின்றபுலவர்முன்னே தமியேனுஞ்சிலபுகல்சொற் குறித்தவாறு
வீறுகின்றமறைவிரிஞ்சனேறிவருமனத்திமூர்த் ருப விரிஞ்சன்றுறைதை
யேறுகின்றகருடன்முன்னுமொருமசகம்பறவையெனவிரிதல்போலு

(இ-ள்.) பலநூல்களையுங் குறைவறக்கற்றுஎட்டுச்சுவையும்பொருந்திய தமிழ்ப்பாடல்களைச்சொல்லுகின்றவித்துவான்கள்முன்னேஒன்றுமறியாதயானுஞ்சிலபாடல்களைப்பாட நினைத்தவிதம்விளங்கியநாலுவேதங்களையுடைய பிரமனானவனேறி நடத்தும் அன்னவாகனத்தின்முன்னும் அவன்தகப்பனாகிய விஷ்ணு ஏறும்படியானகருடன்முன்னும ஒருசிறியகொசுதானுமொரு பறவையெனப்பறத்தல்போலும் -எ-று. (௰௭)

நீரிருக்குதெனப்பழித்துவிடுவரோவதுபாலினிகழுமானால்
நாரிருக்குதெனக்கழித்து விடுவரோவதுமலரினண்ணுமானா
லாரிருக்குஞ்சடைமுடியார் விடமிருக்குந் திருமிடற்று அருணைநாதர்
பேரிருக்குந்தகைமையினாலெனதுரையையிகழுவரோபெருமையோரே

(இ-ள்.) பாலொடுகலந்திருக்கின்ற நீரைச்சகவாசயோக்கியதால்தள்ளாமலெடுத்துக்கொள்ளுவார்கள்புஷ்பமாலையோடுசேர்ந்தநாரையும் அப்படியேகொள்ளுவார்கள் ஆத்திமாலையைச் சூடிய சடைமுடியையும ஆலகாலமிருக்குங் கண்டத்தையுமுடைய அருணாசலேசுரர் நாமமிருக்கிற பெருமையினாலே என்னாற்செய்யப்பட்ட புன் பாடலையும் பெரியோர்கள் ஒப்புக்கொள்வார்களேயன்றி யிகழார்கள்-எ-று.

அழகுதரக்கனிந்தரச்சமரம்பழையதெனினுமதிலமுதுண்டாமோ
விழைவுதருசுவைக்கரும்புபுதியதுவேயெனினுமதன்விரதம்போமே
இழிவுறுபாடலுமுயர்வு தங்கியசெய்யுளுமவைபோ லிருக்குமாகில்
பழமையெனநலந்தருமோ புதுமையென விகழ்படுமோ பயன்கொள்
வார்க்கே.

(இ-ள்.) அழகியசிவப்புநிறம்பொருந்தப் பழுத்த எட்டிமரம் வெகுநாளையமரமாயிருந்தபோதிலும் அதில்மாதுரியமுண்டாகாது சர்வதராலும் இச்சிக்கப்பட்ட இனிதாகியகரும்பு கொஞ்சநாளையதாயிருந்தாலுமஅதில்கசப்புஉண்டாகாது அப்படிபோல் குற்றத்தோடுகூடியசெய்யுள் பழமையாயிருந்ததினாலே ஒருநன்மையைக் கொடுக்காதுயாதொருதோஷமுமில்லாமல் உயர்வுபொருந்தியபாடல் சிலநாளைக்குமுன் னுண்டாயிருந்ததினாலேயே இகழப்படாது பிரயோசனத்தைககொள்வோர்களுக்கு-எ-று. (௰௮)

தினையளவுந்தமிழ்மிடியிற் றகிமதாம்பிறந்தகல்வித் திறமையோரும்
நினையுமியற்சுவையறியாமூடர்பருவறிவின்முன்னே நிற்கலாமோ
வினையடருங்குவளைவிழியனிச்சமலரனையதிருமேனியாளோ (திடாரே
புனைவின்மதன்மலர்க்கணையைப் பொறுப்பதல்லாலமரினைப்புபொறுத்

எட்டுச்சுவையாவன-சிங்காரம்-வீரம்-பெருநகை-கருணை-ரௌத்திரம்-குற்சை-அற்புதம்-பயம்.

(இ-ள்.) தினையளவுகூடச் செந்தமிழ்த்தரிதிராம் இன்றி அதிகமாரம்பிறாதசல்விவல்லவர்களும இலக்கணாசமேஅறியாத மூடர்களாயிருந்த அறிவையுடைய கல்விப்பிரசங்கத்தின்முன்னிற்கார்கள் கொல்லுந்தொழிலடைகின்ற நீலோத்பலம்போன்றகண்களையும் அனிச்சப்பூவொத்தவுடம்பினையுமுடைய பெண்கள் கருப்புவில்லைத்தரிக்கின்றமன்மதனாலே விடப்பட்ட புஷ்பபாணத்தைப் பொறுப்பார்களேயல்லாமல்கொடிதாகியயுத்ததில்விடுகிற அம்பைப்பொறுக்கார்களதுபோல்-எ-று (௧௯)

(நூல்வரலாறு.)

கருத்துருகவிறைவனந்திக்கருள்புரியநந்திமார்க்கண்டற்கோத,விருத்திமறைவியாசமுனிக்கவனுரைக்கச் சூதனுக்கு வியாசன்சொல்லப்பொருந்தமன விருடியருக்கருட்சூதன் மொழிந்துசிவ புராணங்கோடி, யுருத்திரசங்கிதையுரைத்தவருணகிரிவளத்தினையானுரைக்கலுற்றேன

(இ-ள்) மனதுருகப்பரமசிவன்-நந்திகேசுரருக்கு அருள்புரியநந்திகேசுரரும் மார்க்கண்டேயருக்கருள்செய்ய மார்க்கண்டேயாவேதங்களையொழுங்குசெய்த வியாசருக்கருள்செய்ய வியாசர் - சூதமுனிவருக்குச்சொல்ல சூதர்ஒருவழிப்பட்டமனத்தையுடைய சவுனகாதிரிஷிகளுக்கருள்செய்த சிவபுராணங்கோடியாகும-அவைகளில் முக்கியமாகிய ஸ்காந்தத்தில் உருத்திரசங்கிதையிற சொல்லிய அருணாசலஸ்தலமகிமையைச்சொல்லத்தொடங்கினேன-எ-று. (௨௰)

அருணைநகர்வளமையுமாலயனகந்தைவிடவழல் வெற்பானவாறும்
பொருவில்மகமழித்ததுவும் ஆனுமையை மணந்துங்கண்புதைத்தவாறும், வருமகிடற்கொலைத்ததுவுமிறைவியிடங்கலந்ததுவும்வயிரப்பூணிருவினையையகற்றியதுவடகலைதென்கலைவிதியாலிசைக்கலுற்றேன.

(இ-ள்.) அருணாசலஸ்தலமகிமையும் பிரமாவிஷ்ணுவினுடையகர்வமடங்க-அக்கினிமலையானதும்,ஒப்பில்லாததக்கனுடையயாகத்தை-அழித்துப்போட்டதும், பரமசிவன-பார்வதியைக் கலியாணஞ்செய்ததும், அப்பார்வதி-சுவாமியினுடையகண்களை மூடியதும, மகிடாசுரனை-உமாதேவிகொன்றதும்; அப்பார்வதி-வாமபாகத்திற் சேர்ந்ததும, வச்சிராங்கதபாண்டியனுடைய பாவத்தைநீக்கினதுமாகிய சரித்திரங்களைச் சொல்லுகின்ற கிரந்தத்தை தமிழ் மொழியினாலே சொல்லத்தொடங்கினேன் -எ-று. (௨௧)

பாயிர - முற்றிற்று.

ஆக-திருவிருத்தம்-௨௧.



சிவமயம்.

முதலாவது

திருநகரச்சருக்கம்.

அறுசீரடி ஆசிரியவிருத்தம்.

துங்கமழுவுமுழைபிரம்பு சுரிகையகலாதகையான் றுகிர்க்குன் றூடே, திங்களுமிழ்நிலவனைய வெண்பொடியான் சடைமுடியான் செறிமூசுகண்ணான், பொங்குதிருவரையகலாப் புலித்தோலான் புயநாலான்புரிமூன்றூலான், கங்கைமதிதவழ்சடையான் றிருவாணை செலுத்தும்வெள்ளிக்கயிலைகாப்பான்.

(இ-ள்) உயர்வாகியமழுவும் மானும்பிரம்பும் உடைவாளும் நீங்காதகையையுடையவர்-பவளமலையில் சந்திரன்பொழிகின்றநிலவுபோலத்தேகத்தில் அணிந்த விபூதியையுடையவர்- சடைமுடியையுடையவர், நெருங்கியமூன்றுகண்களையுடையவர், விளங்குகின்றஇடுப்பில்எந்நாளும்நீங்காதபுலித்தோலையுடையவர், நான்குபுசங்களையுமுடையவர், மூன்றுபுரியாகிய பூணூலையுடையவர், கங்கையும் சந்திரனும் தவழாநின்றசடையையுடைய பரமசிவனது கட்டளையைச்செலுத்திக்கொண்டு கைலாசகிரியைக்காக்கிறவர்-எ-று. (௧)

கொய்வனசமலர்சிறத்தான்மைவளருந்திருமிடற்றான் குலவெள்ளேற்றான், சைவமெனும்பயிர்தழைக்கக் கருணைமழைபொழிமேகந் தன்னையொப்பா, னைவரையுமகத்தடக்குஞ் சிலாதார்க்குப்புறத்துலவுமணிபோல்வான், றெய்வமெல்லாந்தொழச்சிவந்த மலர்ப்பதத்தனந்தியெனுந்திருநாமத்தான்.

(இ-ள்.) கொய்யப்பட்டதாமரைமலரையொத்த நிறத்தையும் விஷம்பொருந்திய கண்டத்தையும்நல்லவெண்மையாகிய ரிஷபவாகனத்தையுமுடைய பரமசிவனுக்கு சம்பந்தமாகிய சைவசமயமென்னும் பயிரானது தழைப்பதற்கேதுவாகிய மழையைப்பொழிகின்ற மேகம்போன்றவர் பஞ்சேந்திரியங்களையும்அகத்தில்நின்றும் புறத்தில்நீமையாகியபொருள்களிற் போகவொட்டாமல்அடக்கிய சிலாதாரிஷிக்குப் புறத்திற்சஞ்சரிக்கின்ற உயிர்போன்றவர் விஷ்ணுமுதலாகியதேவர்களெல்லாம்வணங்க அதனாற்சிவப்பேறிய தாமரைப்பூவொத்தபாதங்களையுடையவர் இப்படிப்பட்ட தன்மையையுடையநந்திகேசுரரென்கிற அழகியநாமத்தைப்பெற்றவர்-எ-று. (௨)

ஈசனணிநதிமதியுந் திருவுருவுந்திருவுருவி லிசைந்தநீறும்
நேசவெனவிளங்குமொரு கயிலாயச்சிலம்புளதச் சிலம்பின்மீதே
வாசவனேமுதலிமையோர்நெருங்குதலான்மகுடமொடு மகுடந்தாக்கி
யோசையுடன்கனகமணிப்பொடியுதிர்ந்துகனகமலைக்குவமையாகும்

(இ-ள்.) பரமசிவன் தரிக்கின்ற கங்கையுஞ்சந்திரனும் மேற்சொன்னசுவாமியினது வெண்மையாகிய திருவுருவமும் அவ்வுருவத்தில் அணிந்ததிருநீறுமாகிய இம்மூன்றினுடைய காந்திபோலப்பிரகாசிக்குங் கைலாசமென்று ஒருதிருமலையுண்டு அந்த திருமலைமேல் வணங்குகின்றதற்காகத் தேவேந்திரன்முதலாகிய தேவர்கள் நெருங்குகிறபடியினாலே கிரீடத்தோடுகிரீடம இடிபட்டுச் சப்தத்துடனே சொர்ணப்பொடிகளும் ரத்னப்பொடிகளும் உதிர்ந்துமகமேருகிரிக்குச் சமானமாகக்குவியும்-எ-று. (௩)

இந்திரநீலச்சிலையா லிசைத்தகடந்தெரியாமலெழுதிச்சேர்த்து
மந்திரமாமெனவயிரத் தூணிறுத்திமாணிக்க மதலைகூட்டிச்
செந்துகிராற்போதிகையு மாகதத்தாலுத்திரமுஞ் செறித்ததுமீதே
சந்திரகாந்தத்தகடு பரப்பியமண்டபமுளதச் சயிலமீதே.

(இ-ள்.) இந்திரநீலக்கல்லினாலேயொன்றோடொன்றுசேர்த்துசந்து தெரியாமல் சித்திரமெழுதிச்சுவரைவைத்து மந்திரகிரிபோல் வயிரத்தூண்களைநிறுத்தி மாணிக்கத்தினாற்செய்தகொடுங்கைசேர்த்துச் சிவப்பாகிய பவளத்தினாலேபோதிகையும் மரகதத்தினால் உத்திரமுஞ்சேர்த்து அதன்மேற்சந்திரகாந்தத் தகடுவேய்ந்த மண்டபம ஒன்றுண்டு அந்தமலையின்மேல்-எ-று. (௪)

அருமருக்குத்தானமணி யிழைத்தவரியாசனத்தி லிருந்துநீலப்
பருவமணியா லிழைத்தவொரு பாதபீடிகையின்மலர்ப் பதத்தையூன்றி
யொருவுபெருக்கயிலையின்மீதிருந் துமுயலகன்முதுகில்வலத்தாளூன்றி
யருமறையைமுனிவருக் குரைக்குமிறையெனவிருந்தா னந்திவேளே.

(இ-ள்.) அந்தமண்டபத்தில்இரண்டுபக்கமும் முத்துகளிழைத்த சிம்மாதனத்திலிருந்துபெரியநீலரத்தினத்தினாலே இழைத்துக்கட்டின பாதக்குறட்டின்மேலேமலர்போன்றபாதங்களை வைத்துக்கொ

ன் நெந்திகேஸ்வரர் சிவகணங்களாலே மருவப்பட்ட பெருமைபெற்ற கைலாயகிரியிலெழுந்தருளியிருந்து முயலகன்மேல வலப்பாதத்தை வைத்து அரிதாகிய வேதப்பொருளை முனிவர்களுக்குத் திருவாய்மலர்ந்தருளிய பரமசிவம்போல் இருந்தார் அந்தவேளையில்-எ-று. (௫)

குற்சனுரோமசன்குமுதன் குமுதாக்கன்சகடாயன்கும்பசாதன்
வற்சவைசம்பாயநாக ஞெரிமுனிபுலிக்காலன் வாமதேவன்
நற்சனகன்சனக்குமரன் வாதராயணன்மதங்க னடனத்தாளை
யர்ச்சனைசெய்யனந்தமுனி முதலனந்தமுனிவர்தமருகிற்சூழ

(இ-ள்.) குற்சர்ரோமர் குமுதர் குமுதாட்சர் சகடாயர் அகத்தியர் வற்சாவைசம்பாயனர் ஞெரிவியாக்கிரபாதர் வாமதேவர்சனகர்சனற்குமாரர் வியாசர்மதங்கர்சுவாமியினது நடனம்பொருந்திய திருவடிகளில் அர்ச்சனைசெய்கின்ற பதஞ்சலிமுதலாகிய அனந்த முனிவர்கள் தமமுடையபக்கத்திற்சூழ-எ-று. (௬)

மன்னியமார்க்கண்டமுனி யுடனெழுந்துபணிந்துயிர்கண் மழை
மின்போல, வீந்நிலத்திற்பிறப்பதுவு மிறப்பதுவுமிருவினையு மெமக்கு
நதோன்றச, சொன்னவொருதனிமுதலேமுத்திபெறும் பரிசெமக்கு
கசொல்வ.யென்று, ணன்னவுரைசெவிப்புகலு நந்தியருள்கூர்ந்துமுனி
ககருளவதானன்.

(இ-ள்.) நிலைபெற்றவயதினையுடைய மார்க்கண்டேய முனியானவர்சீக்கிரத்திலெழுந்திருந்து நந்திகேசுரரை வந்தனஞ்செய்து சுவாமி மேகத்தில்தோன்றிஅதிசீக்கிரத்தில் அழியுமின்னல்போல உயிர்களானவைஇவ்வுலகத்தில்பிறக்கிறதும இறக்கிறதும் இவைகளுக்குக்காரணமாகிய நல்வினைதீவினைகளாகிய இரண்டும் எங்களுக்கு விளங்கும்படியாக அருளிச்செய்தருளப்பற்பகட்வுளேநாங்கள்மோட்சத்தையடைகிறதற்குத் தக்கவழியைக் கிருபை செய்யவேண்டுமென்றுகேட்க அந்தவார்த்தையைக்கேட்டவுடனே மிகுந்தகிருபையுண்டானவராகி நந்திகேசுரர் மார்க்கண்டேயருக் கருளிச்செய்யத்தொடங்கினார்-எ-று. (௭)

கம்பநதிகும்பநதி காவிரிகோதாவேரி கண்ணவேணி
பம்பைநதிவேகநதி வேதவதிசரயுநதி பாமாங்கங்கை
செம்புநதிபொன்முகிநல்யமுனைநதி நருமதைமேற் செப்புஞ்சோனை
யம்புவியின்மிகவுளவங்காடினர்தம் வினையகற்று மதுவல்லாமல்.

(இ-ள்) கம்பைநதி கும்பைநதி காவேரி-கோதாவரிகிருஷ்ணவேணி-பம்பைநதி-வேகவதி-வேதவதிசரயுநதி-எல்லாநதிகளுக்கு மேன்மையாகிய கங்காநதி-தாமிரபரணி பொன்முகி - யமுனாநதி -நர்மதாநதி-மேன்மையாகச்சொல்லப்பட்ட சோணாநதியென்று அழகுபொருந்திய பூவுலகத்தில் அனேகநதிகளுண்டு அவைகளதம்மிடத்தில் ஸ்நானஞ் செய்தவர்களுடைய பாவத்தைதீர்க்கும் அதுவல்லாமல்-எ-று.

காசியெனுமொருதலமிக் கயிலையெனுஞ்சிறப்புளது கங்கைநித்தம்
வீசுதிரைக்கொழுந்தோட்டிப்பாகதிக்கு வேறோட்டும்வியந்துமூழ்கின்
மாசிலுடலதிலிறந்தால் மாமேனும்விலங்கேனுமனிதரேனு
மீசனருளுபதேசஞ் செவிப்புகலா லிறைவனெனவிருக்கலாமே.

(இ-ள்.) காசிஎன்கிற ஒருதிவ்யத்தலமானது இந்தக் கைலாசத்தைப்பார்க்கிலும் சிறப்புள்ளது அக்காசியில்வருகின்ற கங்காப்பிரவாகமானது எறிகின்ற அலைகளைக்கொழுந்தாக ஓடச்செய்து தன்னிடத்தில் விரும்பிமுழுகினால் அவர்களுக்குமோட்சத்துக்குவழிகாட்டும் கங்கம்பொருந்தியதேகம் அவ்வூரில்விட்டால் மாமாவது மிருகமாவது மனிதராவது பரமசிவனதுதாரகப் பிரம்மோபதேசம் செவியிற்சோதலாலே சிவசாருப்பியத்தை யடைந்திருக்கலாம்-எ-று. (௯)

போகியொருபுற்றிடங்கொண் டிருப்பதுகண்டிடுதலல்லாற்புனிதர்போற்றும், யோகியொருபுற்றிடங்கொண்டிருக்குதலங்கண்டதுண்டோ வுரைப்பக்கேளு நாகமிசைநடித்தவநுக்குயிர்வேண்டித் திருதவஞ்செய் கனிணக்கோயில், சேருமனத்தவாான மறுவாரூர் தனையெரித்த திருவாரூரே.

(இ-ள்.) சர்ப்பமானதுபுற்றை யிடமாகக்கொண்டிருந்தைதப்பார்த்ததேயல்லாமல் ஞானிகள்போற்றுகின்ற யோகியானவர் புற்றினிடத்திலே யிருந்ததலததைப்பார்த்ததுண்டோ அதுயாதெனிறசொல்லக்கேளுங்கள காளிங்கனென்னும்பாம்பினமேலேறி நடனஞ்செய்த விஷ்ணுவுக்குஉயிர்பிச்சைவேண்டி லட்சுமியானவள்பூசைசெய்துக்கொண்டிருந்த கமலாலயமென்னும் தலமாகிவஞ்சம்பொருந்திய மனதையுடைய திரிபுராதிகளையெரித்தசிவன்வாசஞ்செய்கின்ற வாகிய திருவாரூர் என்னுந் திவ்வியத்தலந்தான்-எ-று. (௰)

தக்கவிராட்புருடன்மனத்தலமெனுமோர் தலமுளதத் தலத்தின் மீதே
முக்கணனார்நடிப்பரவர்மூர்த்தியிலாயிரத்திலொரு மூர்த்திதானே
யிக்கயிலையிடத்துறைவதன்னிலத்தின் பெருமைநம்மாலிசைக்கலாமே
யக்கனகசபைகண்டா ரரியயன்காணாதமுத்தியடைகுவாரே.]

(இ-ள். பெருமைபொருந்திய விராட்புருடனுடையஇருதயத்தலமாகிய சிதம்பரமென்று ஓர்தலமுண்டு அதிலுள்ளதாகிய கனகசபையில் மூன்றுகண்களையுடையபரமசிவன் ஆனந்ததாண்டவஞ் செய்வார் அவருடையமூர்த்திகரத்தில் ஆயிரத்திலொன்றுதான் இக்கைலாசபதத்திலிருக்குமென்றால் அந்தஸ்தலத்தினது பெருமையை நம்மாற்சொல்லக்கூடுமோ அப்படிப்பட்ட அழகுபொருந்தியகனகசபையைக்கண்டவர்கள் விஷ்ணுவினுலும பிரமாவினுலுமகாணப்படாத மோட்சததையடைவார்கள்-எ-று. (௰௧))

தாங்காழியவன்சிவனை வழிபடுந்தொல்லையந்தத்தலத்தைப்பார்க்கில், லோகாகாரவடிவதிலேயுயிர்விழுங்காலுடலழியாதொளிகெடாது-வீங்காதுநெகிழாது பிறவுயிரால்வருந்தாது வெடிதலிடாது-நீங்காமையுமண்ணிருமி பிறவாதுகிடக்கும் வலச்செவிமேலாக.

(இ-ள்) சக்கரத்தைக்கையில்தரிக்கின்ற விஷ்ணுவானவர் பரமசிவனைப்பூசைபண்ணிய விர்த்தாசலமென்று ஒருதலமுண்டு அந்தத்தலத்தைப்பார்க்குமிடத்தில் அதுபிரணவசொரூபமாயிருக்கும் அந்தஸ்தலத்தில் உயிர்விட்டால்தேகமழியாது நிறக்குன்றுதலிக்கமாட்டாதுகட்டுவழுவாது மற்றபட்சிமிருகங்களால்பின்னமாகாது வெடிப்படாது அதிலதுர்க்கந்தமும்புழுவுமுண்டாகாமல்வலதுகாது மேலாகக்கிடக்கும்-எ-று. (௰௨)

பொய்ம்மிடமுகனைவென்றவம்மையிடமகலாதபுனிதமூர்த்தி,செம்மையிடமென்றிருந்த கருமிடமுகமாகச்செறிகேதார-மிம்மையிடர் மறுமையிடர்ஞானமில்லாச் சிறுமையிடரெலாந்தீர்க்கும், மும்மையிடம்பெறமூலகுக்கெளிதாகத் தனியிருந்தமுத்திபோலும்

(இ-ள்) மெய்ம்மையாகியஎருமை முகத்தினையுடையகிடாசுரனைஜயித்தபார்வதிவாமபாகத்தில் நீங்காதபரிசுத்தராகிய பரமசிவனானவர் செம்மையாகியவிடம இதுதானென்று எழுந்தருளியிருக்கிற கறுப்பாகிய எருமையினதுமுகம்போல் விளங்கியதிருக் கேதாரமென்னுமலைதலமானது இந்தஜென்மத்தில்வருகிறதுக்கமும் மறுமையில்வருகிறதுக்கமும்ஞானமில்லாததினாலே உண்டாகிறதுக்கமுமாகிய எல்லாத்துயரத்தையுமதீர்க்கிறதற்குமூன்றுலகத்தாருக்கும்எளிதாகிய தனியேயிருந்த முத்திஸ்தானம்போல்இருக்கின்றது-எ-று. (௰௩)

இருப்பனத்தன்பருப்பதத்திற் பிரமராம்பிகையுடனென்றிரண்டுபோதும-விருப்பனத்தன் பணிந்திமையோருலகுமுதலனைத்துலகும் விதித்தான்மற்றைத்-திருப்பதிக்கேயிருப்பவனுந் தேவர்களுஞ்சராசரமாய்சசெனித்தல்வூரி-விருப்பதற்குமுயல்வரென்று ரொத்தலமுமத்தலத்துக்கிணையதாமோ.

(இ-ள்) மல்லிகார்ச்சுனமென்கிற பர்வதத்தில் பிரமராம்பிகையுடனேபரமசிவனானவர் எழுந்தருளியிருக்கிறாரென்று அன்னவாகனத்தையுடையபிரமாவானவர்துபதியோடு இரண்டுவேளையும் வணங்கி அவருடையஅருள்பெற்றுத் தேவலோகமுதல் எல்லாலோகத்தையும படைத்தார்மற்றைதிருப்பதியிலிருக்கின்ற வெங்கடாசலபதியும் தேவர்களும் அந்தஸ்தலத்தில்சரமாகவும் அசரமாகவும பிறந்திருப்பதற்குத்தவஞ்செய்வார்களென்றால் எப்படிப்பட்டஸ்தலங்களும் அந்தக்ஷேத்திரத்துக்குச் சமானமாகுமோ-எ-று. (௰௪)

விருப்படியார்சொரிந்தவறுகல்ருனேவிழியிடந்தவேடர்காளத்தி செருப்படியுமாக்கபிரான் காளத்திகா மெனுஞ்செய்யபூமி - பருப்பத

பாகியுக விளக்குந் தண்ணாருக் கொழிக்குயவர்ப் பதுமையோடு - கருப்ப
டியுந் துய்யமாரியம வடமலைமேவியிருக்குங் கண்டு வணங்குமாதோ.

(இ-ள்.) திருக்காளத்தியென்னும் தெய்வீகம் பொருந்திய ஸ்தலத்தில் ஆகமசைவப்பிராமணராகிய சிவகோசரியார் பதத்தோடு திருதிராக அர்ச்சனைசெய்த அறுகுபுஷ்பங்கள் இவையுடனே கண்ணைப்பிடுங்கி அப்பித் து கண்ணப்பநாயனாருக்காகச் செருப்பையும் விருப்பமாக ஏற்றுக்கொண்ட லிங்கசொரூபமாகிய பரமசிவன் தாமரைக்குளிர்ச்சி பொருந்திய தேவ சௌந்தரிய தாமரைமலரிலிருக்கின்றலட்சுமியோடு வாசஞ்செய்யுநாதனாகிய ஐவகையனந்தமாகப்பிரிவுடைய விஷ்ணுவாலும் வேதகர்த்தனாலும் திருப்பதியில் கண்டு தொழுதுதரிசனஞ்செய்து வணங்கும் பொருட்டு அந்தக் காலத்தில் மலையாகியும் விளங்குகிறார் — எ-று. (௧௫)

தெக்குநாவிருநிரையும் புகழ்ந்த தொண்டைநாட்டில் ஆறோர்தெய்வ நாட்டில் தேவர்களுக்கு கூவினைபகற்று மோட்சந்தருந்தலமுண்டதனை மொழியவல்ல தகைகளுமெல்லாக் குராயிக்கின்ற மண்டத்துப் புவித்தைப் பழிக்கவுறை வளர்த்துயர் தலந்தநேகாக் கருணைகியுடனே கமலைகையகருணையுங் கச்சிமூதூர்.

(இ-ள்) அநேக நாட்டு நதிகளில் உள்ளவர்களும் புகழ்ந்துகொண்டிருக்கின்ற தொண்டை மண்டலமென்னுந் தெய்வீகம் பொருந்திய நாட்டிலே தரிசனஞ்செய்தவர்களுடைய பாவத்தைப் போக்குகின்ற தருமஸ்தலமுண்டு அதன் பெயரைச்சொல்லக்கேட்டவர்களுக்கு ஸாலோக பதவியைக் கொடுக்கிய நான்முகன் படைத்த உலகத்திலுள்ள உயிர்கள் பிழைக்கும்படிக்கு முப்பத்திரண்டு தருமத்தையும் பரிபாலனஞ்செய்துள்ள நாயகியுமாகிய காமாட்சியம்மையுடனே ஏகாம்பரேசுரர் எழுந்தருளியிருக்கின்ற காஞ்சிபுரமாகும் - எ-று.

பழுதறவேயெழுகடலும் பெருகிரியுமெழுதலமும் படைக்கவேதக்
கிழவனறியாமுடியை யொருபாலனறிந்தபதிகிளர்த்தக் கேளு
மழுதுதந்தபரியுமிகுறைகளுக்கம்பிகைபூசையயனார் பூசை
வழுவுதருமர்பூசைகாண் பூசைபுரிந்ததிருவிரிஞ்சைமூதூர்.

(இ-ள்.) யாதொருபழுதுமில்லாமல் ஏழுசமுத்திரத்தையும் ஏழுமலையையும் ஏழுலகத்தையும் படைத்த பிரமாவினாலே அறியக்கூடாத (ஒ) சிவனுடைய திருமுடியை சைவப்பிராமணப்பிள்ளையானது அறிந்த ஸ்தலத்தைச் சொல்லுகிறேன் கேளுங்கள் ஆனந்தத்தாண்டவஞ்செய்த சுவாமிக்குப் பார்வதியாரும் பிரமாவும் சிவனே சமிதந்தவிஷ்ணுவும் காணும் பூசித்த விரிஞ்சிபுரமென்னுந் ஸ்தலமாம் - எ-று. (௧௬)

(ஒ) சுவாமியினது சிரசைச் சைவப்பாலன் அறிந்ததாவது அபிஷேக முத லியவை செய்கிறதற்குச் சுவாமியினுடைய திருமுடியானது ஒருகுருக்களுடைய பிள்ளையின் கைக்குள் எட்டாமையினாலே அந்தப்பிள்ளை யானது பூசைகாலத்தில் வருகிறதென்னவென்று விசனப்பட்டு கொண்டு வருந்தியிருந்தபடியினால் சிவன் தலைசாய்த்து நின்றனர்.

பொய்யாதபுனல்பெருகுங் காவேரியிக்கரையிற்சீகாழியு
மையாறுமிடைமருதுந்திருக்குடந்தைவளநகருநானைக்காவு
மையாருமிடற்றர்திரிசிரமலையு மாணிக்கமலையுந்தோன்று
மெய்யாகவவற்றினதுபெருமையெல்லாம்விரித்துரைக்குமவேதத்தானே.

(இ-ள்) பொய்க்காமல்பெருகிவருகின்ற காவேரிக்கு இக்கரையிலு
ம்சீகாழி திருவையாறு திருவிடைமருதூராவளம் பொருந்தியகும்பகோ
ணம் திருவானைக்காவிலும்பொருந்திய கண்டநஞ்சையுடையராகிய சிவபெரு
மான் எழுந்தருளியிருக்கின்ற திரிசிரபுரமாகிய திரிசிராமலை இரத்தினகிரி இவைமுதலா
ன இவைகளெல்லாம்விளங்கிக்கொண்டிருக்கும் அந்தத்திவ்யக்ஷேத்திரங்களு
டையபெருமைகளெல்லாம்வேதமானதுதான்மெய்யையாக விரித்துச்சொ
ல்லும்-எ-று. (௰௮)

பருவரையார்பரிக்குர்லைகைகதிக்கரையின்மதுரையறுபத்துநாலு
திருவிளையாட்டினைவியற்றியதலமாமதன்பெருமைசெப்பலாமோ
ஒருவிளையாட்டகத்தமிழ்ப்பேச்சரசெதன்கடம்பவனத்திற்காணுமங்கே
செருவிளையாட்டிராகவனிராவணனைத்தொலைத்தபழிதீர்த்திட்டானே.

(இ-ள்) பெரியசங்குகள்புழங்குகின்ற வைகையாற்றின்கரையில்
சோமசுந்தரக்கடவுள் அறுபத்துநாலு திருவிளையாடல் செய்தருளிய
மதுரையென்றுசொல்லுந்தலமென்றே அந்தத்தலத்தின்பெருமை யாவராலு
ஞ்சொல்லப்படாது தொந்தரைக்கிறக்கவைபில ஜனங்களுக் கதையைப்
போக்குகின்றார் சொக்கர் அன்று ஓர் நஸ்தலமிணையுந்தத்தை நவிளையாட்
டாகச்செய்கின்றனர் இராமர் ராவணனைக்கொன்றதனாலானதோஷ
ந்தையும் அந்தத்தலத்தில் சிவனைப்பூசித்துத்தீர்த்துக்கொண்டார்-எ-று. ()

அத்தலையாத்தலக்கடமிப்பிறக்கவுடவிறக்கவிதிக்கயக்கானைச்
சுத்தவெள்ளிதனிலாடுஞ்சுடரொளிக்குமணக்களிப்பதாயசிராட்ட
வித்தமதைநடித்துரைத்துச்சிவாலயமும்விரிபொழிலுநிகவுண்டாக்க
வுத்தமமாகியபாமகேியுளதென்றுரைக்கமுனியுரைப்பநானே.

(இ-ள்) அப்படிப்பட்டதன்மையையுடைய தலங்களிலே யாவரு
மிலும் பிறந்தாலும் இருந்தாலும் போய் தரிசித்தாலும் பரிசுத்தராகின்ற
ஆகாசத்தில் நிருத்தஞ்செய்யுமிருந்த பிரகாசசொரூபராகிய சிவனு
க்கு திருவுள்ளமானதுசளிக்கும்படியாகதூய்மையாகிய சிற்றறல் ஆலயங்
கட்டுவிப்பதாலும் கிரியைகளைச்செய்து சிவாலயங்கட்டுவிக்காலு
ம்விளங்குகின்ற சோலைகளாலும் உத்தமமான பொருந்தியபாமகியுண்டா
மென்று நந்திகேசுவரர் அனுக்கிரகஞ்செய்யக்கேட்டு மார்க்கண்டேயர் சொ
ல்லத்தொடங்கினர்—எ-று. (௨௰)

இந்நிகராநதிதோறுந் தலந்தோறுமிப்படியேயியற்றவென்றால்
முன்னியசிராமருக்குஞ் சித்தருக்குமுனிவருக்கு முடிவுறாது
மின்னிகருஞ்சிறுவாழ்க்கை மனிதர்தமக்கெளிதாமோமேவினாலு
முந்திபமாமபிறவுயிர்க்கு மாத்திரைக்குங்கிடையாதேயசலவென்றான்

(இ-ள்.)இப்படிப்பட்ட தன்மையையுடைய நதிகள்தோறும் ஸ்தலங்கள்தோறும்போய்த் தேவரீர்கட்டளையிட்டவிதமாகவே தீர்த்தயாடு வழிபாடுமுதலானவைகளைச் செய்யவேண்டுமென்றால் மிகுந்தசிறப்புப்பொருந்திய தேவர்களாலும் சித்தர்களாலும் முனிவர்களாலும்முடியாது அப்படியாகமின்னலைப்போற்றோன்றி க்ஷணத்திலழியுஞ்சிறியவாழ்க்கையுடைய மனிதர்களுக்கு எளிதல்முடியுமோ அப்படி முடிந்தாலுமிருகங்களுக்கும பட்சிகளுக்கும விருட்சங்களுக்குங்கிடைக்கமாட்டாதே சுவாமியென்றுசொன்னார் மார்க்கண்டேயர்—எ-று. (௨௧)

ஆடுமந்தநதிதோறுமினிதெனுமத்தலந்தோறுமனந்தகாலம்
தேடுகின்றபயனுல்வுஞ் சிவஞானம்வருந்தாமற்சிறிதுபோதி
லூடுகின்றவுறுப்பிலாதகுருடர்க்கும்புலையருக்குநாகாளவாக்கு[றான்
மோடுகின்றவிலங்கினுக்குமறநெறிக்குமருளுமென்றானுமாபாமயன்

(இ-ள்.)மனிதர்கள் ஆடுகின்ற அந்தநதிகள்தோறும் இனிதாகிய அந்தஸ்தலங்கள்தோறும் அனேககாலமாகஸ்நானஞ்செய்து தரிசனமுதலியவைகளைசசெய்ததினுல் உண்டாகிய பிரயோசனமாகிய சிவஞானத்தைவருத்தப்படாமல்கொஞ்சகாலத்தில்தானேபிரதட்சணஞ்செய்தல்கும்பிடுதல் தரிசனஞ்செய்தல் முதலியவற்றிற்கு ஏதுவாகியவைகளாகிய கண்ணற்றவர்களுக்கும்விவேகமுனியர்களுக்கும் நீசர்களுக்கும்நாசத்திலவிழுகதகுந்த பாவஞ்செய்தவர்களுக்கும சஞ்சரிக்கின்ற மிருகங்களுக்கும் மற்றுமுள்ள எல்லாசசீவராசிகளுக்கும கொடுக்கின்றஒருஸ்தலம அருளிச்செய்யவேண்டுமென்றுகேட்டாரமார்க்கண்டேயர்.—எ-று. (௨௨)

இப்படியோகமனைவென்றபெருந்தவனுமிருக்கவருமிடம்பியேத்திக்
கைப்பதுமமலர்க்கொடுதன்காற்பதுமந்தீண்டித்தலுங்கருணைபாகி [ன்னை
அப்படியேமுதநிதருமொருதலமுண்டுரைக்குதுமென் றமைதத்தாண்பி
மைப்படியுமைகண்டதந்நருணகிரியினைத்துபாவசத்தனுனன்

(இ-ள்.)எமனைச்செயித்தபெருமையாகிய தவத்தினையுடையமார்க்கண்டேயரும்மற்றுமுள்ள முனிவர்களும் இந்தப்பிரகார மாகச்சொல்லிதோத்திரஞ்செய்து தாமரைமலர்போன்றகைகளால் நந்திகேஸ்வரருடைய தாமரைமலரொத்த திருவடிகளைதரிசித்துவந்தனஞ்செய்யுமளவில்அவர்கிருபையுள்ளவராகிநீங்கள்சொன்னபடியேமோட்சங்கொடுக்கிறஸ்தலம் ஒன்றுண்டுஅதைச்சொல்லுகிறோமென்றுசைகயமாததிப்பின்பு விஷ்ணுவைகண்டத்தையுடையபரமசிவம்எழுந்தருளியிருக்கிற அருணாசலமென்னும்ஸ்தலத்தைநினைத்துப்பரவசமானார்நந்திகேஸ்வரர்-எ

அங்கமெல்லாமயிர்பொடிப்ப கண்ணினியிரண்டு மருவிப்பாய, செங்கையிணைமலர்க்குவிய மொழிதவறாதெம்போது தெளிவில்லாமல், கங்கையணிசடையானே யருணகிரிப்பெருமானே கனற்கண்ணானே, யெனையாளுடையானே யெனத்துதித்து விழுந்தெழுந்தசைப்பதானன்.

இ-ள். தேகமெல்லா மயிர்க்குச்செறியக் கம்பிதங் கொண்டு இரண்டுகண்களிலுமிருந்து அருவிபோல் ஆனந்தபாஷ்பம் வரமலர்போன்ற இரண்டுகைகளும ஒன்றாய்க்குவிய வார்த்தைதடுமாற அநேகஜன்மங்களின ஞாபகமில்லாமல் கங்கையைத்தரித்திருக்கின்றசடையையுடையவரே அருணகிரியில்எழுந்தருளியவரே அக்கினிக்கண்ணையுடையவரேஎன்னையாட்கொண்டவரேஎன்று தோத்திரஞ்செய்து விழுந்தெழுந்துகொண்டு அதன்பின்பு சொல்லததொடங்கினார்நந்திகேசுரர்-எ-று உக

எழுசீரடியாசிரியவிருத்தம்.

சத்தியமதாமொழிவன் முத்திதருமூறது தனக்குரியநாமமிகவுண், டத்தனையுநான் மொழியவேதத்தை வலேகநிலொருபவளவேவுமுவேன், சித்தியுதவுங்களரிதேசுநக ரென்றுபெயர் தென்னருணையென்றுபெயர்சீர், வைத்தசிவலோகநக ரென்றுபெயர் நீடுசதுர் வாயுநகரென்றுபெயரே.

இ-ள். அப்படிஸ்தோத்திரஞ் செய்தபின்பு நந்திகேசுரர் சொல்வார்கேளும மாக்கண்டேயரே சத்தியமாகச்சொல்லுகிறேன் மோட்சத்தைக்கொடுக்கிற ஸ்தலமொன்றுண்டு அதற்குரிய நாமங்களோ அநேகம்அந்தனை பெயரையுஞ் சொல்லுகிறதற்கு நான்எவ்வளவுசக்தியுடையவன் ஆகிலும அவைகளில் சிலநாமமாத்திரம் சொல்லுகிறேன் சித்தியைக்கொடுக்கிறகளரிநகரமென்றும் தேசுநகரமென்றும அழகிய அருணாசலமென்றும் சிறப்புப்பொருந்திய சிவலோகநகரமென்றும் நாகரீகமிருக்கத வாயுநகரமென்றும் நூல்களில்சொல்லப்பட்ட திருநாமங்களையுடையது-எ-று. உ௨

சத்தபுரியேமுதலெடுத்தலம் யாவுமொருதட்டுமொரு தட்டதனிலே, யத்தலமுமிட்டெடு திரா நிறுக்கவலை கட்கதிகமானதொனிரகநகரம், முத்திநகரென்றுபெயர் ஞானநகரென்று பெயர்முத்தியதவேச்சாமெனுஞ், சுத்தநகரென்றுபெயர் தென்கைலையென்று பெயர்சோணகிரியென்று பெயரே.

இ-ள்.பின்னும் நந்திகேசுரர்சொல்வார் சத்தபுரிகளென்கிறஅயோத்திமதுரை மாயாபுரி காசி-காஞ்சிபுரி-அவந்தி-துவாரகை முதலாகிய

லாத்தாங்களையும் ஓர்தட்டிலும் அந்த அருணாசலத்தைஓர்தட்டிலும், வைத்துநிறுக்க அந்தத்தலங்களெல்லாம் அதிகனத்தையுடைய தாயிருந்து பிரகாசிக்கின்ற அந்தத்தலத்துக்கு முத்திநகரமென்றும் ஞானநகரமென்றும்- முதன்மையாகிய தலேச்சரமென்றும் சுத்தநகர மென்றும் தட்சணகைலாசமென்றும்சோணகிரியென்றும்பெயராம்-எ-று.

வாதமிகுகாலமுழலூழியிலெழுபுயல் வாரைபுரியாதகைநீங்,சேத மூகலாணபிணி நிலையிடையூறுபசி சேரவரிதானகோய, மாதவாசன மாகவர்கள் பூசைபுரிமாகாமாதவாகளுமிமலரார, போதிலுறைவே தியாதொண்ணூறு பெயரோடறுவர் பூசைபுரிதேவககாம்.

(இ-ள்). இறுதிக்காலத்திலுண்டாகிய பிரசண்டவாயுவினாலும் ஊழித்தீயாகிய வடவாமுகாக்கினியினாலும்பொங்கிவரும்சமுத்திர பிரளயத்தினாலும் யுகமுடிவில்பெய்கின்றஏழு மேகங்களினாலும் யாதொரு வாதையும் அடையாததலம்சையித்தியம் முதலானபிணிகள் நிலையாகிய இடையூறுகள் பசியிவைகள் சேராததலம் மகத்தாகிய தவசிகள் அநேகவிஷ்ணுக்களுடைய நாபிகளாகிய தாமரைமலர்களில் உண்டாகிய தொண்ணூற்றாறு பிரமாக்கள் பூசித்ததெய்வீகம்பொருந்தியதலம அருணாசலமென்னும் ஸ்தலமாம்-எ-று. (௨௭)

ஒன்றுளதுபூமிதனி லின்றுபுதிதன்றுலகு மும்பருமுயர்ந்தவெளி யுமென்றுளகதானது வேதமுடிமீதனிலிருப்பதகலாம லதிலோர் குன்றுதனிலாகநிலவெற்புளது புண்டரிககோளகையுமூடுருவியே.நின் றுளதுதென்றிசையிலென்று மழியாதுசெமீ நிருலவுவாழவுபெறவே.

(இ-ள்)இப்படிப்பட்டசன்மையுடையஸ்தலம் ஒன்றுண்டு அந்தஸ்தலம இன்றைக்கு புதிதாகவந்ததல்ல இந்தப்பூவுலகமும் மேலுலகமும்ஆகாயவெளியும்என்றைக்குஉண்டானதுகளோ அக்காலத்திலே தானேஉண்டாயிருக்கின்றது நீங்காமல்வேதத்தின்முடிவிலுள்ளது அந்தஸ்தலத்தில் கெடுதலில்லாததாகிய மலையுண்டு அதுதென்திக்கில் என்றும் நிலைபெற்றுப்பிரமாண்டகோளகையையூடுருவிநிற்கின்றது நெடிய கடல்சூழ்ந்த பூமியிலுள்ளவர்கள் வாழும்படிக்கு-எ-று. ௨அ

கலிவிருத்தம்.

ஆரிடமிராக்கதம்சுரந்தேதைக்
தாருடைமாணிடஞ் சம்புவென்றுநாம்
பேரிடமிலிக்கமே பிறக்குமொக்கணு
மேருடைப்பருப்பத மிலிங்கமாலது.

(இ-ள்.) ஆரிஷமென்றும் ராட்சசமென்றும் ஆசுரமென்றுந்தை வதமென்றும் மாலையைத்தரிக்கின்ற மானிடமென்றும் நான்குவகைப்பட்ட லிங்கங்கள் அனந்தஸ்தலங்களிலும் பிரகாசிக்கும் இந்தஸ்தலத்திலோவெனி ல் மலைமேலிலிங்கமாயிருக்கின்றது ரிஷிகளாலே பூசைசெய்யப்பட்டது ஆரிஷலிங்கம் ராட்சசர்களாலே ராட்சசலிங்கம் தேவர்களாலே தைவதலி ங்கம் மானிடராலே மானிடலிங்கம்—எ-று. (௫௰)

செங்கனன்முதல்யுகந் திரேதைமாமணி
யொங்கியதுவாபரம் பொலிந்தபொன்னிறந்
தங்கியகலியுகந் தன்னிலேசிலை
யங்கமாமதன்பெய ரருணைபூதரம்.

(இ-ள்.) முதல்யுகமாகிய கிரேதாயுகத்தில் சிவப்பாகிய அக்கினிம லையாகவும் திரேதாயுகத்தில்மாணிக்கமலையாகவும் துவாபரயுகத்தில்திரு நப்பிரகாசத்தையுடைய பொன்மலையாகவும்கலியுகத்தில் கல்மலையாகவு ம திருவுருக்கொண்டு அந்தமலைக்கு அருணாசலமென்னுந்திருநாமம்-எ-

கருவியாமுகக்கடைச் சொரியுங்காரின
முருவமேழன்றியோ வொன்றுகோடியாய்
பருவமாயிரந்துளி பனையிற்பெய்யினு
மருவியாயடங்குமவ் வசலமீதினில்.

(இ-ள்.) எல்லாச்சீவராசிகளும்கருவழியும்படியுகாந்தகாலத்தில்பொ ழிகின்றமேகங்கள் ஏழென்கிற எண்ணிக்கையில்லாமல் ஒவ்வொன்று கோடியாகி ஆயிரம்வருஷம் ஒவ்வொருதுளிபனைமரம்போலப்பருமனுள்ள ப்பெய்தாலும் அந்தமலையின்மேல்சிறியஅருவியாய்ச்சுவறி அடங்கிப்போ மல்லாமல் புறத்தில்வரமாட்டாது—எ-று. (௫௧)

அரியயனளவிடா தனந்தகாலமாய்த்
திரிதலினதற்கிணை செப்பலாகுமோ
சுரநதிபாவுநிற சுனையினீருணை
விரவிதன்புரவிமேலேறிசெல்லுமே.

(இ-ள்.) விஷ்ணு-பன்றியாகியும்-பிர்மா-அன்னமாகியும்- அனேக கோடிகாலமாய்த்தேடி அடிமுடிகாணாமல் வருந்துவார்களாதலால் அந் த அருணாசலத்துக்கு ஒப்பானசமானமாகச் சொல்லக்கூடுமோ அது வன்றி ஆகாசகெங்கையானது சம்மிலுமாகிய மென்றுஸ்துதிசெய்கி ன்ற அந்தமலையிலிருக்கின்ற சுனையிலே நீருண்ணச்சூரியன் தேரிற்கட் டியகுதிரையானதுகளை ஒழிவடக்கும்—எ-று. (௫௨)

வெண்மைசேர்புயலதனடியிற்போவத
டெண்மதிழயிலுமி திருப்படிதொகுமா

நண்ணுபேர்கார்த்திகை விளக்கையேற்றுதல்
மண்மகண்மகுடமாணிபிறங்குன்றுமே.

(இ-ள்.) வெள்ளிநிறமாகியமேகங்கள் அந்தமலையடிவாரத்திற்சேர்ந்தால்யாவராலும் எண்ணப்பட்ட கைலாசகிரிமேல் அந்தமலையிருக்கிறது போலாம் குளிர்ச்சிபொருந்திய கார்த்திகைமாதத்தில் கிருத்திகாதீபம அந்தமலைமேலேற்றினால் பூமிதேவியினுடையகிரீடத்திற்பதித்தரத்தினம்போலாம்—எ-று. (௩௩)

ஆன்றுமாறிசை முகனரிவிடாமுதன்
மன்றல்சேர்ந்திடுமலை வடிவுகொளகையா
னன்றுகமமருகனு ராமமோர்குல
மென்றுளமகிழ்ந்ததே யிமையபூதரம்.

(இ-ள்) முற்காலத்தில் பிர்மாவினாலும் விஷ்ணுவினாலும் அறியப்படாத பரமசிவன்கீர்த்திபொருந்திய அந்தமலையுருவங் கொண்டதினாலே இமோதபர்வதராசனானவன் இத்தனைகாலமவனுக்குவேறுசாதியாயிருந்தவனும் மருமகனுமுடையசாதியாய்ப்போய்விட்டானென்றுமனதுசந்தோஷித்தான்-எ-று. (௩௪)

பன்னிருதிங்களும பரிதியானது
மன்னியமதியமும் வலமதாய்வரு
மந்நிலையுனாக்கவென் னறிவுபோதுமோ
வுன்னியவாசையா லுரைக்கலுற்றனன்.

(இ-ள்.) பன்னிரண்டுமாதமும்சந்திரசூரியர்கள் மகாமேருவைவலஞ்செய்தல்போலப்பிரதட்சணஞ்செய்துவருவார்களென்றால் அந்த அருணாசலத்தினது பெருமையைச்சொல்வதற்கு அற்பமாகியஎன்னுடையபுத்தி போதுமோ ஆனாலுஞ்சொல்லவேண்டுமென்று நினைவுகொண்டபத்தியினால் சொல்லததொடங்கினது—எ-று. (௩௫)

அர்க்கமாமலையுள தத்தகீழ்த்திசை
நரகனாயிரத்தவ னண்ணிவாழ்த்துவன்
தெற்கிலேயுளதுபுத்தேளிர்மாமலை
பொறைகையேந்தசன்றினம் புகழ்ந்துபோற்றுவான்

(இ-ள்.) அருணாசலமென்னு மலைக்கு அடுத்த கீழ்ப்பக்கத்தில் அர்க்கமலையென்று ஒருமலையுண்டு அதில ஆயிரங்கண்களையுடையதேவேந்திரன் இருந்துகொண்டுசுவாமியை ஸ்தோத்திரஞ்செயவான் அவ்வருணகிரிக்கு அந்தத்தென்பாரிசத்தில் தெய்வமலையென்று ஒன்றுண்டு அதில்சிவ சதைகளையுடைய யமன்புகழ்ந்துகொண்டு வணங்குவான்—எ-று. (

போற்றிசைத்தண்டமாவிலங்குண்டதிற்
சேற்றிசைவருணன் மூன்செம்மைகூப்புவன்

திருநகரச்சருக்கம்.

தோற்றிடப்படு திசைக்குலமால்வரை
போற்றிடவளகையான் பொருந்திவாழ்ந்துவான்.

(இ-ள்.) இந்த அருணாசலமென்னுந் திருமலைக்குமேல்பாரிசத்தி[ல்] தண்டலையென்று ஒருமலையுண்டு அதில் சகரவாகனத்தி லேறுகிறவ னாகிய சிவத்தைக்கூப்பி அந்தமலையை வணங்குவான் வடபா[ரி]சத்தில குசமலையென்று ஒருமலையுண்டு அதில்சகலராலுமபோற்றப்பட்டகுபேரனென்பவன் இருந்துக்கொண்டு அரசுசெய்வான்-எ-று. (கூ)

மற்றுநாலுகைகளில் வாயுதியல
னெற்றிசேர்விழியல னிருதிபோற்றுவான்
சுற்றுமமலைதொறுஞ் சாருஞ்சித்தரு
முற்றசீரவசுக்களு முறைந்துபோற்றுவார்.

(இ-ள்) மற்றநான்குதிக்குகளிலும் இருக்கிறமலைகள் நான்கிலும் இருந்துகொண்டுவாயு அக்கினிஈசானன் நிருதி யிந்தநாலவர்களும் வணங்குவாகள அவைகளைச்சுற்றியிருக்கிற மலைகளிலெல்லாம் தேவர்களும் சித்தர்களும சிறபபுபொருந்திய அஷ்டவசுக்களும் இருந்துக்கொண்டு வணங்குவாகள்-எ-று. (கூஅ)

தன்னையேநிகருமத் தலத்திலேபுவி
கன்னையாதவமபுரிக திகமாகவே
என்னையாளுடையவ னிடங்கலந்தவ
பின்னையுமதிநலம் பேசலாகுமோ.

(இ-ள்.) தனக்குத்தானேஒப்பாகிய அந்தஸ்தலததில் லோகத்துக்குத் தாயாகிய பார்வதியம்மை மகத்தாகிய அரியதவஞ்செய்து என்னையாட்கொண்டபரமசிவனுடைய இடப்பாகத்திற்சேர்ந்தாள் ஆனபடியினாலே அந்த அருணாசலததின்பெருமையைசசொல்லவேண்டுமோ-எ

தன்னிகர்மந்திரம் புவனத்தத்துவம்
வன்னமாயவிளங்குரவ் வரைமாலய
னன்னமுமேனமு மாகிநாடிஞ
ரின்னமுமளவிடா திடும்படீசனினர்

(இ-ள்.) தனக்குத்தானேசமானமாகிய மந்திரம்புவனம் தத்[துவம்] இவைகளின்உருவமாய விளங்கும் அருணாசலத்தை விஷ்ணுபிரமா இ[வ]ரும் பன்றியு அன்னமுமாகித்தேடி இத்தன்மையையுடையதெ[ன்]று அறியக்கூடாமையினாலே லோகங்களுடையகர்வத்தைநீக்கினர்கள்-எ-

மருவியபெரும்புகழ் வச்சிராங்கத
னருணைபைவலப்புரித் தமலனையினன்
கருவியகலாதரன் காந்திசாலியென்
றிருவரும்பாதியெய்தினராதில்.

(இ-ள்.) மகத்தாகிய கீர்த்திபொருந்திய வச்சிராங்கதபாண்டியன் அருணாசலத்தைப் பிரதட்சணம் வந்ததினாலே தன்னுடைய பாவத்தை நீங்கினான் பெருமைபொருந்திய கலாதரனாகிய சாலியிந்திரனும அந்தத்தலத்தைவலம்வந்து மோட்சத்தையடைந்தானாகன-எ-று. (௪௧)

எழுசீரடியாசிரியவிருத்தம்

ஆதியாமிவர்கடொடங்கியின்றளவுக்கனேகருண்டருணையை நினைந்துங்-காதலாலுரைத்துங்கேட்டுமுன்கண்டுங்கால்களால்வலமதிற்செய்தும் நீதியாயிருந்துநெறியினடந்து நெடுங்கயம்படிந்தறம் புரிந்துஞ் சோதிதாடொழுதும் பணிவிடைசெய்துந் துளக்கிலா முத்திபெற்றிருந்தார்.

(இ-ள்.) சொல்லப்பட்ட இவர்கள் ஆதியாகத் தொடங்கி அன்றுமுத லிதுவரைக்கும் அனேகம்பேர் அருணாசலத்தைநினைத்தும் ஆசையோடுஸ்தோத்திரஞ்செய்தும்கேள்விப்பட்டும் தரிசனஞ்செய்துங்கால்களாலே பிரதட்சணஞ்செய்தும் அதில்நீதிபொருந்தியவேதமார்க்கத்தை அனுசரித்துக்கொண்டிருந்தும் மகத்துவம்பொருந்திய தீர்த்தங்களிலேமுழுகியும தருமங்களைச்செய்தும்சோதிசொரூபமாகியசிவனைத்தொழுதும திருப்பணிசெய்தும் கெடுதலில்லாதமோட்சத்தை பெற்றிருந்தார்கள்-எ-று. (௪௨)

அப்பதிதமிழ்நாட்டுளதிடைபெண்ணையாறுசெய்யாறுபிங்கலையாஞ் செபமிகமலைநதி சுழிமுனையாஞ்செய்த தொன்றாயிரம்பலமாமுப்பத்துமூன்றுகோடிதேவர்களுமுனிவருந் தவஞ்செயவாரதற்கோர்,ஒப்புவேறில்லையிப்பாரிட்டிடத்துமும்பர்நாட்டிடத்துமென்றுரைத்தார்,

இ-ள். அந்தஅருணாசலஸ்தலமானது தமிழ்நாட்டின்கண்ணிருக்கிறது அந்தப்பதிக்கு வலப்பக்கத்திலே வருகிறபெண்ணையாறு இடையென்னும்நாடியாகும் இடப்பக்கத்திலே வருகிறசெய்யாறு பிங்கலையென்னும்நாடியாகும் கமலையென்கிறநதி சுழிமுனையென்னும நாடியாகும் அந்தநதிகளில் ஸ்நானஞ்செய்தால் ஒன்றுக்கு ஆயிரம்பங்குபலன்வரும் முப்பத்துமூன்றுகோடி தேவர்களும்முனிவர்களும் அந்தஸ்தலத்தில்தவஞ்செய்வார்கள் அதற்குச்சமானம இந்தலோகத்திலும் மேலுலகத்திலும இல்லையென்றுசொன்னார் நந்திகேசுரர்-எ-று. (௪௩)

அற்றமிலவன்சொலருணையின்சிறப்பாலகமகிழ்ந்துருகியமுனிவன்மற்றுளதலத்திலதிகமென்றுரைத்தவாய்மையைமனங்கொளாதவைப்பான்; சிற்றறிவுடையேனுதலாலொருசொற்றெளிந்திலேனெனச்சொனு

னதற்குமற் றளமுணர்ந்தான்மொழியெனமொழிந்தான்முனிவனும வர்க்கினைமொழிவான்.

(இ-ள்.) சிவபத்தியிற் சோர்வில்லாதநந்திகேசுரர் சொல்லப்பட்ட அருணாசலத்தின் மகான்மியத்தினாலே இருதயமகிழ்ந்து உருக்கத்தை யடைந்த மார்க்கண்டேயர் மற்றசிவஸ்தலங்களைப் பார்க்கிலும அருணா சலமதிகமென்றுசொன்னதைமனதில் ஒப்புக்கொள்ளாமல்சொல்வா ர் சுவாமீ நான்சிறிய அறிவையுடையவனானபடியினாலே நீங்கள்திருவுள ம்பற்றியதுநன்றாயதோன்றவில்லையென்றுசொல்ல அதுகேட்டுச்சக லத்தையும உள்ளத்திலுணர்ந்த நந்திகேசுரர்உமக்குண்டான சந்தேகத் தைசொல்லுமென்றுகேட்கமார்க்கண்டேயர்சொல்வார்-எ-று. (சச)

தில்லையைக்காணக்காசியிலிறக்கச்சிறக்குமாரூர்தனிற்பிறக்க,வெல் லையில்பெருமையருணையைநினைக்கவெய்தலாமுத்தியென்றுரைத்தீர். சொல்லரியனைலுதலங்களுந் தம்மிலொக்குமென்றுரைத்திடாதடிகேளெல் லிருந்தருணையதிகமென்றுரைத்தருளெனவருள்செய்வானவனும.

(இ-ள்.)சிதம்பரத்தைத் தரிசனஞ்செய்தாலும் காசியிலே தேகத் தைவிட்டாலும்சிறப்புள்ள திருவாரூரிலேபிறந்தாலும்அளவில்லாதபெ ருமையுடைய அருணாசலத்தைநினைத்தாலும் முத்திகிடைக்குமென்று அருளிச்செய்தீர் இந்தநாலுஸ்தலங்களையும ஒன்றுக்கொன்றுசமானமெ ன்று திருவுளம்பற்றாமல்சுவாமி அல்லிமலர்களையுடையதடாகஞ்சூழ்ந் த அருணாசலத்தைமாத்திரம் அதிகமென்றுகட்டளையிட்டதை அனுக்கி ரகஞ்செய்யவேண்டுமென்று மார்க்கண்டேயர்கேட்க அந்தநந்திகேசுர ரும அருளிச்செய்கிறார்-எ-று. (சரு)

இறந்திடுந்தொழிலும்பிறந்திடுந்தொழிலு மெண்ணிபடியலைவமு டியா,பறந்திடுமவைக்குஞ்சிலவிலங்கினுக்கும்பாதவமுதலோருயிர்க்கு, நிறைந்தபுன்வீசரங்கட்குமக்கு நிருதகமணடபந்தொழுவோர்தமக்கி கழயனும்சிலாசிலாக்கெளிதாமல்லவர்க்கரியதமதுவே.

(இ-ள்.) கேளும் மார்க்கண்டேயரே ஒருவன் இறக்குந்தொழிலும் பிறக்குந்தொழிலும் நினைத்தபடிமுடியாது அதுஇருக்கட்டும பட்சிஜா திகளுக்கும, மிருகங்களுக்கும விருட்சமுதலாகியஜீவஜந்துக்களுக்கும்புன் மைநிறைந்த நீசருக்கும்,குருடருக்கும்,சபாபதியினதுநிருத்தசபையை தரிசனம்பண்ணக்கூடாது பூர்வசன்ம புண்ணியத்தினாலே அந்தச்ச பைக்குப் போய்க்காணக்கூடாதவர்களாகிய சிலர்க்குமாத்திரங் கிடைக் கும் மற்றவர்களுக்கு அரியதாகும் அந்தஸ்தலம்-எ-று. (சசா)

குண்டகர்பதிதருக்கோளகர்புலையாகொலைஞர்குருப்பிணிக்குறைந் தோர்,கண்டகர்நெடுந்தூரத்தினிலிருப்போர்கருணையாருணை-பூர்

ஊத என்டகவொருகா லினைத்திடமுத்தி யிலாலால்விலங்கு புள்மரங்
கள்-முண்டகமுதலாயினவுமுன்காணமுனைந்திடமுத்தியேபெறுமால்

(இ-ள்,)ஸ்திரீயானவள் தன்கணவனுக்கன்றிவேறொருவனுக்குப் பெறப்பட்ட குண்டகர்களுக்கும், பாவிகளுக்கும் விதவை பெறப்பட்டகோளகருக்கும்-நீசருக்கும-கொலைசெய்கிறவர்களுக்கும் அவையவங் குறைந்தவர்களுக்கும்-தீமைசெய்கின்றவர்களுக்கும - வெகுதூரத்திலிருப்போர்களுக்கும்-கிருபைபொருந்திய அருணாசலஸ்தலத்தை நன்றாக ஒருதரம்நினைக்க முத்தியுண்டாகும் இவர்களல்லாமல்மிருகங்கள்- பட்சிகள்-மரங்கள்-தாமரைமுதலாகிய கொடிபூண்டுகளும் அந்தவூரில் முளைத்தால்முத்தியையடையும்-எ-று. (௬௭)

சிலையெலாமிலிங்கமதுசிவலோகந்தேவர்பாதவங்கள்பாதவங்க
ளலையுலாமபுனல்கள்சடையுலாங்கங்கையருந்துமுணவமாருண்ணமுதா
முலவியேவருதல்புவிவலம்வருதலுரைத்தசொல்சுருதியாமுறங்கல
மலைவருசமாதியாகுமத்தலத்தைமானுமோமற்றொருதலமே.

(இ-ள்.)அந்தஸ்தலத்திலிருக்கிற சிலைகளெல்லாம் லிங்கங்களான படியினாலே அதுசிவலோகமாகும் அந்தஸ்தலத்திலிருக்கிற விருட்சங்களெல்லாம் கர்ப்பகவிருட்சங்களாகும் அந்தஸ்தலத்திலிருக்கிற அலைபொருந்தியநீரெல்லாம் சுவாமியின்சடையிலிருக்கிறகங்கையாகும், அந்தஸ்தலத்திலிருக்கிறவர்கள் சாப்பிடுகிறவுணவுகளெல்லாம் தேவாமிர்தமாகும்-அந்தஸ்தலத்தில் சஞ்சரித்தால் பூமிபிரதட்சணஞ் செய்ததாகும்-அவ்வூரில்சொல்லும்வார்த்தைகள் வேதமாகும்- அந்தஸ்தலத்தில் நித்திரைசெய்தால்நிஷ்டைகூடி சமாதியிருந்ததாம் ஆனபடியினாலே அதற்குமற்றொரு ஸ்தலம்சமானமாகுமோ-எ-று. (௬௮)

முத்தழல்புரிந்தோர்சன்மறைதெளிந்தோரைவகைவேள்வியுமுடித்தோ, ரொத்தவம்புரிந்தோ ரெவ்வறஞ்செய்தோ ரெண்வகை யோகியரெனினு மத்தலநினையா தவர்க்கிலைமுத்தியாதலா லயாவானிடத்துஞ்சுத்தமானிடராய்ப் பிறந்ததைநினைத்துத் துயரகலமுத்திபெற்றிருப்பார்.

(இ-ள்.) காருகபத்தியம்-ஆகவனீயம்-தட்சணாக்கினி என்கிற மூன்றக்கினியைவளர்த்தவர்களும்-ருக்கு-யசுர்-சாமம அதாவணம என்னுநான்குவேதங்களை யுணர்ந்தவர்களும்-பிரமயாகம்-தெய்வயாகம்-பூதயாகம-பிதிர்யாகம்-மானுடயாகம்-என்கிறஐவகை யாகங்களையும் நிறைவேற்றினவர்களும் இதந்தன்மையாகிய தவஞ்செய்தவர்களோ எப்படிப்பட்ட தருமஞ்செய்தவர்களும்-இயமம்-நியமம்-ஆசனம்-பிராணாயாமம பிரத்தியாகாரம்-தாரணை-தியானமசமாதி என்னப்படுகின்ற அஷ்டாங்க

யோகம்செய்தவர்களுமாகிய எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும் அந்த அருணாசலத்தைநினைக்கவிட்டால் அவர்களுக்குமுத்தியில்லை ஆனபடியினாலேதான் தேவர்களாய்ச் சொர்க்கலோகத்தி லிருந்தவர்களுமஞ்ஞானமுள்ள மானிடராகப் பூமியிற்பிறந்து அந்த அருணாசலத்தைத்தியானஞ்செய்துகெடுதலில்லாதமுத்தியையடைந்திருப்பார்கள். (சக)

பொருவிலாசுவர்க்கத் தமிர்தமுண்டிருப்போர் போகபூமியைத்த
னிபுரப்போ ரருணைமாநகரிற்கிருமியாயப்பிறப்பததிகமென் றுதாங்கொ
ள்வார். மருவுமப்பதியிற்பிறப்பது நூறு மகம்புரிந்தவர்க்கலாற்கிடையா
திருவருள்படைத்தார்க்கெளிதலான் மற்றதேவர்கள்யாவர்க்குமரிதே.

(இ-ள்.) ஒப்பில்லாத சொர்க்கலோகத்தில்-நரை-திரை-மூப்புஉண்டாகாதபடி அமிர்தமுண்டிருப்போர்களாகியதேவர்களும் போகத்தையனுபவித்தற்குரிய அந்தச்சொர்க்கமுதலானலோகங்களைத்தனித்தனியாளுகின்ற தேவேந்திரன்முதலாகிய திக்குப்பாலகர்களும் அருணாசலஸ்தலத்தில் கிருமியாயப்பிறக்கிறது சொர்க்கத்தின்பதத்தை அனுபவிப்பதைப்பார்க்கிலும் அதிகமென்றுபிறப்பதற்கு ஆசைப்படுவார்கள் தெய்வத்தன்மைபொருந்திய அந்தப்பதியில் பிறக்கிறது நூறுயாகஞ்செய்தவர்களுக்கு அல்லாமற் கிடையாது சுவாமியினுடைய கிருபைபெற்றவர்களுக்குக் கிடைக்கும் அவர்களையன்றிமற்றதேவர்கள்முதலானமகத்துவமபொருந்தியயாவர்க்கும் அப்படிப்பிறக்கிறது கிடைக்கமாட்டாது-எ-று

வெற்றிரும்பிடத்தில் செம்பில்வெண்கலத்தில் வெள்ளியில்வெள்ளியபொன்னிற், குற்றமொன்றில்லாக்குயிற்றியமணிபோற்குலவியசிவனிருந்திடுவன் மற்றையதலங்களி லருணையென்றுரைக்கும் வளம்பதிதனிலெழுந்தருள்வன், பொற்றகட்டிடத்து மணியெனவுலாததாள் புனிதனுஞ்சிவருணர்ந்தி.

(இ-ள்.) சொற்பனிலைபெற்ற இரும்பிலும், செம்பிலும், வெண்கலத்திலும், வெள்ளியிலும், வெள்ளையபொன்னிலும் பதிக்கப்பட்ட யாதொருதோஷமில்லாத மாணிக்க ரத்தினம்போல் மற்றஸ்தலங்களில் விளங்காநின்றபரமசிவன் எழுந்தருளியிருப்பார் பொன்னினாற்செய்ததகட்டில் பதிக்கப்பட்ட அந்தரத்தினம்போல அருணாசலமென்றுசொல்லப்பட்ட வளம்பொருந்திய ஸ்தலத்தில் எழுந்தருளியிருப்பாரென்று பரிசுத்தமாகிய நந்திகேசுர திருவுளம் பற்றினார் ஆனபடியினாலே எல்லாஸ்தலத்திற்கும் இது அதிகமாயது-எ-று.

கண்ணினால்விளங்குந் திருமுகமுகத்தாற் கரியகண் விளங்குமவ்வி
ரண்டின், பண்ணினால்விளங்கு முடலெலாமதைப்போற் பரமனால்விள
ங்குமவ் வருணை, யண்ணறான் விளங்குமருணைமாநகராலமலனோ டருணை
யூரகமா, லெண்ணிலாப்பதிக ளெவைகளும்விளங்கு மெவற்றினுஞ்சி
றந்ததென்றிசைத்தான்.

(இ-ள்.) கேளும் மார்க்கண்டேயரே கண்களிருக்கிறதினால் முகம் பிரகாசிக்கிறது முகத்தினிடத்திலிருக்கிறதினால் அந்தக்கண்கள் விளங்கிக் கொண்டிருக்கும் இந்த இரண்டினுடைய சேர்க்கையழகினாலே தேகமெல்லாம் விளங்கும் இதைப்போலப் பரமசிவனாலே அருணாசலம் சிறப்படைந்திருக்கும் அந்த அருணாசலத்தால் சுவாமியும் அதிக அழகையுடையவராய் விளங்குகிறார் அந்தஸ்தலத்திலும் அதில் எழுந்தருளியிருக்கிற சுவாமியினாலும் எண்ணிக்கையில்லாத தலக்ஷேத்திரங்களும் சிறப்பாய் விளங்கும் ஆனபடியினாலே எல்லாஸ்தலங்களிலும் அது சிறந்ததென்று திருவாய்மலர்ந்தருளினார்-எ-று. (௩௨)

இதனால் எல்லாஸ்தலங்களும் உடலாகவும், அருணாசலஸ்தலம் முகமாகவும் அதில்சுவாமி கண்ணாகவும் சொல்லப்பட்டது.

வீசலரிலைமெய் குளிர்ந்திடுங்கொடியின் வேரினீர்சொரிந்திடினது
போற்பூசனையருணைநகரிலேசிறிதும் புரையறநடக்குமேயாகிற் காசி
முதலெத்தலமெலாம்பூசை கண்பெறநடந்ததாமிலையேல், வீசவாழ்த்
த்தலமெலாம்பூசை யியற்றிலெனியற்றிடாதிருக்கென்.

(இ-ள்.) ஒருகொடியினது வேரில் நீர்வார்த்தால் அக்கொடியும் அதிலிருக்கிற மணம்வீசுகின்ற புஷ்பங்களும் இலைகளும் குளிர்ச்சியையடையும் அதுபோல் அருணாசலஸ்தலத்தில் சுவாமிக்கு எவ்வளவாகிலும் பூசைகுறைவில்லாமல் நடக்குமானால் காசிமுதலாகிய எல்லாஸ்தலங்களிலும் மேன்மையாகப் பூசைநடந்ததாகும் அந்த திருவண்ணாமலையில் பூசைநடவாவிட்டால் மற்றஸ்தலங்களில் நடந்தாலென்ன நடவாவிட்டாலென்ன ஒருபயனுமில்லை-எ-று. (௩௩)

நிலந்தொழுமருணாசலந்தனிலிருந்து நெஞ்சினிலையமாயப் பிரிந்
தோர், நலந்தனைவிரும்பி நடந்தவர்முன்செய் நலங்களுந் தங்குறுந் தவ
முறும், குலந்தனிலுதித்தோராயினும் புலையர் குணத்தவராயினுங் கொடி
ய, ருலந்தவருயிரோடிருக்கினுமதற்கோர் குறைமையெனவறம்பிறக்குமெய்ப்பிறக்கும்.

(இ-ள்.) உலகத்தார் போற்றுகின்ற அருணாசலஸ்தலத்திலிருந்து இதைவிட உயர்ந்தஸ்தலங்கள் இருக்குமென்று மனதில் சந்தேகங்கொண்டுபிரிந்து ஒருக்ஷேத்திரத்தைநாடி நடந்தவர்களுக்கு அவர்கள் அத

ற்குமுன் செய்யப்பட்டதவங்களும் தருமங்களும், பிரயோசனப்படா துகள் அவர்கள்நல்லகுணத்திற்பிறந்தவர்களானாலும் பதிதராவர்கள்நல்ல குணங்களையுடையவர்களானாலும் கொடியகுணத்தாராவார்கள் அவர்கள் உயிரோடிருந்தாலும் இறந்தவர்களாவார்கள் அந்த அருணாசலத்துக்கு வேறொருஸ்தலங்களைச் சமானமாகச்சொன்னாலும் இந்தத்தோஷங்களெ ல்லாம் உண்டாகும்-எ-று. (௫௪)

என்றுதானமுனைச் சிறப்பொடுமுனிவர்க்கேதுவோடெடுத்தினி தியம்பிக் கன்றுமானும் மழுவுஞ் சுரிகையுந்தரித்த கடவுணைத் திருநந்தன னவலைச், சென்றுசென்னுறைஞ்சி நெக்குநெக்குருகிச் சென்னிமேற் செங்கைகளேற்றி, ஒன்றுமானந்தப்பெருங்கடலிடைப்புக்குணர்ச்சி யாய்முனிவனிருந்தனன்.

(இ-ள்) இந்தப்பிரகாரம் அருணாசலஸ்தலத்தினதுபெருமையை நந்திதேவர்முனிவர்களுக்குஇனிதாயெடுத்து அருளிச்செய்துமான்கன்று மழு உடையவர் இவைகளைத்தரித்த நந்திகேசுரராகவர்களிப்புற்றிருந தார் அந்தநந்திகேசுரரப்பலதரம் வந்தனஞ்செய்து நெக்குவிட்டுருகி ச் சிரசின்மேல் சிவந்தகைகளைநெடுநோக்கூப்பி ஒன்றுபட்டவராய் ஆ னந்தசமுத்திரத்தில்முழுகி தன்னைமறந்தவராகிப்பின்பு ஞாபகமவந்து இதனைச்சொல்லுவாராகக்கண்டோர்-எ-று. (௫௫)

முதலாவது.

திருநகரச்சருக்கம்.

முற்றிற்று.

ஆக-திருவிருத்தம்-௭௧.

திருவண்ணாமலை

பிரமா-விஷ்ணு இருவரும் பரமசிவத்தினது அடிமுடியைக் காணுதல்.



உ

சிவமயம்.

இரண்டாவது

திருமலைச்சருக்கம்.

கலிநிலைத்துறை.

சந்தையே யருணந்தியே யடியவர்க்கெளியாய்
சிந்தையானது மகிழ்ந்தன னருணையின் சிறப்பா
லந்தமாநகரிடத்திலே சிவனழல்வடிவாய்
வந்தவாறுடனது மலையாகியவகையும்.

(இ-ள்.) அருணாசலஸ்தலத்தினது மகிமையைக் கேள்வியுற்றமா ர்க்கண்டேயர்சொலவார்சும்முடைய ஆண்டவரே அடியேனுக்கு அருள்செய்த நந்திகேசுரசுவாமியே அடியார்க்கெளியவரே நீர் அருளிச்செய்த திருவண்ணாமலையென்னும் ஸ்தலத்தினது மகிமையினால் மனங்களிப்படைந்தேன் அப்படிப்பட்ட ஸ்தலத்தினிடத்திலே பரமசிவனானவர் அக்கினிசொரூபமாய்த் திருவுருக்கொண்டதும் அதுபின்பு மலையுருவமானதும்-எ-று. (க)

அம்மலைச்சுடரடி தலைதெரிகிலாதயன்மால்
விம்மலுற்றது மவர்க்கருள்செய்தது மவிளம்பாய்
கைம்மலைக்கட கரியுரிபுனைந்திடுங் கைலை
செம்மலைத்தொழுஞ் செல்வனேயெனவவன்செப்பும்.

(இ-ள்) அந்த அக்கினிமலையினது அடியும்முடியும்அறியக்கூடாமல்பிரமாவும்விஷ்ணுவும் வருத்தப்பட்டதும்பின்புசுவாமி அவர்களுக்குஅனுக்கிரகஞ்செய்ததும்திருவுளம்பற்றவேண்டும் கைபெருத்திய மலைக்கு ஒத்ததாயாதத்தையுடைய யானையினது சர்மத்தைத்தரித்த

ளிய கைலாசவாசராகிய பரமசிவனை வணங்கும்படியான செல்வத்தை யுடையவரே யென்று சொல்ல அந்த நந்திகேசுரர் சொல்லத்தொடங்கி னார் -எ-று. (௨)

பஞ்சபாதகமொருவனப்பதியிலேபண்ண
நெஞ்சினினைந்திடினு நினைத்ததேபரமாய்த
தஞ்சமாகியமுத்தியாமெனமறைசாற்று
மஞ்சொலாலதுமொழிந்தபேர்க்கென்னபேறரிதே.

(இ-ள்.) ஒருவன் அந்த அருணாசலஸ்தலத்திலே பஞ்சபாதகங்களைச்செய்யவேணுமென்று நினைத்தாலும் அப்படிநினைத்ததே மேற்பட்டபுண்ணியமாகி அதனால் பற்றுக்கோடாகிய முத்தியுண்டாகுமென்று வேதங்கள் முறையிடும் அன்பையுண்டாக்கும் நல்லசொற்களினாலே ஸ்தோத்திரஞ்செய்பவர்களுக்கு என்னபேறு கிடைக்கமாட்டாது என்றவாறு. (௩)

ஆகையாலுமக் கன்றியெமக்குமுண்டதிக
சோகமோகங்கள்தவிர்ப்பவனொருபரஞ்சுடராய்
மாகமூடுறவளர்ந்ததுமாலயாகரகப்
போகலிங்கமொன்றானதுமொருவகைபுகல்வேன்.

(இ-ள்.) ஆனபடியினாலேமார்க்கண்டேயரே இந்தமகான்மியத்தைக்கேட்கிறஉமக்கேயல்லாமல்எனக்கும் அதிகபலனுண்டாகும் துக்கத்தையும் மோகத்தையும் நீக்கிவிடுகிற சிவன் ஒப்பற்ற பெரியசோதிசொரூபமாய்ப் பிரமாவிஷ்ணு இவர்களுக்காக ஆகாசம்அளாவிவளர்ந்தும் சர்வத்திரர்க்கும் போகத்தைக்கொடுக்காநின்ற லிங்கமென்றுசொல்லும்படி திருவுருக்கொண்டதும் எனக்குத்தெரிந்தஅளவில் கொஞ்சம் சொல்லுகிறேன்-எ-று. (௪)

ஒடுங்குநாளினிலயனரியுருத்திரன்மகேச
னொடுஞ்சதாசிவன்விந்துநாதஞ்சத்தியெறியே
யடங்கிடும்பரசிவத்தினிற்பரமசிவமனைத்துங்
கடந்ததத்துவ முடிவிலேநின்றதுகருதி.

(இ-ள்.) சர்வசம்மாரகாலத்தில் முறைப்படிச் சகலஉயிர்களும் பிரமாவிடத்திலொடுங்கிப் பிரமாவிஷ்ணுவிடத்திலொடுங்குவார் விஷ்ணுமகேசுரனிடத்திலொடுங்குவார் மகேசுரன்சதாசிவனிடத்திலொடுங்குவார் சதாசிவம் விந்துவினிடத்திலொடுங்குவார் விந்துநாதத்தினிடத்திலொடுங்கும் நாதம் சத்தியினிடத்திலொடுங்கும் சத்திபரமசிவத்திலொடுங்கும் அந்தபரமசிவம் திருவுளங்கொண்டு எல்லாங்கடந்த தத்துவமுடிவிலேநின்றது-எ-று. (௫)

பரசிவத்தினில்வருபராசத்தியாற்குடிலை
விரிவிதியபர தத்துவமடையிலேவிரிந்து

மருவுமைவரு வொடுங்கியமுறையிலேவங்கா
ரரிமகன்படைத்திடுவதுமினைந்தனனகத்தில்.

(இ-ள்.) அப்படியெல்லாம் ஒடுங்கினகாலத்தில் தனியாகநின்ற பரமசிவம் உலகம் உண்டாக்கவேணுமென்று திருவுளங்கொண்ட அளவில் அந்தசிவனிடத்திலேதோன்றிய பராசத்தியினிடத்தில் குடிலையென்னும்சத்திதோன்றியது அதில் பெருமைபொருந்திய மகத்தத்துவங்கள் முறையே உண்டானதுகள் பஞ்சகிருத்தியங்களுக்குரிய பிரமா விஷ்ணு ருத்திரன் மகேசுரன் சதாசிவன் முன்னே ஒடுங்கிய முறையே உண்டானார்கள் விஷ்ணுவினுடைய புத்திரனாகிய பிரமாவானவர் உலகத்தைச்சிருஷ்டிக்கிறதற்கு மனதில் எண்ணினார்-எ-று. ( )

மரீசியங்கிரன் புலத்தியன்புலகனும் மறையோர்
கிருதுவத்திரிசனபதி யெழுவருமகிளைத்தா
ருரியதக்கனும வலப்பத்தப்பெருவிரலுதித்தான்
பிருகுமார்பினு மறத்திறைமுகத்தினுமபிறந்தார்.

(இ-ள்.) அப்படிபிரமாநினைத்தவுடனே மரீசி-அங்கிரன்- புலஸ்தியர்-புலகர்-கிருது-அத்திரி-சனபதியென்கிற ஏழுரிஷிகளும் பிறந்தார்கள் தக்கனவலதுகால்பெருவிரலில்பிறந்தான் பிருகுமார்பினிடத்திற பிறந்தான் தருமதேவதைமுகத்திறபிறந்தது-எ-று. (எ)

உன்னுமைந்தரின் மரீசிபாற்காசிபனுதித்தான்
பன்னுதக்கனு மைம்பதுபெணகளைப்பயந்தா
னன்னகாசிப னவர்பதின்மூவரையணைந்தான்
முன்னளாகியவதிதிபாலிமையவர்மூனறதார்.

(இ-ள்.) பிரமாவினிடத்திறபிறந்த பிள்ளைகளாகிய ஏழுவரில் மரீசிரிஷியினிடத்தில் காசிபரிஷிபிறந்தார் தக்கனென்பவன் ஐமபது பெண்களைப்பெற்றான் அந்தஐமபதுபெண்களில பதின்மூனறு பெண்களைக் காசிபவிவாகஞ்செயதார் மூத்தவளாகிய அதிதிவயற்றில முப்பத்துமுககோடி தேவர்களும்பிறந்தார்கள்-எ-று. (அ)

இருமைசேர்திதி மிரணியனிரணியாக்கர்களைத்
தெரியவீன்றனள் சிறப்புறுந்திதியெனுமிளையாள்
தருணமைந்தரி னிரணியன்பிரகலாதனனோ
டருமைமைந்தர்க ளவரைப்பயந்தனனவருள்.

(இ-ள்.) அதன்பின்பு அதிதிக்கு இளையவளாகிய சிறப்புப்பொருந்திய திதியென்பவள இரணியன் இரணியாட்சசனென்கிற இரண்டுபேரையும் பிரசிவித்தாள் இந்தஇருவரில் இரணியன் பிரகலாதனைமுதல் ஐந்துபிள்ளைகளைப்பெறறான்-எ-று.

பிரகலாதனன் றவத்தினன்மூவரைப்பெற்று
னொருநன்மைந்தரில் விரோசனன்மாவலியளித்தான்
மாவுமாவலி வாணனென் றொருவனைப்பயந்தா
னானருச்சனைபுரிந்தவ னயன்றொழவிருந்தான்.

(இ-ள்.) அந்தப்பிரகலாதனன் தவத்தினாலே மூன்றுபிள்ளைகளைப்பெற்றான் அந்தமூவரில் விரோசனனென்பவன் மாவலியென்பவனைப்பெற்றான் மாவலிவாணாசுரனைப்பெற்றான் அந்தவாணாசுரன் பரமசிவனைப்பூசித்துப் பிரமாதொழுபடியாக வாழ்வு பெற்றிருந்தான்-என்றவாறு. (௰)

தனுவளித்தவன் சம்பரன்முதலினோர்பதின்ம
ரனையதானவர்ப் பெற்றனன்சிங்கிகையனங்கு
பணியிராகுவே முதலொருநால்வரைப்பயந்தாள்
பினையளாகவொரு மூன்றுபேரசுரரைப்பெற்றாள்.

(இ-ள்) மலைகளினுடைய சிறகையறுக்கிறதற்குத் தேவேந்திரனுக்குத கன்முதுகெலும்பைக்கொடுத்துத தேகத்தைவிட்டவராகிய ததிசிரிஷியெனபவர் சமபரன்முதலாகிய பத்து அசுரர்களைப்பெற்றார் அந்தப் பத்துப்பேரில் சிங்கிகையென்பவள் இராகுமுதல் நாலுபிள்ளைகளைப்பெற்றாள் அவளுக்கு இளையவள் மூனறுபேர்அசுரரைப்பெற்றாள்-எ-று. (௰௧)

காலசேயர்களறுவரைப் பயந்தனள்காலை
காலநீள்சிறைக் கருடனுமருணனுந்தவிர
நாலுபாலரைப புதல்வாவினதையுயர்ந்தாள்
ஆலநேர்விழிக்கத்துரு பணியெலாமளித்தாள்.

(இ-ள்.) காலையென்பவள் காலகேயர்கள் ஆறுபேரையும்பெற்றாள் மிகவும்நீண்டிருக்கிற சிறகினையுடையகருடன் அருணனோடு கூட நாலுபிள்ளைகளை வினதையென்பவள்பெற்றாள் விஷத்தையொத்த கண்களையுடைய கத்துருவென்பவள் பாம்புகளெல்லாவற்றையும் பெற்றாள்-எ-று. (௰௨)

அரிட்டையென்பவளிடத்திலேயரம்பையேமுதலாய்த
திரட்டிமங்கையர் பிறந்தனரிலங்கினைமுனிவ
னருட்டலத்திலென் னிரட்டிகந்தருவரையளித்தா
ளருட்டவாள்விழிக் கபிலையாற்பதின்மர்வந்துதித்தார்.

(இ-ள்.) அரிட்டையென்பவளிடத்தில் அரம்பை ஊர்வசிமுதலான பெண்கள்பிறந்தார்கள் இலங்கினையென்பவள் முனியினுடைய இருமையினாலேபதினாறுவகையாகியகந்தருவர்களைப்பெற்றாள் வாள்போன்ற கண்களையுடையகபிலையிடத்தில்பத்துப்பிள்ளைகள் பிறந்தார்கள்-எ-று.

அங்கிரர்சனபதிகள் காந்தருவரையளித்தார்
தங்குமத்திரி கதிரமதிபுலத்தியன் முனைய
பொருவிராக்கதர் வானரர்கின்னராபுலக
னருமைந்தாகிம் புருடர்பின்விலங்கையுமளித்தான்.

(இ-ள்.) அங்கிரர்-சனபதிஎன்கிற இருவரும் காந்தருவரைப்பெற்றார்கள் அத்திரியென்பவர் சூரியசந்திரரிருவரையும்பெற்றார் புலத்தியா-இராட்சதர்-வானரர்-கின்னரர்-இவர்களைப்பெற்றார் புலகரிஷியென்பவர் கிம்புருடரையும் மிருகங்களையும்பெற்றார்-எ-று. (௰௪)

தருணராகியவசுக்களைச் சனபதிதந்தான்
பிருகுவென்பவன் கவியுடன்சவுனரைப்பெற்று
மிருவரோடுசெந் திருவையும்பிருகுபெற்றெடுத்தான்
பருவமைந்தரிற் கவியுமோவெள்ளியைப்பயந்தான்.

(இ-ள்.) சனபதியென்பவர்பின்னும் தருணம்பொருந்தியஅஷ்டவசுக்களைப்பெற்றார் பிருகுவென்பவர் கவியென்பவனையும்சவுனகனையும்பெற்றார் இந்தஇருவரைப்பெற்றதுமல்லாமல் பின்பு லட்சுமியையும்பெற்றார் அந்தப்பருவம்பொருந்திய பிள்ளைகளில் கவியென்பவர் சுக்கிரனைப்பெற்றார்-எ-று. (௰௫)

பரியதானதன் றேவிபூக்கிரண்டினும்பரிதி
யுரியவாண்பரி யாகிப்பெண்டிரியதனையூற
வரிசைபற்றிய மருத்துவரிருவரும்வந்தார்
விரி * சராசரம் பிறந்தனபலபலவிதமாய்.

(இ-ள்.) சூரியன் தன்மனைவியைச்சேருகிறதற்கு யத்தனப்பட்டபோது அவளதற்குப்பொருந்தாமல் பெண்குதிரையாயோடினாள் சூரியன் ஆண்குதிரையாயதுரத்தி அவளைத்திருப்பிப்பார்த்தாள் அப்போது சூரியன்தனதுபெண்சாதியினிரண்டுமூக்கிலும் இந்திரியந்தங்கினதால் வரிசையாகிய அசுவினிதேவர்களிருவர்பிறந்தார்கள் அதன்பின்பு சராசரமும் அசரமும் அனேகவிதமாயுண்டாயின-எ-று. (௰௬)

கலிவிருத்தம்.

கண்டுலகெலாநமது கற்பனைகளென்றே
புண்டரிகவேதியன் மதத்திரிபுரத்தில்
தண்டியெதிர்கொண்டுபகை தங்கவிசைவண்டார்
வண்டுளபமாயனை வைதுரைவழங்கும்.

(இ-ள்.) இப்படிச்சகலமும் உண்டாக்கிய பிரமதேவர் இந்த உலகெல்லாம்நம்முடையசிருஷ்டியினாலல்லவோ உண்டாயினவென்று அகங்காரங்கொண்டு அதனால்வைகுந்தத்தில் வலுவிற்போயெதிர்த்துப் பகைகொள்ளும்படி சங்கீதம்பாடாநின்றவண்டுகள்சூழ்ந்த துளபமாலையைத்தரித்த விஷ்ணுவைப்பார்த்து அவமதித்துச் சிலவார்த்தைகள் சொல்லத்தொடங்கினார்-எ-று. (௰௭)

---

* சரம்-நடையுள்ளன. அசரம்-நடையில்லன.

ஏழுலகமேழுமிவ மேழுபுவலோரே
யாழிமுதலேழுகிரி யும்பகையியற்றி
வாழுமுயிர யாவையு மவகுக்கிடமனத்தார்
பாழிகொணமரீசிமுதன் மைந்தர்கள்படைத்தே.

(இ-ள்.) வாராயவிஷ்ணுவே பதினாலுலகங்களையுங்கருத்தமேகங் களையுமசத்தசமுத்திரங்களையும், முதன்மையாகிய சத்தகுலபருவதங் களையும் உண்டாகும்படிமனத்தினால்படைத்து எப்பொழுதும்வாழ்கி ன்ற எல்லாவுயிர்களையும் உண்டாக்கவலிமைபொருந்திய மரீசிமுதல் சிஷ்யர்களைப்பெற்றேன்-எ-று. (௰௮)

மைந்தரதுமைந்தர்கள் குருக்களுடன்வானோர்
சந்திரன்முதற்பெரிய தானவர்களானோர்
கந்தருவர்கிம்புருடர் சித்தர்கணநாத
ரிந்திரன்முதற்றிசைக ளெட்டினுமிருப்போர்.

(இ-ள்.) வாராய்விஷ்ணுவே என்னுடையபிள்ளைகளுடைய பிள் ளைகள் குருவாகிய பிரகஸ்பதியுடனே எல்லாதேவர்களும், சந்திரசூ ரியர்களும், அசுரர்களும், கந்தருவர்-கிம்புருடர்-சித்தர்- கணநாதர்களும் தேவேந்திரன்முதலாகிய திக்குப்பாலகர் எட்டுப்பேருமாயிருக்கிறார்க ள் இவர்களெல்லோரும் என்னாலல்லவோ உண்டானார்களென்று பி ன்னுஞ்சொல்லுவார் பிரமதேவர்-எ-று. (௰௯)

எஞ்சுதலிலாவிறைவ னென்பதனையென்பேர்
கஞ்சனெனுமைந்தனை மறந்திடுகொத்தா
லஞ்சவில்படைபபொழிலி லெப்படியளிப்பாய்
செஞ்சுவரிலாதெழுது சித்திரமுமுண்டோ.

(இ-ள்.) குறைவில்லாதசகலத்துக்கும் நானேகர்த்தனென்பதை யும், என்பிள்ளைதான்பிரமனென்பதையும், மறந்துவிடுகின்றகையினா லேயுலகத்தைபபடைக்கவிட்டால் எப்படிக்காப்பாற்றுவாய் சுவரில் லாமலெழுதுகிறசித்திரமுமுண்டோவென்று பின்னுஞ்சொல்லுவார் பிரமதேவர் -எ-று (௨௰)

அளித்திடுகளிப்பினை யகத்தினில்விடாயேல்
வெளிப்படவொருத்தனை யளித்திட விதிப்பேன்
குளிர்ச்சியகடற்கிடை குதித்திடதனுள்ளே
யொளித்திடுசரத்திர ருனைச்சருவுமுன்னே.

(இ-ள்.) வாராய்விஷ்ணுவேசகலத்தையும் இரட்சிக்கிறோமென்கி றமதத்தைவிட்டுவிடுவீர்விடாமற்போனால்உனைஉத்தியோகத்தைநீக்கி ம றறொருத்தனையுண்டாக்கி இரட்சிக்குமதொழிலுக்குவிதித்துப்போடு வேனைப முடையபுத்திரபௌத்திரர்களாகிய தேவர்கூட்டங்கள்வந்து உன்னைக்கொல்லும்படிவளைத்துககொள்ளுகிறதற்குமுன்னே திருப்பா ற்கடலுக்குள்ளேஒளித்துப்போவென்றுசொன்னார்பிரமதேவர்-எ-று

வித்தகமுனிப்பிருகு விட்டமுனிவாலே
பத்துருவெடுத்ததனை பகுத்தறிகிலாயோ
வத்தனையுடற்களு மமைத்தபடியாலென்
கைத்தலமுமிப்படி கறுத்ததாடிபாராய்,

(இ-ள்.) ஞானசொரூபியாகிய பிருகுரிஷி யானவரிட்ட சாபத்தினாலே பத்துதரம பூமியிலேபிறந்தாய்நீ அதைப்பகுத்தறிய வில்லையோ அப்படிப்பிறந்தபோதெல்லாம் அவ்வளவு பெரியஉனது உடல்களையெல்லாம்படைத்துப்படைத்து என்கைகள்காய்ப்பேறினபடிகறுத்துப்போயினபாரென் றுபின்னுஞ்சொல்லுவார்—எ-று, ௨௨

உந்திமலரோனென விகழ்ச்சியுரையாதே
முந்தவொருதூணிடை முளைத்தனையுனக்கு
தந்தையெனவோவலது தாயெனவோசொல்
செந்தழல்பிரந்துகளை தீயப்பதறியாயோ

(இ-ள்.) வாராய்விஷ்ணுவே நம்முடைய நாபிக்கமலத்திலே தானே வந்தானென்றுநிந்தனைசொல்லாதே முன்னாலே நீஒருதூணினிடத்திலேபிறந்தாயே அந்ததூணை உனக்குதகப்பனென்றுசொல்லட்டுமா அல்லதுதாயென்றுசொல்லட்டுமா அந்தத்தூண் உனக்குதந்தையானால் எனக்குநீதந்தையாவாய் செந்நிறம் பொருந்திய நெருப்புமூங்கிலினிடத்திலேபிறந்து மூங்கிலைத்தானே கொளுத்திப்போடுகிறதை யறியாயோ அப்படிஉன்னிடத்திலே நான்பிறந்தாலும்உன்னையழித்துப்போடுகிறேனென்றார்பிரமதேவர்—எ-று, ௨௩

வேதனிவைசொற்றன கொடும்படைவெதுப்பிக்
காதிடை துளைத்தனல்பு கட்டினகடுப்பக்
கோதமொடெழுந்தபுகை கொண்டநகைகொண்டே
மாதவன்மதித்தனன் மறுத்திவையுரைப்பான்

(இ-ள்.) பிரமாஇப்படி சொன்னவார்த்தைகள் விஷ்ணுவுக்கு இரண்டுகாதிலும் வேலாயுதத்தைப் பழுக்கக்காய்ச்சித் துளைக்கவிட்டுஉள்ளேசெலுத்தியநெருப்புப்போலதகிக்கவிருந்த கோபங்கொண்டுபுகையெழும்புபடியாகநகைத்து இவனுக்குஇந்த அகங்காரம்வந்ததுஎந்த விதத்தினாலேயென்று ஆலோசித்துச்சிலவார்த்தைகளைச்சொன்னார்விஷ்ணு—எ-று, ௨௪

வந்தவழிதன்னையு நினைந்திலைமனத்தென்
னுந்தியுனதன்னை யெனாஉன்னுதலையில்லாய்
தந்தைசிறுமைசெய்பிழை தன்னையுணராரென்
றிந்தவுரைசொல்லினை யிழந்ததுபோறேனே

(இ-ள்.) வாராய்பிரமாவே நீவந்தவழியையும் நினைத்தாயில்லை என்னுடைய நாபியைத்தாயென்று ஆலோசிக்கவும் இல்லை தந்தைகள் பொறுக்கிறவர்கள பிள்ளைகள்செய்தபிழையை ஒருகுற்றமாக நினையார்களென்று நீதலைநான்குசொல்லினையோ இனிமேல இப்படிபொறுக்கமாட்டேனென்றுபின்னுஞ்சொல்லுவார்.

கன்றுமதுவுக்கயிட வப்பகடுதானு
மென்றனையாரகவு மிகழ்ந்ததுயிர்குடித்தேன்
மன்றமொருதீமைசெயின்மைந்தனெனவுண்டோ
வன்றியுடனேயுமறுத்தெறிகிலாரோ

(இ-ள்.)கோபத்தையுடையமதுவும் யானைபோன்றகைடவனும்மன க்குப்பிள்ளைகளல்லவாஎன்னையிகழ்ந்துஎதிர்த்தபடியினாலேகொன் றுவிட்டேன்நிலைபெற்றஒருதீங்குசெய்தால் மகனென்று பார்க்கக்கூடு மோஅதுவல்லாமல்தேகத்திலே ஒருகட்டிகண்டால் அதைஅறுத்தெ றிந்துசொஸ்தபடுத்திக்கொள்ளாமலிருக்கிறார்களோமனுஷர்கள்.(௯)

பித்தனுனதோர்தலைபிடுங்கியெறிபோதி
லத்தலைமகனெனவமைக்கவிதியில்லா
எத்தலைவனென்பதுனையித்தகைமைகொண்டோ
பைத்தலையராமுடிகொள்பாரிடம்விதித்தாய்,

(இ-ள்.)வாராய் பிரமாவே பயித்தியக்காரனாகிய சிவன்உன்னு டையதலைகளிலொன்றைப்பிடுங்கி எறிந்தகாலத்தில் அந்தத்தலையை மறுபடியுண்டாக்கிக்கொள்ள வகையில்லை உன்னைப்படித்தலைவனெ ன்றுசொல்லுகிறது இந்தத்தலையைக்கொண்டுதானோ படத்தையுடை ய ஆதிசேடன் முடியிலிருக்கிறபூமியைப்படைத்தாயென்றார்விஷ்ணு

மச்சவுருவங்கொடு மறைதந்தொகுதிதந்தேன்
விச்சைபுளதானவரை வென்றுயிர்குடித்தே
னச்சமரமாமெனினும் வைத்தமரமென்றே
யச்சமுறுகின்றனனழிக்கவறிதன்றே,

(இ-ள்.)வாராய்பிர்மாவே சோமுகாசூரன் உன்னிடத்தில்வேத ங்களைப் பிடுங்கிக்கொண்டுபோனபோது நான்மச்சாவதாரங்கொண்டு அந்த அசுரனைக்கொன்று வேதங்களைவாங்கித்தந்தேன் அதுவல்லாம ல சாமர்த்தியமுள்ள அநேக அசுரர்களைக்கொன்றுதேவர்களோடு உ ன்னையுங்காப்பாற்றினேன் எட்டிமரமானாலும் தான்வைத்தமரமாக விருந்தால்வெட்டார்கள் அப்படிப்போல் பிள்ளையான உன்னைக்கொல் லக்கூடாதென்றுபயப்படுகிறேனென்றார்விஷ்ணு—எ-று, (௨௰)

என்றொருவருக்கொருவரெத்தனையுரைத்தார்
கன்றினர்புயத்தின்மிசை கைத்தலமடித்தார்
நின்றுலகுதித்தனர் நெருக்கினர்நிமிர்ந்தார்
துன்றியகனற்பொறிசுருக்கெழவிழித்தார்

(இ-ள்.)இந்தப்பிரகாரம் ஒருவருக்கொருவர் எத்தனைவார்த்தை களையோ சொல்லிக்கொண்டிருந்தார்கள் கோபித்துக்கொண்டுபுஜத்தி ன்மேல் கைகளாலே அடித்துக்கொண்டார்கள் நின்று பூலோகத்தில் குதித்தார்கள் நெருங்கினார்கள் நிமிர்ந்தார்கள் நெருப்புப்பொறிசுருக் கமாய்விழச்சுறுகசெங்கண்களைவிழித்தார்கள்—எ-று, ௨௧

வெற்புகள்பொடித்தன வெடித்ததுகடாகம்
பற்பலசுடர்க்கதிர் பணிக்கதிரொளித்த
சாப்பமுமொளித்தது தலைச்சுமைபொறாதே
கற்பமுடிவென்றமரர் கண்களையிமைத்தார்.

(இ-ள்.) பிரமதேவரும் மகாவிஷ்ணுவும்சண்டைசெய்கிறபோது மலைகளெல்லாம்பொடியாய்ப்போனதுகள் அண்டகடாகம்படீரென்று வெடித்தது பலபலகிரணங்களையுடைய சந்திரசூரியர்கள் ஒளித்தார்கள் ஆதிசேஷன் தலைச்சுமைபொறுக்கமாட்டாமல்உடலொளித்துக்கொண்டான் கற்பகாலம்வந்து உலகமழியப்போகிறதென்று தேவர்கள் கண்களையிமைத்துக்கொண்டார்கள்—எ-று. (௫௰)

உடுக்கணமுதிர்ந்தன முகிர்ந்தவுலகெல்லா
மிடுக்கணிலவிழ்ந்தன வெழுந்தனபரால
மடங்கினபகீரதி மன் ஞானநதியெல்லாந்
திடுக்கொடுமுழங்கின திசைக்கரிகளெட்டும்.

(இ-ள்.) நட்சத்திரக்கூட்டங்களும் மேகக்கூட்டங்களும் உதிர்ந்ததுகள் உலகமெல்லாந்துன்பங்களோடு அடுக்குக்குலைந்துவிழுந்ததுகள் எழும்பியதுகள் கங்கைமுதலான நதிகளெல்லாம் தண்ணீரில்லாமல் வறிப்போனதுகள் அட்டதிக்கிலுமிருக்கிற யானைகள் திடுக்கிட்டுப்பயந்தன—எ-று. (௫௧)

மேலினியெடுத்தெறிவர் வீழுவர்கடிகோடிக்
கோலியெதிர்க்குத்துகெனநின்றிடுவர்குதிச்
சாலமடிதொட்டளவில சாரிகைதிரிந்தார்
மாலையுமிருட்டுமெவல மாயவருதன்மான.

(இ-ள்.) ஒருவரையொருவர்மேலே யெடுத்தெறிவார்கள் கீழேவிழுவார்கள் மறுபடிஎழுந்து விரைவில்ஓடிவளைந்து எதிர்நின்றுகுத்துஎன்றுசொல்லுவார்கள் அப்படிகுதிகொண்டு மிகவுமடியைப்பிடித்து சூறைபோல அநேகவிசைசுழன்று திரிந்தார்கள் அச்சிவேரமும இருளும் வலமிடமாகவருகிற யொத்திருக்கும்படி—எ-று. ()

ஊருவனதத்துவன செல்வனவிண்ணோடே
சேருவனநின்றன திரிந்தனதிரட்டா
தாருவகையிற்றன தழைந்ததிருளெங்கு
மேருவசையுநகதெழு வேலையளறுக.

(இ-ள்) அந்தவேளையில் உலகத்தில் ஊர்ந்துபோகின்ற சீவன்களும், தவழ்கின்றசீவன்களும் நடக்கின்றவைகளும்பறக்கும்சீவராசிகளைப்போல ஆகாசத்திலேபறந்ததுகள் நிலையாகநின்றவிருட்சமலைகள் திரிந்ததுகள் திரளாகநிறைந்த ஐந்துவகையாகிய தேவதருக்கள் பொடிப்பொடியாய்ப்போனதுகள், எவ்விடமும அந்தகாரம் நிறைந்ததும் மகாமேரு அசைந்தது சத்தசமுத்திரங்களுஞ்சேரானதுகள்—எ-று. ()

அந்தமுடிவெல்லைதனி லஞ்சியிமையோர்தா
மிந்திரனையெய்தினர்க ளெய்திபதுரைக்கு

முந்தியவனுற்றதுயர் யாவையுமொழிந்து
வந்தவரவேதென வருத்துரைசெய்கின்றார்.

(இ-ள்) சருவசங்காரகாலம்வந்ததென்று சொல்லும்படி இருவருஞ்சண்டைசெய்யும்போது அந்தவேளையில்தேவர்களெல்லாம் பயப்பட்டுத் தேவேந்திரனிடத்திற்போய்ச்சேர்ந்து தங்களுடையதுக்கத்தைச்சொல்லுகிறதற்குமுன்னேதேவேந்திரன் தானபட்ட துன்பங்களெல்லாஞ்சொல்லிப்பின்பு நீங்கள்வந்தகாரியம் ஏதென்றுகேட்கத் தேவர்கள்சொல்லுவார்கள்—எ-று. (௩௪)

ஆரணனுநாரணனு மானவிருவோருந்
தாரணியிலேமிகு சமர்தொழில்விளைத்தா
ரோணியவேறுகதி யில்லையெவருக்கும
காரணனையேதொழுதல் காரியமிதென்றார்.

(இ-ள்) பிரம்மா விஷ்ணுவுமாகிய இருவரும் பூமியில்மிகுந்தயுத்தத்தைச்செய்கிறார்கள் எங்களுக்குப் பிழைக்கத்தக்கமார்க்கம் வேறேயில்லை எல்லாருக்குங் காரணமாயிருக்கிற பரமசிவனைத்தொழுது இந்தச்செய்தியைச்சொல்வதேகாரியமென்றுசொன்னார்கள்தேவர்கள்

நாயகனிசைந்துபினர் நாகவுலகத்தோர்
ஆயமலர்போலடி துதித்தரிவையாகா
மாயமுடன்மாலயன் வருந்தமதுதீராய்
தாயலதுமைந்தர்துணை தாரணியிலுண்டோ.

(இ-ள்) இப்படிச்சொல்லத்தேவேந்திரனும் சம்மதித்துப்பின்பு அவனோடு தேவர்களெல்லோருமே தாயச்சிவனுடைய பரிசுத்தமாகிய தாமரைமலர்போன்ற பாதத்தைத்தொழுது மனக்கலக்கனோடு சகங்கொண்டு விஷ்ணுவும் பிரமாவும் சண்டைசெய்வதனால் வந்ததுக்கத்தைத்தீர்க்கவேண்டும் பிள்ளைகளுக்குத்தாயேதுணையல்லாமல் மற்றொருதுணை பூமியிலுண்டோவென்று சொன்னார்கள்தேவர்கள்-எ(

உருப்படுசகட்டைநிக ரூற்றுலகின்மீதே
யிருட்படுபிறப்பினை யிறப்பினையுறாதே
பொருட்பெறவுனக்கடிமை புகசளவிலாவுன்
னருட்கடல்குளித்திட வடைக்கலமதானோம்.

(இ-ள்) உருண்டுகொண்டுபோகாநின்றவண்டியினுடையசக்கரம்போல அஞ்ஞானம்பொருந்திய பிறப்பையுமிறப்பையு மாறிமாறி யடைந்து வருத்தத்தை யனுபவியாமல் மோட்சத்தைப்பெற உனக்கடிமையாகப்புகுந்து உன்னுடைய அளவில்லாத கிருபைக்கடலில் குளிக்க அடைக்கலமானோமென்றார்கள் தேவர்கள்—எ-று. (௩௭)

புழுக்குடையுடம்பை பொறுக்கமுடியாக
விழுக்குடையனிச்சைகெட விச்சையருள்வோனே

முழுக்கடலிடத்தின் முழுக்களுமேமாறு
வழுக்கமலமற்றிட வந்தடைக்கலமதானோம்.

(இ-ள்) அநேகம்புழுக்கள் குடைந்துகொண்டிருக்கின்ற உடற்பாரத்தைத்தப்பொறுக்கமுடியாத இழுக்காகிய அஞ்ஞானத்தைக்கெடுப்பிரியத்தினாலே கிருபைசெய்கின்றசுவாமியே பெரியசமுத்திரத்தினிடத்தில் தினம்முழுகினாலும் போகாதமூலமலமாகிய அழுக்கற்றுப்போக அடைக்கலமாயுமமைச்சேர்ந்தோமென்றார்கள்தேவர்கள்-எ-று. (௩௮)

எண்ணமினிவேறிலை யெமக்கருள்செய்யென்றே
கண்ணுதலைவிண்ணவர்கள் கற்றுமொழிபோதி
லண்ணலுமுணர்ந்தனைத்துயிரினுள்ளே
யெண்ணையெனநிற்குமவனீதறிகிலானோ.

(இ-ள்.) இனிமேல்வேறேஆலோசனையில்லை எங்களுக்குக் கிருபைசெய்யுமென்று சிவனைதேவர்களபுகழ்ந்து ஸ்தோத்திரஞ்செய்யும்போதில் சுவாமியும் அவ்விருவருக்கும் வந்தசண்டையின்மூலத்தை யறிந்தார் எல்லாவுயிர்களிடத்திலும் எள்ளினிடத்து எண்ணெயபோல்நிற்கும் சுவாமி இது அறியமாட்டாரோ அறிவார்-எ-று. (௩௯)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

நடுக்கமுறுமுனிவரோடமரரெலாம்பயந்துவிர நாகமீது
படுக்கைபுரிதிருமாலும் பங்கயத்திருக்குமயனும் பகைமையீர
வடுக்கியிடும்புவனமெலா மடுக்கழியாதிருக்கமனத் தருள்வதாகி
தடுக்கரியதழலுருவத் தொருவரையாயிருவரையுந் தடுப்பதானான்.

(இ-ள்) நடுக்கமடைந்தமுனிவர்கள் தேவர்களெல்லாரும் பயத்தைநீங்கும்படி சர்ப்பசயனத்தில் நித்திரைசெய்கின்றவிஷ்ணுவும்தாமரைப்புஷ்பத்தில்வீற்றிருக்கின்றபிர்மாவும் ஒருவருக்கொருவர் பகைமையைநீங்கவும் அடுக்கடுக்காயிருக்கிற அண்டங்களெல்லாம் அழிக்குக்குலையாமலிருக்கும் கிருபைசெய்வதற்காய்த் தடுத்தற்கரிய அக்கினிசொரூபத்தோடுகூடிய ஒருமலையாகி இவ்விருவரையுந் தடுக்கும்படி எழுந்தருளினார் பரமசிவம்-எ-று. (௪௰)

பாதலத்திற்பணிகளெல்லா விழுதாகவதன்கீழ்ப் பருவேரோடிப்
பூதலத்திற்கிளைத்திமையோர் குலமெல்லாமலர்ந்துமலப் புண்டரீகன்
மீதலத்துமுகடுடைத்துக் கடாகவெளிகடந்துபெரு வெளிக்குமேலா
மாதலத்துக்கிதுவுமொரு கனன்மேருவடுத்ததென வளர்ந்தமாதோ.

(இ-ள்.) பாதாளலோகத்திலிருக்கிறபாம்புகளெல்லாம் அந்தமலைக்குச்சல்லிவேராகவும் அதன்கீழ்ப்பருத்தவேரோடி பூமியிற்பெரிதாய் கிளைத்துத் தேவலோகங்களெல்லாந்தாண்டிப் பிர்மலோகத்துமுகட்டையுடைத்து அண்டகடாகவெளியைக்கடந்து அதற்குஅப்பாலிருக்கிற பெரியவெளிக்கு மேலாயிருக்கிற இடத்துக்கும் அக்கினிசொரூபமாகிய மகாமேருஅடுத்ததென்றுசொல்லவளர்ந்தது-எ-று. (௪௧)

மூளைக்குநெடுஞ்சுடரிரவி புரவியுலவாவுலகமுழுதுமோடிக், க
ளைகுமணியிருளகற்றவேற்றிவைத்தவிளக்கெனவேகிளாகலைகபாலே
யளக்கவெலாமளப்பரிய வளவையழல்பரந்ததென வாததமானந, தி
னைக்குமெழுதிரிகளெல்லா மதுசொரிந்தசிறிபொறுபோற் சிவந்தமா
தோ.

(இ-ள்.) உதயமாகிநெடுந்தூரம் கிரணங்களை வீசுகின்ற சூரியனுடையதேரிற்கட்டிய குதிரைகள் சஞ்சாரஞ்செய்யக்கூடாதஉலகமெல்லாம் ஓடிக்கிளைத்தல் நீலமணிபோலுங்கரிய இருளையோட்டுகிறதற்கு ஏற்றிவைத்தவிளக்குப்போல பிரகாசிப்பதனாலே சமுத்திரமெல்லாம சொல்லுதற்கரிய வடவாமுகாக்கினிபறந்ததுபோலச் சிவப்புநிறத்தைப்பொருந்த சத்தகுலபர்வதங்களெல்லாம அந்தப் பிரகாசத்தினாலே அந்தஅக்கினிமலைசொரிந்த அக்கினிப்பொரிகள்போலச்சிவந்தனகள-என்றவாறு. மாது ஓ அசைகள. (௪௨)

கலிவிருத்தம்.

வானக்கண்ணழலாளது கண்டமலரோனும்
கானக்கண்ணனுமஞ்சியகன்றாரகளாகாணா
ஞானக்கண்ணினர் காணுமகல்லனலவசேரு
மீனக்கண்ணினருக்கெளிதாளுவெமமானே.

(இ-ள்.) இப்படி ஆகாசபரியந்தம அக்கினிசொரூபத்தைக்கண்ட பிரமாவும வேணுநாதத்தைச்செய்கின்ற கிருஷ்ணனாகிய விஷ்ணுவும பயப்பட்டு ஓதுங்கினார்கள் ஞானக்கண்ணையுடையவர்கள காணுவதல்லது குற்றம்பொருந்திய ஈனமாகியமுகத்திற் கண்ணுடையவர்காணுகிறதற்கு எளியனோ நமமுடையபரமசிவன்—எ-று. ( )

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கண்ணிலனாவிடவரிய சுடரினைக்கண்டிருவருமாய்க் கலையுமன்,
றெண்ணிலிதனடிமுடியை யறியவரோபெரியவரென் றிரைந்தாரிநத,ம
ண்ணினடியறிவனெனப் பணிவிடையிற்றாக்கமிகக்கோன்வராகமனா
ன். டிண்ணினமுடியறிவனென வடிவெகினவெடுத்தபனுபவிறைந்து
போனான்.

(இ-ள்.) கண்களாலே இவ்வளவுதூரம் இந்த மலைபோலிருக்கிறதென்று அறியக்கூடாத பிரகாசமானமலையைப்பார்த்து இரண்டுபேருந்துன்பத்தையுடையவராய் இந்தமலையினது அடியையாவது முடியையாவது அறிகிறவரே பெரியவரென்று ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள் அப்பொழுதுசாப்பத்தில்நித்திரைசெய்கிறவராகிய விஷ்ணு இந்தமலையினடியை நானறிந்துவருகிறேனென்று வராகரூபமானார் இந்தமலையின் சிகரத்தைக்காணுகிறேனென்று பிரமனும அன்னபட்சியாகி ஆகாயத்திற்பறந்தார்—எ-று. (௪௪)

மொத்துமரைக்கணத்திலுக்காயிரங்காதம்பறந்தயனார்விராந்துபோ
னார், அத்திபாரவெடுத்தபுவி கணத்திலுக்காயிரங்காதக துளைத்துபோ
னார், ரத்தகையோர்செயலுரைக்கிறகளைசமணிகெடுபூட்டுக நாகிலோ
டு, நித்திலமொற்குண்டிகையுநீலமணிக்குன்றகைய நிகாததமாதோ.

(இ-ள்.) சொல்லப்பட்ட அரைக்ஷணத்திற்பிரமா ஆயிரங்காதவழி பறந்துமேலாகப்போனார் பட்டத்தையுடைய ஆதிசேஷன் சுமந்தபூமியை அரைநொடியிலே ஆயிரங்காததூரம் துளைத்துக்கொண்டு விஷ்ணுகீழாகப்போனார் அதுஎப்படியிருந்ததென்றால் அந்தமலைதங்கமயமாகியராட்டணப்பூட்டைப்போலவும் அதில்மிறைகிறதற்குக்கட்டிவிட்டிருக்கின்ற நீலரத்தினத்தோண்டிபோலவும் முத்துகளிழைத்திருக்கிற அழகியதோண்டிபோலவுமிருந்தது—எ-று. (௬௫)

பூவுலகையரியகன்று கீழுலகின்முறைமுறையே புகுந்துபோந்து
காவலுறுமாவலிதன்போகவதி யெனும்புரமுங் கடந்துமேவித்
தேவர்தொழும்பாஞ்சுடர்வாளாடகேசுரகரத்துஞ் சிரத்தும்போற்றி
மூவுலகமுதலளந்தோனேழுலகமளந்துமதனடிவுகாணான்.

(இ-ள்.) வராக அவதாரமெடுத்த விஷ்ணுவானவர் பூலோகத்தைக்கடந்து அதின்கீழிருக்கின்ற ஏழுலகத்தையும் முறையே துளைத்துக்கடந்துபோய் மாவலிச்சக்கிரவர்த்திகாவலிலேயிருக்கிற போகவதிபட்டணத்தைத்தாண்டி அப்புறம்தேவர்களவணங்கும் பிரமசொரூபம்விளங்காநின்ற ஆடகேசுரத்தைக்கண்டு கைகளினாலும் சிரசினாலும்வணங்கி முன்னே மூன்றுலகத்தையுமளந்தவ இப்போதேழுலகங்களை அளந்தும் அந்தமலையினடியைக்காணாமற்போனார்—எ-று. (௬௬)

வளர்ப்புடையபிறைபோல வளர்மருப்புந் தேய்பிறைபோல்மழுங்கிப்போகக், குளப்படியுமுகநுனியும் பிணைத்தேமாசைப்போற் குறைந்துபோக, வளப்பரியதுயரின்விழுந் தொருநூறுண்டொழிந்த தமபினானைவாழ்த்தி, யிளைப்பதுவுஞ்சலிப்பதுமற் றெழுதலமுமிடர்க்கடலுமேறினானே.

(இ-ள்.) அப்படிமகாவிஷ்ணுவராகரூபங்கொண்டு தேடுகிறபோது வளர்பிறைபோல நாளுக்குநாள்வளர்ச்சியுற்ற இரண்டுகொம்புகளும் தேய்பிறைபோல்குறைந்து மழுங்கிப்போகவும், குளப்புகளும், முகத்தின்நுனியும்-தேய்மானைப்பின்பு எப்படிகுறைந்துபோகிறதோ அப்படித்தேய்ந்துகுறையவும் எண்ணக்கூடாத துக்கசமுத்திரத்தில்விழுந்து நூறுவருஷகாலந்தேடியுங்காணாமல் பின்பு தெளிவுவந்து இது சிவனுடைய செயலென்றறிந்து அவனைத்தியானஞ்செய்து இளைப்புஞ்சலிப்புமநீங்கித் தன்னுடையதுக்கசமுத்திரத்தையும், ஏழுலகத்தையும் தாண்டிவந்தார்-எ-று. (௬௭)

தமபோரைமுதற்றடக்கத் தழற்பிறப்பாதவந்தத்தலத்தைச் சார்ந்தா, னமபோதனிதன்முடியினளவறியா னென்மனத்திலையகீர்ந்தா, னமபோருக்கரியானைச் சேடானைத்தனதுவிழிநயனத்தோடே, யம்போதைப்புனைவானைப்பலகாலும்பணிந்துருகிப் பாவினின்றான்.

(இ-ள்.) தனக்கும்பிரமாவுக்கும் வந்தகலகத்தை நீக்கும்படிக்கு அக்கினிசொரூபமாகமுந்தத்தலத்தைச்சேர்ந்து அழகியதாமரைப்பூவிலிருக்கிறபிரமா இந்தமலையின்முடியை அறியமாட்டானென்று நிச

ஞ்செய்துக்கொண்டு சம்பாதமனுஷர்களுக்கு அரியவனாளப்படிப்பட்டவர்களுக்கு ஆரமாகயிருக்கிறவனைத தாமுடைய கண்ணாகியபுஷ்பததோடு அழகியபுஷ்பங்களைத் தரிககானின்றவனைப்பலதாமும் வந்தனஞ்செய்து உள்ளமுருகிப்பரவினு விஷ்ணு—எ-று. (௬௮)

கலிவிருத்தம்.

இன்னதாமியன்செய விருக்கவிங்கிதன்
முன்னமேயழற்கிரி முடியையதேடவே
யன்னமாய்ப்பறந்தவ னனைக்கணத்திலே
மன்னுமோராயிரக் காதம்வாவினன்.

(இ-ள்.) இந்தப்பிரகாரம் இந்தவிஷ்ணுவிருக்க இதற்குமுன்னே அக்கினிமலையின்முடியையதேட அன்னபபட்சியாகிப் பறந்தபிரமா அனைக்கூணத்திலே ஆயிரவகாதவழியாகத்தாண்டினா—எ-று. (௬௯)

கிறியேயண்ட கோளகையுங்கிழற
வேறிநூறுயிர மாண்டிமேவினு
னூறுநூறுயிரக காதமோக்கினு
மீறிலாதிருந்தவ் வெறியி றாணமே.

(இ-ள்) அண்டகோளகையுங்கிழிப்பட கிழித்துப்பறந்து நூறுயிரம்வருஷந்தேடினர் அப்படிஅனேகநூறுயிரகக தந்தாண்டிப்போயப்பாரதத்திலும்முதலபார்த்ததுபோலவேயிருந்தது அக்கினிரூபன்-எ-று.)

சிறையெலாமுதிர்ந்தன விசையுந்தீர்ந்தன
நிறைவத மிகக்கனு முயிரபுநீணடன
குறையெலாம்வளாந்திட தனிமைகூர்தலான்
பறையினனிலையினை மனதிலெண்ணினன்.

(இ-ள்.) அப்படிபிரமா அன்னமாய்ப்பறந்துபோகிறபோது சிறகெல்லாமுகிர்ந்துபோயின விசையும் அடங்கி குறைவில்லாததுக்கமும்பெருமூச்சும்அதிகப்பட்டன மனகருணைவளர ஒருவருமில்லாமல்தான் ஒருவனானபடியினலே பிரமாசிலகதை மனதிலெணணினர்—எ-று.

அரியமாலிகனடி யறிந்துமீளுமோ
தெரிவருதிடையிலே திரும்புமோவென
வரியதாகியதுய ருசலாடினு
னெரியுறுமெழுகுபோ லினகுஞ்சிந்தையான்.

(இ-ள்) அரியமகாவிஷ்ணு இந்தஅக்கினிமலையினுடைய அடியை அறிந்துதிரும்புவானே கொஞ்சதூரந்தேடி இனிமேல் தேடககூடாதென்றுதிரும்பிவருவானே என்கிறதுக்கமாகிய ஊஞ்சலிலிருந்தாடினர், நெருப்பிலேயிட்டமெழுகுபோல யிளகிய மனதையுடையவராகி பிரமதேவர்—எ-று. (௭௨)

மற்றிதுசிவனென மனதிலெண்ணிலே
னுற்றிதன்னையு முறவுகொண்டிலே
னிற்றைநாளவரைக்குமிவ் விடாகசூழ்கினேன்
சிற்றறிவுடைமையோ செய்ததீமையோ

இ-ள். இந்தமலையைச்சிவனென்று அறியாமற்போனேன் பகைத்துக்கொள்ளப்பட்ட விஷ்ணுவையாவது உறவுகொள்ளாமற்போனேன அன்றுமுதலின்றையவரைக்கும்வெகுகாலமாய்த்துக்கசமுத்திரத்தில்மூழ்கினேன் என்னுடையசிறியபுத்தியினாலேயோ பூர்வகாலத்திலேநான் செய்தபாவத்தினாலேயோவென்று விசனத்தையடைந்தார் பிர்மதேவர்—எ-று. (௫௩)

எய்தினேன்முடியறிந் தேகிலேனெனும்
பொய்களையுஞ்சகியும பொருந்தவேயுரை
செய்துணைபிறிதிலை யென்றுதேம்பினான்
கைதையின்மடல்வாய்ப் பின்புகண்டனன்

(இ-ள். இவ்வளவுதூரந்தேடிவந்துமுடியையறியாமற்போனேனாகிலுமினிமேற்போய் விஷ்ணுவினிடத்திற பார்த்தேனென்று பொய் சொன்னாலுங்கூட நேத்தாசையாகப்பார்த்தேனென்றுபொய்சாட்சிசொல்லுகிறதற்கு ஒருதுணையுமில்லையேயென்றுவிசனப்பட்டார் அந்தசமயத்தில்தாழம்பூமடலொன்றுமேலேயிருந்திறங்கப்பார்த்தார்பிரமா-எ-

இம்மடல்வெங்குற்று வருவதென்னுமுன்
னம்மடலணைந்ததன் கைகளையெற்றனன்
செம்மறன்முடியிலவீழ் செம்மலர்க்கையான
மெய்மைசேருயி ப்பதாய் விடுமினென்றதே

(இ-ள்.) இந்தத்தாழைமடலெங்கேயிருந்து வருகிறதென்று ஆலோசிக்குமுன்னே தாழம்பூபிரம்மாவுக்குச்சமீபத்தில்வர அதைக்கையினாலேபிடித்தான் அதுபரமசிவனுடையசிரசிலிருந்து தவறிவிழுந்ததாழம்பூவானபடியினாலே மெய்மையானபெருமூச்சோடு என்னைச் சீக்கிரத்திலேவிட்டுவிடுவாயென்றுசொல்லியது—எ-று. (௫௫)

ஆரணிகைதையே யிங்குநீவருங்
காரணமேதெனக் கமலன்கூறினான்
ஆரணனாரண னளவிடாமுத
லாரணிமுடியினுந் தவறிவீழ்ந்தனன்

(இ-ள்.) அந்தத்தாழம்பூசொல்லியதைக்கேட்டு அழகுபொருந்திய தாழம்பூவேயெங்கேயிருந்து வருகிறாயென்றுபிர்மாகேட்கப்பிரமாவினாலும் விஷ்ணுவினாலும் அறியக்கூடாதபரமசிவனுடைய சிரசிலேயிருந்து தவறிவிழுந்தேனென்றுசொல்லியது—எ-று. (௫௬)

தார்ப்பொலிமுடியினுந் தவறிவீழ்ந்தபின்
றற்பதினாயிரம வருடமெண்ணினே

னேற்பதுவிடுகவென் றிசைப்பவெண்டலைப்
பாப்பதுவிடுத்தயன் பகர்வதயினான்

(இ-ள்) கொன்றைமாலைப்பிரகாசியாநின்ற சுவாமியினது திருமுடி மேலிருந்துவிழுந்ததும நாற்பதினாயிரம் வருஷங்களாச்சுதே இன்னமுநான் பூமியிற்போகவில்லைவருத்தத்தோடுவருகிறேன் என்னைப் பிடிக்கவேண்டாம்விடென்று தாழம்பூசொல்லப்பிரமா சுவாமியைத் தேடுகிறதைவெறுத்துச்சிலவார்த்தை சொல்லத்தொடங்கினான்-எ-று.

துன்னியகதையே துணையுமாய்நமக்
கின்னமுமலைவுறு திடக்கணீக்கினு
முன்னிலுமுயிர்த்துணை யுறவுவேறிலை
யன்னியனல்லனு னன்னுமல்லவே.

(இ-ள்) என்சமீபத்திலடைந்த தாழம்பூவேநீஎனக்குத்துணையாயிருந்து நாளின்னமுந்தேடிப்பலியாமல் எவ்வருத்தத்தைநீக்கினுயுன்னைப் பார்க்கிலுமுயிர்போன்றதுணையுமஉறவுமவேறில்லைநானும அன்னியனல்ல அன்னபட்சியுமல்லவென்றுசொன்னான்பிம்மதேவன்-எ-று.

நாமமோதான்முகனுமாலுமா
யேமமாமிதற்கள விசைச்சவெண்ணினேன்
பூமிகீழிடந்தவன போயினான்மனத்
தீமையென்றிருமுடி தேடிக்காண்கிலேன்.

(இ-ள்) என்பெயரே பிரமா நானும விஷ்ணுவுங்கூடி அக்கினிசொரூபமாகிய இந்தமலையினளவைத் தெரிந்துகொள்ள வெண்ணினோம பூமியின்கீழிடந்தைப்போந்துகொண்டு அடியைஅவன்தேடப்போனான் பாவிபாவியநான்முடியைக்காணவெகுநாளாய்த்தேடியுங்காண்கிலேன்-எ-று

அந்தலைவாவிநுவதுகொடென்பய
னெடியனின்வாவினு னினைத்ததெய்தினற்
படியளந்தவனுடன் பறவையாமிவன்
முடியறிந்தானென மொழிதல்வேண்டுமே.

(இ-ள்.) ஆதியந்தமாக நடந்தசமாச்சாரமிது அதைக்குறித்துப்பேசுவதனாற்பயனென்னபெருமைபொருந்தியஉன்னுடையநலவார்த்தையினாலேயினைத்தகாரியமுடிக்கால்தான்பயன்பூமியையளந்தவிஷ்ணுவினுடன்பகைக்கொண்டு பட்சியாயுருவெடுத்த இந்தபிர்மாசிவனுடைய முடியையறிந்தானென்றுநீசொல்லவேண்டுமென்றுபின்னுஞ் சொல்லுவான்பிரம்மதேவன்—எ-று. (௬௦)

வஞ்சமென்றிகந்திடேல் வருந்தினோர்க்குயிர்த்
தஞ்சமாமெனிற்பெரும் பொய்யும்சாறலா
மஞ்சியேயதொலத்தகர் மொழியுமாறிது
கஞ்சமுண்டமைவசே னன்புவேண்டினார்.

(இ-ள்.) தாழம்பூவே கேள் இதுவஞ்சனைத் தொழிலென்று நன்னைத் தேயந்தானுமந்துனைப் பதத்தையுடைத்தவர்க்கு உயிர்ச்சேதமவருமாயின் அதுபிழைத்தற்குப் பெரிதாகிய பொய்யைக்கூடச் சொல்லலாம் இந்தப்படிச் சொல்லக்கூடாதவார்த்தையுமல்ல அன்பன் சொன்னதுஞ் சினேகத்துக்கு விநயமானவாகித்தையுந்தின்ற இசைவு-எ-று. (௩௨)

உண்மையானுஞ் செயமெனச் சம் உண்மையெனச் சொல் தெனச் சுத்திரித்து இப்படி சிறப்பும்மைதொக்கின்றது- ஏகாரம்-தேற்றத்தின்கண்வந்தது

கண்ணுதன்முடியில்வாழ் கைதையேயிறி
தென்னுமவ் விதழ்கொண்டு விரைந்துபோந்து
விண்ணினின்றிழிந்துகீழ் விரைந்துவேதியன்
மண்ணுலகளந்தமால் மருங்குநண்ணினான்.

(இ-ள்.) பரமசிவனுடைய முடியில்வாழ்கின்ற தாழம்பூவே வேறே ஒரு ஆலோசனையுஞ் செய்யவேண்டாம் இதுமத்திரம் என்று சொல்லத் தாழம்பூ அதற்கிசைந்து வந்தது ஆகாயத்தினின்று சீக்கிரத்தில் பூமியையளந்த விஷ்ணுவினிடத்தில் வந்துசேர்ந்தான்-எ-று. ( )

தேராகேட்டியென வரவின்செய்கையைக்
காதநூறாயிரங் கணத்திலேகடந்
தாதியானமுடியறிந் தேனென்னவே
வேதனானதையு முள்ளதென்றதே.

(இ-ள்.) அப்படிவந்தபிரமன் சேர்ந்தனைப்பார்த்து விஷ்ணுவே என்னுடைய பால்வரவைக்கேள் ஒருநொடியிலே நூறாயிரங்காதம்பறந்து எல்லார்க்கும் ஆதியாகிய சிவனுடைய சிரசைப்பார்த்து வந்தேனென்று சொன்னான் தாழம்பூவும் அதுபோல்நிஜந்தான் பிரமா பார்த்தாரென்று சொல்லியது-எ-று. (௩௪)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

அக்கணமழற்கிரிவெடித்ததுவெடித்தவ ரக்கினி லரக்கரிமையோர், நருக்கினார் திசைக்களிறுகக்கினவருக்கமையருக்கியதெனக்குறுதிநீர், செகக்கரொளிமடங்கிடமுறுக்கிதழருக்குமெய்சிவப்பொளிவெளுந்தவடிவாய, முகக்கணனதற்கிடை முளைத்தனன் முகத்திலவன்முப்புரமெரித்தநகையே

(இ-ள்.) அப்படிப்பிரமா சொன்னதட்சணமே அக்கினிமலை பட்டென்று வெடித்தது, வெடிக்கச்சத்தத்தில் ராட்சதர்கள் தேவர்கள் திக்கிட்டு அயர்ந்தார்கள் திக்கில்இருக்கிற ஆனைகள் சூரியர்களைக் கக்கிச்சாய்ந்ததாலெப்படியோ அப்படிச் சக்தஜலங்களைக் கக்கினதுகள் செக்கர்வானத்துப்பிரகாசம் மழுங்கிப் போகும்படியாகவும் முருக்கம்பூவிதழ்சுருங்கும்படியாகவும் சிவந்ததம்து திருவுருவின் ஒருநவு பொருந்திய கிரமானதுவிபூதியினால் வெளுத்தவடிவாயத்தோன்ற அந்தவெடிப்பின் கிளறு பார்வதிசிவன் எழுந்தருளினார் முப்புரத்தை எரித்தநகைப்பு அவர் முகத்திலே வந்தது-எ-று. (௩௫)

றுண்டகனைசங்கைகளின்மொழிந்தவுரையன்னே பொழிந்துரைகொண்டவளவே, அண்டபகிரண்டமும்பகிரவெடுங்கினவடங்கினவிருக்கடலெலாங், கொண்டலுமறைந்தனசிறந்தனவிறந்தனகுறைந்தனநிறைந்தனகுலா, வெண்டிசைதிரிந்தனகரிந்தனபொரிந்தனவெரிந்தனவிரிந்தகருவே.

(இ-ள்.) பிரமாவே உன்னுடைய அகங்காரத்தினாலே சொன்ன சொல்லானது முயிருந்ததென்றுசொல்லிசைத்தபோது அண்டபகிரண்டங்களெல்லாம் இக்கிடென்றுநடுங்கியொடுங்கிப்போயின சூரியசந்திரருடைய பிரகாசமடங்கிப்போயின மேகங்கள் மறைந்தனசிறந்திருக்கிறதுகளெல்லாமிறந்ததுகள்நிறைந்தவைகளெல்லாங்குறைந்துபோயின குறைந்தவைகளெல்லாநிறைந்தன கூட்டமாகியதிக்குகள் அலைந்ததுகள் மரங்களெல்லாம் கரிந்தும்பொரிந்துமாண்டும்போனதுகள்-எ-று. (கூரு)

கலிவிருத்தம்.

அழிந்தனனயனென வமரர்ஞ்சினர்
குழிந்ததுநிலமெனக்கொள்ளையாயமலர்
பொழிந்தனர்நெடியவர்சகுவகைபூத்தது
கழிந்ததுமலரவற்கிடம்பைக்கங்குலே.

(இ-ள்.) தேவர்களெல்லாரும் பிரமா இன்றே அழிந்துபோனனென்றுபயப்பட்டார்கள்பூமிபள்ளமாகும்படிகொள்ளைகொள்ளையாகப்புஷ்பமாரிபொழிந்தார்கள் விஷ்ணுவுக்குச்சந்தோஷம்வந்து பிரமாவுக்குமுன்னேயஅகங்காரமென்கிற இருள்நீங்கிப்போயிற்று-எ-று. ()

பாடினன்பரவினன் பரவசத்தினா
லாடினனோடினனளவிடாமுதற்
கூடினனெவ்வரங்கொள்ளுகேனெனத்
தேடினன்சிவனையத்தெரிந்தசெங்கண்மால்.

(இ-ள்.) அப்போதுதெளிவையடைந்த விஷ்ணுவானவர் அக்கினிமலையினிடத்திலிருந்துஎழுந்தருளிய பரமசிவனைப்பாடினார் வந்தனஞ்செய்தார்பரவசங்கொண்டுஆனந்தக்கூத்தாடினார் ஒன்குதிகளிலும ஓடினார்யாவராலும்அளவிடக்கூடாதஇந்தசுவாமியைத் தரிசித்துக்கொடினன் இனிநானென்னவரங் கேட்பேனென்றுஆலோசனைசெய்தார்-எ-று. (கூஎ)

ஆசையாலுருகுமவ் வரிதனன்புகண்
டீசனும்பலவா யினிதுரலகினன்
வாசமாமலரவ னுக்குமண்ணின்மேல்
பூசையுங்கோயிலும் போகவென்றனன்.

(இ-ள்.) இப்படியிருந்த பக்தியினாலேதேகம் உருகாநின்ற விஷ்ணுவினுடையஅடிமைத்திறத்தைப்பாராதருக் கேட்ட வரங்களெல்லா

ஞ் சிவன் அருளிச்செய்து பிரமாவைப்பார்த்து உனக்கு பூமியிலே கோயிலும் பூசையுமில்லாமற்போகக்கடவதென்று திருவுளம்பற்றினார் சுவாமி-எ-று. (௬௫)

கைதையேயிவனொடு காவுநீயுரை
செய்ததாற்றீண்டிலே யென்றுதீர்த்தனை
னையதியமுனிவாகண் டேகவிதானமுகன்
மெய்தரையுறபபதம வீழ்ந்துபோற்றினன்.

(இ-ள்) வாராயதாழம்பூவே இந்தபிரமாவினோடேசேர்ந்து பொய்யசாட்சிசொன்னபடியினாலே உன்னை இதுமுதற் கொண்டு நீ னோடே யென்றுதள்ளினாரதனைப்பின்பு சுவாமிக்கு இப்படிப்பட்ட கோபம்வந்ததைப் பார்த்து ஏககமெடுத்துப் பிரமாவானவன் தன்னுடையதேகம் பூமியிலேயென்றுபடியவிழுந்து வந்தனஞ்செய்தான்-எ-று. (௬௬)

வேறு.

பொடிமுடியதழலேநிகா புலையாணைவமலமாஞ்
செடிமுகைகடாலேபுழல சிறியேனொருபொருளோ
வடிவேபெருவெள்யேசதுா மனதயேசதுாமறையினா
முடிவேதனிமுகலேயென்ன முனியேலென்னமுனியேல்.

(இ-ள்.) நீறுபூடுபநெருப்பையொத்தசுவாமியே சண்டாளத்துவமாகிய புணலமெலமென்கிறசெடிமுடிகொண்டிருப்பதினாலே அவிவேகியாயதிரிகின்ற சிறியனொருபொருளோ உருவானவரே அகண்டவெளியானவரே நான்குவேதமானவரே நான்குவேதத்தினுடைய அந்தரங்கமாகி நின்றவரே ஒப்பற்றமுதலாகியவரே கோபித்துககொள்ளவேண்டாம் கோபித்துககொள்ளவேண்டாம்-எ-று. (௬௭)

எந்நீர்களுமொன்றாகிய வெழுவாரியுமறுகி
வெங்கீரதுவாறுடன் விளைவப்புனலுண்டே
நினனீரணையிசென்றுலல குயிரெபபடிநிகழும
முந்நீர்விடமுண்டோயென்னை முனியேலென்னமுனியேல்.

(இ-ள்.) எல்லாநதிகளின்நீரும்விழுந்து ஒன்றாகிய ஏழுசமுத்திரமுங்காயந்து வெந்நீராயசசட்டால அதையாறுகிறதற்கு வேறேசலமுண்டோ உமக்கேஇப்படிப்பட்டகோபமவந்தால உலகத்திலிருக்கிற சீவராசிகள எபபடிபிழைககும முன்னேசமுத்திரத்திலேபிறந்த ஆலகாலவிஷத்தையுண்டமூர்த்தி கோபஞ்செயயவேண்டாம கோபஞ்செயயவேண்டாம-எ-று. (௬௮)

பிறைபேருழுமதியேயுரை பெண்ணேபிறவாணே
நறையேநறுமலரேயென நாலுவிதமாவை
பொறையேதிருவருளேபொழி புயலேயியவிசையே
முறையேபலமுறையேயென்ன முனியேலென்னமுனியேல்.

(இ-ள்) மூன்றாம்பிறையாகியும் பூரணச்சந்திரனாகியும் பெண்ணாகியும் ஆணாகியும் தேனாகியும் புஷ்பமாகியும் மலைகளாகியும் இருபாவங்களைத்தைப்பொழிகின்ற மேகமாகியும் சொல்லாகியும் நாதமாகியும்

ஞம்சாஞவிதரூபமாகி பூமிருக்கின்றமூர்த்தியே உமக்கு முன்னமேயோ மூ னதியோனையாகவே பிக்கவேண்டாம் கோபிக்கவேண்டாம்-எ-று. ()

வெம்மை சசாமலாகிய வில்வேடனுவன்றே
கொழுமைத்தலைமதவாதெழு கோபக்களிறன்றே
செம்மைக்கனலன்றேகொலை செயுமந்தகனன்றே
மும்மைப்புரமன்றேபொரு பொருளாயெனைமுனியேல்.

(இ-ள்.) மிருகத்தலைப் பணைக்கொம்பிருந்தபுஷ்பபாணங்களை யுடையமன்மதன்தேவமல்லவே தாருகாவனத்து ரிஷிகள்விட்ட எழு ம்பினதலையையுடைய ஆனைபோன்றமாதத்தையுமுடைய கோபமாகிய யா னையலலவே அந்தரிக்ஷிகள்பின்புவிட்ட சிவப்பாகிய அக்கினியலலவே கொலைசெயயுந்தொழிலையுடையயமனலலவே திரிபுரமலலவேநான எவ வளவுமுமக்குஎன்னைஒருபொருளாககவே பஞ்செயயவேண்டாம எ-று

அரிதற்கரிதாமுனது முடியாற்றிவெள்ளிவர
பறவைப்படிவங்கொண்டிவரேலோவிடாபவேவன்
சிறுமைப்பிமென்பாலுளசெய்யென்றுரைசெய்தான்
மறுகிக்குளிரனலபோலிறைமகிழவாயினவமொழிவான்.

(இ-ள்.) யாவராலுமறியக்கூடாத உமமுடைய முடியையறிந்தே னென்றுநாசசெகிரசத்திலேபட்டிருந்தவனானேன இனிமேலோதுக்கத்தை அடைவேனென்றிவ்வுமையையடைந்தவன்னிடத்திலே திருவுளஞ்செயயும்படி சொல்லிவிசனப்பட்டபோது மறுகிக்காயத்துக் குளிர்ந்தஜலமபோ லசிவனைசந்தோஷமாயதிருவாயமலர்ந்து சிலமொழிகளை அருளிச் செய்வார்-எ-று (எஅ)

அம்போருகவஞ்சேகிவியாவனித்தலமறையோர்
தம்பூசனையும்பூசனையாகித்தமனியாஞ்
சம்பூதலவுலகேழையுமதிகியென்றருள்செயதான்
எம்பூதலவிடமுண்டருள் காருணைக்கடலானான்

(இ-ள்.) வாராய்பிரமாவே இனிமேல் நீபட்டதே பூமியில்பிரா மணாகளுக்குச்செய்த பூசை உன்பூசையாககொண்டு பொன்னுருவ மாயுண்டாகிய மகாமேருமலைதாங்கும் ஏழுலகத்தையும் எப்போதும் போலப்படையென்று அருளிச்செய்தார் சலதரங்கள் சஞ்சரிக்கின்ற சமுத் திரத்தின் விஷத்தையுண்ட இருளைக்கண்டமாகிய சிவபெருமான் எ-று.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

இத்தலத்திலுமக்குவாய் சொரோதயனுல்லே சனைமுன்றெல்லைதாம்
சுத்தபவித்திரஞானத்தலமாக்கப்பொருவிக்கினிதச்சேத்திரானும
சிறுருவமயிலாபூதவாக்கடவுளின்றருசிமத்தான
முத்தியினையத்தனையமலனுநவுயிர்க்குகருணைபுரிமொழியுமாம்.

(இ-ள்.) வாருங்கள்பிரமவிஷ்ணுக்களேஉங்களுக்குஇந்தஸ்தலத்தி லே அனுக்கிரகஞ்செயதுவரங்கொடுத்தபடியினாலே இந்தத்தலத்தை சுற்றி மூன்றுயோசனைதூரமளவுக்கும சுத்தபவித்திரமாக இருக்க கடவது இக்கொடிய [illegible] சிறியவுருவத்தோடுங்கூடிய ம [illegible] பாவக்கடலிலிருந்து பேரின்பஞ்சிறந்த வீட்டைச்சேர்ந்த நடையிலோமத் தடுக்கும இந்தத்தலத்துக்கு அருணைபுரியென்று பெயராம்-எ-று.

வானவர்பதியிந்திரனுமிமையவருநினைக்கவயர்வருத்தந்தீர்த்தோம்
ஆதலினிந்தத்தலத்தை நினைப்பவர்க்குப்பிறப்பிறப்பையகற்றுவோமிப்
பூதலமுமிந்தத்தலமும்பிரளயத்தும் அழியாதபொற்பதாகி
மோதியகாற்றடைத்ததிசை சராசரங்களனைவையுமுய்முத்திசேர்க்கும்

(இ-ள்.) துன்பத்தையடைந்த தேவேந்திரனும் மற்றவர்களும், நம்மைநினைக்க அவர்களுடைய துன்பத்தைத்தீர்த்தோம், ஆனபடியினாலே இந்தத்தலத்தைநினைக்கிறவர்களுக்குப் பிறவித்துக்கத்தைநீக்குவோம் இந்தப்பர்வதமுமிந்தத்தலமும்பிரளயகாலத்திலும் நாசமடையாத இலக்ஷணத்தையுடையதாகிமோதுகின்ற வாயுசஞ்சாரஞ்செய்கின்ற திக்குகளிலிருக்கின்ற சராசரங்களெல்லாவற்றையும் முத்தியிலேசேர்க்கும் எ-று. (௭௭)

வையகத்திலரியதவம்புரிந்தவருக்கினியமுத்தி வழங்கவேண்டிச்
செய்யவிசுத்திசிகரிலவதரிக்கவாஞ்சைதானுவேண்டுஞ்செய்தத னை
மெய்ப்பெறவொன்றுயிரமாமவளருமிந்தகொம்புபவம விளையாததினை
வையமெனவுணர்வார்க்குப்பரகதிகிட்டாதுநாதானேதானே.

(இ-ள்.) பூமியிலரிதாகிய தவத்தைச் செய்தவர்களுக்கு இனிமையான மோட்சத்தைக்கொடுக்கவாராயி ஜோதிசொரூபமாகிய இந்தத்தலத்தில் அவதரிக்கவாஞ்சைகொண்டே மிதில் ஒருகாலாயிரஞ்செய்தால் ஒன்று ஆயிரமாயிருந்தியாகும் இந்தத்தலத்திலே பாவமேயுண்டாகாது இதைச்சந்தேகமாக நினைப்பவர்களுக்குமோட்சங்கிடைக்கமாட்டாதுமென்று ஆணைப்படிக்கு என்றுரைக்கிறார் எ-று. (௭௮)

அண்ணல் பமொழியளவில்அழுதாமதுகுறுகியசலமாகி வண்ண
வெடுஞ்சுடராய்க்கழுவிளங்குசல்கணடயன திருமாலவணங்கிச்சொல்வார்
விண்ணவர்க்குமெங்களுக்குமிந்தச்சோதிககெதிர்க்கத்துறுகிவிழிக்கப்போ
கா-கெண்ணரியசுடர்களெல்லாமுட்கரந்தமலையாகவிருக்கவென்றார்.

(இ-ள்.) இந்தப்பிரகாரஞ்சுவாமிசொன்னவளவில் அக்கினிமலையானதுகுறுகி ஒருசிறியமலையாய் நிறம்பொருந்திய அக்கினியைப்பார்த்து பிரகாசித்தமலையைப்பார்த்த பிரமாவும் விஷ்ணுவும் சுவாமியைவணங்கிச்சொல்லுவார்கள் தேவர்களுக்கும் எங்களுக்கும் இந்தச்ஜோதி சோதிக்கெதிராகப்போய் கண்விழிக்கக்கூடவில்லை ஆனபடியினாலே எண்ணுதற்கரிய கிரணங்களெல்லாமடங்கி ஒருமலையாயிருக்கவேண்டுமென்றார்கள் எ-று. (௭௯)

அன்னமிசைவரவானுங் கருடன்மிசைவருவானு மமலனுரைப்ப
வன்னியொளிமறைத்துமறைமலையாகவிருக்கின்றெனமலையாச்செய்
தார் சென்னியின்மேலொருசோதியனுதினமுந்தெரியவருள்செய்வாயெ
ன்று சொன்னார்தவடியவர்க்காவிறையவனுமிரங்கியினிதியம்பலுற்றார்.

(இ-ள்.) அன்னவாகனத்திலேறுகின்றபிரமவும்கருடவாகனத்தில்வருகின்றவிஷ்ணுவும்மலராகிதாங்கிய சுவாமிஅக்கினிப்பிரகாசத்தை மறைத்து மற்றமலைகளைப்போலிருக்கவேண்டுமென்றுகேட்க அப்படியே மலையுருவாகச்செய்தார் சிகரத்தின்மேலே ஒருபிரகாசம் தினந்தோறும் தெரியும்படியாகக் கிருபைசெய்யவேண்டுமென்றார்கள் அப்படிக்

சொன்ன தொண்டர்களுக்காக இரங்கிச்சுவாமியுந்திருவாய்மலர்ந்தரு
ளினார்-எ-று (அக)

கார்த்திகைக்குக்கார்த்திகைநா ளொருசோதிமலைநுனியிற் காட்
டுதும்போம்-வாய்த்தவத்தச்சுடர்காணிற்பசிபிணியில்லாதுலகின் மன்
னிவாழ்வார்- பாரார்ந்திவர்ந்து மருந்தவர்க்குமிடையூறுதவறுமிதுபணிந்
தோர்கண்டோர்- கோத்திரத்திலிருபத்தோர் தலைமுறைக்குமுத்திவா
க்கொடுப்போமென்றார்

(இ-ள்.) வாருங்கள் விஷ்ணுபிர்மாக்களே கார்த்திகைமாதத்தில்கிருத்திகைநட்சத்திரத்தில்மலையினுச்சியில் ஒருபிரகாசங்காண்பிப்போமதுப்படிப்பொருந்திய சுடரைக்கண்டால் தரித்திரமும் வியாதியுமில்லாமலுலகத்தில்நிலைபெற்றுவாழ்வார்கள் இந்தசோதியைக்கண்ட அரசர்களுக்கும்- அரியதவசிகளுக்கும்- இடையூறுநீங்கும் இதைப்பணிந்தவர்கள் தரிசித்தவர்களுடைய கோத்திரத்தில் இருபத்தொருதலைமுறைக்குமுத்திவாய்க் கொடுப்போமென்றார் அருணாசலேசுரர்-எ-று

மாணபவமறுக்கநல்லமருந்தாகுமதற்குமலைமருந்தென்றோபே
ரருண்மைவடிவாதலினு லருணகிரியெனுமொருபே ரதனையோர்பால்- தர
ணியிலேயுரைத்தவர்க் குமூன்றுகோடியுஞ்செழுத்துச் சரித்ததாமென்-றி
ருணிலவுமிடற்றிறை வனிசைக்கமகிழ்ந் திறைஞ்சியயனரிசெப்புவார்

(இ-ள்.) இறப்பினையும் பிறப்பினையும் நீக்குவதற்குமருந்தானபடியினாலிந்த மலைக்குமலைமருந்தென்றுபெயர் இந்தமலைசிவபுநிதமானபடியினா லருணகிரியென்று ஒருபெயர் அதைஒருதரம் பூமியிலேசொன்னவர்களுக்குப் பஞ்சாக்ஷரத்தை மூன்றுகோடிதரம் உச்சரித்ததற்குச் சமானமாகுமென்று நீலகண்டத்தையுடையசிவன் அருளிச்செய்ய விஷ்ணு பிரமாக்கள் சந்தோஷத்தையடைந்து சுவாமியைவணங்கிச் சொல்லுவார்-எ-று (அஉ)

அந்தவருணகிரியானையுனக்குவிண்ணீரலதுபுனலாட்டுவாரார்
தொடுத்தவுடுத்திரளலது திருமுடிக்குமணிமாலைசூட்டுவாரார்
கடுத்திகழுமிடற்றானேகதிர் களன்றிமணித்தீபங்காட்டுவாரார் (றூர்
அடுத்திறைஞ்சிப்பூசை செயவிதன்கீழோரிலிங்கவடிவெடுப்பரயென்

(இ-ள்.) அருணாசலேசுரரே மலையாகியவுமக்கு ஆகாயத்திலிருந்து பெய்யாநின்றமழையேயல்லாமல்சலங்கொண்டுவந்து அபிஷேகஞ்செய்கிறவர்களார்நக்ஷத்திரக்கூட்டங்களே முத்துமாலையாவதல்லது வேறேமுத்துமாலைசூட்டுகிறவர்களார் சூரியசந்திரர்களே தீபமாவதல்லாமற்றீபங்கொண்டுவந்துவேறேகாட்டுகிறவர்களார் ஆனபடியினாலே நாங்களபிஷேகமுதலானதுகள்செய்து பூசைசெய்வதற்கிந்த மலையின்கீழ் ஒரு இலிங்கரூபமாயெழுந்தருளவேணுமென்று கேட்டுக்கொண்டார்கள்-எ-று. (அங)

அன்னதுவாயிருக்குதுநீர் காமியத்திலருச்சியுமென் றசலம்புக்கா
ரெம்மிலுமபுகழவங்கோர்சிவனுருவமூலைதத்துக்கண் டிறைஞ்சினத்தி
மன்னியபூமழைபொழிந்துபரவசமாய் மகிழ்ந்துதாடிமயனைக்கூவித்
தன்னிகரில்கோபுரமுமண்டபமுமணிமதிலுஞ்சமைப்பித்தார்கள்.

(இ-ள்.) அப்படியே இலிங்கமாகுமேரும் பத்தியுடன்பூசியுங்களை ஒன்றாந்தமலையினுள்ளே மறைவுகோலஞ்செய்தார் ஏந்தத்தேசமும புகழும்படியவ்விடத்தில் ஒருஇலிங்கந்தோன்றிற்று அதைக்கண்டு வணங்கித்தோத்திரஞ்செய்து புஷ்பவருஷம்பொழிந்து பரவசமாய்ச்சந்தோஷத்தையடைந்து ஆனந்தக்கூத்தாடி மயனென்கிறதேவதச்சனைக் கூப்பிட்டு ஒப்பில்லாத கோபுரங்கள் மண்டபங்கள் அழகுபொருந்திய மதிலுஞ்செய்வித்தார்கள்-எ.று. (௮௪)

அழியாதவளநகருந்தீர்த்தமுந்நூற்றறுபதுங்கண்டழகுசெய்தார
வழியாகீரச்சுரநதியுஞ்சுரதருவுஞ்சேணிகளுமாறுமான
வொழியாமனிமையவருமிருடியருமனிதரெனவுருவங்கொண்டார்
விழியாலவிடமனையகணிகையாரம்பையருமேவினரே.

(இ-ள்.) எப்பொழுதும் அழியாதவளமுள்ளநகரமும்மூந்நூற்றறுபதுவகையாகியதீர்த்தமும்உண்டானதுகண்டழகுசெய்தார் வழியாதசலத்தையுடைய ஆகாயகங்கையும் கற்பகவிருட்சமும் இவைமுதலாக மாறுமானதுகள் நீங்காமல் தேவர்களும்ரிஷிகளும மனிதருபங்கொண்டுவந்துபிறந்தார்கள் விஷம்போன்றகண்களையுடைய தாசிகளாக அரம்பாஸ்திரீகள்-எ-று. (௮௫)

காலையிலேழுழுகிமாவுரியுடுத்துச் சிவந்தசடைகட்டிநீறு (ண்
மேலணிந்துகண்டிகைபூண்டனமுதலாமஞ்சனத்தான் மிகுந்தசாற
மாலையினுறசிவபூசைபுரிந்தண்ணாமலையனைவலங்கொண்டேத்தி
ஏலவொருபதினாலாயிரவாண்டுகழிந்தபின்னிறைவரானார்.

(இ-ள்.) பிரமாவிஷ்ணுக்கள் இருவரும் காலமேமுழுகிமாவுரித்தரித்துக்கொண்டு சிவந்தசடைகட்டிவிபூதியைஉடம்பெல்லாம் தரித்து ருத்திராட்சமாலை பூண்டுகொண்டு அன்னமுதலாகிய திருமஞ்சனத்தினும மாலையினும் சிவபூசைசெய்து திருவண்ணாமலையை பிரதட்சிணஞ்செய்து வணங்கிப்பின்பு பதினாலாயிரவருஷம் ஆனபிறகு சுவாமியினிடத்தில விடைபெற்றுக்கொண்டு தங்கள்பதிக்குப் போகுந்தங்களதிகாரத்தைப் பெற்றுக்கொண்டார்கள்-எ-று. (௮௬)

ஆசைதருந்திருவருணைசமைந்தபின்கயிலைமலையாலசபோயிற
நீசனுக்குகனகமலையிதுவாயின்வெள்ளிமலையினிமேலென்னுங
காசிமுதலெடுத்துரைக்குஞ்சிறப்புடையதலமெழுங்கனகாடு (ந்த
மாசகன்றகதிர்தோன்றவொளியிழந்தவுடுக்களைமபோல்வனவே.

(இ-ள்.) சுவாமிக்குஆசைகொள்ளும்படி திருவருணாசலஸ்தலஞ்சமைந்தபிறகுகயிலைமலையிலிருக்கும ஆசைவெறுத்தது இந்தமலையே பொன்னுருவங்கொள்ளுமாயின வெள்ளிமலையினிமேல் ஆசையுடையார் குமார காசிமுதலாகச்சொல்லப்பட்ட ஏழுஸ்தலங்களுமாகிய தலைலோகமும் குறைநீங்கிய சூரியனுதயமாகப் பிரகாசமிழந்த நட்சத்திரங்களைபோல ஒளிமழுங்கிப்போனதுகள்-எ-று. (௮௭)

அரியயனுமளவிடற் கரியமலை நிலையுரைக்கவரிதென்றுலகு
தெரியவுனக்கதிர்ந்தபடிசெறிதுணைதகேணிசிவாகநூ திறமே சொல
ஞ்செகீசபெருமாநகண்டமணிமகிழ்ந்து பணிந்துலையயாவையலே

ந்றேக்றி-புரியசிவனிடங்கலந்தகதையுமுரைத் தருளுகெனவுரைப்ப தானுன.

(இ-ள்) நந்திகேசுரர் மார்க்கண்டேயரிஷியைப்பார்த்து விஷ்ணுவும்பிரமாவும் அறிதற்கரிதாகிய திருமலையினது சிறப்பை என்னாலெசால்லுதற்கரியதெனினும் எனக்குத்தெரிந்த அளவில்சிறிது உமக்குத்தெரியும்படிச்சொன்னேன் இனிசசொல்லவேண்டியதென்னவென்றாவரிசைசபெற்றமார்க்கண்டேயரிஷி சந்தோஷித்துஎனக்குச்சுவாமியானரோசகித்த தவஞ்செய்து அவரிடப்பாகம்பெற்றதுவும் சொல்லவேண்டுமென்றுகேட்கச் சொல்லத்தொடங்கினார்-எ-று. (அஅ)

இரண்டாவதுதிருமலைச்சருக்கமுற்றிற்று.

ஆக-திருவிருத்தம்-கஅச.

உ

சிவமயம்.

மூன்றாவது

பார்வதியார்திருவவதாரச்சருக்கம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பன்னிருவர்பதினொருவ ரெழுவரெண்மர் திசைக்கிறைவர் பணி நாட்டுள்ளோர், கின்னரகிம்புருடசித்த ரியக்கரினையவராமுனிவரிலைமி ழுள்ளோர், மனைஞமலரயன்றிருமால் கலைமாதை மலர் மடந் தைமகிழ்ந்துசூழ, மூன்னைவினைகழந்ததக்கன் முடியாத பெருவே ள்விமுடிக்கலுற்றான்.

பூருவகதை.

கேளும் மார்க்கண்டேயரே முன்னாளிலே பிரமாவினிடத்திற்பிற [illegible]தக்கனென்பவன் அரியதபசுசெய்து உயர்ந்தவரங்களைப்பெற்று [illegible]ண்டும்பிரசித்தனாயிருந்தகாலத்திலே பார்வதியான

ள் தன்னிடத்திலேபிறக்க அந்த அம்மனைச்சுவாமிக்கு கலியாணஞ்செய்துகொடுத்து மாமனாகும்படிவரம்பெற்று அந்தப்படிசெய்தபின்பொருநாள் இவன் சுவாமியினுடையசபைக்குப்போனான் அவ்விடத்தில்சுவாமிதனக்குஎழுந்துமரியாதைசெய்யவில்லை என்கிறகோபங்கொண்டு தன்னுடையவீட்டுக்குவந்து சுவாமியைப்பார்க்கிலும் உயர்வையு[illegible]யவேண்டுமென்று.

(இ-ள்.) பன்னிரண்டுசூரியர்கள் - பதினொருருத்திரர்கள்- சத்தரிஷிகள்-அஷ்டதிக்குப்பாலகர்-நாகலோகத்தார்- கின்னரர்-கிம்புருடர்-சித்தர்-யட்சகர்-தேவர்கள்-முனிவர்கள்-இவர்களைப்பெற்றபிரமா-விஷ்ணு- சரஸ்வதி இலட்சுமி மிகவுஞ்சந்தோஷத்தையடைந்துசுற்றிக்கொள்ளஎல்லோருக்கும்முதல்வராகிய பரமசிவனைநிந்தித்து முடியக்கூடாதபெரியயாகஞ்செய்யத்தொடங்கினான்-எ-று. (௧)

எந்தைசெயுமசம்பார்க்க விடையருளென்றிறைக்கிறைவி விசைத்தாளந்தை, புந்தியிலாதிகழ்ந்தனனென் றுரைத்தனனீதெனை வேண்டிப்பொருப்பாயென்று, வந்தனஞ்செய்தனளவளை நகைபுரிந்துகடிதுசென்றுவருவாயென்றான், கந்தமலர்குழலாளுந் தந்தைமகந்தொடங்குகன தவத்தைச்சார்ந்தாள்.

(இ-ள்.) பார்வதிதேவியானவள் தகப்பனாகியதக்கன்யாகம்பண்ணுகிறதைக்கேட்டுசுவாமி என்னுடையதகப்பன்செய்கிறவேள்வியைப்பார்த்துவருகிறதற்கு உத்தரவுகொடுமென்றுகேட்க அதற்குசுவாமியானவர் உன்னுடையதகப்பன் புத்தியில்லாமல் என்னைமிகவும் நிந்தித்திருக்கிறானே நீபோகலாமாவென்றுசொல்ல அதைக்கேட்டுசுவாமீ என்தகப்பன்செய்த இந்தக்குற்றத்தைஎன்னைவேண்டிப்பொறுக்கவேண்டுமென்று நமஸ்காரஞ்செய்தபோது அந்தஅம்மனைப்பார்த்துநகைத்து நல்லதுநீபோய்சீக்கிரத்தில்வந்துசேரென்றுசொல்லப்பார்வதியும் தகப்பன்யாகஞ்செய்கிற இடத்துக்குப்போனாள்-எ-று ( )

தாயரைக்கண்டடிதொழுதா ளவட்குறவாதிருந்தனன்றந்தை யானன், தீயவனைப்பணிந்தனளாங்கவனு மிகழ்ந்தானிகழ்ந்தசொல்லைநோக்கிப், பேயிருக்குஞ்சுடலையெனப்பிழைபிறந்துவிடுகவுங்கள்பெருவாழ்வென்று, வாய்பிறைக்குங்கொடுமைசொலி மறைந்தனளச் செயலறிந்தான் மங்கைபாகன்.

(இ-ள்.) பார்ப்பதியானவள் தக்கன்யாகசாலைக்குப்போய்தன்னுடையதாயைவணங்கினாள் அவள் இந்தஅம்மனைத்தழுவி உபசாரஞ்சொல்லாமலிருந்தாள் அதன்பின்பு தீமைபொருந்திய தகப்பனைவந்தனஞ்செய்ய அவனும்நிந்தித்தான் அதைப்பார்த்துக்கோபங்கொண்டுதன்னுடையயாகசாலைவாழ்வுபேயிருந்து விளையாடுஞ்சுடலையாகிப்போகக்கடவதென்றுசபித்து இந்தப்பாவி வளர்த்ததேகம்இருக்கக்கூடாதென்றுயோகத்தினாலேதன்னுடைய தேகத்தைவிட்டாள் அந்தச்செய்கையையுணர்ந்தார்சாம்பவமூர்த்தி-எ-று. (௩)

(கலிவிருத்தம்)உண்ணிலாவுவஞ்சிசெல்வ, வொருவனைவியுய்யுமோ
தண்ணிலாமுடிக்குணின்றுதழலைமொண்டிறைக்கையுக

அ

லண்ணல்வெம்பிமூனிவுகொள்ளு மளவினெற்றிவிழிதனில்
விண்ணடங்கமண்ணடங்க வீரன்வந்துதோன்றினன்.

(இ-ள.) எப்பொழுதுமகூடயிருந்த பார்ப்பதிதேகத்தை விட்டவுடனே ஒன்றியாகியிருந்த பரமசிவனுடையவுஷ்ணவுருவத்தையடைந்ததுமோ குளிர்ச்சிபொருந்தியசந்திரன் தமமுடையசிரசிலேதானேயிருந்தும் நெருப்பைவாரிச்சொரிகிறபடியினலே அதிகதாபத்தையடைந்து ஐயுற்றதக்கனுகிய பாவியினலல்லவோ இந்தவருத்தம் உண்டாச்சுதென்றுகோபித்துக்கொள்ளுமபோது அவருடையநெற்றிக்கண்ணிலிருந்துவீரபத்திரனவாகாயஉலகமும பூமியும் நடுங்கும்படியாகத்தோன்றினர்-எ-று. (௪)

மஞ்சுபற்றியுடல்கறுத்து மணிமயூரமுடியுடன்
சஞ்சரிக்குமேருவென்ன விடிமுழங்குதழலின்வாய்
நஞ்சுகொப்பளிக்கவெற்றி நயனமுமகொதிக்கமே
லஞ்சலித்தகையோடெங்க ளையன்வந்துதோன்றினன்.

(இ-ள்.) மேகத்தைப்பாக்கிலும்உடம்புகறுத்துமயிலினதுநிறம்போன்ற மரகதாத்தினமிழைத்த கிரீடத்துடனேசஞ்சரிக்கின்றமேருவுக்குச்சமானமாகி இடிபோல்முழங்குகின்றநெருப்பாகியசொற்களையுடையவாயானது நஞ்சைககொப்பளிகக நெற்றிககண்கொதிக்கச்சிரசின்மேல்வைத்துக் கூப்பியகைககளோடு எமதுஐயனாகிய வீரபத்திரர்வந்துதோன்றினர்-எ-று. (ரு)

ஒழித்தசிங்கவுரிபுயத்தி னுத்தரீயமாகவே
கழித்தெறிந்தவல்லியத்தி னதளிசைத்தகச்சையாய்
விழித்திமைக்குமுன்னம்விண்ணின் வெளியடைத்தமேனியா
தழைத்ததென்னவென்னவென்றனையன்வந்து தோன்றினன்.

(இ-ள்) இரணியனைக்கொன்ற நரசிங்கத்தினுடையதோல்உத்தரீயமாகவும்தாருகாவனத்துரிஷிகளால்விடப்பட்டுசுவாமியினல் மரணத்தையடைந்த புலியினதுசர்மம் இடைபபுக்கச்சையாகவுமவிழித்து இமைக்கிறதற்குமுன்னே ஆகாயமெல்லாமறைந்ததேகத்துடனே என்னையழைத்தது என்னகாரணம் என்னகாரணமென்றுவீரபத்திரர்வந்தார்-எ-று. (சு)

முக்கணத்தனீர்கொடாது கனல்கெ டுக்குமூகிலென
தக்கன்வேள்வியைத்தகர்த்து மீள்கவென்றுசாற்றினு
னக்கணத்திலுவகைபொங்கி யடிவணங்கியேகினன்
பக்கநின்றபூதநாதர் பாரிடங்கள்சூழவே.

(இ-ள்.) என்னையழைத்தகாரியமென்னவென்றுகேட்டவீரபத்திரரைப்பார்த்து மூன்றுகண்களையுடைய பரமசிவன் சலத்தைப்பொழியாமல்நெருப்புகளைக்கக்கும மேகம்போற்போயதக்கனுடையயாகத்தையழித்துவாவென்று அருளிச்செய்யஅந்தட்சணமேவீரபத்திரர் அதிகசந்தோஷத்தையடைந்து சுவாமியினது திருவடியைத்தொழுதுபக்கத்திலின்றபூதக்கூட்டங்களும் பேய்களுஞ்சூழப்போனர்-எ-று. ()

நஞ்சுகொப்பளிக்குநாக நாவிரண்டுமாலையா
பஞ்சாட்டிபூதலே வாலவட்டம்வீசவே

குஞ்சரங்களொட்டையுங் குதம்பையாகவிட்டவெண்
கஞ்சுகத்தர்நால்வர்தூய கவரிநின்றுவீசவே.

(இ-ள்.) விஷத்தைக்கக்குகின்ற அஷ்டமாநாகங்களை மலையாகத் தரித்துக்கொண்டு பத்துபூதங்கள் நீலவானமான ஆலவட்டம் வீசிக் கொண்டுவரத்திக்கிலிருக்கின்றயானைகளொட்டையுங்காதிலேகுண்ட லமாகத்தரித்துக்கொண்ட வெள்ளைச்சட்டையணிந்த நாலுபேர்சு த்தமாகிய சாமரம்வீசவும் புறப்பட்டார் வீரபத்திரர்-எ-று.

தீயிருந்தவுதரவெம்மை விண்பிழிந்துதீர்த்திடும்
பேயிரண்டுநூறுநூறு காளமம்பிடிக்கவே
வாயிரண்டுபோலுமாலை மதியிடைந்தபூதமோ
ராயிரங்கவிக்கமுத்தி னாதபத்திரங்களே.

(இ-ள்.) வடவாமுகநெருப்புக்குடிகொண்டிருந்தவயிற்றினுடை யபசியையும்மேகங்களைப்பிழிந்துகுடித்து ஆற்றிக்கொள்ளுகின்ற இரண் டாயிரம்பேய்கள் எக்காளம்பிடிக்கவும் சந்திரனை இரண்டாகப்பிளந்து இரண்டு கடவாயிலும் வைத்ததுபோலுமிருக்கின்ற ஆயிரம்பூதங்கள் முத்துக்குடைகள்பிடிக்கவும் புறப்பட்டார்-எ-று. (௯)

மாயுமாயர்தந்தசங்கு கோடிகோடிமருங்கவே
தீயின்வாயினூர்திதந்த சிங்கநாதமூதவே
சாயுமெண்ணில்காலனூர்தி தந்தகொம்பிசைக்கவே
யாயிரங்களிறுபொருந்த தனித்தேரிலேறினன்.

(இ-ள்.) இறந்திறந்துபிறக்கிற அனேககோடி விஷ்ணுக்களுடை யகையிலிருந்தசங்குகளை அனேகபூதங்கள்வாயில்வைத்து ஊதிவரவும் இறந்த அக்கினிபகவான் வாயுபகவானேறுகின்ற ஆட்டுக்கிடாகலைமா னிதுகளுடையகொம்புகளை வாயில்வைத்து அனேக பூதங்களூதவும் இறந்துபோன யமராசாக்களேறிய எருமைக்கிடாக்களுடைய கொம்பு களை வாயில்வைத்து அனேகபூதங்களூதவும் ஆயிரம் யானைகள்கட்டி யிழுக்கிற தேரிலேறினார் வீரபத்திரர்-எ-று. (௰)

சிலகணங்களானையான சிலகணங்கடேரதா
யுலவுகின்றசிலகணங்க ளோடுகின்றவாசியாய்
மலைவுகொண்டசிலகணங்கள் மனிதர்தேவராயின
வலகைதானுமளவிலா தனந்தவேடமானதே.

(இ-ள்.) அப்படிவீரபத்திரர் தேரிலேறினபோது சிலபூதங்கள் யானைரூபங்கொண்டதுகள், சிலபூதங்கள் தேரினுருவங்கொண்டதுகள் சிலபூதங்கள்குதிரையானதுகள், சிலபூதங்கள் மனிதரூபமும் தேவரூ பமானதுகள், அளவிலாதபேய்கள் அனந்தரூபங்கொண்டு புறப்பட்ட துகள்-எ-று. (௰௧)

வீரையேழடங்கவுண்டும் விடாய்கெடாதுமீளுமே
பாரவேழுபாருமுண்டு பசிகெடாதுபடருமே
கூரவேவெறித்துகால னூடுகேள்ளனைக்கொள்ளுமே
போரையேவிரும்பிமுன் னடந்துசென்றபூதமே.

(இ-ள்.) வீரபத்திரர்புறப்பட்டவுடனே யுத்தஞ்செயவிரும்பி அவருக்குமுன்னேநடந்தபூதங்கள் ஏழுசமுத்திரத்துநீரடங்கலுங்குடி

தாலும் விடாய்தீராமல் திரும்பும்பாரமாகிய ஏழுலகத்தையும் சாப்பி ட்டுப் பசிபோகாமல் அலைந்துக்கொண்டிருக்கும் கூர்மைபொருந்திய வேலாயுதத்தைஎறிந்து யமனுடையகோட்டைகொள்ளைகொள்ளுமிவ்வி ப்படிப்பட்ட வலிமையுடையனுகள்-எ-று. (௯௨)

கொண்டலேழையுஞ்சிவந்த குஞ்சிமீதுசுற்றுமே
புண்டரீசரண்டமும் புகைகொளுததிமீளுமே
யெண்டிசாமுகத்தைநாடி யாகசாலைதேடுமே
சண்டவாயுவென்னவகைகை தட்டியோடுபூதமே.

(இ-ள்.) ஏழுமேகங்களையும்பிடித்துச் சிவந்ததலைமயிரிலேசுற்றி க்கட்டிக்கொள்ளும் அநேகபிரமாண்டங்களையும் புகையுண்டாக நெ ருப்பினாலேகொளுத்தும் எட்டுத்திக்குந்தேடி யாகசாலை யெங்கேயெ னறுதேடும் பிரசண்டவாயுபோலக் கைகளைக்கொட்டிக்கொண்டு வீர பத்திரரின்னேயோடுகின்றபூதங்கள்-எ-று. (௯௩)

வெள்ளவாழிமதுநுகர்ந்து வீறுகின்றசிலகணங்
துள்ளவந்துபுவனமுற்றுஞ் சுற்றுகின்றசிலகணங்
தள்ளுகின்றபேர்களென்று சாய்ககின்றனகைசெயும்
பள்ளிகொள்ளுமுடனெழுந்து பரிவுகொண்டுபாடுமே.

(இ-ள்.) வெள்ளமாகியசமுத்திரமயோன்ற மிகுந்த மதுவைப் பானஞ்செய்து ஆரவாரிப்புக்கொண்டு சண்டைக்குஎழுந்துதுகள் சிலபூதங்கள் நம்முடையகுலமியைத்தள்ளுகிறவர்கள்-யாரென்றுகே ட்க அவர்களைசொல்லுகிறதற்காக நின்றுவீரநகைகொள்ளும் சிலபூ தங்கள் நித்திரைசெய்யும் சிலபூதங்கள் உடனேஎழுந்து அன்புகொ ண்டுசிவனைக்குறித்துப்பாடும்-எ-று. (௯௪)

வெதிர்சிலம்புமுரசுசங்கம் விருதுபம்பையதிரவே
புதியகண்டைமணிதவண்டை புரிமதங்கமழுகின்
கதிகடந்துயாகசாலை கண்டுபூதகணமெலா
மதிதிமைந்தரானபோகளையுமவாரிவீசினர்.

(இ-ள்.) வீரபத்திரசுவாமிபுறப்பட்டவுடனே புள்ளாங்குழல் சி லம்பு முரசு-சங்கங்கள விருதாகியடுடுக்கைமுதலான வாத்தியமுழங்க வும், பெரியமணிதவண்டை மிருதங்கம சத்திக்கவும்வழிமுழுதுமபோ யதக்ககனுடையயாகசாலையைக்கண்டு எல்லாப்பூதகூட்டங்களும அ திதியினுடைய பிள்ளைகளாகிய சகலதேவர்களையும் வாரிவாரி வீசி னதுகள்-எ-று. (௯௫)

காரிலேறிமையிலேறி கடாவிலேறியலகைமே
லேறிலேறிமகரமேறி யிரலையேறியலகையாம
பாரிலேறிமானமேறி பசுவிலேறியெண்மரு
தேரிலேறிவகதவீரர் சேனைமாளமோதினார்.

(இ-ள்) மேகவாகனனாகியதேவேந்திரனும ஆட்டுக்கடாவிலேறு கின்றஅக்கினியும் எருமைக்கடாவாகனனாகிய யமனும பேய்வாகன னாகிய நிருதியும் மகரவாகனனாகிய வருணனும் மானவாகனனாகிய வா யுபகவானும் அளகாபுரியையாண்டு விமானத்திலேறுகின்ற குபேர னும் எருதுவாகனனாகிய ஈசானியனுமாகிய எட்டுபேர்களுந்தேரி

லேறி எதிர்த்துக்கொண்டுவந்த வீரபத்திருடைய பூதகணங்களை யெதிர்த்தார்கள்-எ-று. (௰௯)

வளிசூலபவேலுலக்கை வச்சிரங்கணிச்சிவாள்
மீளிசேனைகாவலாளர் வீழுமாறுவீசினார்
கூளிநாலிரண்டுசென்று கொடியவெண்மர்பரியெலா
மாளியோடெடுத்தெறிந்த வம்மனைக்குநேரவே.

(இ-ள்.) திக்குப்பாலகர் எட்டுப்பேரும் பாணம்-சூலாயுதம்-வேல்-உலக்கை-வச்சிராயுதம்-பழுக்கத்தி - இதுகளை வீரபத்திருடைய சேனைத்தலைவர்கள் விழும்படி பிரயோகஞ்செய்தார்கள். அப்போது எட்டுப்பூதங்கள்புறப்பட்டுத் திக்குப்பாலகர் எட்டுப்பேருடைய அவர்களேறியவாகனங்களெட்டையும் * அம்மனைக்குச்சமானமாக எடுத்தெறிந்ததுகள-எ-று. (௰௭)

அலகைநாலிரண்டுவீழ வமர்செயபூதமோடவே
மலைவுகண்டுதிக்குப்பாலர் வெற்றிமாலைசூடினார்
நலிதல்கண்டுவீரன்வாளி நாலிரண்டையேவினா
னுலகபாலருடல்புகுந்து வமுதமுண்டுலாயதே.

(இ-ள்.) முன்னேஎட்டுபூதங்களாலேஎறிபட்டுவிழுந்ததிக்குப்பாலகரெட்டுப்பேரும் அந்தஎட்டுபூதங்களும் கீழேவிழவும், மற்றைப்பூதங்களெல்லாம் ஓடிப்போகவுமயுதஞ்செய்து வெற்றிமாலைசூடிக்கொண்டார்கள் அதுகண்டவீரபத்திரசுவாமியானவர் எட்டுப்பாணத்தை விட்டார் அதுகள்போய் எட்டுப்பேர்களுடலைத்துளைத்து அவ்வுடல்களுள்இருக்கிற அமிர்தத்தைப்புசித்துச்சஞ்சரித்ததுகள-எ-று. ()

மருங்கிழிந்துகுயிலதாகி வச்சிரத்தனோடினா
னெருங்கியீசனளகையாளி நிருதிவாயுவருணனுஞ்
சுருங்கினார்கடாவிலேறி துஞ்சினனழற்பிரான்
பெருநகையேழுமீசனன்பர் பிரவிபோலறுத்தனன்.

(இ-ள்-) தேவேந்திரனானவன் தன்வாகனத்தைவிட்டுக் குயில்ரூபங்கொண்டுஓடினான் ஈசானன்-குபேரன்-நிருதி-வாயுவருணன்-இவர்கள்தோற்று வெட்கத்தையடைந்தார்கள் யமனானவன் இறந்தான் அக்கினிபகவானுடைய ஏழுநாவையும் சுவாமிஅன்பருடையபாவங்களை அறுப்பதுபோல அறுத்துத்தள்ளினார் வீரபத்திரர்-எ-று. (௰௯)

கச்சமற்றவச்சமோடு கலையதானவெச்சன
ரெச்சனைவுயிரைவாரி யுடலுரிசதெரித்தனன்
பச்சைவல்லியன்னையான பன்னிகர்தாணடையும்
வச்சிரத்தினலறிந்து மாமன்முன்புசென்றனன்.

(இ-ள்-) அளவில்லாதபயங்கொண்டயாககர்த்தாவாகியகலைக்கோட்டுமானாகிப்பிராணனுநதேகமும் வேறாக்கொன்று உடலை வுரித்துவெரிததார் பார்வதியின்தாயாகிய தக்கனுடையபெண்சாதியின் இரண்டுகாலையும் அறுத்துத்தள்ளிமாமனாகிய தக்கனிடத்திற்குப் போனார் வீரபத்திரர்-எ-று. (௨௰)

* அம்மனை மகளிர் ஆடுமோர்விளையாட்டு.

மிக்கருந்து சோமபானம் வீரபானமாகவே
யொக்கநின்ற யாகதண்ட மொன்றுகொண் டிருந்தபோது
தக்கனோ டெதிர்த்தபோது தலையரிந்து தள்ளினா
னக்கணத்தி லொன்றுசென் றனைக்கணத்தயின்றதே.

(இ-ள்.) தேவர்கள்கூடிச் சோமபானஞ்செய்கிறதைநீக்கித்தன துவீரமேபானமாகும்படி யாகசாலையிற்புகுந்து யாகஸ்தம்பத்தைப்பி டுங்கிக்கொண்டு எதிர்த்ததக்கனுடையதலையைமலைபோல்கீழேஅறுந்து விழும்படி அறுத்தார்; அப்போதப் பூதகணங்களிலொன் று அரைநொடியிலேதானே அந்ததலையைத்தின்றுவிட்டது-எ-று. ()

பசுக்களோ டுருத்திரப் பசுக்களாவி தன்னையும்
வசுக்களாவி தன்னையு மறுத்ததேவராவியும்
முசுக்களபோ லொளித்திருந்த முனிவராவி தன்னையு
மசிக்கவீரன் விட்டசூல மளவியுண்டதே.

(இ-ள்.) மாடுகளிலேறுகின்ற பசுப்போன்ற உருத்திரக் கூட்டங் கள்பிராணனையும்-அஷ்டவசுக்களுயிரையும் மற்றதேவர்களுயிரையும் குரங்குகளைப்போலொளித்துப் பதுங்கியிருந்த முனியீசுரர்களுடைய பி ராணனையும், பரியாசம்பண்ண வீரபத்திரர்விட்ட சூலாயுதம் எடுத்து எடுத்துத்தின்றுவிட்டது-எ-று. (௨௨)

வழியினோடு குக்கர்பல்லை வோறுத்து மாணிமா
வெழில்படைத்த தண்டகர் மிரண்டதுண்ட மாச்சினன்
சுழலமைத்த கன்குதிக்க வமிர்தமுண்ட கலைநிலா
வழலவிக்குமாறு தாளி லப்புவெண்ணெயொத்ததே.

(இ-ள்.) சூரியனுடைய பல்லும்கண்ணும்தெறித்துக்கீழேவிழும்ப டியடித்துசசீபதியைப்பிடித்து இரண்டாகக்கறுத்தார் இலட்சுமி யைமூக்கறுத்தார் வீரகண்டாமணியைத் தரித்த காலினாலே சந்திரனை மிதிக்க அவன்நசுங்கித்தன்னுடையயாகசாலைநெருப்பைமிதித்தபடியி னாலே அந்தவெப்பந்தீர அப்பியவெண்ணெயைப்போ லானான்-எ-று.

காயமண்ணில்விட்டதேவர் கரியமேனியலையாய்
மாயமாகிமுன்னையாகம் வந்துதோன்றியமாசெயத்
தூயசேனையாயபேர் தொடர்ந்துசாகவாசெயதார்
பேயதாயிருக்கவும் பிணக்கமன்றதில்லையே.

(இ-ள்) பூதகணங்களாலேஇறந்துபோனதேவர்கள் கரிய உடம்பி னையுடைய பசாசாகிமறுபடியும் முன்யாகத்திலே மாயமாய்த்தோன் றிமூர்ந்துசண்டைபண்ண அவர்களை வீரபத்திரர்சேனை அடித்துக்கொ ன்றார்கள் ஆனபடியினாலேபேயாய்ப்போகியுந்துக்கநீங்கவில்லை-எ-று

திதிபுனைந்தவோமகுண்டம் வேறுபட்டதென்னினும்
புதியசோறுமெள்ளினோடு பொரியும்வாய்புகட்டிமுன்
குதிகொள்வெய்யகாமெடுத் தொழுகுபூதகூளிதன
னுதரகுண்டமானதெழுந்த வோமகுண்டமானதே.

தின்றுவிட்டதென்றது-இறையனம்பிளந்துகொன்றதுஎனறுகொள்

(இ-ள்.) பிரம்மாவினாலே விதிக்கப்பட்ட யாகசாலைதன்னை யடைந்தாலும் அதற்குபயோகமாக வைத்திருந்த சோறுகளும் பொரியும் ஒருபூதம் வாயிற்கொட்டிக்கொண்டு நெய்க்குடங்களையெடுத்து மடமடவென்று விட்டுக்கொள்ளும்போது அதனுடைய வாய் ஓமகுண்டமாகவும் உதிராக்கினியே நெருப்பாகவும் இருந்தது—எ-று. (உரு)

அட்டதிக்குப்பாலரும் வசுக்களுங்குருக்களும்
முட்டரானமுப்பதிற்று மூன்றுகோடி தேவரும்
பட்டபோதவர்தமெய்கள் பழுதுறாது தன்னுளே
இட்டபூதவுதரமுன்னை யாகசாலையொத்ததே

(இ-ள்) அஷ்டதிக்குபாலரும் அஷ்டவசுக்களும் மதலைவராகலந்த குருக்களும் முட்டுப்பட்டவராகிய முப்பத்துமுக்கோடி தேவர்களும் இறந்தபோது அவர்கள் தேகம் வீணாகப்போகாமல் வீரபத்திரருக்கு முன்னே அவருடைய சேனைகள் சாப்பிட்டபடியினாலே அந்தப்பூதகணங்களுடைய வயிறு யாகசாலையையொத்தது—எ-று. (உசு)

கற்பகாலமுங்கெடாத கணமிதித்தவமரர்தம்
மற்பமாமுடம்பிரத்தமாவிகாரமொத்ததால்
பற்பலவியக்கர்சித்தர்பண்டிசிந்துகூடர்காள்
சர்ப்பயாகமொத்ததன்று தக்கன்செய்தயாகமே

(இ-ள்.) கற்பகாலத்திலும் அழிவில்லாத பூதகணங்கள் மிதித்தபடியினாலே தேவர்கள் அற்பமாகிய உடம்பில்நின்று பிரிட்டரத்தமான துயரத்துக்கு நெய்யெடுத்துச்சொரிதல்போலிருந்தது பல இயக்கர்சித்தர்களுடைய வயிறுபிதுங்கப்பட்டு அவர்களுடைய நாடி கொட்டிக்கச் சிந்திடுகிறது சர்ப்பயாகம் செய்ததையொத்தது அன்று தக்கன் வேள்வி—எ-று. (உஎ)

சிறந்ததிக்குபாலராதி தேவசித்தர்முதலினோர்
இறந்திறந்துபோகவேதனிமையிலேயயனிறை
பிறந்துவந்துவந்துபோர்பெருக்கினார்பிறந்தபேர்
மறந்துவிழவீரன்மோதிமாரினானமண்டினான்

(இ-ள்.) சிறப்புப்பொருந்திய திக்குப்பாலகர்முதலாகியதேவர்கள் சித்தர்கள் இறக்கப்பிரம்மாவானவர் நொடிப்பொழுதிலே யவரைப்படைத்துக்கொண்டுவந்தார் அவர்களும் மறுபடியும் யுத்தஞ்செய்தார்கள் அவர்கள் பின்னும்பிறவாமலிருக்கும்படி பிரமாவையடுத்து யுத்தம்செய்யத்தொடங்கினார் வீரபத்திரர்—எ-று. (உஅ)

செத்ததேவர்மீளவுஞ்செருச்செயப்படைத்திடுங்
கைத்தலங்களவிழுமாறு கமலனானமோதினான்
*முத்தலைக்கொள்படையெடுத்து முண்டகத்தர்சிந்தைசேர்
பத்துமைந்தர்சென்னியும்மடிக்குமோபரப்பினான்

(இ-ள்.) இறந்துபோன தேவர்கள் மறுபடியும் சண்டைசெய்யப் படைக்கும் பிரம்மாவினுடைய கைகளை அறுத்துத்தள்ளினார் மூன்றுக

---

*முத்தலைக்கொள்படை-சூலாயுதம்

லையையுடைய ஆயுதத்தினாலே அவர்மனதிலுண்டாகிய பத்துபிரமாக்களுடைய தலைகளையும் குதத்தி பூமியில்விழத்தள்ளினார் வீரபத்திரர்.எ-று

அண்டகூடமுண்டுமிழ்ந்தவாதிமாயனயர்செயத்
துண்டமேருவெனவிளங்குகருடன்மீதுதோன்றியே
விண்டவாளிவருடமாக்வீரன்மார்பில்வீசினன்
கண்டதுண்டமாகவீரன்கையிலவாளியேவினன்

(இ-ள்.) அண்டங்களைவிழுங்கிஉமிழ்ந்தமுதல்வராகியவிஷ்ணு சண்டைசெய்யமுகக்கையுடைய பெருமிகாராக விளங்கிய கருடன்மேலேறிக்கொண்டுஅனேகபாணவருஷங்களைவீரபத்திரர் மார்பில்படும்படியாகப்பொழிந்தார் அப்படிவிட்ட பாணங்களையெல்லாம் துண்டமாகத்தன் கைப்பாணத்தினாலே அறுத்தெறிந்தார்வீரபத்திரர் ௰

வையமுண்டமால்வெகுண்டுவாள்விதித்துவீசினு
னையணங்கொர்வாளியாலறுத்தெறிந்தோரம்பினாற்
பையராவருந்தியாவிபருகினன்மெய்கருகினன்
கையிலாழியேவினன்கனிந்ததண்ணல்காலிலே

(இ-ள்.)விஷ்ணுவானவர் வில்யுத்தம்பண்ணுகிறதற்குச்சக்தியில்லாமல்கோபங்கொண்டு ஒருகத்தியையெடுத்துச்சுற்றி வீசினார் வீரபத்திரர் அந்தகத்தியை ஒருபாணத்தைவிட்டுஅறுத்தெறிந்துஒருபாணத்தினாலேபாம்பைக்கொல்லுகின்றகருடனைக்கொன்றுவிட்டார் அதுகண்டுதுக்கத்தினாலேவுடம்புகறுப்பாய்க் கையிலேயிருக்கிறசக்கரத்தை வீரபத்திரர்மேல் பிரயோகஞ்செய்தார் அதுஓடிவந்து சுவாமிகாலிலேவிழுந்துபணிந்தது—எ-று. (௰௧)

எந்தைமுன்னளித்தவாழிபெற்றதாளில்வீழவே
யந்தமெய்யொழிந்துடனரியரியினைவேடமாகியே
வந்தவர்துபோர்தொடங்கிவாளின்வேலின்வவ்வினு
னுந்திவேறோர்சேலதாகிவாரிமீதொளித்தனன்

(இ-ள்.)முற்காலத்திலேவிஷ்ணு ஆயிரம்தாமரை மலரைக்கொண்டுபரமசிவனைப்பூசித்து வருகிறபோது இவர்பத்தியைபரிசோதிக்கவேண்டிஆயிரம்பூவிலேஒருபூவைச் சுவாமிமறைத்துவைத்தார் விஷ்ணுபூசைசெய்துஅருச்சனைபண்ணிக்கொண்டு வரும்போது ஒருபுட்பங்குறைய அதற்குப்பதிலாகத்தம்முடைய தாமரைப்பூ ஒத்தகண்ணைப்பிடுங்கி அருச்சிக்கச்சுவாமிக்குமனம் சந்தோஷம்வந்து சக்ராயுதங்கொடுத்தார் அந்தசக்கரத்தைத்தானே சுவாமிமேலேவிட அதுபயந்துகாலில்விழவேஇனிமேல்இந்தரூபத்தோடேநின்றால் பிழைக்கமாட்டோமென்றுஅந்தஉருவத்தைஒழித்துப் பன்றியாகவும் சிங்கமாகவுமுருவமெடுத்துவந்துயுத்தஞ்செய்ய அந்தவுருவங்களை வாளாயுதத்தாலும் வேலாயுதத்தாலும் வீரபத்திரர்வென்றார் அதன்பின்பு மிகவும்பயந்து மீனுருவமெடுத்துச்சமுத்திரத்திலேவிழுந்துஒளித்தார்—எ-று. (௰௨)

புலியுண்ண நெடுமாலுமபழையபடிபுவியுண்டுபோனான்வேதன்
தலையுண்டுதலைநாலுந் தீனையுண்டாரிமையவாதங் குடியூனுண்டார்
அலியுண்ட கணகுண்டம்பேயிறைச்சியருந்தசனகலமேயான
தலியுண்டுமனமகிழ்ந்தங் கெய்ததவமுனிவரெல்லா மலியுண்டாரே.

(இ-ள்) மண்ணையுண்டவிஷ்ணுவுந்தோற்று மண்ணைவாயிற்ட்டுக்கொண்டுஒளித்துக்கொண்டார் பிரமாதவித்து நான்குதலைறுபட்டுஇறந்தார் தேவர்களுந்தண்டத்தால் அடியுண்டு இறந்தார்கள் பூதகணங்கள் இறைச்சிசாப்பிடுகிறதற்குஓமகுண்டமபாத்திரமானது அவிர்ப்பாகம்சாபபிட்டுவந்த முனிசிரேஷ்டர்கள் எல்லாரும்வீரபத்திரசுவாமியினால் இறந்தார்கள்-எ-று. (௩௩)

இங்கிதுவாய்முடிந்ததற்பின் வீரனிறைபதம்பரவியிசைந்தானெ
ல்லா, மங்கணனுமுனிமாறியருள்சுரந்து மகததிறந்தாரக்காவியீடந்து,
மங்கரியபதங்களெல்லாமபழையபடியுதவுதலுமவணங்கிப்போனார், ச
ங்கரியைமுன்பெற்றானென்பெற்றானறனக்காட்டுத்தலைப் பெற்றானே

(இ-ள்) இவவிடத்தில்இவ்விதமாகயாகசாலையோடுசருவத்திரபேரும் நாசத்தையடைந்தபிறபாடு வீரபத்திரர் கைலாயத்துக்குப்போய்சசுவாமியினுடைய பாததிலேவணங்கி அங்கேநடந்தசமாச்சாரமெலலாஞ்சொன்னார் அதுகேட்டருளிப்பரமசிவனுங்கோபமாறிக்கிருபைபிறந்து யாகத்திலிறந்தவர்களனைவரையும் பிழைப்பித்துக் கேடிலலாத அவவிடங்களையவரவர்க்குப்பழையபடியே அருளிசசெய்தலும் அவர்கள்சுவாமி நாங்களவிவேகமிலலாமையினாலே செய்த குற்றத்தைப்பொறுக்கவேண்டுமென்று நமஸ்கரிதது விடைபெற்றுக்கொண்டார்கள் பார்வதியைப்பெற்றதக்கனுக்குமாத்திரம் நிந்தைசெய்ததற்கு அபராத அடையாளமாக ஆட்டுத்தலையை அவனுடலில்வைத்துப பெருசதி எழுந்திருக்கும்படிசெயதார்-எ-று. (௩௪)

எந்நாதன்றனையிகழ்ந்தோன் செல்வியெனவுலகுரைக்குமிடுக்கண்டீர
தன்னாகந்தன்யோக சாதனத்தால்விடுத்திமயன றவத்தினாலு (த்
முன்னாகமைநாகன் றனைப்பயந்த மேனியதுமுயற்சியாலு
மின்னாகவவதரித்தா ளமரரெல்லாங் கற்பகப்பூவீசினாரே.

(இ-ள்) எனக்குநாதராக இருக்கின்ற பரமசிவனைநிந்தித்தக்கனுடையகுமாரியென்றுபழிபபாகவுலகஞ்சொல்லுமேஅம்மையென்று பார்வதி அந்தத்துக்கந்தீரத் தன்னுடையதேகத்தை யோகாக்கினியினாலே நிவர்த்திசெய்து இமவற்பருவதராசன் தபோமகிமையினாலும் முன்னேமைநாகனென்கிற பிள்ளையைப்பெற்றமேனைதேவியினுடைய முயற்சியினாலும் அவர்களுக்குக்குமாரியாக அவதாரஞ்செய்தாள் தேவர்கற்பகப்புஷ்பங்களைவருஷிக்கப்பொழிந்தார்கள்-எ-று. (௩௫)

சிந்தாகுலத்தொன்றுசத்தி சிவத்திரண்டாய்ஞானமிச்சைசெயலின்
மூன்று, சொத்தாகிக்குடிலைதரு நாதவிந்துவிரண்டினுக்குஞ் சொரு

கொம்பாகி, மூத்தாகிச்சிவனிடத்தே யுருத்திரன் மாலயன் முதலா மு
ளைத்தமூல, வித்தாகிநிறைவாளைப் பயந்தவறகுமுடிந்ததவம விளம்ப
லாமோ.

(இ-ள்.) சித்தாந்தமாகச்சொல்லப்பட்ட சிவனிடத்திலேதோன்று
கிட்ட ஆதிஞானசத்தியாய்ப்பின்பு அச்சிவத்தில்நின்றும பிரானசத்தி
யென்று வேறுபட்டுப்பின்பு ஞானசத்திஇச்சாசத்தி கிரியாசத்தியென
மூன்றுவகையாகிக் குடிலையினாலுண்டாகிய நாதவிந்துகளுக்குக் கொ
ழுகொம்பாகியுமசுவாமிக்குமூத்தாகியும பரமசிவனிடத்தில் உருத்திர
ன் விஷ்ணுபிரமாமுதலானவர்களஉண்டாகிறதற்குமூலமாகிய வித்தா
கியும எங்குநிறைந்தபார்வதியைப் பெற்றவாககுமுடிந்த தவப்பெரு
மையைச சொல்லக்கூடுமோ—எ-று. (௫௬)

கலைவளருமதிபோன்று சிவனைவெல்லாதன்வளர்க்குங் கரும்பு
போன்றும, பலகலையுந்தெளிந்துயர்ந்து பந்துகழலூசலபறறியபிலு
நாளில், மலைபாசனிடத்தின்மறை நாரதனொருநாளில் மகிழவா யெ
ய்தி, யுலகமெல்லாங்குடியிருக்கும் திருவயிற்றிலிலக்கணம்பார்த்து
ரைக்கலுற்றார்.

(இ-ள்.) பார்வதியானவள்இமாசலராசனுக்கும்மேனைதேவிக்கும்
குழந்தையாகி வளர்பிறைபோல நாளுக்குநாள்வளர்ந்து மன்மதனா
னவன் சிவனைவெல்லவில்வேணடி அதற்குவளர்ந்தகரும்பையொத்து
ப்பலசாஸ்திரங்களையுங்கற்றுப் பந்துகழங்கு ஊசல்விளையாட்டு முத
லானதுசெய்துகொண்டு வருகிறகாலத்தில் மலையாசனிடத்தில் வே
தமுணர்ந்தநாரதர் ஒருநாள்வந்து உலகங்களெல்லாம் வயிற்றிலேவை
த்திருந்த அம்மனுடைய இலட்சணம்பார்த்துச்சொல்வார்-எ-று. ()

நெற்றியிலோர்புறத்திலரை நேத்திரமுண்டாமொருகைக்கொடியகுலமு
மற்றுமொருதனமறையு மொருபாகமரகதம்போய்ப் பவளமாகும்
கற்றைநெடுங்குழற்பாதி சடையாகுமொருகைவளை கழன்றுபோகு
மூற்றுவருமிவ்வகைளென மலையாசன்மனமுருகி யுவகையானான்.

(இ-ள்) வாரும்பருவதராசனே உம்முடைய குமாரத்திக்குச்சில
பொழுதிலேநெற்றியில் ஒருபக்கத்தில் அரைக்கண்தோன்றும ஒரு
கையிலேசூலமுண்டாகும ஒருபக்கத்துஸ்தனம் மறைந்துபோகும்பா
திசரீரம் பச்சைநிறம்போய்ப்பவளநிறமாகுமகூந்தலிற்பாதிசடையா
கும்ஒருகையிலேவளையல்களில்லாமற்போகும் இதுகள்சம்பவிக்குமெ
ன்று நாரதர்சொல்ல பருவதராசன் உள்ளமுருகிச சந்தோஷத்தைய
டைந்தான்-எ-று. (௫௮)

வேறு-அறுசீரடியாசிரியவிருத்தம்.

வையநீர்க்கங்கைபாயும் பனிவரைமருங்கினங்காள்
துய்யநீர்ச்சடையான்வந்தங் கோர்தவந்தொடங்கக்கேட்டு
வையகமளித்தாடோறை வள்ளலைப்பணிந்துமானை
யையநின்றவத்துக்கேவல் கோடியென்றளித்துப்போனான்.

(இ-ள்) இந்தப்பிரகாரம் நாரதர்சொன்னதைக்கேட்டுப்பார்வதி யே நமக்குப்பெண்ணாகவந்தபடியினாலே பரமசிவன்மருமகனாகி வர வேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருக்கிறானாயில் பூமியிலே கங்கையைச்செலுத்திக்கொண்டிருக்கிற அந்த இமவற்பர்வதத்தினுடைய பக்கத்தில் பரமசிவன்யாதோவொரு நினைவினாலேயோகத்தி லிருக்கிறாரென்கிறவார்த்தைகேள்வியாகித் தன்மகளாகிய பார்வதியையு சில தோழிப்பெண்களையும் அழைத்துக்கொண்டுபோய் நமஸ்கா செய்து என்னுடையபெண்ணை உமமுடையதவசுக்காக ஏவல்செய்ய ஒப்புக்கொள்ளுமென்று அவரிடத்தில் அம்மனைவிட்டுப்போனான் பருவதராசன்-எ-று. (நக)

ஓங்குமாலயன்மற்றுள்ளோ ரொழிவிலாத்தவம்புரிந்தால்
தாங்குபேரளிப்பான்றானோர் கருத்தினாற்றவஞ்செய்போதிற்
பூங்குழல்கனியுப்போது முஞ்சியும்புனலுங்கொண்டு
பாங்கியர்பலருஞ்சூழப் பணிவிடைபலவுஞ்செய்தாள்.

(இ-ள்) எல்லாத்தேவரிலு மூபார்த்தவிஷ்ணு-பிரமா-மற்றவர்கள் பெருமையாயொழிவில்லாத தவசுசெய்தால் அவர்களுக்கு வேண்டிய வரத்தைக்கொடுக்கிற சுவாமியானவா யாதோ ஒருகருத்தினாலே தவஞ் செய்கிறபோது பார்வதி-பழம்-புஷ்பம்-தருப்பை- திருமஞ்சன முதலானதுகளைக்கொடுத்துத் தனதுடையபாங்கிமார்களுடனே பல பணிவிடையுஞ் செய்துகொண்டிருந்தாள்-எ-று. (சுய)

இங்கிவையிருக்கத்தேவ ரியாவருமிமையோர்கோவும்
பங்கயத்தவனையெய்திப் பணிந்தனர்பதுமத்தோனு
மங்கவாக்கிருக்கையீந்தா னவரவர்முகத்திற்சோர்வுங்
குங்குமக்குழம்புதீத்த புயங்களிற்குழைவுங்கண்டான்.

(இ-ள்) இவ்விடத்தில் இந்தப்பிரகாரமாகவிருக்க எல்லாத்தேவர்களும் தேவேந்திரனுங்கூடிப் பிரமாவைச்சேர்ந்து தொழுதார்கள் அந்தப்பிரமாவும அவாகளுக்குஇருக்க ஆசனங்கொடுத்துப்பிற்பாடு அவர்களுடைய முகஞ்சோர்ந்து இருப்பதையுங்குங்குமம்பூசியிருக்கிற தோளகள் இளைத்திருப்பதையும பார்த்தார-எ-று. (சுக)

வச்சிரமொடிந்தீசானன் கணிச்சுவாய்மடிந்துகாலன்
முச்சிரம்வளைந்துமற்றோர் படைபெலாமுறிந்துதேவர்
மெச்சிரமகுடந்த்து மெலிந்தமைவிளம்புமென்று
னச்சுரர்தமக்குக்கோமான் றாகனழித்தானென்றான்.

(இ-ள்) வச்சிராயுதம்ஒடிந்துபோயும் ஈசானன் மழுவாயுதத்தின் வாயமழுங்கியும் யமனுடையசூலாயுதம்வளைந்தும் மற்றவர்கள ஆயுதமுறிந்தும தேவர்கள்சிரசிலேயிருக்கிற மகுடம்பிடுங்கப்பட்டும் வருத்தத்தையடைந்தீர்கள் அவ்வருத்தத்தைச்சொல்லுங்களென்று கேட்கத் தேவேந்திரனானவன் தாருகாசுரன்இப்படிஅவமானஞ்செய்தானென்றுசொன்னான்-எ-று. (சுஉ)

காலையாம்புயத்தோன்சொல்வான் கரலனாற்கனலாற்காற்றான்
மாலினாலென்னாலுன்னா லவன்வலிதொலைக்கலாமோ

வாலமாமிடற்றன்சேயா யசலமாதிடத்தேதோன்றும்
வேலனார்வெல்வாருங்கள் சிறையெலாமவிடுப்பாரென்றான்.

(இ-ள்.) அப்படிதேவேந்திரன் சொல்லக்கேட்ட பிரமாவானவன்சொல்வான்-யமன்-அக்கினி வாயு-விஷ்ணு-இவர்களாலுமென்றாலும் உன்றாலும், அந்தத்தாருகாசூரனைக் கொல்லக்கூடுமோ, சிவனுடைய னேயாய இமாசலபுத்திரியான பார்வதியினிடமாக சுப்பிரமணியர் அவதரிப்பார் அவனைகொன்றுஉங்கள் சிறையைமீட்பாரென்று சொன்னான்-எ-று. (௪௩)

யோகத்திலிருக்கவீச னுமைமக்குநாணளிக்குமாறு
வேசத்திலியற்றுமென்றே யபணவிடைகொடுத்தான்மீண்டு
மாகத்திலணுகித்தேவர் மதனனைநினைத்தார்மாரன்
சோகத்தையொழிக்குமென்றநறேருடன்றோன்றிசொல்வான்

(இ-ள்.) யோகத்திலிருக்குஞ்சிவனனவர்பார்வதிக்குமங்கலியதாரணஞ்செய்யும்படிச்சீக்கிரத்தில் முயற்சிசெய்யுங்களென்று பிரமாவர்வத்திரபேருக்குத்தம உத்தரவுகொடுக்கத் தேவர்களெல்லாரும அமராவதிக்குவந்து மன்மதனைநினைத்தார்கள் அவன விடாயதீர்க்கத்தக்குந்த தென்றலாகிய தேரின்மேலேறிவந்துசொல்வான்-எ-று. (௪௪)

என்றவமழிக்குமாத ரெவர்களைமயக்கநீவிர
வன்றறைந்துயாரெம்மை யழைத்ததென்கருமமென்று
னவன்றனையிறுகப்புல்லி யமரர்கோனருளினோக்கிச்
சிவன்றவமழிக்கவேண்டி யழைத்தமைதெரியச்சொன்னான்

(இ-ள்) மன்மதன்தேவர்களைப்பார்த்து எவனுடையதவத்தை அழிக்கட்டும் எந்தப்பெண்களைமயக்கட்டும் நீங்கள் எந்தத்துக்கநிமித்தமாக என்னையழைத்தீர்களென்று கேட்கத் தேவேந்திரன அந்தமன்மதனை இரண்டுகையினாலும் இறுகக்கட்டித்தழுவி உபசாரத்துடனே பார்த்துச் சிவனுடைய தவத்தையழிக்கும்படி உன்னைவேண்டியழைத்ததென்று தெரியச்சொன்னான்-எ-று. (௪௫)

விண்ணிலாமகவான்சொல்ல வெருண்டுவேள்பயந்துகூறும
பெண்ணலாரலியாணல்லா பிறப்பிலாரிறப்புமில்லார்
கண்ணினாலளவைநூலாற் கருத்தினாலளவாவந்த
தண்ணிலாமுடியார்செய்யுந்தவத்தையார்தவிர்க்கவல்லார்

(இ-ள்.) தேவலோகத்திலிருக்கும் இந்திரன் சொல்லக்கேட்டு மதனுஞ் சுவாமிக்குபயப்பட்டுச்சொல்லுவான் வாருமையாதேவேந்திரனே சிவன் பெண்ணுமல்லர், ஆணுமல்லர் அலியுமல்லர் பிறப்பும் இறப்புமில்லாதவர் காட்சிப்பிரமாணத்தினாலும் ஆகமப்பிரமாணத்தினாலும் கருத்தினாலும் இப்படிப்பட்டவரென்று நிதானிக்கக்கூடாத குளிர்ச்சிபொருந்திய சந்திரனைத்தரிக்குமுடியையுடைய அந்தச்சுவாமியினது தவத்தையழிக்கின்றதற்கு ஆர்வல்லவர்-எ-று. (௪௬)

கன்னிகைக்கௌரியீசன் கருத்திலாப்பிரமசாரி
சந்நிதியின்மையாலே யுயிரெலாந்தழைய ரிற்கு

முன்னியவுயிர்கள்போல வொடுங்கிமெவன்பாற்செல்லு
மன்னியபொருளுந்தோன்றி மனதிலேயொடுங்குமாபோல்.

(இ-ள்.) அம்மனோகன்னிகை சிவனோ குற்றமில்லாதபிரமசாரி யிவாகளிரண்டுபேர்களுடையசன்னிதிமகிமையினாலேசகலவுயிர்களும் உண்டாகிவிரதியாகுமமுன் எப்படிசுவாமியினிடத்திலிருந்துசீவ[ன்க]ளஉண்டாச்சுதுகளோ அப்படியே அவரிடத்திலே ஒடுங்கும் ம[னதி]லேதோன்றியஅனேகவஸ்துகளாஒடுங்குவதுபோல-எ-று. (௬௭)

தாமதகுணத்தரென்பர் சங்கரிததிடலாலீசன்
வேமமாமுயிர்கட்கெல்லா மினைப்பொழித்தருள்வதாக்கும்
மாமலகுணமூன்றில்லை வடிவமிக்கனலாமென்கைய
பூவலாசொரிந்தக்காலும் புகையெழப்பொசிந்துபோமே.

(இ-ள்.) உலகத்திலேசங்காரகதொழில்செய்வதனாலே சிவன் தமோகுணத்தையுடையவரென்று சொலவாகள் அப்படியன்றுஉயிர்களுடையவினைப்பையொழிப்பதாகும மற்றத்தேவர்களுக்குஉண்டாயிருக்கின்றமும்மலசம்பந்தமில்லை இவருடையசொரூபமிகவும்நெருப்பாகும அவர்மேல்நான்புஷ்பபாணத்தைவிட்டால அதுகள்புகையாகக்கரிந்துபோகும-எ-று. (௬௮)

உருவெனத்தெரியாதானை யுருவினோடருவமானை
யருவெனத்தெரியாதானை யமாசெயலரிதென்றஞ்சி
வெருவரப்புகுதானந்த வேளையிலவேளைநோக்கித்
தருவனத்திடையில்வாழுஞ் சதமகனுரைப்பதானான்.

(இ-ள்.) உருவென்று யாவராலுந்தெரியக்கூடாதவரையுருவமாகியும்அருவமாகியும இருக்கின்றசிவனை அருவமென்றுமதெரியாதவரை மிகவும்யுத்தஞ்செயதுசயிக்கப்படாதென்று மன்மதன்பயப்பட்டுத் தனனுடையஸ்தானத்திற்குப்போகப்புறப்பட்டான் அந்தக்காலத்தில் மன்மதனைப்பாாததுககறபகத்தருவினிழலில்வாசஞ்செயயாநின்றதேவேந்திரன் சொல்லததொடங்கினான்-எ-று. (௬௯)

மாயவனுரத்தின்மீது மலாவனுவின்மீது
நாயகன்சிரத்தின்மீதும் பொறுத்ததுனலமேயன்றோ
காயுநற்கதிரைமேனிக கடைந்ததுமெனக்குமிந்த
வாயிரநயனந்தந்த செயலுமுன்னாண்மையன்றோ.

(இ-ள்.) விஷ்ணுதமமுடையமார்பிலே இலட்சுமியை வைத்துக்கொண்டதுபிரமாசரஸ்வதியைநாவில்வைத்துக்கொண்டதும், மகாதமாவானவா தலையிலேகங்கையையென்கின்ற பெண்ணை வைத்துக்கொண்டதும் உன்னுடையசாமர்த்தியமல்லவோ சூரியனைச்சாணையில்கடையச்செயததும் எனக்கு ஆயிரங்கணவைத்ததும் உன்னுடையஆண்மையல்லவோவென்றான் தேவேந்திரன்-எ-று. (௭௰)

செல்வதின்றெமக்காயங்கே தருவதுதேவர்க்காவி
வெல்வதுசிலனைவென்று கொடுப்பதுகாமவேட்கை

சொல்வதுமறுக்கவேண்டா மெனச்சொலித்துணைக்கைப்பற்றி
நல்வரமிதுதாவென்னமதனவேணயர்ந்துகூறும.

(இ-ள்.) பிரமனுந்தேவேந்திரன்சொல்வான் வாராய்மன்மதா எ னக்காக அங்கேசென்று சிவனைசயித்து அவருக்குக்காமலாகிரி யுண் டாகும்படிசெய்தால் அவருக்குப்புத்திர னுண்டாகும் அந்தப்புத்திர னசுரர்களைக்கொன்று தேவர்களையிழைக்கும்படி செயவார் அதமகு ககமயகாரணமாயிருக்கிறபடி நான்சொன்ன வார்த்தையைமறுக்கவேண் டாமென்றுகையைப்பிடித்துக்கொண்டு எனக்குஇந்தநல்லவார்த்தைக் கொடுவென்றுகேட்க மன்மதன் சந்தோஷித்துச்சொல்வான்-எ-று. ()

அரன்சிலைமலையென்றாலு மம்புக்கணையரியென்றாலும்
வரபறவிசைசநதானும் வாசுகியாவென்றாலுங்
கருமமெனுஞ்சிலைபாகந்த கணையெறுபலராகலச் (போனான்
சுரும்பெனுங்குணத்தால்வெல்வே னெனசசொலித தொழுது

(இ-ள்) வாருந்தேவேந்திரனே சிவனுக்குவில்லானது மலை யாகியிருந்தாலும் விஷ்ணுவே பாணமாகியிருந்தாலும் வாசுகியே நா ணாக ஏறுகின்றதாணியானாலும் என்னுடையகரும்பாகிய வில்லினா லும் ஐந்துபுட்பங்களாகியபாணங்களாலும் நீலநிறம்பொருந்திய வண் டென்கிற நாணியினாலும் அந்தசிவனைச் செயித்துப்போகிறேனெ ன்றுவந்தனஞ்செய்துசுவாமியிடத்துக்குப்போனான் மன்மதன்-எ-று.

சந்தனமணமூன்றெட்டவக தமிழப்புதுமணமுநகொண்டு
வந்தமலயத்தென்றல் வசந்தமந்திரியுஞ்சேர்ந்த
திந்துவுநிலவாபவெண்ணெ வலையினெயேததெங்கு
கொந்தலரிளமாவெல்லாங் கோகிலமுழங்கிறறே.

(இ-ள்.) மன்மதன் சிவனைசெயிக்கும்படிபுறப்படும்போதுபொ திகைமலையிருந்து அவ்விடத்தில்தங்கிய சந்தனவாசனையும் திவ்வியமா ன தமிழ்வாசனையுங்கொண்டுதென்றல்காற்றுவந்ததுவசந்தமாகிய மந் திரியுமவந்துசேர்ந்தான்சந்திரன்கிரணமாகிய வெண்ணிலவினாலாகு பக்குமலிசினன்புட்பக்கொத்துகளையுடைய இளமையுற்றமாமரத் திலெல்லாங்குயில்முழங்கியது-எ-று. (௫௩)

மல்லிகைமுலைகயாஞ்சங மதுகாமுழுங்கபசெய்ய
முல்லைசணபகமசோகு மூளரியெழுதலாயுள்ள
வெல்லைபின்மலருநதேனு மிசைத்தனவிரும்படச்செய்யக்
கல்வினையுநக்குஞ்சொல்லார் குறிஞ்சியாழகாநதிறசொண்டார்.

(இ-ள்.) மல்லிகையரும்பேசங்கமாகவும் அவ்வரும்பில்சப்திக்கி ன்ற வண்டுகள்அச்சங்கத்தைவாயில்வைத்துஊதுகிறவிராளுகவுமவிரக ள்முல்லை சண்பகம் அசோகு-தாமரைமுதலியபகணக்கில்லாத புஷ்ப ங்களையுந்தேனையுநான்றாக்கமுயிறைந்துக்கொண்டுகடினமாகியபயி ரும்புகல்செமபு இதுகள கூடவுருகும்படி சொல்லுகிறவார்த்தையை யுடையபெண்கள்குறிஞ்சியாழென்னும்வாத்தியத்தைக்கையிலேகொ (௫௪)

பொங்கியவுடுக்களான புள்ளிமுகத்துச்செக்கர்
தங்குசிந்தூரமாகுந் தனியிருட்கரியுங்கிளிளைப்
பைங்குரகதமுஞ்செல்லப் பணைமுலைப்பவளச்செவ்வாய்
மங்கையரெனும்போர்வீரா வடிகண்வாள்விதிர்த்துச்சென்றார்.

(இ-ள்.) மிகுந்த நக்ஷத்திரங்கள் முகத்திலிருக்கிற புள்ளிகளாக செவ்வானமானது ஒருதிலகப்பொட்டாகவும் விளங்குகின்ற ஒப்பற்ற இருட்டாகிய யானையும் பசுமைபொருந்திய கிளியாகிய குதிரையும் நடக்கப் பருத்த முலையையும் பவளம்போன்ற வாயையுமுடைய ஸ்திரீகளாகிய சுத்தவீரர்கள் தங்கள் கண்களாகிய சத்திகளை அசைத்துக் கொண்டு புறப்பட்டார்கள்-எ-று. (௫௫)

கோணியகருப்புமைந்து குலமலர்க்கணையுங்கொண்டு
வாணுதலிரதிசெல்ல மகரகேதனனதனோடு
தாணுமாலவனத்தைச்சேர்ந்தான் றவஞ்செய்வான் றனைக்கண்டஞ்சி
நாணினானாகால்வண்டு நாணினைப்பூட்டினானே.

(இ-ள்.) வளைவாகிய கரும்புவில்லையும் புஷ்பங்களாகிய ஐந்துபாணங்களையும் எடுத்துக்கொண்டு ஒளிபொருந்திய நெற்றியையுடைய இரதிதேவியானவள் கூடவர மீனக்கொடியுடனே பரமசிவன் யோகத்திலிருக்கிறவனத்தைச்சேர்ந்து அவ்விடத்தில் தவஞ்செய்கிற அந்தச்சுவாமியைப்பார்த்து இவரையெவ்வாறுசெய்வோமென்றுபயந்து வெட்கத்தையடைந்து நம்பினான் வண்டைநாணாகவுடைய மன்மதன்-எ-று.

வெளிப்படநிலத்தெதிர்த்தாலென்னவிளையுமோதனச்சென்றெண்ணி
யொளிந்தனன்முன்னேபின்னேயுமையவள்வரவுகண்டு
களித்தனமயக்கமாமோகனத்துகளிறைத்துவில்லை
வளைத்தனனிநாண்பூட்டிவடிக்கணைதொடுத்தான்மாரன்.

(இ-ள். நேரேவெளியாகவந்துயுத்தஞ்செய்தாலென்னசேதமக்கு உண்டாகுமோவென்றுநினைத்துச் சுவாமியின்பின்தெரியாமல் ஒளித்திருந்து சமயம்பார்த்துக்கொண்டிருந்தபோதுபார்வதி அக்கடவுள் முன்னே பணிவிடைசெய்யவருதலைக்கண்டு பெண்துணைநமக்கிருக்கிறபடியினாலே வெல்லக்கூடுமென்று சந்தோஷித்து மோகனத்தையுண்டாக்கும் புஷ்பபாணத்தைஇறைத்து வில்லைவளைத்து நாணேற்றிப்பாணங்களைத்தொடுத்தான்மன்மதன்-எ-று. (௫௭)

ஒருகரும்புருவச்சாபமொடியினுமுலகமீன்ற
விருகரும்புருவச்சாபமுளவெனுமெழுச்சியாலே
*பொருகணைதொடுத்தானென்று புராணசுடுகணையினாலு
மொருகணைவிடுத்தான்மாரனுடலெலாங்கொளுத்திற்றன்றே.

(இ-ள்.) மன்மதனனவனதானதிகசண்டைசெய்தால்ஒருகரும்புருவமாகியவில்லானது ஒடிந்தாலும் உலகத்தைப்பெற்ற பார்வதியின்

*ஒருகணையென்றமையால் இறற்றியென்றுவருவிக்கப்பட்டது கண்ணையென்றசொல்மெய்கேட்டு கணையென்று சொல்லணியேற்ற-

இரண்டெரும்புருவமாகிய வில் உண்டாயிருக்கின்ற நமக்கியாதொரு குறைவுமில்லையென்கிறசெருக்கினாலேபோய்அனேகபாணங்களை விட்டபோது மூன்றுபுரத்தையும் எரித்தகைகயாகிய அம்மையுடைய சிவன் அம்மன்மதன்மேல் தன்னெற்றிக்கண்ணைச்செலுத்தினார் அக்கண் மன்மதனுடைய உடம்பையெல்லாங்கொளுத்திவிட்டது-எ-று.(௫௮)

அழுக்கவெண்பஞ்சுபோலே யழற்கண்ணாலனங்கனா
திருக்குலங்கலக்கண்டு தேவருந்திசையினோரும
வெருக்கொளவொளித்தார்பூத கணத்துடன் விடையினானும்
பொருக்கெனமறைந்துவெள்ளிப் பொருப்பிடை புகுந்தானன்றே.

(இ-ள்.)நெருப்புப்பட்ட எருக்கம்பஞ்சுபோல் மன்மதனுகியபாறு பாடுபொருந்திய மனத்தையுடையவன் எரிந்துபோகக்கண்டு தேவர்களும் அஷ்டதிக்குப்பாலகரும் பயப்பட்டொளித்துக்கொண்டார்கள் அதன்பின்பு சுவாமிபூதகணங்களுடன்சீக்கிரமாகஅந்த விடம்விட்டுக்கைலாசத்துக்குளெழுந்தருளினார்-எ-று. (௫௯)

சங்கரன்மணத்தைவேண்டியுமையுநற்றவமேசெய்தா
ளங்கதுபுணருமாறேழ் முனிவருக்கமலனெசொன்னான்
மங்கலவேழுஞ்செபத முனிவருமகிழவாமெய்தித
துங்கவெற்பிறைபாலகிதனைசச சோபனஞ்சொல்லினார்கள்

(இ-ள்)பரமசிவனானவர்தன்னைக்கல்யாணஞ்செய்துகொள்ளப்பார்வதிதவஞ்செய்கிறாள் அவள்வந்துசேரசசப்தரிஷிகளையழைத்து பருவதராஜனிடத்திற்போய் சுவாமிக்கு உன்பெண்ணை கலியாணஞ்செய்துகொடுமென்று கேளுங்களென்று அனுப்பினார் அந்தப்படியே அந்த வெழுபேரும் பருவதராசனிடத்துக்குப்போய் இந்தச சோபனசசெய்தி சொன்னார்கள்-எ-று. (௬௰)

மலையிறைமகிழ்ந்தானந்த மலையிறைபுதல்வன்வள்ளல்
குலமதுபயந்தோர்நாமங் குடிப்பெயரேதுவாழூர்
தலமதுபுகலுமென்றான் தவத்தவர்நகைத்துசசொல்வா
ரலகிலான்பிறப்புசலல கிலையெனவறிவித்தார்கள்.

(இ-ள்.)ரிஷிகள்போய்ச்சொன்னவுடனே பருவதராஜன் சந்தோஷித்தான் அவன்பிள்ளைபாக்கியமைநாகன் ரிஷிகளைப்பார்த்து சிவனென்ன சாதி அவருக்குத்தாய்தகப்பன் பெயரென்ன குடிப்பெயரென்ன அவரிருக்குமூரேது சொல்லுங்களென்றுகேட்டான் அதைமுனிவர்கேட்டுநகைத்துச் சிவனோ அளவிடக்கூடாதவர் அவர் பிறந்தவிடம் மூன்றில் அவர்கல்லசாதியென்றுதெரிவித்தார்கள்-எ-று. (௬௧)

பொருந்ததோருவகையாகிப் பிறைமுடியவன்போர்ாளிற்
பொருந்தபுரானருந்தோர்ந்து புனிதனைபபுகழ்ந்துபோமறி
விருத்தியார்வாவுரானருங்குறிதகிறைவிடுத்தானன்றோ
பருத்தசங்கையினாற்கிந்தப்படியெல்லாம்பணிந்துசென்று

(இ-ள்.) அப்படி சத்தரிஷிகள் சொன்னபிறகு பருவதராசன் முதலானவர்களெல்லாம் மகா சந்தோஷத்தையடைந்து சந்திரனைத் தரித்த முடியையுடைய சிவன் பிறந்த நட்சத்திரத்திற்கும் அம்மன் பிறந்த நட்சத்திரத்திற்கும் தகுந்த பொருத்தமும் கலியாணஞ்செய்கிற காலமுமறிந்து நிச்சயம் பண்ணி ரிஷிகளினுடைய பாதத்தைப் புகழ்ந்து வணங்கி விருத்தி பொருந்திய கலியாண முகூர்த்த ஓலையும் எழுதிக் கொடுத்து அனுப்பினதால் அந்த ஏழு ரிஷிகளும் கங்கையைத் தரித்த சுவாமிக்கு நிச்சயங்களெல்லாம வணங்கி சொன்னார்கள் -எ-று. (சஉ)

இமையவெற்பிறைவனோலை முகத்திலேழுகிரிக்குமேருச்
சிமையமாலவரைக்குஞ்செம்பொற் றிகிரிமாவரைகளுமேழு
தமராவான்கடற்குஞ்சித்த சாரணர்முனிவோருக்கும்
அமரரானவர்க்குமவஞ்சிமணத்தினையறிவித்தாகள்.

(இ-ள்.) இமைய பருவதராசன் பார்வதியம்மன் கலியாணமுகூர்த்த ஓலையை அனேகதூதர்கள் கையிற் கொடுத்தனுப்புவிக்க அவர்கள் சத்த குலபருவதங்களுக்கும், கொடிமுடி பொருந்திய மேருவுக்கும், சக்கிரவாளகிரிக்கும், ஒளியையுடைய சத்தசமுத்திரத்திற்கும், சித்தர் - சாரணர் - முனிவர் - தேவர் முதலானவர்களுக்கும், அம்மன் கலியாணத்தை அறிவித்தார்கள் -எ-று. (சங)

ஓலைகண்டளவேசேர்ந்த வுததிகளேழும்பூமி
மாலையாய்ச்செல்லுகின்ற மகிமைசேர்நதிகளேழும்
நீலமேமுதலாயுள்ள கிரியெலாநெருங்கிச்சென்ற
கோலமாமுனிவோர்சித்த ரிமையவர்குழாங்கொண்டார்கள்.

(இ-ள்.) ஓலையைக்கண்டவுடனே ஏழு சமுத்திரத்திற்கும் பூமிதேவிக்கும், மாலைபோலப் பிரகாசிக்கிற மகிமை பொருந்திய ஏழு நதிகளுக்கும், நீலகிரி முதலாகிய சப்தகுல பருவதங்களுக்கும், அதிஷ்டானமாகிய தேவதைகளொருங்கிச் சேர்ந்தார்கள் - முனிவர்களும், சித்தர்களும் தேவர்களும் கூட்டங்கூட்டமாகச் சேர்ந்துவந்தார்கள் -எ-று. ()

அட்டதிக்கனைத்துந்தோற கொடிகளாலடைத்தாரவிணையை
மட்டறுவிமானந்தன்னான் மாலையான்மறைத்தார்வீதி
நெட்டிலைவாழையைபூக நிரைகளாய்நிறைத்தார்வெறபிற
நட்டியபுழுதியாலே மெழுகினார்தரைகளெல்லாம்.

(இ-ள்) எட்டுத்திக்கையும் தேரினாலும் கொடிகளாலும் இடமில்லாமல் நிறைத்துவிட்டார்கள், ஆகாயத்தை இடமில்லாமல் விமானத்தினாலும், மாலைகளினாலும் மறைத்துவிட்டார்கள் வீதிகளில் நீண்ட இலைகளையுடைய வாழைகளையும் - கமுகுகளையும் நிரைநிரையாகக் கட்டி அலங்காரஞ்செய்தார்கள் - மலையிலிருக்கிற புழுகைக் கரைத்துத் தரைகளெல்லா மெழுகினார்கள் -எ-று. (சரு)

தோரணஞ்சமைத்தார்முத்தின் றொங்கலெலாந்தொடுத்தார் வி
பூரணகும்பமவைத்தார் புதுமணிவிளக்குமிட்டார் (ண்ணிற்

ஆரணனுலகும்பொற்றை யணிகையுமமராவதி
நாரணனுலகுமவந்து காணவேநாணுமாறே.

(இ-ள்) தோரணங்கட்டினார்கள், அகில முத்துமாலைகளைத்தொங்கவிட்டார்கள் ஆகாயங்களைக்கொண்டுவந்து பூரணகும்பம்வைத்தார்கள். ரத்னமாகிய இரத்தினவிளக்குகள் ஏற்றினார்கள் பிரமலோகமும் அமராபுரியும்தேவலோகமும் வைகுந்தமும் இதைப்பார்த்து நாணும்படிச் சிங்காரித்தார்கள்-எ-று. (௬௬)

மணிவிளக்கனையபின்னை மலையாமகளிர்கூடிக்
கணிமலர்க்கன்னையாட்டிக் கலையினுண்மருங்கைக்கூட்டிப்
பணிமணியாரம்பூட்டிப் பரிமளத்தாமஞ்சூட்டி
யணிநுதற்றிலகந்தீட்டி யருமறைச்சடங்குசெய்தார்.

(இ-ள்) இரத்தினதீபம்போன்ற பார்வதியைமலையிலிருக்கிறபெண்கள்கூடிக் கற்பகமலர்வாசனைசேர்ந்த கனகாசலத்திலேலே ஸ்நானஞ் செய்வித்து இடுப்புத்துவளும்படிச்சேலைகட்டி ஆபரணங்களுடன், முத்துமாலையும்பூட்டிப் பரிமளம்பொருந்திய நறுமலர் மாலைசூட்டி அழகிய நெற்றியிலே திலகம்பொட்டிட்டு வேதவிதிப்படிச் சடங்குசெய்தார்கள்-எ-று. (௬௭)

பூடணைக்கோலஞ்செய்த பொடியணிபுனிதனாரைத்
தாமணக்கோலஞ்செய்யச் சதுர்முகன்முதலோரெண்ணித்
தூமணித்துகிலசைத்துச் சுரதருமாலைசாத்தி
மாமணிப்பணியைநீக்கி மாமணிப்பணிகள்பூட்டி.

(இ-ள்) வாசனைபொருந்திய புஷ்பபாணங்களை எய்தமாரனைநெற்றிக்கண்ணாலெரித்து அப்பஸ்மத்தைப்பூசிய சுத்தராகிய பரமசிவனை மணக்கோலஞ்செய்யும்படியாகப் பிரமா முதலானவர்கள்கூடிப் பரிசுத்தமாகிய இரத்தினமயமாகிய வஸ்திரஞ்சாத்திக் கற்பகப்பூமாலைதரித்து முன்னேயிருந்த சர்ப்பாபரணத்தைக்கழற்றிப்போட்டு மாணிக்கரத்தினங்களாகிய ஆபரணங்களைத்தரித்தார்கள்-எ-று. (௬௮)

சடையிளம்பிறையைத்தங்க ளிறையெனத்தகைந்துசூழ்ந்த
உடுகுலமெனமுத்தா லொளிவிடுமகுடஞ்சூட்டி
அடைவுடன்விழியாந்திங்க ளாதவராகியின்மீது
குடியிருந்தனபோற்செய்ய குண்டலமிரண்டுஞ்சாத்தி.

(இ-ள்) சுவாமியினுடைய சடையிலேதரித்த பிறையைப்பார்த்துத் தம்முடைய புருஷனென்று சுற்றிக்கொண்ட நட்சத்திரக்கூட்டங்களைப்போல முத்துக்கள்பிரகாசியாநின்ற கிரீடஞ்சூடிப்பொருந்தியகண்களாயிருக்கிற சந்திரசூரியரிருவரும் காதினிடத்தில் குடியிருந்தாற்போல அழகாகிய இரண்டுகுண்டலங்களைச் சாத்தினார்கள்-எ-று. (௬௯)

வரம்பெறுந்திருமால்சாத்து மலர்விழிக்கரியசோதி
பரம்பியதனையச்சீலப் பருமணிச்சிலம்புசாத்தி
விருப்பியகோலஞ்செய்தா ரிறையுமால்விடையேறக்கொண்டார்
நமையாளொருங்கிதந்தண்ணீ ராருசழுங்காட்டினார்கள்.

(இ-ள்) விஷ்ணுவானவர் வரம்பெற்றுக் கொள்வதற்காகத் தம்முடைய கண்ணிலொன்றைப் பாதத்திற் சாத்தினார் அந்தக் கண்ணினது கருப்புச்சோதி காலைச்சுற்றிப்பரவினதுபோலே நீலமணிகளாலிழைத்த சிலம்பைத்தரித்தது சர்வதகிரோரும் விரும்பத்தகுந்த அலங்காரஞ்செய்தார்கள்-பரமசிவன் விஷ்ணுவே யுருவமாகிய ரிஷபத்திலேறினர் -அப்பொழுது அரம்பாஸ்திரீகள் மஞ்சளாலத்தி யெடுத்தார்கள்-எ-று.

குலவுமாலனுகிப்போற்றக் குமுதவாய்மலர்ந்தான்கஞ்ச
மலரினானவணங்கச்சற்றே மணிமுடியசைத்தான்விண்ணோர்
தலைவனெதிர்நின்றேத்தத் தனிநகைபுரிந்தான்றேவர்
பலருமவ்ந்திறைஞ்சியேத்த வவர்க்கெலாமபார்வையீந்தான்.

(இ-ள்) விஷ்ணுவானவர் சுவாமியின்முன்னேவந்து வணங்கச் செவ்வாம்பற்பூப்போலுந் திருவாய்மலர்ந்து வாருமென்றார் - தாமரைப்பூவிலிருக்கிற பிரமாவந்து நமஸ்கரிக்கச்சற்றே இரத்தின கிரீடமிழைத்த திருமுடியையசைத்தார் - தேவேந்திரன் வந்தனஞ்செய்யப் புன்சிரிப்புகொண்டார்-மற்ற தேவர்களெல்லாரும் வந்துவணங்கக்கிருபைக் கண்ணினாலே பார்த்தருளினார்-எ-று. (௭௧)

கலித்துறை.

முடித்தகங்கையாம்பிறைக்கொழுந்தொடுமேன்முளைத்து
வெடித்தநாமெனத் தவளவெண்கவிகைமேல்விளங்க
வடித்தசாமரையிணையிமையார்புனைகொழுந்துந்
தொடுத்துவீழுமாறெனவிருகவரிகளசைக.

(இ-ள்) சடையிலேயிருக்கிற கங்காசலத்தினால் பிறையானது கொழுந்துவிட்டு அரும்பாகிப்புஷ்பித்ததென்றுசொல்லும்படியாக வெள்ளைக்குடைபிடிக்கவும், அலையடிக்கிற கங்கையினருவிபோல், சந்திரனுமசேர்ந்துவிழுந்ததுபோலும் இரண்டுசாமரம்வீசவும்-எ-று. (௭௨)

திருவினுபகண்டப்பைகொண்டொருபுறஞ்சேரத்
தருவினாயகன்களாஞ்சிகொண்டொருபுறஞ்சார
விரவிநான்முகனலவட்டங்கொடுவீசப்
பரவிநாரதர் தும்புருவிருபுறம்பாட.

(இ-ள்) லட்சுமிகாந்தராகிய விஷ்ணு பக்கத்திலே முதலான வெற்றிலையைத்தருகிற அடப்பையெடுத்துக்கொண்டு ஒருபக்கமாகவும், கற்பகத்தருவிற்கு நாதனாகிய தேவேந்திரன் படிக்கமெடுத்துக்கொண்டுவரவும், பிரமாசமீபத்தில்நின்று ஆலவட்டம்வீசவும், தும்புரு நாரதரிரண்டுபேரும் வந்தனஞ்செய்து இருபுறத்திலும் நின்று சங்கீதம்பாடவும்-எ-று. (௭௩)

கூற்றுதைத்தவன்கணசபர்துணைகொடுதுகக்
காற்றுவேந்தனுந் திசையெலாநறும்புகைகாட்ட
வேற்றுவாசனக்கடவுளுஞ்சிறியவாளேப்பத்
தேற்றுநாதவர்க்கலமதிவிசக்கொடுத்தூழ.

(இ-ள்) யமராசனானவன் தன்னத்தினாற்செய்திருக்கிற பாதக்குறடுகளைகையாலெடுத்துக்கொண்டு வரவும், வாயுபகவான் திசைகளெட்டிலுஞ் அகிற்புகை, சாம்பிராணிப்புகை; காண்பிக்கவும், ரிஷபத்திலேறுகிற ஈசானன் உடைவாளெடுத்துக்கொண்டுவரவும், சூரியனாதிகளும் சந்திராதிகளும் விளக்கெடுத்துக்கொண்டுவரவும்-எ-று. ()

சுரமடந்தையர் துகிலின்மஞ்சிகைபலசுமப்ப
வரவமங்கையர் நவமணிப் பணிசுமந்தணுகப்
பரவுகின்னரர் முதலினோர் வீணைபார்ப்பரிக்கப்
பொருவிலான்மறை நடந்திறைதலைமையைப்புகழ.

(இ-ள்) தேவகன்னியர் அநேகவஸ்திரங்களைத்திருக்கிற பெட்டிகளைத்தூக்கிக்கொண்டுவரவும், நாகலோகப்பெண்கள் நவமணிகளிழைத்திருக்கிற ஆபரணங்களைச்சுமந்துகொண்டுவரவும், கின்னரகிம்புருடர் வீணைவாத்தியஞ்செய்யவும், நான்குவேதங்களுஞ்சமீபித்துச்சுவாமியெல்லாருக்கும் பெரியவரென்று புகழ்ந்துமுறையிடவும்-எ-று. ()

கிரகமேழுமெண்வசுக்களுமுனிவருங்கிளா
வுரகாவிஞ்சையரிமையவர்மகிழ்ந்துகண்டுருக
விருகரங்களாலுருத்திரர்மலர்மழையிறைப்பத்
திருவும்வெண்கலைமடந்தையுமிமசலந்தெளிப்ப.

(இ-ள்) சந்திரசூரியரிருவருந்தவிர மற்றவேழுகிரகங்களும், அஷ்டவசுக்களும், முனிவீசுரர்களும் களிகூர்ந்துவர நாகலோகத்தார் வித்தியாதரர்கள் தேவர்கள்பார்த்துச்சந்தோஷத்தையடைந்து உருக ஏகாதசருத்திரர்களும் இரண்டுகைகளாலும் புஷ்பங்களைவருஷமாகவிறைக்க-இலட்சுமியும், சரஸ்வதியும், பனிநீர்தெளிக்கவும்-எ-று. (௭௪)

திக்குப்பாலகர் தெரிவையர்திசைதொறுந்திகழ
மிக்கமாதர்களெழுவருஞ்சோபனமிளம்ப
விக்குநேர்மொழிநாமகளிர்வாழ்த்தெடுப்பத்
தக்கவிஞ்சையாமகளிர்பல்லாண்டிசைவழங்க.

(இ-ள்) திக்குப்பாலகருடைய தேவிகள் அவரவர்கள் திசைகளினின்றுசேவிக்கவும் சத்தமாதர்கள் சோபனம்பாடவும் கருப்பஞ்சாறுபோல்மாதுரியம்பொருந்தியவார்த்தைகளுடைய நிராமகளிர்வாழ்த்துச்சொல்லவும், தகுந்தவித்தியாதரமாதர்கள் பல்லாண்டுகூறவும்-எ-று.

கண்டைபேரிகை குடமுழகாகளந்துவைப்ப
வுண்டமல்லரி சல்லரிவலம்புரியொலிப்ப
வண்டகோளகை மடந்தையர்சிலம்பொலியதிர்ப்ப
வெண்டிசாமுகந் தனிலுமெம்பிரம்பொலியிசைப்ப;

(இ-ள்) பெரியமணியோசையும், பேரிகை-குடவாத்தியம்-மத்தளவாத்தியம்-காகளம்-சப்திக்கவும், மல்லரி-சல்லரி-சங்கங்கள்கோஷிக்கவும், தேவப்பெண்கள் காலின்சிலம்புகலீரென்று சப்திக்கவும் எட்டுத்திக்கிலும் நந்திகேசுரரானவர்வருகிறகூட்டங்களைவிலக்க அடிக்கிற பிரம்பினதுசப்தம் பிரகாசிக்கவும்-எ-று. (௭அ

எண்ணும்வெள்ளியாம் வரையடியிறங்கியதிடப
மண்ணல்சேனையின் கொழுந்திய கிரிதலமடைந்த
விண்ணுமண்ணுமெள்ளிடமறநெருங்கியவிமானம்
மண்ணுமால்விடைநெறிகடந்தடைந்ததுபதியே.

(இ-ள்) யாவராலுந்தோத்திரஞ்செய்யப்பட்ட கைலாயகிரியடிவாரத்தில் ரிஷபவாகனமிறங்கியதுசுவாமியினுடைய சேனையின் முன்னணி இமையபர்வதத்தை யடைந்தது-ஆகாயமும்பூமியும் எள்ளிட இடமில்லாமல் விமானங்கள்நெருங்கியதுகள் அலங்கரித்திருக்கின்ற விஷ்ணுவாகிய ரிஷபம்சுவாமியைத் தாங்கிக்கொண்டு வழிமுழுதுங் கடந்து இமயபர்வதராசன் பட்டணத்தில்வந்துசேர்ந்தது-எ-று. ()

இமயகிரிப்பதியடைந்ததும்இமகிரிமடவார்
விமலனார்திருவழகெலாம்விழிகளானிரைத்தா
ருமைதவத்தினுக்கழிவிலையெனப்புகழ்ந்துரைத்தா
ரமர்செய்காமனையழித்தகண்ணெனுவெனவுரைத்தார்.

(இ-ள்) அப்படியேசிவன் இமயபர்வதத்திலே எழுந்தருளினபோது அந்தமலையிலிருக்கின்றபெண்கள் சுவாமியின் அழகைப் பார்த்துப் பார்வதிசெய்ததவசுக்கு ஒருகுறைவுமில்லாமல்பலன்சித்தியாச்சுது என்றார்கள்- அவர்களில்சிலர் யுத்தத்துக்குவந்தமன்மதனையெரித்தகண் ணெதுவோ அந்தக்குரூரமானகண்ணைப் பார்ப்போமென்றார்கள்-எ-று.

ஆகமாரணிந்திருக்கவுமுலகெலாமயர்ந்த
போகமீந்திவரிரக்கையான் மாரனுடலொழித்துப்
போகமீதிவாவிரம்புறவுபிரசகலவுபுணர்ந்த
மோகமாக்கிமுதலவரெனச்சிலர்மொழிந்தார்.

(இ-ள்) மன்மதன்தேகத்தோடேயுடையவனாயிருந்தபோது இவர்யோகத்திலேயிருந்ததினாலே உலகத்திலுள்ள சனங்களெல்லாம் விசாரமில்லாமல் அசந்துகிடந்தார்கள் மன்மதன் தேகம்போயும்இவர்போகத்திலேவிருப்பம் உண்டானபடியினாலே சகலருக்கும் போகத்திலாசையுண்டாச்சுது-ஆனபடியினாலே மோகத்தையுண்டாக்குகிறவர் இந்தசிவனேயன்றி வேறொருவருமில்லை யென்று ஸ்திரீசனங்கள் சிலர்சொன்னார்கள்-எ-று (அக)

மாயவிற்கைவேளழகினுமெழில்மிகுவடிவி
லாயிரத்திலொன்றிலையெனத்தனைமதித்தவனைத்
தீயிடத்துடல்கொளுத்திய தவத்தினன்றிறமே
யாயுமுத்தமராழிப்பரோவெனச்சிலரறைந்தார்.

(இ-ள்) மாயஞ்செய்யுமின்றகரும்புவில்லைக்கையிற் றரித்திருக்கின்ற மன்மதன் அழகு இந்தசுவாமியினுடையவடிவமாகிய அழகில் ஆயிரத்திலொருபங்குகாணாது-அதனாலே அவனையிகழ்ந்து தன்னைமதித்துத்தீயினாலேஅவனைக்கொளுத்திப்போட்டது-தபோபலமையினாலேயே ஆராய்ந்தெடுக்கத்தகுந்த உத்தமர்கள்- ஆனால் அப்படிச்செய்வார்களோவென்றுசிலமாதர்கள்சொன்னார்கள் எ-று. (அஉ)

மாதுலன்பெருங்கிளைஞருக்குறாதிரளும்
காதலன்பினொடிவெதிராதமூவினாகலந்தா

ராதியந்தமுமதனிலை யளவிடவரியோன்
வேதியன்கரம்பிடித்தினி திழிந்தனன் விடைமுன்

(இ-ள்) ராஜனாகிய இமவற்பர்வதராஜன் சுற்றத்தார்முதலிய சேனைகளுடையருமாகிய பரமசிவனுடைய சேனைசமூகமுமிகுந்த ஆசையோடு கூடினவர்களாய் எதிரெதிராவந்து ஒருவர்க்கொருவராகத் தழுவிக்கொண்டார்கள் முதலுமீறுமில்லாத அளவிடப்படாதசிவனானவர் பிரமாவின் கையைப் பிடித்துக்கொண்டு ரிஷபவாகனத்தில் நின்று இறங்கினார்-எ-று. (௮௩)

இலகுமங்கையரனேகர் நீராஞ்சனமெடுப்ப
வுலகபாலகரிருமருங்கினுநடந்தேகத்
திலகமாதவனிருகைமேலொருகரஞ்சேர்த்திட்
டலகிலாமணி யிழைத்ததோர்மண்டபத்தணைந்தார்

(இ-ள்) இப்படி சுவாமியானவர் ரிஷபவாகனம் விட்டு இறங்கினவுடனே அழகுபொருந்திய அனேகம் பெண்கள் ஆலாத்தியெடுக்கவும் அஷ்டதிக்குபாலகரெட்டுப்பேரும் சுவாமியினிருபுறத்திலும் நடந்தேகவும் எல்லாருக்குந் திலகமாகிய விஷ்ணுவினுடைய இரண்டுகைமேலும் தம்முடைய ஒருகையைச்சேர்த்துக் கணக்கில்லாத ரத்தினங்களாலிழைக்கப்பட்டிருக்கிற மண்டபத்தில் வந்துசேர்ந்தார்கள்-எ-று. (௮௪)

அரியமண்டபத்தமைத்த பீடிகையின்மீதமைந்தார்
வரையிடைப்பிறந்தமைவளர்முலைசொலவருவார்
குருமலர்க்கையி லேந்திவந்தருள்குடியிருக்கும்
திருமுகத்தினை யிறையவன்வலப்புறஞ்சேர்த்தார்.

(இ-ள்) சுவாமி அருமையாகிய அந்தமண்டபத்தில் இட்டிருக்கிற ஆசனத்திலெழுந்தருளினார்-ஸ்தனங்கள்மலைபோலே யிருப்பதினாலே அந்தஸ்தனங்களே இவர்கள்மலையிலே பிறந்தார்களென்று காண்பிக்குபடியாக வருகிற மாதர்களுடைய நிறம்பொருந்திய புஷ்பம்போலும் கைகளிலேந்திக்கொண்டு கிருபையே குடியாகவிருக்கின்ற அழகியமுகத்தையுடையபார்வதியைச்சிவனுடையவலப்புறத்திலேகூட்டாரவைத்தார்கள்-எ-று. (௮௫)

முன்னையாரணன் மறையின்சடங்கெலாமுடித்து
வன்னிமேற்பொரி யிறைத்தநெய்சொரிந்தமந்திரத்தா
லென்னையாளுடை யிறைவனுமேழுலகீன்ற
கன்னிசெங்கரம்பிடித்துவலஞ்செய்தான்கனலை.

(இ-ள்) இந்தப்பிரகாரம் சுவாமியும் அம்மனும் கலியாணமண்டபத்திலெழுந்தருளியிருக்க அந்தவேளையில் பிரமாவானவர் கலியாணச்சடங்கைவிதிப்படிமுடிக்க என்னையாட்கொண்ட பரமசிவனானவர் அக்கினியிற்பொரியிறைத்து நெய்யாகுதிபண்ணி முன்னமே ஏழுலகத்தையும்பெற்ற அம்மன் கையைப்பிடித்து அக்கினியை மூன்றுதரம்வலமாகச்சுற்றிவந்தார்-எ-று. (௮௬)

ஒற்றைவால்வளையொலித்தது சுருதியுமொலித்த
சுறவுய்வானவ ரிருடியர்மலர்மழைசொரிந்தார்

பற்றிய சனத்திருந்தன னனைவரும்பணிந்தார்
பெற்றதாதையோடன்னையைப் பணிந்தனன்பெருமை.

(இ-ள்)வெண்மைபொருந்திய சங்கமுழங்கவும், நான்குவேதங்களும சப்திக்கவும், நான்குபுறமும் சுற்றிக்கொண்டு தேவர்களும் ரிஷிகளும் புஷ்பமாரியைப் பொழியவும், சுவாமி ஒரு ஆசனத்தில் எழுந்தருளினார்- அப்போது சர்வதேவர்களும் வந்தனஞ்செய்தார் பார்வதியானவள் அவள் தாயையுந் தகப்பனையும்வணங்கினாள்-எ-று.

எரித்தகாமனைத் தருதியென்றிமையவரயன்மா
லொருத்தரின்றியே யிறையவன் மகிழ்ச்சிகண்டுரைத்தார்
மரித்தகாமனையழைத்தருள் புரிந்தனன்வள்ளல்
பெருத்தவன்பினலனைவரும விடைகொடுபெயர்ந்தார்.

(இ-ள்)தேவர்களும் பிரமாவும் விஷ்ணுவும் மற்றசகலதேவர்களும் சுவாமி எல்லாரிடத்திலுமவைத்தபிரியத்தைப்பார்த்துச் சுவாமீநீர்முன்னே எரித்த மன்மதனைஎழுப்பித்தரவேண்டுமென்று கேட்டார்கள். அப்படியே இறந்துபோன மன்மதனை வரவழைத்துக்கொடுத்துக் கிருபைசெய்தார- பரமசிவன்-பின்பு யாவரும் விடைபெற்றுக்கொண்டு போனார்கள்-எ-று. (௮௮)

அதற்பினன்னு லுங கவுரியுமுருகியொன்றுகி
மதத்தவானனையகுமாரனைபயந்தனாமகிழ்வாய்
விதித்தவேலினைகுமாரனுக்களித்திறையடுத்தான்
கொதித்ததாருகனுயிர்குடித்துவந்தனன்குமரன்.

(இ-ள்)அப்படியேதிருக்கலியாணம் நடந்தபின்புசுவாமியும் அம்மனுமிருந்த அன்புகொண்டு ஓருருவமாகிசசேர்ந்து வலிமைபொருந்திய யானைமுகத்தையுடைய விக்கினேசுவரரையும சுப்பிரமணியரையும் பெற்றார்கள்-அதன்பின்புசுவாமியானவர் சுப்பிரமணியருக்கு ஒருவேலாயுதத்தைத அருளிச்செய்தனுப்பினார்கள அவர்போய் அந்தத் தாருகாசூரனை வேலாயுதத்தால் விட்டெறிந்து கொன்று சந்தோஷத்தையடைந்தார்குமாரசுவாமி-எ-று. (௮௯)

மயிலெனத்திகழ் மலைமகள்பொருகரிவதன
னயிலெடுத்தசெங்காரனுடனிமையவெற்பகன்று
கயிலைவெற்பில்வந்திமையவர் முனிவர்கண்களிக்க
வெயிலுடைப்புரமெரித்தவனிருந்தனனப்பால்.

(இ-ள்)மயில்போல்விளங்காநின்ற பருவதராஜன்மகளாகிய பார்வதி யானைமுகத்தையுடைய பிள்ளையார், வேலாயுதத்தைத்தரித்த சுப்பிரமணியருடன் இமயகிரியைவிட்டு நீங்கி, தேவர்கள் முனிவர்களுடைய கண்களிக்குங்கைலாயத்தில் எழுந்தருளியிருந்தார்-முப்புரத்தை எரித்தவராகிய பரமசிவன்- அதன்பின்பு-எ-று. (௯௰)

மூன்றாவது- திருவவதாரச்சருக்க-முற்றிற்று.
ஆகதிரு ... ௩௰-உ௱௪

உ

சிவமயம்.

நான்காவது

திருக்கண்புதைத்தசருக்கம்.

அறுசீரடி யாசிரியவிருத்தம்.

மின்னனையமுகிறவழு மிமகிரியின் றபோபலத்தான் மேனைப, ணவன்னையிடத்தென்னன்னையவதரித்தகதை சிறிதேயறைந்தேனிப், பால், பொன்னனைய சடையிறைவன திருநயனமிருகரத்தாற் புதைத்தவாறும், தென்னருணைமாநகரி லன்னவினை தீர்த்ததுவுஞ் செப்பலுற்றேன்.

(இ-ள்) மின்னல்பொருந்திய மேகங்கள்தவழ்ந்து போகாநின்ற இமவற்பருவதத்தின் தபோபலத்தினாலே மேனாதேவியிடமாக என்றாயாகிய பார்வதி அவதரித்த கதையில் கொஞ்சந்தான் சொன்னேன் அந்தப் பார்வதி பொன்போலும சடையுடையசிவனது அழகியகண்களை இரண்டுகைகளினாற் பொத்தியதும அதனால் வரும்வினையைத் தென்றிசைக்கண்ணிருக்கிற அருணாசலத்தில் அம்மைபூசைசெய்துதீர்த்ததும சொல்லத்தொடங்கினேன்-எ-று. (க)

அறுசீரடி ஆசிரியவிருத்தம்-வேற்றுவண்ணம்.

ஊடுவர்புலவிதீர்ப்ப ரொருவருக்கொருவர்மாலை
கூடுவாமறைநூல்கேட்பர்சொல்லுவாவீணைநாதம்

பாரிவர்பலவிதேதம் பயிற்றுவர்பலகாறருத
மறுவர்வெல்லா தாற்ப மணிகலம்புனைவாரன்பால்.

(இ-ள்) சிவனும்பார்வதியும் பிணங்கிக்கொள்வார்கள் அதை மறுத்
டியும தீர்ந்துக்கொள்வார்கள் ஒருவருக்கொருவர் மாலைகளைச்சூடிக்
கொண்டு வேதசாஸ்திரங்களைத் தீதவர்கள் முனிவர்கள் சொல்லக்
கேட்டு, அதன்பொருளைச்சிலருக்குச்சொல்லியும், விளையாடிய
றைவாசித்தும் மற்றும் பலவிளையாட்டுகள் செய்தும், பலதரம் கூத
மாடியும், அதனால் வெற்றியையும் தோற்றதையு மடைந்தும் அழகிய
ஆபரணங்களைத் தரித்துக்கொண்டு மிருந்தார்கள்-எ-று. (உ)

இதுவுமது.

அந்தவேளையிலென்னன்னை யையனையிறைஞ்சியையா
விந்துவுமிரவிதானும் யாவரென்றிசைத்தாளெந்தை
சுந்தரக்கனிவாயின்னே சுடாகளெம்மிருகணென்றார்
கந்தனைப்பயந்தாளீசன் விழிகளைப்புதைத்தாள்கையால்.

(இ-ள்) அந்தச்சமயத்தில் என்தாயாகியபார்வதி சுவாமியை வணங்
கிறப சந்திரசூரியர்கள்யாவரென்றுகேட்க அதற்குச்சுவாமி அழகிய
கனிபோலும வாயையுடையபெண்ணே அந்த இருவரும் நமமுடைய
கண்களென்றுசொன்னார்-சுப்பிரமணியரைப்பெற்ற தாயானவள் வே
டிக்கையாகச் சுவாமியினுடைய கண்களை இரண்டுகைகளால்
மூடினள்-எ-று. (௩)

கலிவிருத்தம்.

ஈசனார்விழிபுதைத்தலு மிருட்பிழம் புருக்கிப்
பூசினலெனவிருண்டன திசைகளும்புவியு
மாசினீலமால்வரைபோலக்கருகியமலைகள்
காசுலாவிய நதியெலாம்யமுனைபோறகறுத்த.

(இ-ள்) பரமசிவனுடையகண்களைப் பார்வதி புதைத்தலும் இருட்
கூட்டத்தை யுருக்கசெய்து பூசினதுபோல் திக்குகளும பூமியுமிரு
ண்டதுகள்-மலைகளெல்லாங்குற்றமற்ற நீலகிரியைப்போல் கறுத்தது
கள் -மணிகள்பொருந்திய நதிகளெல்லாம யமுனாநதிபோல் கறுத்
ததுகள்-எ-று. (௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்-வேற்றுவண்ணம்.

மறையவனுநாரணனு முனிவர்களும் வசுக்களுநான் மறையும்வான
னோ, ரிறையவனும்விழியொளிபோய்ப் பிறவிதொறுங் குருடரெனவிரு
ந்தார்மற்றைக, கறவைகளைமுதல்விலங்கு பறவைகளு மொளியிழந்த
கண்ணதான, துறவறமும்பிறவறமுந் தொலைந்தன மற் றுளதொழிலு
ந்தொலைந்ததன்றே.

(இ-ள்) பிரமாவும், விஷ்ணுவும், முனிவர்களும், அஷ்டவசுக்களும்,
நான்குவேதங்களும்,தேவர்களும்; இந்திரனும், கண்ணினது பிரகாச
மற்றுப்பிறவிக்குருடர்போலிருந்தார்கள், பசு-களைமுதலிய மிருகங்க

ளும், பட்சிகளும் கண்ணொளியற்றதுகள்-துறவறமில்லறமிரண்டும் ஒழிந்ததுகள்-மற்றவெல்லாதொழில்களும் கெட்டதுகள்-எ-று. (௫)

கலிநிலைத்துறை.

தேவர்மானிடரிராக்கதர் நிறமெனத்திரிந்தார்,
கோவிந்திரன் வெண்கரிகருநிறங்கொண்ட
தாவிலம்புயன் கொடிகொடியானதவ்வளவின்
மூவாதேவனுக் களவறுமுறைசெப்புகின்றார்.

(இ-ள்) தேவர்களும் மனிதர்களும் இராட்சதர் நிறம்போலக் கறுத்தார் ஆகாயத்தில் இந்திரன்வாகனமாகிய வெள்ளையானை கரிபோலக் கறுத்தது, கெடுதலில்லாதபிரமாவின்கொடியாகிய அன்னம் காகம்போலக் கருகியது, அப்படி எல்லாப்பொருளுங்கறுத்து மயங்குகிறகாலத்தில் மும்மூர்த்திகட்கு முதலாகிய சிவனிடத்தில் எல்லோரும் போய்முறையிட்டுத் தங்கள்குறையைச் சொல்லிக்கொண்டார்கள்-எ-று. (௬)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அஞ்சலெனவமைத்தகரத் திறைவனுதல் விழிதிறந்தா னவனியேழும், துஞ்சமிருளகன்றது பன்னிருகோடி சூரியர்தந் தோற்றம்போல, வஞ்சியுமையிறைவன்விழிபுதைத்ததிருக்கரமலரைவாங்கினின்றாள், விஞ்சுமறையவர்வளர்க்கு கனல்போல விழிமூன்றும் விளங்கிற்றன்றே.

(இ-ள்) சிவன் பயம்வேண்டாமென்று கையமர்த்திப் பன்னிரண்டு கோடி சூரியருதயம்போலத் தபமுடைய நெற்றிக்கண்ணைத்திறக்க-ஏழுலகமும் அந்தகாரத்தை நீக்கியது, பார்வதியானவள் பொத்திய கையை வாங்கினின்றாள், பிராமணர்கள் வளர்க்கும் யாகாக்கினிபோல மூன்றுகண்களும் விளங்கியதுகள்-எ-று. (௭)

பார்புதைத்த திருவயிற்றாள் பணிந்துரைப்பாணெடுஞ்சூலப் படையாய்காவலன், மார்புதைத்தமலர்ப்பதத்தா யார்புதைத்த சடாடவியாயவையமேழும், கார்புதைத்தவிருளாக விழிபுதைத்தகொடும்பாவஞ் சூழுமாறு, சீர்புதைத்த பாரிடத்திற்றவம்புரிதற்கானவிடஞ் செப்புத்துமென்றாள்.

(இ-ள்) எல்லாச்சீவராசிகளையும் கருவாகவைத்துக்கொண்ட வயிற்றையுடையபார்வதி சுவாமியைப்பார்த்து நெடிய சூலத்தை யுடையவரே, இயமனைமார்பிலேயுதைத்த மலர்போன்ற பாதத்தை யுடையவரே, ஆத்திமாலையையணிந்த சடைக்காட்டினையுடையவரே, ஏழுலகமும் மேகநிறத்திலும் அதிகநிறமான இருட்டுண்டாக உமதுகண்களை மூடிய கொடியபாவமானது போகும்படியாகச் சமுத்திரஞ்சூழ்ந்தபூமியினிடத்தில் தவஞ்செய்வதற்கு நல்ல இடஞ்சொல்லுமென்றுகேட்டாள்-எ-று. (௮

ஈசனுமங்குரைத்தருள்வா னுனேவினேவந்தணுகாதே யெவ்விணு'ம் யார்க்கும், மாசகலும்படிக்கரியதவ புரிய விரும்பினேயேன் மதுரை மாயை, காசியவந்திதுவாரகை யயோத்தியினுஞ் சிறப்புடையகாஞ்சி மேவிப், பூசைபுரிந்தரியதவம் புரியென்முன் விடைகொண்டாள் புக ழுந்துபோற்றி.

(இ-ள்) அப்படிபார்வதிகேட்கச் சுவாமிபெண்ணே உன்னைப் ம்வந்து சேராதாயினும் மற்றவர்களுக்குப்பாவம நீக்கும் பொருட் தவஞ்செய்யஇச்சித்தாயாகில்மதுராபுரி- மாயாபுரி-காசி-அவந்தி-துவா ரகாபுரி-அயோத்தி, இவைகளுள் சிறந்தகாஞ்சீபுரத்திற்போய்ப் பூசை யுடன் அரியதவஞ் செய்யென்றுசொல்லச் சுவாமியைவணங்கித் திரு விடைபெறறுக்கொண்டாள்-எ-று. (௬௰)

விசையமகள்குடையெடுப்பசயமகள் பொன்னடப்பைகொடுவி ரைந்துமேவ, வசையுமணிக்கவரியிரண்டருந்ததியுங் கமலினியு மருகி ல்வீசத், திசையிளிலவெறிக்குந் தாளமணிச் சிவிகையின்மேற் சென்றபோது,நசைபெருகுமறமபெருகப் புனல்பெருகும புகழ்கங்கா நதிணயச்சேர்ந்தாள்.

(இ-ள்) பார்வதியானவள் வீரலட்சுமி குடைபிடிக்க, செயலட்சுமி பொன்னடப்பந்தாங்கிச சீக்கிரததில்வா, இரத்தினங்களிழைத்தசாம ரைகளால் அருந்ததியும இலட்சுமியும் இரண்டுபக்கங்களில் நின்றும் காற்றுகளைவீசஎலாலுதிசகளுஞசந்திரனைப்போலப் பிரகாசததைவீசும்முத் துப்பல்லாக்கின்மேலேறியாவரும் விரும்புகின்றஈரும் பெருகச்சல ம்பெருகுகின்ற கீர்த்தியினையுடையகஙகாதீரததநதில்வாதுசேர்ந்தாள என்றவாறு. (௰)

இறந்தவுயிரினிமீளப்பிறவாமலிறவாமலிறைவனுர்தன்,சிறந்ததிரு வுருவாகுந்திருககாசிததலமடைந்து சிவன்முள்போற்றி, வறந்தமழை கருகுழுந்தத் தலததவர்கள் பிழைக்கவறம் வளர்த்துப்பன்னுள், நு னந்தாடையினாசன்விடை கொண்டுசிறபத் தொண்டைவள நாட் டை சேர்ந்தாள்.

இ-ள்) இறந்துபோனஉயிரானது இனிதிரும்பப்பிறக்காமலும் இற க்காமலும்பரமசிவனுடைய திவ்வியசொருபமாகின்ற காசிப்பதியை சேர்ந்து விஸ்வேசருடைய பாதம்போற்றி மழையிலலாமல் வருந்தா நின்ற சீவராசிகள் பிழைக்கும்பொருட்டு அத்தலத்தில் தருமததைப் பலநாள்வளாததுத் தேன்பொருந்திய மாலையைத தரித்த அரதேசத் திராசன்விடைபெற்றுச்சிறகத தொண்டைமண்டலத்தைச் சேர்ந்தாள் பார்வதி-எ-று. (௰க)

மறைதவழுந்தலைப்பலவின்பழமதுவாய்விரிந்தாலுமகரவாழைப், பழமதுவாய்விரிந்தாலும்புதுமதுவாய்விரிந்தொழுகும் பழனநீங்கி,கு ழைபலவுடமாடும் விழிமாதர்நடமாடுங் குறிப்புநோக்கிப், பொழிலடை ணின் மடமயில்கணட மாடுந்திருக்காஞ்சிப்புரத்தைச்சேர்ந்தாள்.

(இ-ள்) மேகங்கள்தவழாநின்றதலையையுடைய பலாவினது பழங்கள் ரொயவிண்டாலும் மகரவாழையினுடைய பழங்கள் அவிழ்ந்தாலும், புதிய

தேன்பெருக்கெடுத்துவாய்க்கால்வழியாகஓடிவிழாநின்றகழனிகளைக்கடந்து குண்டலம்வரைக்குந்தாவுகின்றகண்களையுடையபெண்கள் நாட்டியஞ்செய்கின்ற குறிப்பைப்பார்த்துச்சோலைகளில் இளமையாகியமயில்களாநடனஞ்செய்கின்றகாஞ்சிபுரத்தலத்தைசசோநதான பார்வதி தன்றவாறு. (௯௨)

தாவாத்தையழிவாக்கிமணிநரையுள்ளறிவழிக்குந்தடங்கண்மாதர், பூாபுரத்தம்புயசரணஞ் சிவபபேறவிழைமருங்குனுடைகைவேறு, யாபுரத்தின்மணிமேடையாமனையாக்குவிளையாட மலைகளாகும், கோபுரத்தினெடுங்கொடிகள்காமவல்லியெனுங்கொடிக்குக கொழுகொம்பாகும்.

(இ-ள்) கல்லுகளையும்மாங்களையுமுருகச்செய்து மனிதர்களுடையவுள்ளறிவைக்கெடுக்கிற விசாலமாகியகண்களையுடைய பெண்கள் சிலம்பணிந்ததாமரைமலர்போலுமபாதஞ்சிவக்க நூல்போலு மிடையினையுமுடைய அப்பட்டணத்திலிருக்கின்றஇரத்தினமிழைத்த உப்பரிகைகளரம்பைமுதலாகியபெண்களுக்குவிளையாடுகிறதற்குமலைகளாகவிருக்கும், சிவாலயத்தினகோபுரத்திற்கட்டியிருக்கிற கொடிகள்கற்பக விருக்ஷத்திற்படர்ந்த காமவல்லியென்னும் கொடிக்குப் படருகிறதற்குக் கொழுகொம்பாயிருக்கும்-எ-று. (௯௩)

பாதநாடகமாடு மயில்போலுங்கயிற்று வழிப்பாவைபோலும், சுரதநாடகமாடுந்துடியிடையார்கணவருடன்றுவளும்போது, மரகதாதிகளுறுத்த விழ்த்தபணிமேடையினுமவாரிவீச, வாதனுக்கமானதனா முதலின்றளவுமாழிகானே

(இ-ள்) பரதநாட்டியமாடுகின்றமயிலுக்குச்சமானமாகவும் கயிற்றுவழியாகஆடுகிறசிங்காரமபொருத்தியபிரதமைபோலவுமசுரதவிளையாட்டைச்செய்கின்றஉடுக்கைபோன்றஇடையினையுடையபெண்கள புருஷாகளோடுபடுத்துப்புரளும்போதுமரகதமுதலிய இரத்தினாபரணங்களுறுத்தகோபித்து அவ்வுப்பரிகையில்நின்றுமெடுத்தெறிய அவ்வாபரணங்கள் சமுத்திரத்திலேவிழுந்ததினாலேதான் அதுரத்னாகரமென்கிறபெயர்பெற்றது-எ-று. (௯௪)

அனையமருங்ககன்றலஞ்சியொருமாவின்கீழிருக்கு மானைப்போற்றிக், கலைலனையவினைகளையுநடுக்குவிகக நடந்திருக் கம்பையேவிப், புனையமணல்குவித்திலிங்கவடிவாகியுமைபூசைபுரிந்தாளப்போ, தெனையுடையானவடவத்தினுருதிரினைந்தரியகம்பையேவினனே.

(இ-ள்) அத்தன்மையுடைய வீதியைக்கடந்து ஒப்பற்றமாவிருட்சத்தின்கீழ் எழுந்தருளியிருக்கும்ஏகாமபரநாதரைவணங்கி நெருப்பொத்தபாவங்களைகெடுக்கஓடிப்போகஉருகின்றகம்பைநதியருகேபோய் அலங்காரமாய் மணலைக்குவித்துஇலிங்கரூபமாகப்பார்வதி பூசைசெய்யும்போது எம்முடையசுவாமி அவள்தனத்தினுடையஉறுதியையறியககம்பையைப்பிரவாகமாகவரச்செய்தார்-எ-று. (௯௫)

பூதலமேற்குறுமுனிவன் குண்டிகையிற்கவிழ்ந்துவரும்பொன்னி தானோ, ஆதியிலேயந்தமுனியாசமித்தேயுமிழ்ந்தவலையாழிதானோ, வாத மறத்தவம்புரியுமபகீரதற்காச்சன்னுமுனி யிரக்கத்தாலே, காதின்வழி யொழுகவிடப்பாவியகங்காநதியோகம்பையாறு.

(இ-ள்) பூமியில்அகஸ்தியமுனிவர்கமண்டலங்கவிழ்ந்ததினாலே வந் ன்றகாவேரியோ அந்தமுனியானவர் ஆதிகாலையில் ஆசமனஞ்செய் மிழ்ந்தசமுத்திரத்தின் பெருக்கோகுறைமற்றதவஞ்செய்யும் பகீரதனுக் காகச்சன்னுமுனியானவர் இரக்கத்தினாலே காதின்வழியாகவிட்டப் பெ ருகவெடுத்துவந்தகங்காநதியோவென்றுசந்தேகப்பவிருந்ததுகம்பை நதி-எ-று.

அறுசீரடியாசிரியவிருத்தம்-வேற்றுவண்ணம்

மங்காநதியின்மணலிலிங்கமழியாதிருக்கும்வகையுமையாள்
வெங்காதலினாலணைபவள்போல்வெற்பாரிமையவெற்பாடன்
சங்கார்கரத்தாலிருதனத்தாலிறுகவிறுகத்தழுவுதலும்
கொங்கார்களபத்திருமார்புமுருகியுருகிக்குழைந்தாளே.

(இ-ள்) பார்வதியானவள் கெடாத கம்பையாறு பெருக்கெடுக்கும் போதுமணலாலேசெய்தலிங்கத்திற்கு அபாயமுண்டாகுமென்று பயந் துகாமங்கொண்ட ஆசையினாலே அணைகிறவள்போல் இமவற்பர்வதராச குமாரிவளையணிந்தகைகளாலும்,இரண்டுகொங்கைகளாலும், இறுக வியுகத்தழுவுதலும்வாசனைபொருந்தியசந்தனத்தையணிந்ததிருமார்பு உருகிக்குழைந்தாள்-எ-று. (௰௭

மனத்தானினைந்தபெருந்துயருமணக்கப்பிரிவுமுடன்றீரத்
தனத்தாலொருகிமுகபழுதநித்தலைப்பட்டபோலத்தழுவுதலு
மனத்தால்விளங்குமேகம்பைநதியருணாசலத்தையொருபொழுது
நினைத்தாவினைகளிரண்டுபோலிரண்டாயப்பகுத்துக்கங்கியதே!

(இ-ள்) தன்னுடையதவத்துக்குப்பங்கம்வாராமல் நினைத்திருந்ததுன் பமும், சுவாமிகூடாமற்பிரிந்ததுன்பமும், தீரும்படி ஸ்தனங்களிலேசெ ருக்கி முகமூழ்ந்திருந்ததுபோல அணைந்தவுடனே அன்னங்கள் சூழ்ந் த கம்பைநதியானது அருணாசலஸ்தலத்தை ஒருவேளை நினைத்தவர்களு டையநல்வினை தீவினைபோலிரண்டாகப்பிரிந்துவிலகினதைச்சற்றுப்போ னது-எ-று. (௰௮)

அறுசீரடியாசிரியவிருத்தம்-வேற்றுவண்ணம்.

விடுத்தனள்கரத்தைப்பாங்கர் விளங்கிழையுடனர்கள்சூழத்
தொடுத்தபூந்தொடையுஞ்சாந்து மணிந்தவள்தொழுதானந்த
வடுக்களானதுகேள்வன்மாமனத்தொடாணித
தடுத்திடுங்குறிகள்போலவிளங்கியதழும்பாயம்மா

(இ-ள்)பார்வதிசுவாமியைத்தழுவியகைகளைவிட்டாள் அருகில்பிரகா சிக்கின்ற ஆபரணத்தையுடைய அணைகம்பெண்கள் சூழ புஷ்ப மாலை யுஞ் சந்தனமுந்தரித்து வந்தனஞ்செய்தாள் பரமசிவன் ற கணை

லையுடைய அந்தஅம்மைதன்னுடையசுவாமிமார்பைமற்றப்பெண்கள் வெட்கத்தையடைந்து தொடாமலிருக்கும்படிதடுக்க வைத்த குறிகள் போல் தழும்புகள்விளங்கியதுகள்-எ-று. (மகூ)

அப்பொழுதானுமாற வடித்தழும்பிருக்குந்தோளு
முப்பொழுதிறைஞ்சுந்தேவர் முடித்தழும்பிருக்குந் தாளு
மைப்பொலிகுழலாள்கொங்கை வளைத்தழும்பிருக்குமார்பு
மெய்ப்பொலிநீறுமாகத் தோன்றினார்விடையின்மீது.

(இ-ள்) அந்தக்காலத்தில்பரமசிவனும்பாண்டியராசன் அடித்தழும் பிருந்ததிருத்தோள்களும், மூன்றுகாலத்திலும்வணங்குகின்ற தேவர் களுடையகிரீடங்களின் தழும்பிருந்ததிருவடிகளும மேகம்போல்விள ங்குங்கூந்தலையுடையபார்வதி முலைத்தழும்பும்,வளைத்தழும்பு மிருக்கின் றமார்பும் தேகத்திற்பொலிந்த திருநீறுமாய் ரிஷபவாகனத்தின் மேல் எழுந்தருளினார்-எ-று. (உ0)

அந்தரத்தமரரெல்லா மலர்மழைசொரியவானிற்
றுந்துபிமுழக்கத்தோடே சுருதிகண்முழங்காநின்ற
விந்திரன்றிருமாறேவ ரிறைவியைத்தொழுதுநின்றார்
சுந்தரக்கனிவாய்மின்னு மீசனைத்தொழுதுநின்றாள்.

(இ-ள்) ஆகாயத்தில் தேவர்களியாவரும் புஷ்பவருஷம் பொழிய தேவதுந்துபி முழக்கத்தோடு வேதங்கள் முழங்கா நின்றன தேவேந்திரனும், விஷ்ணுவும தேவர்களும், பார்வதியைத் தொ ழுதார்கள்-அழகுபொருந்திய கனிபோலும் வாயையுடைய அம்மனும் பரமசிவனை வணங்கினாள்-எ-று. (உக)

ஒண்ணுதல்விடைமுன்சென்று பணிந்துளமுருகிப்பூசை
பண்ணுதல்புகழ்தலாகிப் பணிந்தனளவளைநோக்கிக்
கண்ணுதலுனக்குவேண்டும் வரமெதுகழறுகென்றா
னெண்ணுதல்பிறிதொன்றில்லை யிடப்புறந்தருதியென்றாள்.

(இ-ள்) விளங்குகின்ற நெற்றியையுடைய அம்மன் ரிஷபவாசன த்தின் முன்பாகசசென்று நமஸ்கரித்து மனமுருகிப் பூசை செய்தலை மோல் புகழ்ந்து வணங்கினாள் சுவாமி அப்படிப்பட்ட பார்வதியைப் பார்த்து உனக்குவேண்டியவரம் எதுசொல்லென்றார்-அதற்குஅம்ம னும் வேறொன்றும் வேண்டியதில்லை உமதுஇடபாகத்தை அரு ளுமென்றுகேட்டாள்-எ-று. (உஉ)

அத்தனுமொழிவானென்கண் புதைத்ததாலடைந்ததீமை
இத்தலத்தினியபூசை யியற்றலாலகன்றதிந்த
மெய்த்தலந்தனக்குத்தென்பா லொருநகர்விளங்கித்தோன்று
முத்திமர்நகாந்தன்னை நினைத்தபேர்க்களிக்குமூதூர்.

(இ-ள்) அதற்குப்பரமசிவனருளிச்செய்வார், கண்களை மூடியதனு லே அடைந்த பாவம் இந்தஸ்தலத்தி லினிமையானபூசை செய்தலி

ஞுலேஙீங்கியது- இந்தமெய்மையானஸ்தலத்துக்குத்தென்பாரிசத்தில் ஒருநகரம்பிரகாசிக்கு மஃதுநினைத்தால் முத்தியுண்டாகும-எ று.

ஆரணன்றிருமாறேட வடிமுடியொளித்துஞானப்
பூரணவொளியாய்மேல்கீ மூலகெலாம்பொருந்திநிற்போம்
தாரணியவர்க்குமற்றைச் சயிலமாயிருப்போமங்கே
வாரணிமுலையாய்பாகந் தருகுவோம்வருதியென்றார்.

(இ-ள்.) பிரமாவும், விஷ்ணுவும்தேடப்பாதமும், சிரசும், அவர்களுக்குத தெரியாமலொளித்துப் பூரணமாகிய ஞானவொளியாகிய மேலகீழுலகங்களெல்லாம் ஒன்றாயநிறபோம்-பூமிகளிலிருப்போர்க்கு மலையுருவமாயிருப்போம-அவவிடததில்வந்தால் கசசணிந்த தனத்தையுடையபெண்ணே இடப்பாகத்தைததருமோம் வாவென்றார் பரமசிவன்-எ-று. (உச)

என்னலுமிறைவிசொல்வா ளினிமைசேர்கயிலைகாசி
தன்னிலுமினிதுகாஞ்சித தலமெனவுரைததீரிந்த
நன்னிலந்தனக்குச்சோணை நகரமேயதிகமென்றீர்
பின்னையுமுளதோவந்தத தலததினுக்கிணையாம்பேரூர்.

(இ-ள்.) பரமசிவன் அப்படிதிருவுளம்பற்றிய அளவில் பார்வதியம்மை சொலலுவாள்-இனிமைசேர்ந்த கைலாயம்காசி இவ்விரண்டுதலஙகளிலும இந்தககாஞ்சீபுரம் அதிகமென்று அருள்செய்தீர் அந்தலத்துககுச்சமானமாகிய பெருமைபொருந்தியஸ்தலம்வேறொன்றுண்டோவென்றாள் பாரவதியமமை-எ-று. (உரு)

அவ்வுரைமறுத்தெஙகோமானருூவானமக்கொப்பான
தெய்வமைந்தெழுத்துமானத் திருந்துமந்திரமுமில்லை
சைவமேயனையதான சமயமுமருணைபோல
வெவ்வினைதவிர்க்குமூருமிலையெனவிளம்பிப்போனார்.

(இ-ள்.) அப்படிபார்வதிசொன்னவார்த்தையைச்சுவாமியானவர்மறுத்து நமக்குச்சமானமாகியதெய்வமும் பஞசாக்ஷரததிற்கொப்பான மந்திரமும், சைவத்திற்குச்சரியானசமயமும், டொல்லாதபாவஙகளைத்தீர்க்கும் அருணசல ஸ்தலத்திற்குசசரியானஸ்தலமும், உலகத்தினில்லையென்றுதிருவாய்மலர்ந்துகைலாயத்திற்கெழுந்தருளினார்-எ-று. (உசா)

கொம்பனாள்பொறுப்பாயிதென் றிறைவனைக்குவித்துப்போற்றிக்
கம்பையாறகன்றுகாஞ்சித் தலததையுங்கடந்துவேலன்
தும்பிமாமுகத்தோன்கன்னி வயிரவர்கணங்களசூழச்
செம்பொனாள்கவரிவீசச சிவிகைமேற்சிறந்துசென்றாள்.

(இ-ள்.) புஷ்பக்கொம்பையொத்த பார்வதியானவள் சுவாமிநான்தெரியாமல்சொன்னவார்த்தையைப் பொறுத்துக்கொள்ளுமென்று இரண்டுகைகளையுங்குவிதது வணங்கிக் கம்பையாற்றைவிட்டுக் காஞ்சிபுரததையுங்கடந்து சுப்பிரமணியர்-கணபதி- சப்தகன்னிகள்- வயிரவர்-சிவகணங்களசூழவும், இலட்சுமி கவரிவீசவும், பல்லக்கி லெழுந்தருளினாள்-எ-று. (உஎ)

மண்மகண்மகிழப்பட்ட மரங்களுந்தழைத்துவீறிக்
கண்மலர்சொரியக்கல்லு மலைகளுங்கரைந்துசோர
வெண்மலர்மடவாள்போற்றக் காவதமிரண்டுநீங்கி
விண்மதிமுகத்தாண்மறைந்தோர் வெள்ளிடையருகிற்சேர்ந்தாள்

(இ-ள்.) பூமிதேவிக்குச் சந்தோஷமுண்டாகப் பட்டுப்போன மரங்களுந் தளிருண்டாகித் தழைத்துத் தேனோடும் புஷ்பங்களைச் சொரியப் பாறாங்கல்லுகளும் பெரியமலைகளுங் கரைந்துருக வெள்ளைத்தாமரைப்பூவில்வாசஞ்செய்யும் சரஸ்வதிதோத்திரஞ்செய்ய இரண்டுகாதவழிபோய்ச் சந்திரனையொத்த முகத்தையுடைய பார்வதிஒருவெளியிடத்திலிறங்கினாள்-எ-று. (௨௮)

வெய்யவனுமையாரென்று வினவுகாரணத்தானீலக்
கையவன்மரகதத்திற் கரியவள்கரமுங்காலுஞ்
செய்யவள்வருந்தினாளென்றறிந்துயிர்சிதைப்பான்போலப்
பையமேற்கடலிற்பாய்ந்தான்குமரவேள்பந்தல்செய்தான்.

(இ-ள்.) சூரியனானவன் தன்னையாரென்று பார்வதிகேட்டதனாலே நீலம்போன்றகையும், மரகதம்போன்றவடிவமும், தாமரைப்பூப்போன்ற உள்ளங்கையும், உள்ளங்காலும்பொருந்திய அம்மன்சாபத்தினால் வருந்தினாளென்றறிந்து தன்னுயிரைவிட்டுவிடுகிறவன்போல மெள்ளமெள்ளமேற்குச்சமுத்திரத்தில் விழுந்து அஸ்தமித்தான்-சுப்பிரமணியர்அம்மனிருக்கிறதற்காக ஒருபந்தல்போட்டுவைத்தார்-எ-று.

அந்தஸ்தலத்திற்கு வாழைப்பந்தலென்று இக்காலத்தில் வழங்கிவருகின்றது

அன்னையுங்குகனைநோக்கி யம்மையாற்பந்தல்செய்து
பன்னிருகரமுஞ்சால வருந்தினையெனப்பாராட்டிப்
பின்னுமோர்கருமஞ்சந்தி முடிப்பதற்கினியநன்னீர்
கைக்கிறைவேலையேவி யழைத்திடுகணத்திலென்றாள்

(இ-ள்.) அதன்பின்பு பார்வதியானவள் சுப்பிரமணியரைப்பார்த்து வாழைமரத்தினாலே பந்தல்போட்டுப் பன்னிரண்டுகைகளும் சிவக்கவருத்தத்தையடைந்தாயென்று பிரியவசனஞ்சொல்லி இன்னுமொர் வேலையிருக்கின்றது அதென்னவென்றால் சந்தியாவந்தனஞ்செய்கிறதற்கு நல்லபரிசுத்தமானஜலம்வேண்டும் உன்கையிற்பிடித்திருக்கிற வேலாயுதத்தையேவிஅழைப்பியென்றுசொன்னாள்-எ-று. (௩௰)

காதலாலிறைஞ்சிக்கந்த னேவினன்கைவேலவ்வேல்
போதவான் புத்திராண்டன்புகழ்புருகூதன்போதன்
வாதிபாண்டரங்கன்சோமன் வாமனென்பவரைவாட்டி
மீதிலேழ்கிரியைவீட்டிக்கொணர்ந்ததுவேலைநீத்தம்.

(இ-ள்.) அப்படிசொன்ன அளவில் அதிகமத்தியோடு சுப்பிரமணியர் வேலாயுததனையேவினர், அதுபோதவான் - புத்திரான்டன் - புருகூதன் - பேதன் - பாண்டரங்கன் - சோமன் - வாமன்னென்றுசொல்லப்பட்ட ஏழுபேரையும், அவர்களிருந்த ஏழுமலையையும், உருவில்லை தண்ணீர் கடலுக்குப்போய் ஜலங்கொண்டுவந்தது - எ - று. (௯௧)

அந்தநதிக்குச் சேயாறென்றுபெயர்.

கந்தவேலனழைத்தவாறிற கடனெலாங்கழித்துவாழைப்
பந்தலிலிருந்தாளப்போ துமைபதம்பணிந்தாற்றிற்
செந்நீர்சிவப்பதேதென் றுரைத்தலுஞ்சிறப்பதாக
வந்தவாறதனையாறுதிருமுகற்குரைப்பாள்வஞ்சி.

(இ-ள்.) சிவசுப்பிரமணியர் வரவழைத்த ஆற்றிலே தீர்த்தமெல்லாமுழுகித்துக்கொண்டுவாழைப்பந்தலிலிருந்தாள் அப்போது அம்மனை வணங்கி இந்தஆற்றுநீர் சிவப்பாயிருக்கவேண்டிய தென்னவென்றுகேட்க அந்தவிவரத்தைச்சிவசுப்பிரமணியருக்குச்சொல்லுகிறாள்பார்வதியானவள் - எ - று. (௯௨)

அனந்தமாபுரத்திலேழு மறையவரறியாக்காலத்
தனந்தமாவினைகள்செய்தா ரதன்பினல்லறிவுதோன்றி
யனந்தமாமெனவேயேழு மயன்பதங்கருதிப்பன்று
ளனந்தமாலமதாயுட்கொண் டருந்தவம்புரிந்தாரந்நாள்

(இ-ள்.) அனந்தமாபுரமென்கிறபட்டணத்தில்ஏழுபிராமணர்கள்அறியாதகாலத்தில் அனந்தவினைகளைச்செய்து அதன்பின்புவல்ல விவேகந்தோன்றி அதமமென்று அன்னத்தைத்தனக்குவாகனமாகக்கொண்டபிர்மாவைக்குறித்து இலைகளையே சோறாகஉண்டுபலகாலந்தவஞ்செய்தார்கள், அக்காலத்தில - எ - று. (௯௩)

பதுமனுமவர்முன்சென்று பாவிகாள்வனககளேழில்
விதிமுறைதவஞ்செய்வீரேற் குமாரவேள்விடுக்கும்வேலாற்
பொதிசடைமுடியுமுங்கள் வினைகளும்பொடியாமென்று
சதுர்முகனுமாதறுபபோனு னவருமத்தவமேசெய்தார்.

(இ-ள்.) பிர்மா அவ்வேழுபேர் முன்னேபோய்பாவிகளே நீங்களேழுபேரும்ஏழுமலைகளிலே விதிமுறையாகத் தவஞ்செய்வீர்களானால் அப்போதுஅம்மனுக்கு ஜலம்வேண்டியாநிமித்தியத்தால் சிவசுப்பிரமணியர்வேல்விடுவார் அதனாலே உங்கள்சடையோடுகூடிய சிரசுகளும்பாவங்களும் பொடியாகப்போமென்று சொல்லிவிட்டுப்போனார் அவர்களும் அப்படிப்ரகாரந்தவஞ்செய்தார்கள். (௯௪)

[வேறு.] எழுவரையுமதிலிருக்கு மெழுவரையும் பிளந்துநீயெறிக்தகூர்வே, லழியுநவருதிரமுடன் புனல்கலந்துசிவந்ததுகாணுனையாலே, வழுவிலையிந்நுனக்கென்ன வடிபணிந்து மகிழ்ந்திருந்தான் மலைமேற்பட்டா செழுமுனிவர்குருதியினாற்சிவந்ததுசேயாற்சிவந்ததுவேசெக்காவானமா.

(இ-ள்.) அவ்வேழுபேரையும் அவர்களிருக்குமலையேழையும் பிளக்கது உன்னுடையகூர்மைபொருந்திய வேலாயுதமானது அரனுல்கழிர்

தொழுகுகிற அவர்களுடைய இரத்தத்தோடு ஜலங்கலந்து சிவந்துபோய் விட்டது-உனக்கொரு குற்றமுமில்லையென்றுசொல்ல அம்மன் பாதத்தில் சுப்பிரமணியர்வணங்கிச சந்தோஷமாயிருந்த அளவில் மலையிலே தவஞ்செய்து கொண்டிருந்த முனிவர்களுடைய இரத்தத்தினால் சிவப்புநிறத்தையடைந்ததுபோலச்சிவந்ததுசெவ்வானம்-எ-று. (கூச)

வித்தகர்கண் புதைக்குமுனம் பரந்தவிருண்மறுவையிற குழ்வினை
போல, வத்தலத்திலுமையவளைப் பின்பிடித்தாலென்னப்பரந்த தங்
தகா,முத்தமிழ்யோசிழுகதவிப்பந்தலின்கீ ழிருப்பவென்றும்பரிட்ட,
நித்திலப்பந்தனாங்காயவிளங்கியது தாரகையானெருங்குமகானம்.

(இ-ள்.) சுவாமியினுடைய கண்களை முன்னேமூடின திருவேலஉலகமெல்லாம் பரவியவிருளானது ஒருவனுக்கு மறுமையிலவந்து பிடித்துக்கொள்ளுகிற பாவகன்மத்தைப்போல அந்தஸ்தலத்தில் பிறகுவந்து அம்மனைப்பிடித்ததுபோலிருந்தது பார்வதியோ ஒருவாழைபபந்தலின்கீழிருப்பாளென்று தேவர்கள்போட்டுவைத்தமுத்துப்பந்தலையொத்திருந்தது நட்சத்திரங்களால்நெருக்கப்பட்ட ஆகாயம்-எ-று. (கூரு)

மாலையெனுங் குமரியிருண் மகிடமுகமசற்றியந்தி வானச்சோரி,
கோலமுடன்படிகவியகங் கொண்டதுபோன்மதிசெழுந்துகுடபாற்செ
ன்று, தாலமணிமிடற்றிறைதன் விழிபுதைக்கவளைந்தவிருளினைத்து
நீங்கப், பாலமிசைவெடித்தெழுந்த விழியெனவேயெழுந்ததுசெம்பரி
தியானே.

(இ-ள்.) மாலைக்காலமென்கிற துர்க்கையானவள் இருட்டாகிய மகிடாசுரன்தலையையறுத்து அதனால்செவ்வானமென்றுசொல்லப்பட்ட இரத்தகோலத்தோடுபொருந்தியஸ்படிகலிங்கத்தைக்கைகொண்டதுபோலச் சந்திரனுதயமாகி மேற்குத்திக்கிலஸ்தமித்தது நீலகண்டராகிய பரமசிவனது இரண்டுநேத்திரங்களையும் அம்மன்புதைத்த அளவில் நான்கு திக்கும்பரவியஎல்லாவிருளும்போகும்படியாயவிழித்த அச்சுவாமியினது நெற்றிக்கண்போலச் செம்மைநிறம்பொருந்திய சூரியனகிழக்குத்திக்கில்உதயமானான்-எ-று. (கூசா)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கன்னிகையாஞ்சேயாற்றிற் காலைசந்திகடன்கழித்து, மங்கைகனக
'ச்சிவிகையின்மேன்மறையோலமிட வழிகொண்டாள், பங்கமலந்தீர வ
ழியடியார் கொடியவினையாம்பஞ்சமலைக், கனகிமலையாயவிளங்கியசி
ரண்ணாமலைகண்டுதொழுதாள்.

(இ-ள்.) பார்வதி கங்கைக்குச் சமானமாகிய சேயாறென்கிறநதியில் காலைக்கடனை முடித்துக்கொண்டு பொன்மயமாகிய பல்லக்கிலேறி வேதகோஷ்டமுழங்க நடந்து பகைப்படுத்து மும்மலங்களைத் தீர்க்கிற அடியார்களுடைய பாவமாகியபஞ்சமலைக்குநெருப்புமலையாய விளங்கிய திருவண்ணாமலையைப்பார்த்துச்சாஷ்டாங்கமாகச் சேவித்துக்கொண்டாள்-எ-று. (கூஅ)

அறுசீரடியாசிரியவிருத்தம்-வேற்றுவண்ணம்.

வென்றியிறைக்கவர்த்தபொருள்புகிர்த்திறைவியபியாடும்வேனிற்பர்

லைங் குன்றமெல்லாம்வெறியாடன் முல்லையெலாம்பொதுவர் மின்னார்
குரவையாடன், மன்றல்கமழ் நீந்நெய்தல் திருவிழாவெடுத்துக்கொண்டாடன்
மருதவேலி, மூன்றிலெலாஞ்சினச்சுறவு நான்னுணக்கிப்பணகைகாமுக்கீ
ராகைகானல்.

(இ-ள்.) கல்லணமயிலுலேபாலைநிலத்தார் வழிச்செல்வோரை அடித்துப்பறித்த பொருளைப்பங்கிட்டு அந்நிலத்திலிருக்கிற துர்க்கைக்குப் பலிபோடுவார்கள்; மலைகளையுடைய குறிஞ்சிநிலத்தில் இருப்பவர்கள் முருகனுக்கு வெறியாடுகிற பூசைபோடுவார்கள், முல்லைநிலத்திலே இடைச்சிகள் குரவைக்கூத்தாடுவார்கள், கற்பகமாலையைத்தரித்த தேவேந்திரனுக்கு மருதநிலத்தார் உச்சவஞ்செய்வார்கள், முற்றங்களில் சுறாமீன்களைக் காயப்போடாநின்ற கடலருகாகிய நெய்தனிலத்திலிருக்கிறவர்கள் வருணனுக்குத் திருவிழாச்செய்வார்கள்—எ-று. (௩௯)

சோதிபெறுகரகமறையவர்புசொரிகையினுற்றூய்மையாய
மாதனமெலாங்கலந்தமகிழ்ச்சியினும்பொன்கலந்துமருவுநீரால்
போதளிசனங்களைப்பெருகுதலான்மதுவுடையபொருநலேலே
சீதரனேதிநாதகத்திருந்திரூநறவிசைவெலாஞ்சிறந்ததன்றே.

(இ-ள்.) திருநதியானது ஒளிபொருந்தியதுதிக்கையையுடைய யானைகள் மழையசலத்தைப்பெருக்கி வருதலாலும், பரிசுத்தமாகியபெரிய பூமியெல்லாம்பரவிய சந்தோஷத்தினாலும், பொன்பொடிகளையுந் திரட்டிக்கொண்டு வருதலாலும், மஞ்சள்பொடிகளைப் பெருக்கினபடியாலும், சேற்றைத்துடைத்துமோதுதலினாலும், என்றுந்திக்குப்பொருள்கொண்டுசேலைவகையால்தானுடையந்தகமறையப்பாணங்களைச் சொரிதலாலும், தூய்மைபொருந்தியகோபிகாஸ்திரீகளைச் சேர்ந்திருக்கிறதினாலும், வைஷ்ணவர் உருகத்தகையசெய்கிறபடியினாலும், பதுவைவேறு அச்சரன்சாயுச்சியஞ்செய்தலாலும் விஷ்ணுவுக்குச்சமானமாகநாலுவேதங்களினுஞ்சிறந்தது-எ-று. (௪௰)

இதுமுதலாறுபாடல் வயற்சிறப்புக்கூறுகும்.

மேவுபுனல்பாய்த்தேர்முகக குளிர்ந்துமயிர்பொடிக்குதல்போல்விதந்திறமுறும்பு, காவிலுறைபசுங்கிளியின் சிறகெனவேபசந்து தொண்டைக்கியாயமுற்றி, கூவுகிறவாரணத்தினிதம்போலவிரிந்தெழுந்து குறையிலசாலி, பாவையுமைதவம்புரியுந்தலமிதெனப்பணிந்துவபோற படிந்தனவே.

(இ-ள்.) அந்தத்திருநதியின்கண்த நீர்பாந்துழுகிறபடியினாலேகுளிர்ந்த பூமிதேவியினுடைய தேகத்தின்மயிர்க்குச்செறிந்ததுபோல குறைவில்லாத நெற்பயிர்களுண்டாகத் தோப்புகளின்வாசஞ்செய்கிறபச்சைக்கிளிகளின் சிறகுபோல பச்சைநிறத்தையடைந்து தொண்டைக்கதிராய் முற்றிக்கூவுகின்ற கோழிக்கழுத்தைப்போலவிரிந்து பார்வதிதேவி தவஞ்செய்கிறதலம் இதுவென்று வணங்கினதுபோல வளைந்து கிடக்கின்றன-எ-று. (௪௧)

சந்ததமுமேருமுவர்பதம் பார்த்தன் கரிந்தவரிசமைத்துவாரி, இந்திரன் ஞுருவகிரெனுடுபோர்செய்வானென்மூட்டையாமென்னப்போரச்சு, தந்த

மேகசூற்றிராவிபுரவிகள்போற் கடாவிடுகதேயாற்றித்தூற்றி, மந்தரமாமெ
னகருவித்து வழங்குகினும் தொலையாநென மருதவேலி.

(இ-ள.) எப்பொழுதும் உழுவோர்கள பதம்பார்த்து அறுத்துஅரிக
ளைச்சுமையாகவாரித தேவேந்திரனுலகத்தோடுசண்டைசெய்ய வருந்த
மலையென்று சொல்லும்படியாகப்போர்போட்டுஆகாயவழியாகவருகிற
சூரியனுடைய குதிரைகள்போலும்,கடாக்களைவிட்டுஅடிததுவைககோ
லின்தூற்றி மந்தரகிரிபோலக்குவியல்செய்து சருவமனிதர்களுக்கு
ங்கொடுத்தாலும் நெல்குறையாது மருதநிலததில்-எ-று. (சஉ)

கயலினமென்றுழத்தியர்தங் கண்ணிழலைக்கண்டுகருவகயல்வந்தே
றும், அயலிலவர்கொடும்புருவநிழலினைக்கண்டேசிலையெனறஞ்சிமீளும்
யலுநவுமாவதனந்தாமரைப்போதெனமருவி வண்டுசேரும், இயலும
வாநாசிநிழல் சண்பகப்போதெனவெருவியிரியல்போகும்.

(இ-ள)வயலிற்களையெடுக்கிற பள்ளத்திகளுடைய கண்ணிழலைக்க
ண்டு சேற்கெண்டைகள் நமயினமென்றுவந்துசேரும், பின்பு அருகில
அவர்களுடைய புருவநிழலைப்பார்தது வில்லென்றுபயப்பட்டோடும்அ
சையைக்கொடுக்கிற அவர்களுடையமுகத்தைத்தாமரைப்பூவென்று நி
னைத்துவண்டுகள்வந்துசேரும்-அதன்பின்பு அவர்களுடைய நாசியினி
ழலைப்பார்த்துச் சண்பகப்பூவென்று ஓடிப்போகும்-எ-று. (சங)

பெரும்பழனத்துழத்தியர்தஙகணைககாலை வராலெனப்போய்ப்பி
டித்துப்பள்ளர், திருமபவுமங்கவர்புறவகால் கமடமெனப்பிடி மருகத
திணைகடோறும், குரும்பையெனுமுலைச்சியர்கண்முகததினுக்கும் விழி
யினுக்குங்கூஞ்தோமென்று சுரும்பினுடன்கலுழவன போற்றுமரை
யுங் குவளையுந்தேன் சொரியுமாதோ.

(இ-ள.)பெரியவயல்களிற களையெடுக்கிற பள்ளத்திகளுடையகணை
க்காலை வரால்மீனென்று பள்ளர்பிடிதது வெட்கதலையடைந்துமறுபடி
யும அந்தப்பெண்களுடைய புறங்காலையாமையென்றுபிடிககு மருதநி
லந்தோறுமதென்னங்குரும்பைபோன்றமுலைகளையுடைய பெண்களது
முகத்திற்கும், கண்ணுக்குந்தோற்றுப்போனோமென்று வண்டுடனே
சொல்லியழுகிறதுபோல்தாமரைப்பூவும,நீலோற்பலமும்,தேனைச்சொ
ரியும்-எ-று. (சச)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கிழலையுஞ்சுளிக்குமேதி நெடும்புனல்குடையவன்ன
மழலைவண்டானத்தோடு மருதவண்டானத்தோடு
மழலவிரமணிப்பூண்பள்ள ரரிகிணைக்கியைய லூதுங்
குழலிசையறுகான்மாதர் குழலிசையறுகாற்கூட்டம்.

(இ-ள.) எருமைகிரிலேபோய் விழுந்துகலக்க அன்னம் இளமையா
கிய நாரையுடனே மருதநிலததில் வளம்பொருந்திய தானத்தையுடைய
சோலையில்ஓடும் பிரகாசம்பொருந்திய இரத்தினாபரணங்களையுடைய பள்
ளர்கள் அடிக்கின்ற அரிகிணையென்னும்வாததியத்திற்கு இசையும்படி
யாகஊதுகின்ற புல்லாங்குழலிசை இல்லாதபோது பெண்களுடைய
கூந்தலிற்பொருந்திய வண்டுகள் இசையும்படியாகவூதும்-எ-று. (சரு)

மூசுவண்டினங்களெல்லா மூடிந்தசங்கிலிகளாகக்
காசறுகதிர்களெல்லாங் கன்னசாமரைகளாகத்
தேசுவாய்க்கவளம்பெற்றுத் தேறுகபாலைச்சிந்தி
வாசவன்களிறுபோல்மருதம்வீற்றிருந்ததன்றே.

(இ-ள்.) ஒழுங்காய்மொய்த்துக்கொண்டிருக்கிற வண்டுகூட்டங்கள் சங்கிலியாகவும், இரத்தம்போலு செறகதிர்கள் சாமரைபோன்றதா— பிரகாசம்பொருந்த வளப்பம்பெற்றதென்கிறபொருளைச்சிலேடை— கொடுக்கும்-அழகியவாயினாலே கவளம்பெறுதலாலும், பருவங்கொண்ட தேனாகிய அமிர்தத்தைச்சிந்தியென்னும் பொருளைக்கொடுக்கும் தேறித தன்கண்ணிருக்கின்றபாகனைத் தள்ளிக்கொள்ளுதலாலும், தேவேந்திரனேறுகின்ற ஐராவதமென்னும் யானைபோல மருதநிலம் வீற்றிருந்தது-எ-று. (௬௬)

தேசுவாய்க்கவளம்பெற்று என்றதைப் பிரகாசம்பொருந்தவளப்பங்களைப்பெற்று என்றும்யானைக்குப்பிரகாசத்தையுடைய கவளம்பெற்று எனப்பொருள்கொள்க-தேறுகபாலைசிந்தி என்றதை சிறந்ததேனாகிய அமிர்தத்தைச்சிந்தியென்றுகொண்டு யானைக்கு தேறிதன், கண்ணிருக்கின்றபாகனைத்தள்ளியென்றுகொள்க.

தரவு- கொச்சகக்கலிப்பா.

பண்ணார்கமலப் பழனப்பதிநீங்கி
மண்ணோர்போற்றும் வடவீதியிற்குறுகி
யண்ணாமலையா னடிக்கமலஞ்சென்றுதொழ
விண்ணார்கொடிநெடுந்தேர் வீதிகளின்மேவினாள்.

(இ-ள்.) வண்டுகளிசைபாடாநின்ற தாமரைப்புஷ்பங்களையுடையமருதநிலத்தைவிட்டுநீங்கிப் பூலோகத்தாரவணங்குகின்ற வடக்குவீதியிலெழுந்தருளி அருணாசலேசருடைய பாதாரவிந்தத்தைத்தொழவேண்டி ஆகாயத்தையளாவியகொடிகளையுடைய தேரோடுந்தெருக்களுக்கு வீதியிலவந்தாள் பார்வதி-எ-று. (௬௭)

கலி விருத்தம்.

உச்சகோபுரத் துச்சிமேவிலோர்
வச்சிரத்தினன் மதியின்மாசுபோம்
வச்சிரமணிச் செம்மையால்தினன்
பச்சைமாவெலாம் பவளமாகுமே.

இ-ள். யாவரும்விரும்பப்பட்ட கோபுரத்தினதுசிகரத்தினருகில்சந்திரன் வரும்போது அக்கோபுரத்தில் இழைக்கப்பட்டிருக்கிறதுப்பற்ற வச்சிரங்களினாலே தனதுகளங்கத்தை நீங்குவான் இன்னும் அக்கோபுரத்தில் இழைத்திராநின்றமாணிக்கங்களுடைய சிவந்தவொளியினால் அதனருகில்வரும்போது சூரியன் இரதத்திற்கட்டியபச்சைக்குதிரைகளெல்லாம் பவளக்குதிரைகளாகத்தோன்றும்-எ-று. (௬௮)

வேற்றுமேறுசேர் மேடைமீதினும்
போற்றுகார்மதிற் புரிசைமீதினும்

தோற்றுசிலமா மணிபின்சோதியா
லேற்றவானை நியாழுனையானதே.

(இ-ள்.) வேறுவேறுகி மேருவையொத்தமேடைகள்மேலும்,மே கங்கள்சஞ்சரிக்கின்ற மதில்கள்மேலும்,இழைத்திருக்கின்றநீலரத்தின த்தினுடைய பிரகாசத்தினாலே ஆகாயத்திலிருக்கின்றகங்கையானது யமுனைபோல் கறுப்புநிறத்தையடைந்தது-எ-று. (சுக)

பாலைவையாமெனப் பணைமுழங்கவேயரிவைமாதரா
ரடரங்கின்மேல், விரவுபச்சையின்கதிரைவெய்யவன்
புரவிகௌவிடிம புலலென்றுன்னியே.

(இ-ள்.) சமுத்திரம்போல வாத்தியங்கள்முழங்கப்பெண்கள்காட்டிய ஞ்செய்கின்ற மேலுப்பரிகையிலிழைத்திராகின்றபச்சைரத்தினங்களு டையகிரணங்களைப் புல்லென்றுநினைத்துச்சூரியன் இரதத்திற்கட்டிய பசகைக்குதிரைகளேழுங்கௌவும்-எ-று. (ருய)

தரவு- கொச்சகக்கலிப்பா.

அத்தகையவீதி கடந்துமணியாலஞ்சேர்ந்
துத்தமனையென்னை யாளுடையானைச்சோணகிரி
வித்தகனைக்கண்டு பணிந்துருகிமீண்டுபல
சத்திகளதமமோடு தலைச்சாரலைமேவினாள்.

(இ-ள்.) அப்படிப்பட்டதன்மையையுடையவீதியைத்தாண்டி அழகு பொருந்தியகோயிலுக்குள்ளேபோய் உத்தமனை என்னையாட்கொண்டவ னை அருணாசலத்திலிருக்கின்ற ஞானசொரூபனைத் தரிசித்துநமஸ்கரித் து உருக்கத்தையடைந்து திரும்பிப்பலசத்திகளுடனே தலைச்சாரமென் கிற மலைச்சாரலையடைந்தாள் அம்மன்-எ-று. (ருக)

ஊசியிலோர்கால்விரலையூன்றியொருகான்மடித்து
நாசியிசைவிழிகளையு நாட்டியமுன்மூட்டித
தேசினமுதருந்தி தெள்ளமுதையுமுண்டுநவ
கோசிகனைப்போலருயல்வார் *நேகோடிகோடியே.

(இ-ள்.) ஊசியிலேஒருகாலினுடையவிரலையூன்றி மற்றொருகாலை மடித்து முகத்துநாசியிலே கண்களைச்சேர்த்துப் பரப்பிரகாசிக்கின்றமூலாக்கினியைவளர்த் திப்பிரகாசமான அமிர்தத்தாரையைசெய்துபிரமரந்திரத்தினால்வழிகின்ற அமிர்தத்தைச்சாப்பிட்டு விஸ்வாமித்திரன்போலத்தவஞ்செய்வார் அ னேகங்கோடிபேர்—எ-று. (ருஉ)

காமலமூன்றகற்றி நல்வினையுந்தீவினையுஞ்
சாடிமனமிறந்து தானிழந்துதன்மயமாம
வீடுபெறவிரும்பி வேட்கையிற்றிதில்லாமற
கூடுமெஞ்ஞானியர்கள கோடானகோடியே

(இ-ள்.) ஆணவமாகிய மாயையென்கிறமும்மலங்களையும் நீக்கிநல்வி னைதீவினையொட புண்ணியமனமென்பது இறந்துதற்போதங்கெட்டுஉலக ம்சிவசொரூபமாய்மோட்சம்பெறும்படியாக ஆசைகொண்டு மற்றோரா சையுமின்றிச்சிரஞானம்பெற்றஞானிகள்கோடிபோகள் அந்தமலைச் சாரலில் இருப்பார்கள்—எ-று. (ருங)

* கோடானுகோடியெனப்பது - ஏராளமெனக்கணிசாலம்

தொண்டருட னாகமங்கள் சொன்னவிதி முறைமையைத்
தனையடி முடிவுசவு ராதியாய்ப் பூசித்
தண்டர்பிரா னஞ்செழுத்தை யோதியக மகிழ்ந்து
கொண்டகிரியையினர் கோடானகோடியே.

(இ-ள்.) அடியார்களோடு ஆகமங்கள் சொன்னவிதிமுறைப்படி குரியுண் முதல்சண்டேசுரா அந்தரயாகப்பூசைசெய்து தேவர்களெல்லாருக்குந் தலைவராகிய சிவனுடைய பஞ்சாக்ஷரமந்திரத்தையோதி மனது மகிழ்ந்து கிரியைகளை நடத்துகிறவர்கள் கோடானகோடி-எ-று. (ருச)

நேருமியம நியமாதனவகையும்
போபிராணாயாமம் பிரத்தியாகாரமொடு
தாரணையன சமாதிவகைதன்னிலுமெய்
கூருமுயலியோகியர்கள் கோடானகோடியே.

(இ-ள்.) இயமம்-நியமம்-ஆதனம்-பிராணாயாமம் பிரத்தியாகாரம்-தாரணை-தியானம்-சமாதியென்று சொல்லப்பட்ட அஷ்டாங்க யோகங்களின் வகைகளையறிந்து அவைகளைத் தேகசிரமமபட்டு முயல்கின்றயோகியர்கள் அநேககோடிப்பேர்கள்-எ-று. (ருரு)

மாதவர்களினைசெயல் செய்யும்வகைபார்த்துச்
சூதவனஞ்சூழ்ந்த சுனையுஞ்சுனைசூழ்ந்த
சீதவருவிகளும் பார்த்துச்சிறப்புறுக
கோதமனாசிரமந் தனினடைந்தனன்

(இ-ள்) மகத்தாகிய தவத்தினையுடையோர்கள் செய்யும் செய்கையைப்பார்த்து மாமரத்தோப்புச்சூழ்ந்த சுனையுஞ் சுனைசூழ்ந்த சீதளமான அருவிகளையும் பார்த்துச்சிறப்படைந்து அவ்விடத்திலிராநின்ற கௌதமருடைய ஆசிரமத்தில் அமயன்சேர்ந்தான்-எ-று. (ருசு)

அந்தவிடத் தண்மையாள செல்வகளிகையு
மைந்தனுமவர்தேடகினார் வாழ்த்திமறைகோதமனார்
முந்திமுனிசெவ்விடத்தே யென்றனன் முனிபுதல்வன்
சந்தைமலர்தருப்பைக் கொய்கியதுஞ் சாற்றினன்.

(இ-ள்.) அக்கௌதமருடைய இடத்திற்கு அமயன்போனவுடனே அவருடைய பெண்சாதி அகலிகையும் புத்திரராகிய சதானந்தரும் வந்து பணிந்தார்கள் அமயன் ஆசீர்வதித்து வேதங்களையுணர்ந்த உன்னுடைய பிதா எங்கேயிருக்கிறாரென்று கேட்கச் சதானந்தர் தர்ப்பைகொண்டுவருகிறதற்குப் போனாரென்று சொன்னார்-எ-று. (ருஎ)

பின்னுமவனாவமான் பேதமையேன் புன்குடிசில்
கன்னலமுந்த கணப்போதிருந்தருளி
லன்னவனைக்கொணர்வே னென்றெயடி தொழுது
தன்னையளித்தவனைப்பற் சென்றான் சதானந்தன்.

(இ-ள்.) மறுபடியும் பாததினைப் பார்த்துக் கருப்பஞ்சாறுபோன்ற பார்வதியம்மையே அறியாமையுடைய என்குடிசைவீட்டில் க்ஷணப்போது இருந்தால் என் தகப்பனாரைக் கொண்டுவருகிறேனென்று பாதங்களைத் தொழுது தன்னைப்பெற்றெடுத்தவனிடத்திற்குப் போனார் சதானந்தர்-எ-று. (ருஅ)

இங்கிவன்செல்போதி னிளந்தருப்பைகொய்துமுனி
புங்கவர்கள்சூழ்தரு மொருமுனிவன்பூத்தலர்ந்து
துங்கவனக்கற்பகம்போ றோன்றுதலைவிதவனங்
கங்களவனமல்லவென் றுசனகையுற்றுநோக்கினான்.

(இ-ள்) இந்தப்பிரகாரஞ்சதானந்தர்போகிறபோது இளமையாகிய தர்ப்பைகளைக்கொய்து அனேகமுனிவர்கள்சூழக்கௌதமர் வருகிறதற்குமுன்பே இவ்விடத்தில எல்லாவிருக்ஷங்களும் புஷ்பித்துக் கற்பகவிருட்சம்போலக்காணுகிறபடியினாலே நம்முடையவனமல்லவே இது - அருடையதென்றுசந்தேகப்பட்டுப்பார்த்தார்-எ-று. (௫௧)

இத்தலத்தில்வந்தவா றென்றுரைத்துமாதவற்குப்
பத்தருவந்த முனியும்பராசரனு
மத்திரியுமப்புதுமை யாராயுமெல்லையிற்றன்
புத்திரனைக்கண்டேவ வென்னபுகலென்றான்.

(இ-ள்) இந்த இடத்தில்வந்த பெரியோர்கள்யாரென்று விஷ்ணுவுக்கு பத்துத்ராமப்பிரகாசாபங்கொடுத்தபிருகுரிஷியும், பராசருமு, அத்திரியென்பவரும், அப்புதுமைவிசாரிக்குமிடத்தில் தம்முடையபிள்ளை சதானந்தனைக்கண்டு இவ்விடத்திலுண்டாகியவிசேஷமென்னவென்று கேட்டார்கௌதமர்-எ-று. கலிவிருத்தம். ௫௨

தாதையிவைகேளிறைவர்தங்களையளிக்குஞ்
சோதியிவணெய்தினனெனத்தொழுதுசொன்னா
னாதமறைதேடுமவனங்குடிசைமேவற்
கேதுதவமேதுதவ மேதுதவமென்றான்.

(இ-ள்.) சதானந்தரானவர் தன்தகப்பனாராகியகௌதமனைப்பார்த்து பிரம்மாமுதலாகிய ஐவரையுந்தன்னிடத்திலுண்டாகிய தேஜோமயமாகியபராசத்தி இவ்விடத்திலெழுந்திருக்கிறாளென்று வணங்கிச்சொல்ல நாதசொரூபமாகிய வேதங்கள்தேடுதற்கரிய அம்மைநம்முடையகுடிசையில்வர என்னதவஞ்செய்தோமென்றார்கௌதமர்-எ-று, ௫௩

ஓடினனிணைத்துமக னுச்சியைமுகந்தா
னாடினன்மகிழ்ச்சியெனு மாழ்கடல்புகுந்தான்
பாடினனெடுந்தருப்பை பார்மிசையெறிந்தான்
வீடினதுநந்தம்வினை வேரினுடனென்றான்,

(இ-ள்) கௌதமர்இந்தவார்த்தையைச்சொன்ன சதானந்தனைக் கட்டியணைத்து உச்சிமுகந்து ஓடினார்திருக்கூத்தாடினார்சந்தோஷமென்கிறசமுத்திரத்திலாழ்ந்தார் பாடினார்தருப்பையைப் பூமியிலேயெறிந்துவிட்டார் நம்முடையபாவம்வேருடனேகெட்டுப்போயிற்றென்றுசொன்னார்-

அத்திரிமுதற்றலைமை யந்தணர்களெல்லாங்
கைத்தலமெடுத்தனர் நடித்தனர்களிப்பால்
வித்தகியிருக்குமிட மேவியெதிர்கண்டார்
பத்திவலையிற்படு பதங்களில்விழுந்தார்

(இ-ள்) அத்திரிரிஷிமுதலாகத் தலைமைபெற்ற ரிஷிகளெல்லாம் இரண்டுகைகளையுந் தலைமேல்வைத்துக்கூத்தாடினார்கள் சந்தோஷத்துட

னே பார்வதியிருக்கிற இடத்தையடைந்து எதிரேகண்டு பத்தியாகிய வலையிலே அகப்பட்டுக்கொள்ளுகிற பார்வதியினுடைய பாதத்தில்வி ழுந்து நமஸ்கரித்தார்கள்-எ-று ௯௩

நின்னிலைமைகன்னியிறை நீள்பிரமசாரி
என்னுமுறையன்றுமுத லின்றுவரையெல்லா
முன்னிடையுதித்துல குயிர்த்தொகைக்கெல்லா
மன்னையெனுமுன்பெருமை யாரறியவல்லார்

(இ-ள்) தாயேநீயோகன்னிகைசுவாமியோநித்தியபிரமசாரியென்று சிருஷ்டிதொடங்கி இதுவரைக்கும்வேதங்களெல்லாஞ் சொல்லிக்கொண்டிருக்கின்றதுகள் அப்படியிருக்க உன்னிடத்தில் உலகங்களிலிருக்கின்ற எல்லாவுயிர்களுந்தோன்றித்தாயென்றுசொல்லும் அப்படிப் உன்பெருமையை ஆரறியப்போகிறார்கள் எ-று ௯௪

நித்தனைமுதற்றருவை நித்தனதிடத்தே
சத்தியெனநீவருவை சத்திசிவமென்றே
இத்தகைமைகொண்டுயிர்கள் யாவையுமளிப்பா
யத்துவிதமாகுமுனை யாரறியவல்லார்

(இ-ள்) நித்தியமாகவிருக்கிற சிவனை முதலில் உண்டாக்குவாய் அந்தசிவனிடத்திலே சத்தியாகவருவாய் சத்திசிவமென்கிற தன்மையைக்கொண்டு உயிர்களையெல்லாம்பெறுவாய் அத்துவித சொரூபமாகிய உன்னையாரறியப்போகிறார்கள்-எ-று ௯௫

மெய்ப்பொருண்மகேசனரன் வேதனரியாலும்
மைப்பருமகேசியுமை வாணிதிருவாலை
இப்படியுமன்றியவ னெப்படியெடுத்தா
னப்படியுமாவையுனை யாரறியவல்லார்

(இ-ள்) பரமசிவனானவர் மகேஸ்வரர் உருத்திரர் - பிரமா விஷ்ணு ஆனால் நீ மகேஸ்வரி-உருத்திரி-சரஸ்வதி-லட்சுமியாகிய சத்திகளாய் இப்படியுமல்லாமல் அந்தச்சிவன் எப்படிப்பட்ட உருவங்கொண்டாரோ அதற்குத்தகுந்த உருவங்கொள்வாய் உன்பெருமையை ஆரறியவல்லவர்கள்-எ-று ௯௬

நெஞ்சுருகிமாதவர்க ணின்றிவைபுகழ்ந்தார்
வஞ்சியிடைகோதமனும் வந்தனன்வரும்போ
தஞ்சலிபுரிந்தன னதற்குமுனமேயின்
கஞ்சமலரென்னவிரு கால்களில்விழுந்தான்

(இ-ள்) மகாதவத்தையுடையரிஷிகளெல்லாம் நெஞ்சமுருகி நின்று இப்படிதோத்திரஞ்செய்தார்கள் அந்தச்சமயத்தில் பார்வதி சமீபத்தில் கௌதமர்வரும்போதே இரண்டுகைகளையுந் தலையிலேவைத்துச்கூப்பித்தாமரைமலரையொத்த அம்மனது இரண்டு பாதத்திலும் நமஸ்கரித்தான்-எ-று

அன்பிலுயர்கோதமனு மன்னையையிறைஞ்சி
யின்புறவரைப்பனைய னெண்டிசைபரப்போர்

தன்சிரமிதிக்கரிய தாளிணைகளின்றென்
புன்குடில்மிதிக்கவென புண்ணியமுடித்தேன்

(இ-ள்) பகதியினாலேஉயர்ந்த கௌதமரிஷியும்பார்வதியம்மனைவணங்கிச்சொல்வான் பிரமா அஷ்டதிக்குப்பாலகா சிரசிலேவைத்தற்கு அருமையான பாதமிரண்டும் அடியேனுடைய புன்மைபொருந்திய சிறுவீடுமிதிக்க என்னபுண்ணியம் செய்தேனோ-எ-று ௫௮

இந்தமொழிசொற்றலு மிளங்கொடியுமவேலன்
றந்தியிடைசென்றிடவணங்கது தவிர்ந்தால்
சிந்தையிலுன்னிடையில் வந்துகுறைதீர்வேன்
மைந்தவெனவோதினன் மறுத்துமிவைசொல்வாள்

(இ-ள்) இந்தவார்த்தையைச்சொன்ன அளவில் இளமையாகியகொடிபோன்ற அம்மையும், பிள்ளையாகிய கௌதமனே எனக்கோர் குறைவந்தால் சுப்பிரமணியனிடத்திலும் கணபதியிடத்திலுஞ் சென்று தீர்த்துக்கொள்வேன் அவ்விடம்விட்டால் என்பேரில் அன்புவைத்த உன்னிடத்தில்வந்து தீர்த்துக்கொள்வேனென்று சொல்லி மறுபடியுஞ்சொல்வாள்-எ-று ௫௯

நாயகன்மொழிந்திட நடந்தபடியெல்லாம்
பாயிரமெனும்படி பகர்ந்தனளவர்க்குந்
தாயிவைமொழிந்தளவி லிற்சதமகற்கன்
றாயிரம்விழிதந்தருளிந்தமுனிசொல்வான்

(இ-ள்) பரமசிவனானவர் சொன்னபடி பூமியில்வந்து தானடந்தசமாசாரமெல்லாம பாயிரத்தோடுகூடிய நூல்போல முறையாகவிரித்து எலருக்குந்தாயாகிய பார்வதிசொன்னபோது முன்காலத்தில் தேவேந்திரனுக்கு ஆயிரங்கண்ணுண்டாகச் செய்த கௌதமர்சொல்வார் என்றவாறு ௬௰

இத்தலமுதற்றலமிதன்பெயர்தலேச்ச
முத்தமமிதிற்றரும மொன்றுபலவாகும்
மெய்த்தவமியற்றிடில் வெள்விடையின்மேல்வந்
தத்தனுமிடப்புற மளித்தருளுமென்றார்

(இ-ள்) இத்தஸ்தலம் முதன்மையானஸ்தலம் இதனுடையபேர் தலேச்சுரம் இதுமிகவுமுத்தமமானது இதில் ஒருபுண்ணியத்தைச்செய்தால் ஒன்றுபலவாய் விருத்தியாகும் இதிலிருந்து கொண்டு நீமெய்மையாகிய தவஞ்செய்தால் வெண்மைபொருந்திய ரிஷப வாகனத்தின்மேலெழுந்தருளிப்பரமசிவன் உனக்குஇடப்பாகங்கொடுப்பரென்றார் கௌதமர்-எ-று ௬௧

மாலயன்வசுக்கண் மகவான்முனிகணத்தோர்
சாலவுள்சமைத்ததில் தனித்தவமுடித்தார்
காலமிடமன்றுசெயல் கைப்பலமிதென்றான்
மூலமுதல்வல்லியு முடிப்பனிதுவென்றாள்

(இ-ள்) வாராய்அம்மையே விஷ்ணுபிரமா அஷ்டவசுக்கள் தேவேந்திரன் அநேகமுனிவர்கள் அவரவர்கள் இடஞ்செய்துகொண்டு ஒப்பற்றதவஞ்செய்து நினைத்தகாரிய முடித்துக் கொண்டார்கள் நீவந்த

காலமு மிட முநன்மையாகும் இவ்விடத்தில் நீதவஞ்செய்தால்கைகப்ப லமாகி முடியுமென்று கௌதமர்சொல்ல எல்லாப்பொருளுக்கு மூல மாகிய அம்மனும்தவஞ்செய்து என்கருத்தைமுடித்துக்கொளுகிறே னென்றாள்-எ-று ௭௨

எண்சீரடிஆசிரியவிருத்தம்

கோதமனேமுதலாய முனிவர்கட்கெல்லாங் குளிர்ந்தமொழி பு ந்துவிடை கொடுத்துச்சோண, பூதாமாமதன் குணபாற்பன்னசாலை நிதமைப்பித்தகமகிழ்ந்து புறம்புகாக்க, மாதரொழு வயிரவரைத்து நா லுபாலின் வாயிலையெண் வயிரவர்கண் மகிழ்ந்துகாக்க, வாதாவினிரு த்திமைந்தர் மருங்குகாக்க வந்தரியுட்புறங்காக்க வமைத்தாள்மன்னே

(இ-ள்) கௌதமாமுதலான முனிவர்க்கெல்லாம் பிரியவசனஞ்சொ ல்லி உத்தரவுகொடுத்து அருணாசலதத்துக்குக் கிழக்குப்பக்கத்தில்பன் னசாலை புதிதாகச்செய்வித்து சத்தமாதர்களைப் புறக் காவலாகவைத் து நான்குவாசலையும் எட்டுவயிரவர்களகாக்கவும் விநாயகர் சுப்பிரம ணியா தன் இரண்டுபக்கமுங்காக்கவும் துர்க்கை உட்பக்கங் காக்கவுஞ் செய்தாள் பார்வதி-எ-று ௭௩

கொந்தளகஞ்சடை பிடித்துவிரித்துபபொற்றோட் குழைகழுதகி த்கண்டிகையின் குப்பைபூட்டி, யுந்துமாவுரிநிகர்படடாடை நீக்கியுரித் தமாவுரிசாத்தியுதத்தாளதனால், விந்தைதிருநீறணிந்து கனறகுட்காய்ந் துவிளங்குமுசியிலொருகால்விரலையூன்றி, அந்திபகலிறைபதத்தின் ம னதையூன்றியரியபொருந்தவம்புரிந்தா ளகிலமீன்றாள்

(இ-ள்) புஷ்பங்களைத்தரிக்கின்ற கூந்தலைச் சடைசெய்து விரித்துத் தோளகழுதது காதுகளில் ருத்திராட்ச மாலைகளைததரிதது ஆடுகின்ற பாமபுரிபோலிருக்கிற பட்டாடை யுடுத்துகிறதுவிட்டு மாவுரிதரித்து செயதலைக்கொடுக்கின்ற விபூதியைச் சருவாங்கமுந்தரித்து நெருப்பி ல்காய்ந்து பளபளவென்று பிரகாசிக்கும ஊசியில் ஒருகாற்பெருவிர லையூன்றிக்கொண்டு இராப்பகலாக மனதிலே பரமசிவனைத் தியானமா கிருந்தி அரிதாகிய பெரியதவத்தைச்செய்தாள் உலகத்தைப்பெற்ற பார்வதியம்மன்-எ-று ௭௪

இளைத்தகொடி மருங்குவளைந் தெரியிலுப்ப ணினியதவ மியற்று தலகண்டிளைததுவாடிக் களைத்துமனந்துடித்துவிழி புதைததுவாணி கண்ணீரின் மூழ்கினின்றாள் கமலத்தாளு, மூளைத்துமனந் தளர்ந்து முதுவிழுந்தாண்மற்றையுயிர்களெல்லாங்கரைந்துகரைந்துருகாநின்ற, வளைத்துவளைத்துரைப்பதென்றாய் வருந்துமானால் வயிற்றினுள்ள க ருப்பமெல்லாம் வருந்திடாதோ

(இ-ள்) மிகவுஞ்சிறிதாகிய கொடிபோன்ற இடையானது வளைந்து அக்கினிமத்தியிலே இனிமையான தவத்தைச்செய்கிறதைப் பார்த்துப் பார்த்து இளைத்துவாட்டத்தையடைந்து களைத்துமனது துடித்து இர ண்டுகண்களையுமூடிக்கொண்டு சரஸ்வதியானவள் கண்ணீரால்மூழு கினாள் இலட்சுமியானவள் மனதுவருந்திச் சஞ்சலப்பட்டு அழுது விழுந்தாள் மற்றசீவராசிகளெல்லாம் மனங்கரைந்து உருகியதுகள் நா விதைப்பிரித்துச் சொல்வதினால் என்னபயன் தாயானவள் வருந்து

வாளாயின் வயிற்றிலுள்ளகருவாகிய சீவனெல்லாம் வருத்தத்தை யடையாதோ-எ-று ௯௫

முன்பனியிற்கருகுபடாக்கமலம்போல முகந்தோன்றப் பனிகயத்துண் மூழ்கிநிற்கும், பின்பனியிலதிசீதவிடத்திற்சேரும்பெருமழைக்குணமீனென்னப் பேணிநிற்கும், அன்பனிடம் பெறுமளவு மிதுபோல் வேண்டு மரியதவம்புரிந்தனளவ்விடத்துவேந்தன், வல்பணிமேற்றுயிலுநெடுமான்முதலாந் தேவர்மறைபுகுந்ததவச சாலை மருங்கிற் சார்ந்தார்

(இ-ள்) முன்பனிக்காலத்திலே கருகிப்போகாத தாமரைப்பூப்போலமுகமாத்திரந்தெரியக்குளிர்சசிபொருந்திய தடாகங்களிலே நின்றும் பின்பனிக்காலத்திலே அதிகசீதளம்பொருந்திய இடத்திலேயிருந்தும மழைபெய்கிறபோது அதில் ஒருமீன்போலச்சஞ்சலப்படாது நின்றும் பரமசிவன் இடப்பாகத்தைப் பெறுகிறவரைக்கு மிதுபோலவேண்டியதவத்தைச்செய்தாள் அந்தவிடத்தில் பிரமதேவனும வலிய சர்ப்பத்தில நித்திரைசெய்கின்ற விஷ்ணுமுதலாகிய தேவர்களும் தேவகோஷ்டம்பொருந்திய தவச்சாலையைவந்து அடைந்தார்கள்-எ-று ௯௬

அந்தரியுமாயவனா முதலாந்தேவ ரனைவருக்கு முபசார மளித்துநீங்கள், வந்தவாவியம்புமென மகிடனாலேவருந்தியதுந் தளர்ந்ததுவும் வகுத்துச்சொன்னா, சுந்தரியுங்குமரியுடன் கூடரும்வாளாற்றொடுகளத்தின் மகிடனுரத்தொலைப்பாயென்றாள், விரதையதுபுரிவனெனப் பணிந்தாளன்னை விளம்புதல்கண் டகமகிழ்ந்து விடைகொண்டாரே

(இ-ள்) பார்வதியானவள் விஷ்ணுமுதலான தேவர்களெல்லாருக்குமுபசாரஞ்சொல்லி நீங்களிவ்விடத்திற்குவந்தவகைசொல்லுங்களென்றுகேட்க அவர்கள் மகிடாசுரனாலே தாங்கள்துன்பப்பட்டுத் தளர்ச்சியடைந்தவகை விபரமாகச்சொன்னார்கள் அதற்குப்பார்வதியானவள் துர்க்கையைக்கூப்பிட்டு நீ கத்தியினாலே யுத்தகளத்திலே மகிடாசுரன்வல்லமைகெடக் கொன்றுவிடென்றுசொன்னாள் அதற்குத் துர்க்கை அப்படியே செய்வேனென்றுபணிந்தாள்தாயாகியபார்வதி இந்தவார்த்தையைச்சொன்ன அளவில் விஷ்ணுமுதலானவர்கள் சந்தோஷத்தையடைந்து வணங்கி விடைபெற்றுக்கொண்டார்கள் எ-று ௯௭

கலிவிருத்தம்

கோதமாச்சிரமந் தனிற்கோல்வளை
தீதிலாத்தவஞ் செய்ததுசெப்பினேன்
மேதிமாமுகற் காய்ந்ததும்வெள்விடைச்
சோதிபாகமடைந்ததுஞ்சொல்லுவேன்

(இ-ள்) சத்திதேவியானவள் கௌதமருடைய ஆசிரமத்தில் குறைவில்லாத தவத்தைச்செய்ததுசொன்னேன் பிறகு மகிடாசுரனைக் கொன்றதும், ரிஷபவாகனத்தையுடைய சிவனுடையஇடப்பாகத்தைப்பார்வதியார் அடைந்ததுஞ்சொல்வேன்-எ-று ௯௮

நான்காவது-திருக்கண்புதைத்தசருக்கமுற்றிற்று.

ஆக திருவிருத்தம்-௩௩௨.

௳

சிவமயம்.

ஐந்தாவது

பார்வதியார்

இடப்பாகம்பெற்றசருக்கம்.

அறுசீரடியாசிரியவிருத்தம்.

அஞ்சனக்கிரியில்வாழு மசுரன்றனர்க்குந்தீர
னஞ்சமேயனையானந்த நமனுக்குமனுயவந்தோன்
செஞ்சிகையெரியைததீய்க்கும் தீமையானளகைநாட்டின்
விஞ்சையான்வருந்தவுள்ள வளமெலாமகவாந்தவீரன்

(இ-ள்) நீலகிரியில் வாசஞ்செய்துகொண்டிருககிற அசுரனனவன் எல்லாரிலும அதிகபராககிரமத்தையுடையவன் விஷததினுககுச்சமா னமானவன் அந்தயமனுக்கும யமனனவன்சிவபபாகிமேலெயழுகி னற கொழுந்தையுடைய நெருப்பைசசுடத்தகுநத தீமையையுடையவ ன் அளகாபுரியில குபேரன் தரித்திரதசையடைய அங்கேயிருககிறவளா ங்களெல்லாங் கொள்ளையிட்டவன்-எ-று

தாமரைக்கண்ணன்றாங்கு மாவினைத்தலைவால்கூட்டி
மாமணிக்கவண்போற்கொள்வன் வானிலாக்கதைவாங்கி
வேமழற்குஞ்சிமைந்தர்க் குதவுமன்விமானத்தோடே
சோமனைப்பிடித்துக்கையாற் பிழிந்துமுதருந்துஞ்சூரான்

(இ-ள்) விஷ்ணுவித்திரைசெய்கிற ஆதிசேடனைத் தலையையும், வாலையும் ஒருகையினாலே சேர்த்துப்பிடித்து அதன் சிரமணியைக் கவணில்வைத்தெறிந்து விளையாடுவான் அக்கினியைத்தானுவிட்டு அவனேறுகின்ற ஆட்டை நெருப்பைப்போலச் சிவப்புமயிரையுடைய தன்பிள்ளைகளுக்கு ஏறக்கொடுப்பான் சந்திரனை அவனேறுகிறவிமானத்தோடே கையினாலே பிடித்துப்பிழிந்து அவனுடம்பிலிருந்துவருகிற தேவாமிர்தத்தைப்பானம்பண்ணுகிறசூரன்-எ-று ௨

கருதியமகவான்வெள்ளைக் களிற்றின்மேற்றிரிவன்பின்னைப்
பரிதிதேரத்தினைப்பசைப் பரிசெலப்பவனிபோவா
னிருதியைச்சுமக்குமாளி யேறுவனிணத்தின்மூழ்கிக் (வான்
குருதிகொப்பளிக்கும் வாளொன் றெடுத்துயிரனைத்துங்கொல்

(இ-ள்) உயர்வாக நினைக்கப்பட்ட தேவேந்திரனுடைய வெள்ளையானைமேல் திருவோலக்கம்வருவான் சூரியனுடைய தேரிலேறிக்கொண்டு பச்சைக்குதிரைகளேழுபூட்டிக்கப் பவனியாகப்போவான் நிருதியைச் சுமக்கின்ற ஆளியின்மேலேறிக்கொள்வான் நிணங்களாலே மூழ்கப்பட்டு இரத்தங்களைக்கொப்பளிக்கும் ஒருவாளாயுதமெடுத்து சருவத்திரசீவகளையும் கொல்வான்-எ-று ௩

அன்னவன்மகிடமான வாற்றிறலஞ்சிக்காலத்
தென்னவன்கடாமேறான் காலினாற்றிரிந்தானென்றா
லென்னவன்கொடுமைநம்மா லியம்பலாமிலகுஞ்சோதி
மன்னவன்கிரியைச்சாய்த்தான் மீனுக்காவாரிதூர்த்தான்

(இ-ள்) அப்படிப்பட்டஅசுரன் எருமைமாட்டு முகத்தையுடையவனானபடியினாலே தெற்குத்திக்கிலிருக்கின்ற யமனுடைய எருமைக்கடாவிலேறுமற் காலினால்நடந்து திரிகிறானென்றால் அந்த மகிடாசுரனுடைய கொடுமை நம்மாலெப்படிச்சொல்லக்கூடும் சோதிசொரூபமாகிய சிவனிருக்கிற கைலாயத்தையுஞ் சாயச்செய்தான் மீன் வேண்டியதற்காகச் சமுத்திரத்தையுந் தூர்த்தான்-எ-று ௪

மயனெனுந்தச்சன்செய்த மகிடமாபுரத்திலன்று
னயனறுகரிசிநல்க விருக்குநாளவனுக்காய
பயனுறுநுகர்ச்சிவேண்டி யாயிரம்படைக்கையாளர்
கயமுதல்விலங்கைநாடி வேட்டையாக்கணிற்சென்றார்

(இ-ள்) மயனென்கிற தேவதச்சனால் இரத்தினமயமாகச் செய்யப்பட்ட மகிடபுரத்தில் அந்தஅசுரன் பிரமாவானவர் நித்தியம் அறுகும் அட்சதையுங்கொடுக்க வாழ்த்துக்கொண்டிருக்கிறநாளில் அந்த அசுரன் தின்னுகிற மாமிசத்துக்காக ஆயுதபாணிகளாகிய ஆயிரம் பேர்கள் யானைமுதலாகிய மிருகங்களைத்தேடி வேட்டைமார்க்கமாகக் காட்டுக்குப்போனார்கள்-எ-று ௫

தானவர்சென்றுவஞ்சிதவஞ்செய்கானகத்தைச்சூழ
வானவர்பணியுபட்டவயிரவாதொலைந்தாரா
போனவாறிந்தவாறுமபுரிசூழற்றவறூந்தூத
ராணவருணாகோவுக்கடிபணிந்தறிவித்தார்கள்.

(இ-ள்.) அப்படி வேட்டையாட வெளிப்பட்ட ஆயிரமசுரர்களும் வந்து பார்வதி தவஞ்செய்துகொண்டிருக்கிற வனத்தைச்சுற்றிக்கொள்ள அதைக்கண்டு தேவர்கள் பணிகினறகாவலாகவிருந்து அஷ்டவயிரவர்களும் அந்தஆயிரம்பேரையுங்கொன்றார்கள் அவர்கள் இறந்துபோனதும் அம்மன் தவசுபண்ணுகிறதும் பாதத்தைவணங்கித்தூதர்கள் மகிடாசூரனுக்குத்தெரிவித்தார்கள்-எ-று. ௬

போற்றிபங்கவர்கள்சொல்லப் புகைகனைபிறந்ததங்கி
தூற்றியவிநகணண்ட கோளமூஞ்சுழன்றதங்கே
நாறறிசையுள்ளவேழ நடுங்கியதிமையோர்கூட்டங்
கூற்றமுங்கரந்ததால காலமுங்குளிர்ந்ததன்றே

(இ-ள்) தூதர்கள்வணங்கித்தெரிவித்தஅளவில் புகையும் சிரிப்புமுண்டானது இரண்டுகண்களும் நெருப்புகளைப் பறக்கவீசியதுகள் அண்டகோளமுமகிறுகிறெனசுழன்றது அஷ்டதிக்கிலிருக்கிறயானைகளும் தலையைத்தொங்கப் போட்டதுகள தேவாகூட்டம நடுக்கத்தையடைந்தது யமனும்ஒளிந்துக்கொண்டான் ஆலகாலவிஷமும் குளிர்ச்சியடைந்தது-எ-று ௭

அப்படிமகிடன்சீறு மளவினிவிகும்பனென்போன்
செப்பிமுனைதுகோபம் பொறுப்பரோசிறியரென்றே
மூப்புடையிளநீரென்னு முலைச்சிவாழ்வனத்துளாரைக்
கைப்படையதனாற்கொல்வேனெனச்சொலிக்கடிதுபோனான்.

(இ-ள்) அந்தப்பிரகாரம் மகிஷாசூரன் கோபிக்குமளவில் நிகும்பனென்கிற படைத்தலைவனவாருமையாராசனே உமமுடையகோபத்தை அற்பமாகியவர்களா பொறுப்பார்கள் என்றுசொல்லித் தென்னிளநீர் ஒத்ததனத்தையுடைய பார்வதிதவஞ்செய்கிற வனத்திலிருப்போரைக் கையிலிருக்கின்றவாளால் கொன்றுவருகிறேனென்று சீக்கிரத்தில் புறப்பட்டுப்போனான் எ-று ௮

குடதிசைக்கடலைசீறிக் குணதிசைக்கடல்சென்றன்ன
கொடியதேர்கரிமாசேனை யெழுந்தனனிகும்பனென்போன்
வடகிரிதனக்குங்கும்ப மாமுனிமலைக்குநேரே
இடைபெருகரியமேரு வெழுந்ததாமெனச்சென்றான்.

(இ-ள்)மேற்குச்சமுத்திரத்தின் மேற்கோபித்துக் கிழக்குக்கடல்சண்டைசெய்யப் புறப்பட்டதுபோல் பெரியதேர்களும் யானைகளும குதிரைகளும காலாள்களும் புறப்பட்டதுகள் நிகும்பாசூரனெனவன் மகாமேருவுக்கும் அகஸ்தியரிருக்கின்ற பொதியமாமலைக்கு மத்தியிலே நிறைந்த ஒருபெரியமேரு எழுந்ததென்று சொல்லும்படியாகப் போனான-எ-று

அறுசீரடியாசிரியவிருத்தம்-வேற்றுவண்ணம்

எழுந்தவனுமரகதநேர் துரககமாயிரம்பூண்டவிரதமேறி,வழிந்த கரிமதக்கடலை யெழுந்ததுகளடக்கவுமை வனத்திற்சென்றான், கொழுந்துவிடுகனலனையாரவரவுகண்டுபலகோடி குன்றம்வீசி,தழைந்த நாத்-த் தாக்கணங்குநோக்கணங்கும் பொருதெதிரே தடுத்தார்கோ-

இ-ள் இந்கப்பிரகாரம் நிதும்பாசுரன் பச்சைக்குதிரை ஆயிரங்கட்டியதேரிலேறிக்கொண்டு அப்பொழுது எழும்பிய சிறுஅணுக்கள் முன்போகாநின்ற யானைகளின்மதஜலம் சமுத்திரமாகத் தேங்கியிருப்பதைவறச்செய்ய பார்வதிதவஞ்செய்யும் வனத்திற்குப்போனான் கொழுந்துவிட்டெரியும் நெருப்பொத்த அசுரப்படைகள் அநேகமலைகள்விட்டெறிய இவர்கள்வருகிறதுகண்டு அம்மனிடத்திலிருக்கிற தாக்கணங்கு நோக்கணங்கு என்னுமிருவரும் ஆயுதபாணிகளாகப்போய எதிரேதடுத்தார்கள்-எ-று ம

சண்டனுருத்திரன்சோமன் கபாலிநிகர்சங்கரன் கோதண்டன் வீத, னெண்டரியசித்திராங் கதனென்னும்வயிரவர்களிருநால்வோரு, மண்டமுகடுடையாகத் தானைகளைத்தொலைத்திட்டவரிகளபோலக், கண்டகனுஞ்சாரதியுந் தேருமன்றிச சேனையெல்லாங் கணத்திற்சாய்த்தார்.

(இ-ள்) சண்டன்ருத்திரன்சோமன் கபாலிதனக்குத்தானே ஒத்தசங்கரன் கோதண்டன் வீதன் சித்திராங்கதன் இவ்வெட்டுவயிரவர்களும் அண்டகோளமுடைபட யானைகளைக்கொல்லுகிற சிங்கங்கள்போலககர்சசித்துநிதும்பாசுரனும் அவன்சாரதியும்தேருந்தவிரமற்றச்சேனைகளையெல்லாம நொடிப்பொழுதிலே கொன்றார்கள். ௧௧

அட்டவயிரவர்படையா லணங்குகளாற்றனது படையழிதலைக் கி,வட்டநெடுந்தேர் முடுக்கித் தாக்கணங்கின் முகத்திலெண்ணிலவாளிகோததான், விட்டகணைகளைவிலக்கித தேரோட்டுஞ்சாரதியை வீழ்த்திவாளி, தொட்டகரங்களைப்பிடுங்கி யவனுயிரைக்குடித்தந்தச்சூரமாது.

(இ-ள்)எட்டுவயிரவர்களுடைய ஆயுதங்களினாலும் இரண்டுபெண்களாலும் தன்னுடையபடைமுழுவதும் இறந்துபோகின்றதைப்பார்த்து நிதும்பாசுரன் வட்டமாகிய நெடியதேரைவிட்டுக் கொண்டு தாக்கணங்கென்பவளுடைய முகத்திலேகணக்கில்லாத பாணங்களைவிட்டான் அந்தபாணங்களைவிலக்கித்தேர்நடத்துகிறசாரதியைகொன்று அம்புதொடுத்தகைகளையறுத்து அவனுடையதலையையும் அறுத்துக் கொன்றாள் தாக்கணங்கு-எ-று ௧௨

ஓடினசெங்குருதிநதியுடலிழந்துவிழுமவுணருயிர்கள் போல,வாடினவெண்குறைத்தலைக ளனுதினமுமருந்துகின்ற வலகைபோலச்குடினர்கள்வயிரவரும் தாக்கணங்கு நோக்கணங்கும் அம்மைவாகை,வீடினர்க ளவுணரென மகிடமுகற் குரைத்தனர்போயவிரைந்துதூதர்.

(இ-ள்.) வயிரவர்களாலும் இந்த இரண்டுபெண்களாலும் தேகமறுபட்டுச்சீக்கிரத்திறந்துபோகுமசுரருயிர்போல் இரத்தநதியானது ஓடியதுமிதம்பமாமிசத்தைத்தின்று கூத்தாடுகிறபேய்போல்கவந்தங்கள் கூத்தாடியதுகளவயிரவர்முதலாகியவர்கள் தும்பைமாலைகையாலே சூடிக்கொண்டார்கள் அசுரர்களிறந்துபோனார்களென்று மகிடாசுரனுக்குத்தூதர்கள் சீக்கிரத்தில் போய்ச்சொன்னார்கள்—எ-று. (௰௩)

கேட்டளவினைமகிடமுகன் கயிடவன்றன்முகநோக்கிக் கிளத்துவானேர், காட்டிலுறைசிறுபேயுஞ் சணவர்களுநமபெரும்படையைக் கடிகதுவென்றால, நாட்டநுதலயனரியும்மனைக ளினிமேற்றிறைகொடுக்கவல்லுவரோ, நீட்டினகைபுரித்தெழுந்தா னேறினனாயிரங்கரிசூழ்ரதமீதில்.

(இ-ள்.) மகிடாசுரன் இந்தவார்த்தையைக்கேட்ட அளவில் தன்னருகிலிருக்குங்கயிடவன் முகத்தைப்பார்த்துச் சொல்வான் ஒருகாட்டிற்சஞ்சரிக்கின்றசிறியபேய்களும்சணங்களும்நம்முடைய பெரியசேனைகளைக் கொன்றதுகளென்றால் சிவன்பிர்மாவிஷ்ணுமுதலானவர்கள் சொன்னபடிகேட்பார்களோவென்று அதிகமாகியநகைகொண்டு எழுந்திருந்து ஆயிரம்யானைகளைக்கட்டியதேரிலேறிக்கொண்டான்—எ-று. (௰௪)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

பதிற்றொருகோடியானைப் பலத்தராய்க்காந்தநீலன்
மூதுகரன்குருதியண்ட னீசகன்சண்டன்முண்டன்
மதுகயிடவன்றீக்கண்ணன் புகைக்கண்ணன்மாலியென்றும்
தகைகொளீரிரண்டுபேருந் தேர்களைத்தூண்டிச்சென்றார்.

(இ-ள்.) மகிடாசுரன்தேரின்மேலேறினவுடனே பதிற்றொருகோடியானைப் பலத்தையுடையவராகியகாந்தன்-நீலன்-மூதுகரன்-குருதி-அண்டன்-நீசன்-சண்டன்-முண்டன்-மதுகயிடவன்-தீக்கண்ணன்-புகைக்கண்ணன்-மாலியென்று-துதிக்கப்பட்டபன்னிருவரும்தங்கள்தங்களிரதங்களைநடத்திக்கொண்டுபோனார்—எ-று. (௰௫)

கரிமுகத்தவர்நிவாத கவசர்கள்காலகேயர்
பரிமுகத்தவுணர்மேதிப் பணைமுகத்தவர்கள்பற்றி
எரிமுகத்தவுணர்சீறி யெழுமபுலிமுகத்துக்களவ
ரரிமுகத்தவுணர்வெள்ள மாயிரஞ்சென்றவன்றே.

(இ-ள்.) யானைமுகத்தையுடையவர்கள்-நிவாதகவசர்கள் காலகேயர்கள்-குதிரைமுகத்தையுடையவர்கள் எருமைமாட்டுமுகத்தையுடையவர்கள்நெருப்பெரிந்துகொண்டிருக்கிறமுகத்தையுடையவர்கள் புலிமுகத்தையுடையவர்கள்சிங்கமுகத்தையுடையவர்களாகிய அசுரர்கூடிய ஆயிரம்வெள்ளம்நடந்தார்கள்—எ-று. (௰௬)

பாய்பரியதனிற்பாதி பரிகளிற்கரிகள்பாதி
காய்கரியதனிற்பாதி கடும்பரிக்கொடுந்தேர்செல்லப்
பேய்கருங்கொடிகளாடப் பிணங்கிவெண்கொடிகளாட
வேயகளப்பறைகளார்ப்பக் குறுகினன்விசைதகாலில்,

(இ-ள்.) இப்படி ஆயிரம்வெள்ளங்காலாட்கள் புறப்பட்டவுடனே ஐந்நூறுவெள்ளங்குதிரையும்இருநூற்றைம்பதுவெள்ளம்யானையும் நூற்றிருபத்தைந்துவெள்ளம்தேருமாடகப்பேய்களும்காக்கைக்கூட்டமும்விருந்தகம்படுமென்றுகளித்துக்கூத்தாட வெள்ளைக்கொடிகளாட பபுள்ளாங்குழல்பேரிகைமுதலானதுகளுமுழங்கமகிடாசுரன் அம்மனிருக்கிறகாவல்வந்துசேர்ந்தான்—எ-று. (௰௭)

அடலவன்வரக்கண்டஞ்சி யடைந்தனமபயமென்று
மடருறுமுனிவர்கூற வுமையவள்பயங்கெடுத்து
விடலுடனருகுநின்ற விந்தையைவிரும்பிநோக்கி
கடகமேந்தண்ணலடநிவாயென்றாள்விடைக்கொடியுயர்ந்தாள்கன்னி

(இ-ள்.) வல்லமைபொருந்தியமகிடாசுரன் வருகிறதைப்பார்த்துபயப்பட்டுஓடிவந்துபார்வதிக்கு அபயமென்றுமுனிவர்கள் முறையிட்டுச்சொல்லஅம்மனானவள் அவர்களுடையபயங்களைத்தீர்த்துத் தன்சமீபத்தில்நின்றபெருமைபொருந்தியதுர்க்கையைப்பார்த்து உன்னுடையகத்தியினாலேஅந்தஅசுரனைக்கொன்றுவிடென்றுசொல்ல உத்தரவுபெற்றுப்புறப்பட்டாள்துர்க்கை—எ-று. (௰அ)

ஆளிமேற்கன்னிசெல்ல வருணநாயகிமுன்செல்லக்
காளிதுந்துமிபின்செல்லச் சுந்தரிகணங்கள்செல்ல
ஞாளிமேல்வடுகர்செல்ல நான்முகிமுதலாமாதர்
தாளிமேற்செல்லத்தங்கள் விடையின்மேற்றாசிசென்றார்.

(இ-ள்.) துர்க்கையானவள் ஆளிவாகனத்திலேறிக்கொண்டுபோகஅருணநாயகியென்பவள்முன்னேபோகவும்காளிதுந்துமியென்கிற இருவரும்பின்னேபோகவும் பார்வதியினதுகணங்களும் சுவானவாகனத்தில்வயிரவர்போகவும்அபிராமிமுதலாகியமாதரெழுவரும்தங்கள் தங்கள்வாகனங்களேறிக்கொண்டு தாசிப்படையாகத் தாகளெழும்பப் போனார்கள்—எ-று. (௰௯)

சென்றிதோமரத்திற்குன்றிற் சிலைகளிற்படையிற்கையிற்
கன்றிடமகிடன்சேனைப் பாதியைக்கணத்திற்சாய்த்தார்
வன்றிறன்மகிடன்சேனைத் தலைவருமகிடன்றானுங்
குன்றெனவெதிர்த்தன்னி படையெலாந்தாதகிக்கொன்றார்.

(இ-ள்.) இப்படிதுர்க்கைசேனைகள்போனவுடனே உலக்கையினாலும்மலைகளாலும்வில்முதலாகியஆயுதங்களாலும் கைகளினாலும் கோபத்துடனேபோர்செய்கிறமகிடாசுரனுடையபாதிசேனையை ஒருநொடிப்பொழுதிலேகொன்றுவிட்டார்கள்மகிடாசுரனும் அவனுடையசேனாதலைவர்களும்மலைபோலஎதிர்த்துதுர்க்கையின்சேனைகளையெல்லாம் தாக்கிக்கொன்றுவென்றார்கள்—எ-று. (௨௰)

துந்துமிமுதலாநால்வ ரிடைந்தனர்குலியான
சுந்தரிவாராகியாறு முகத்தகைடிகிரிக்கையா
ளிசகிரியமறைபாளொன்று மெழுவருமறைந்தார்ஞானி
யுதிரரிடைந்தார்கன்னி றசந்தளர்ந்தனமேயமென்றன்.

(இ-ள்.) அசுரனது படைகளெதிர்த்து யுத்தஞ்செய்த அளவில் துந்துமி-காளிமதங்கி-சண்டி-என்கிற நான்கு சத்திகளுமதோற்றார்கள்-சூலி-நீலகண்டி-வராகி-சண்முகி-திகிரிக்கையாள்-இந்திரையனையாளென்கிற ஏழுமாதரும் யுத்தஞ்செய்யமாட்டாமற்காட்டிலொளித்தார்கள் சுவாணவாகனத்தையுடைய வயிரவர்களுந்தோற்றார்கள் அர்க்கையானவள் மந்தளர்ந்து உமாதேவியேயென்று நிபாளித்து நின்றாள்—எ-று. (உக)

உறுதுணையுமையேயென்னும் பொழுதில்யோகினிகள்வானி
லறுபத்துநாலுகோடி யதிர்த்தெழுந்தழலின்மாரி
இறுதியாயருளசசேனை யிடிமழைசொரிகையாலே
குறுகியமகிடன்சேனைத் தலைவருங்கொதித்துச்சென்றார்.

(இ-ள்.) அர்க்கையானவள் அம்மனேதுணையென்றபோது அறுபத்துநான்குகோடியோகினிகள் ஆகாசத்திலார்ப்பரித்தெழுந்து நெருப்புமழையையும்இடிமழையையும் சொரிந்தபடியினாலே மகிடாசுரனுடைய சேனைகளெரிந்துபோனதுகள் அப்பொழுதுசேனைத்தலைவர்கள்கோபித்துச்சண்டைசெய்தார்கள்—எ-று. (உஉ)

கலிவிருத்தம்.

அருசிகன்றனைச் சென்றனளாரணி
மருவுகாந்தனை மாய்த்தனள்வாரணி
காரனைவென்றள வேலுடைக்காரணி
நாகனுருயிருண்டனளாரணி.

(இ-ள்.) அப்படிமகிடாசுரனுடைய சேனைத்தலைவர்கள் எதிர்த்தவுடனே அபிராமியென்பவள் அருசிகனென்பவனைக்கொன்றாள் வாரணியென்பவள் காந்தனென்பவனைக்கொன்றாள் சண்முகியென்பவள் காரனென்னும் அசுரனைக்கொன்றாள் நாரணிநாகனென்னும் அசுரனைக்கொன்றாள்—எ-று. (உ௩)

சூலபாணி தொலைத்தனள்மிண்டனைக்
கோலமாமுகி சண்டனைக்கொன்றன
ளாலவூணி மதுவையழித்தன
ணீலனுருயிரிந்திரைநீங்கினாள்.

(இ-ள்.) சூலக்கையாளென்பவள் மிண்டனென்பவனையும் வராகி சண்டனென்பவனையும் நீலகண்டி மதுவென்னுமசுரனையும் இந்திரை நீலனென்பவனையுங்கொன்றார்கள்—எ-று. (உ௪)

துந்துமிக்கொடி சோணிதவூணனை
தந்துமிக்கும் படிக்கதைநாட்டினாள்
நந்துமிக்க நிகர்க்கருணாசலை
வந்துமிக்கெரிக் கண்ணனைவாட்டினாள்.

(இ-ள்.) துந்துமிக்கொடியை யுடையவள் சோணிதவூணனென்பவனை தலையறும்படி தண்டாயுதத்தாலடித்தாள் சக்கரத்தை கையிலேதரித்த அருணாசலையென்கிறசத்தி அக்கினிக்கண்ணனைக்கொன்றாள்—எ-று.

கயிடவன்புகைக் கண்ணனிருவருஞ்
செயிரின்மாளாச் சிந்தினள்சுந்தரி

செயிடுமிக்க திணைவிடுவேலினன்
பயிடவன்முகக் கண்டோடி வந்தனன்.

(இ-ள்.) சுந்தரியென்கிற சத்தியிடவளையமபுகைக்கண்ணனையுர் யுத்தத்திலே கொன்றுள, செய்யப்பட்டபொறியினற மிணங்களபொருந்திய வேலாயுதத்தையேந்திய தாக்கையானவனமகிடாசுரனைக்கண்டு எதிர்த்து வந்தாள்—எ-று. (௨௯)

வெங்கடாமுகன் மேவலு மாதர்க
டங்களாயுதங் கொண்டுதுந்தனர்
சிங்கவூர்தி யவனைதிறசென்றுமைச்
சங்கையூதினண் மேருசலிக்கவே.

(இ-ள்.) வெப்பமபொருந்தியவாருண்டகடாமுகத்தையுடைய அசுரன் யுத்தத்துக்குநேரிட்ட அளவிலசத்தமாகாசனு ததங்களாயுதங்களினுலே அவன்விட்ட ஆயுதங்களைவிலக்கினர்கள் அவர்களையில சிங்கவாகனத்தி லேறிவந்த துர்க்கையானவளவனுக்கெதிரேபோயதன் கையிலிருக்கிற சங்கத்தைமகாமேரு அசையும்படி வாயிலவைத்தூதினள்—எ-று ()

செருவிலங்கவள சங்கொலிசெய்திட
ஒருவரின்றி யவுணருறங்கினா
பெருவரங்களிற பெறறசரங்களை
இருவருஞ்சொரிந் தாரமழையென்னவே.

(இ-ள்.) வல்லமைபொருந்தியசிங்கவாகனத்தையுடைய துர்க்கை சங்கத்தொனிசெய்ய அசுரர்களொருவராவது இல்லாமல்மயக்கத்தையடைந்தார்கள் அருமையாகியவரத்தினுலே பெறறுக்கொண்டபாணங்களைப் பிரண்டுபேருமமழைபோலசசொரிந்தார்—எ-று. (௨௰)

எந்தவெந்தக் கணையவளேயினும
அந்தவந்தக் கணையாலறுத்தனள
விந்தைமீண்டிரு வெமபிறைநாடக்கணை
சிந்தினளவன் சென்னியழுந்தவே.

(இ-ள்) எந்தெந்தப்பாணங்களைத்துர்க்கையானவள் விட்டாளு அந்தப்பாணங்களையெல்லாம் மகிடாசுரன் அறுத்துத்தள்ளினன் அதன்பிறகு இரண்டு அர்த்தசந்திரபாணங்களை அவனுடையசிரசில அழுந்தும்படியாகவிட்டாள்—எ-று. (௨௧)

வெம்புசெயபுனல் வெள்ளமுறுக்கிய
செம்புபோலச சிதறவிடுங்கணை
யம்புபோலருக்கினுமங்கவன்
கொமபுபோல விளங்கினகோடியே.

(இ-ள்.) இரத்தவெள்ளமான துஉருகினசெம்புபோல் சிதறிவிழவிட்ட அர்த்தசந்திரபாணங்கள் அம்பாகஇருந்தாலுமஅசுரன் தலையிலே முளைத்திருந்தகொம்பிரண்டுபோல்தலையிலேவைத்து அழுந்தியிலேந்துதேசத்தினதுகள்—எ-று. (௨௨)

வெற்றிகொண்டவன் வில்லைமுறித்தன
னுற்றவமயிற் சிலைநுதலைப்போதினுள்
கொற்றவையின் குலங்கள்விதிர்தர
வெற்றிப்பிறைக்கண் ணழலினிமிர்த்தகதே.

(இ-ள்) செயங்கொண்டவனாகிய தாருகனுடைய கையிலிருந்த வில்லை யுடைக்கமுறித்தான் அந்தவில்லினாலே அசுரனுடைய நெற்றியிலே தாள் அநேகமபலமயபொருந்திய அம்புகளைவிட்டவனாகிய அந்தப்பிடாரி யின் நெற்றியிலே சுவாமியினுடைய கண்ணைக்கின்போலச் சுருக்கொண்டு தாக்கியது — எ-று. (௯௧)

சாபமெனுநீலை போகத்தரிப்பனை
கோபமிகுசிக கொதித்தெழுகூறறகதிற்
றீபமனைய திகிரியொனறேவிய
பாபகாரி தலையிழுபபண்ணினள.

(இ-ள்.) தாருகனுடையவள்வில்லொடிந்ததும்பொறுக்காமல் அதிக கோபங்கொண்டுகொதித்தெழும்பாவினையடயபோல பிரகாசிக்கின்றதொருசக்கராயுதத்தைவிட்டுப்பாவியாகியமகிஷாசுரனுடையதலையறுபபடிசெய்தாள் — எ-று. (௯௨)

கன்னியாழி யெரிடக்கடமுகம்
சின்னபின்னமாக வாயுஞ்சிதைந்திலன்
முனையாதவத் துண்மையினமும்மதம்
தான்றுமால்தரி யாயெதிர்தோன்றினன.

(இ-ள்.) தாருகையானவள்சக்கராயுதத்தைவிட்டெறிய மகிடாசுர ன்தேகஞ்சின்னபின்னமாகியுஞ்சாகாதவனாகி பூர்வகாலத்திலேசெய்த தபோபலத்தினாலேமும்மதங்களையபொழியாநின்றபெரியயானையுருவையகொண்டெதிராகவந்தெதிர்த்தான் — எ-று. (௯௩)

ஆளியேறுசென் றங்கவனுச்சியின்
மூளைவாரி நுகாநதவெய்யபிரான
மீளவுநகைகை கொண்டெடுத்தாவீரனன்
சூளிநாயகி கூர்மைவேலைவிடுனள.

(இ-ள்.) அப்படியானை யுருவங்கொண்டெதிர்த்தஅளவில் தூர்க்கையேறுகின்ற ஆளியானதுபோய அந்தயானையுச்சியிலிருக்கின்ற மூளையைக்கையினாலே அளறந்துதோண்டி யெடுத்துதின்றது அதனாலு யுஞ்சாகாமற் கையினாலேதிருப்பியுந் தண்டாயுதங்கொண்டெதிர்ந்தான் பேய்களுக்கதிகாரியாயிருக்கின்றதுர்க்கைகூர்மைபொருந்திய வேலாயு தத்தைவிட்டாள — எ-று. (௯௪)

விடந்ததும்பிய வேல்படவெஞ்சமர்க்
கிடந்ததும்பி முகனுமிறந்தன
னடந்ததும்பிக ளாயிரமாயிரந
குடைந்ததும் பிரபமெனக்குன்றியே.

(இ-ள்.) விஷத்தைக்கக்கிக்கொண்டிருக்கிறவேலாயுதம் பாய்ந்த வுடனேயுத்தத்தில்நின்றயானைமுகன் அதைச்சகிக்கமாட்டாமல் இறந் துவிட்டான் அநேகமாயிரம்வண்டுகள்குடையவுள்ளேயென்று மிலை

மத்துவேளையோடுகூடிய அதகிமரம்போல்—எ-று. (௬௫)

வீழ்ந்தபின்பரி வேடமதாயெதிர்ப்
போர்ந்தவன்கதை கொண்டுபுடைத்தனன்
சோர்ந்தவன்கதை யுமமவன்சென்னியு
நாந்தகங்கொண் டறுத்தனனாளி.

(இ-ள்.) அப்படிவிழுந்துஇறந்துபோனவுடனே குதிரைமுகஅங்கியெதிரேவந்து தண்டாயுதத்தினாலே அடித்தான் அடித்ததண்டாயுதத்தையும் அந்தஅசுரனுடையதலையையும் கத்தியினாலே அறுத்துத்தன் விஞானதூர்க்கையும—எ-று. (௬௬)

அக்கதன்பி னழலுருவாயினன்
கங்கையாயினன் காரிருளாயினன்
பங்கயாசனனாயினன் பங்கய
மங்கைநாயக னாயினன்மாயையாய்.

(இ-ள்.) அதன்பின்பு அசுரன் நெருப்புருபங்கொண்டுவந்தான் அதன்பின்புசலப்பிரளயரூபங்கொண்டும் அந்தகாரமாகியும்தாமரைப் புஷ்பத்திலிருக்கிறபிர்ம்மாவாயும் இலட்சுமிபுருஷராகியவிஷ்ணுவாகியும் எதிர்த்தான்மாயையினாலே—எ-று. (௬௭)

ஈதுகண்டவ ளென்செய்வன்மாயையால்
வாதுசெய்தன னென்றுதளர்ந்துமை
பாதநெஞ்சினிற் பற்றினள்பற்றிய
போதிலோர்மொழி விண்ணிறபுகன்றதே.

(இ-ள்.) அப்படிஅசுரன பலபலரூபங்கொண்டவுடனே பார்த்து மாயையினாலே றுன்பப்படுத்துகிறான் என்னவுபாயஞ்செய்தாலும்சாகிறதில்லை இதற்கென்னசெய்வேனென்று துர்க்கையானவள் பார்வதிதேவியினுடையஇரண்டுபாதத்தையும்மனதிலேதியானித்தாள் அப்படிதியானித்தவுடனே ஆகாயத்தினின்றும் அசரீரிஒருவாக்கியஞ் சொல்லியது—எ-று. (௬௮)

மாயவேடங்க ளன்றிமகிடமே
மாயபோதி லவன்றலைத்தள்ளியே
தூயதாளின் மிதிக்கற்றொலைந்திடு
நீயமாயையெனச்சொலத் தேறினள்.

(இ-ள்.) அநேகவிதமானமாயவேஷங்களல்லாமல்சுபாவமான எருமைமுகரூபங்கொண்டபோது அவன்தலையறுத்துக்கீழேதள்ளி உனதுடையபரிசுத்தமாகிய காலினாலேமிதித்தால் தீமைபொருந்திய மாயைதொலைந்துபோமென்றுசொல்லத்துர்க்கையம்மன்தேறினாள்-எ-று.

மட்டின்மாயை வடிவின்மலைந்துபின்
னெட்டிலைத்தலைச் சூலத்தினீக்கினள்
அட்டன்மேதிய தாய்ப்படைதொட்டனன்
வெட்டிவீழ்ந்தனி யடியின்மிதித்தனள்.

(இ-ள்.) அளவில்லாத மாயரூபங்கொண்டுவர எருமைபொருந்திய அவனுடைய சூலத்தினாலேகுத்திக்கொன்றாள் பின்பு அந்தத்தலுடன் பழைய எருமைக்கடாமுகத்தையுடையவனாகிஆயுதங்களைப்பி

ரயோகஞ்செய்த அளவில் அதைகலைவிலக்கி வாளாயுதத்தால் தலையை வெட்டித்தள்ளிக் காலினலேமிதித்துக்கொன்றாள் துர்க்காதேவி எ-று.

ஒப்பிலாபபத மூன்றுமிதித்திடில்
தபபிமாலைய தவிரப்பதுபாரமோ
வட்பதத்தை நினைக்கினுமாணவஞ்
செப்புகாமிய மாயையுந்தீக்குமே.

(இ-ள்.) துர்க்கையம்மன் பாதத்தை நினைத்தாலும் அதைநினைத்தவருடைய ஆணவமாயை காமியமென்கிற மும்மலங்களையும் நீக்கிவிடும் அப்படிப்பட்ட ஒப்பில்லாதபாதம் பரிசமாகும்படி ஊன்றி மிதித்தால் பொய்யாகிய மாயைமாத்திரந் தவிர்ப்பதுபெரிதோ—எ-று. (சுக)

போதவானவர் பூமழைபெய்தனர்
மேதிமாமுகன் மெய்க்கதியுற்றனன்
தீதிலாவவன் செங்களந்தன்னிலோர்
சோதிலிங்கமிருந்ததுதோன்றவே.

(இ-ள்.) தேவர்கள்மிகவும் புஷ்பவருஷம்பொழிந்தார்கள் மகிடாசுரனும் அம்மன்கையினுலிறந்ததினலே மெய்யாமையாமோட்சத்தைச்சேர்ந்தான் யாதொருகுற்றமுமில்லாதஅவனதுசிவப்பாகிய கண்டத்திலே ஒருபடிகலிங்கமிருந்தது—எ-று. (சுஉ)

கண்டமட்டிலக் காக்கொளக்கார்கவ
கண்டமட்டிற் புறந்தகடாமகன்
கண்டமட்டி லிருந்தகடவுளைத்
கண்டமட்டி லெடுத்தனள்கன்னியே

(இ-ள்) நவகண்டமட்டும் ஆண்டமகிடாசுரனுடையகழுத்தைச்செக்காகவைத்துத் துர்க்காதேவி அறுக்கஅந்தக்கழுத்தி லிருந்தபடிகலிங்கத்தை கண்டபோதே கையினுலெடுத்தாள்—எ-று. (சுந)

கொண்டுசென்றுமை கோகநகப்பதங்
கண்டுபோற்றிநடந்தவுளையியந்தனள்
வண்டுவார்குழல் வாங்கினள்செங்கையை
அண்டர்நாயகன் விண்டலனுகையால்.

(இ-ள்.) அப்படிப்பட்ட படிகலிங்கத்தையெடுத்துக்கொண்டுபோய் உமாதேவியினது பாதங்களைத்தொழுதுநடந்தகாரியமெல்லாம்சொல்லி. த்சுவாமியைக்கொடுத்தாள வண்டுகளசூழ்ந்திருக்கின்ற கூந்தலையுடையபார்வதியம்மன் கையினுலேவாங்கினள்தேவர்களுக்கெல்லாம்நாதராகவிருக்கின்றசுவாமியும் அம்மன்கைமேல் வைத்திருக்கிற ஆசையினலே கையைவிடாமற் கெட்டியாகஇருந்தார்—எ-று. (சுச)

தாயுமங்கது கண்டுமகிழ்ந்திறை
யையவென்காம பற்றியசுதெனை
வாளையங்கை புதைத்துமகபதிக்
காயிரங்கண் ணளித்தவன்கூறுவான்.

(இ-ள்) பார்வதியாமலர் அந்த ஆச்சரியத்தைப்பார்த்து மகிழ்ச்சியடைந்துசுவாமி பரமேசுரன் கையைவிடாமலிருந்தது ஏதனுலேயென்

றிகேட்கத் தேவேந்திரனுக்கு ஆயிரங்கண்கொடுத்த கௌதமரானவர் வாயைக்கங்களுமேல பொருந்தக்கொண்டு அயமனுக்குச் சொல்லத்தொடங்கினார்—எ-று. (௬௬)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

முன்னகத்தியனமுதலாமுனிவர்களைம்பதின்மர்வரமுனிபார்செய்வன்னவனறன்னைமதிப்பாலவமதிப்பாயிருந்திடவுமவனைகோபித்தப்பான்னையதவமுனிவரெல்லாவெகுண்டெனைப்போலப்பெருமையிழந்தபுன்மையாலே, இனவரியகருங்கடாவாயினிப்பிறக்ககடவாயென்றுனைச் சொன்னார்.

(இ-ள்) முற்காலத்திலே அகஸ்தியர்முதலான ஐம்பதுரிஷிகள்கூடிவாமுனியெனவவருடைய ஆசிரமத்திற்குப் போனார்கள் அந்தவாமுனியானவர் தம்முடைய தபோபலத்தினாலே மரியாதையாக உபசாரஞ்செய்யாதிருந்தார் அப்போது-அவனைப்பார்த்து பொன்போலும் அரியதவத்தையுடைய எல்லாமுனிவர்களும்கோபித்து எங்களுக்கு அமரியாதைசெய்தபடியினாலேயாவரானும் குறைவுசொல்லப்பட்டாய் எருமைக்கடாவாகப்பிறப்பாயென்று அவர்களவருக்குச்சபித்தார்கள்.)

அந்தவைம்பதின்மருமன்றனைத்தமொழிக் கொடுமையைக்கண்டச்சமாகியிருந்தவனுமெழுந்துபணிந்தெனதுபிழைபொறுத்தருளவேண்டுமென்றானந்தப்பெருந்தவான்புடனுரைப்பாரயகிடமுகத்தவுணனெனப்பிறந்துபின்னர், இருந்தவாணிடமவேண்டித்தவம்புரியுமுமைகணைதிர்த்தீப்பாயென்றார்.

(இ-ள்)அரியதவத்தினையுடைய ஐம்பது முனிவர்களும்அன்றுசொல்லியசாபத்தின் குரூரத்தைக்கேட்டு பயப்பட்டுபெருமைபொருந்தியதவஞ்செய்தவாமுனியும் எழுந்துவந்தனஞ்செய்து முனிவர்களேதெரியாமல்நான்செய்தபிழையைபொறுத்துக்கொள்ளுங்களென்றார் அந்தமுனிவர்கள் நீ எருமைமுகம்பொருந்திய அசுரனாகிஅந்தஅசுரனாகாலத்தில் சுவாமியினது இடப்பாகத்தைப்பெறும்படி தவஞ்செய்துகொண்டிருக்கிற அம்மனுமவள் உம்முடையசாபத்தைநொடிப்பொழுதில் தீர்ப்பாளென்றுசொன்னார்கள்—எ-று. (௬௭)

ஆங்கவர்சொற்படியிலவணசுரர்பெருங்குலத்திலுதித் தரசனாகி யோங்கியபேர்மகிடனெனக்கொடுங்கோனரசுபுரிகுதலுமொருநாள்வேட்டைத், தீங்குதெரிவனத்திலடைந்தழுபசியாலிளைத்தோடித்திரிந்தானாக, கௌகரியவருச்சனைசெயமன்னதனென் றொருமுனிவனேர்ப்பட்டானே

(இ-ள்) அந்தமுனிவர்கள் சொன்னபிரகாரம் வாமுனிஅசுரர்குலத்திற்பிறந்துஇராஜாவாகிமகிடாசுரனென்கிறபெயரையடைந்துகொடுங்கோலாகச்செய்துக்கொண்டுவருகையில் ஒருநாள்வேட்டையாடும்படியாகவனத்தில்வந்து மிகுந்தபசியினாலே இரையொன்றும் அகப்படாமல் ஓடித்திரிந்துகொண்டிருந்தான் அவ்விடத்தில் நீகெருத்தகரியதவஞ்செய்கின்றமன்னதரிஷி யஞ்கிறவன் எதிர்ப்பான்—எ-று. (௬௮)

மன்னதனுமவனையிவன்காத்தி லிங்கத்துடன்விழுங்கி மகிழ்ந்துபோனான்,பின்னதனாலவன்மிடற்றிற்சிவனுருவமிந்ததந்தப்பெருமையாலே, யுன்னதமாயினன்சிவனுமூறுதத்தறித்தவுடனுமிறைபருவமென்றே,வன்னதனால்வினையடைந்ததுதவுருவதீர்த்தமாடிலென்றான்.

(இ-ள்) எதிர்ப்பட்ட அந்தமன்னதனென்கிறரிஷியைக் கையிலிருந்திலிங்கத்தோடே இந்தமகிடாசூரனெடுத்துவிழுங்கிவிட்டுப்போனான் பின்பு அவனைகண்டத்தில்சிக்கிக்கொண்டு படிகலிங்கமிருந்தபடியினாலே யிருந்தபெருமையடைந்தான் அந்தஇலிங்கமிருந்தகண்டத்தையுடையனும் சிவசொரூபமன்றோ அவனைகொன்றபடியினாலே பாவமசம்பவித்தது நவதீர்த்தங்களாடினால அந்தபாவமபோகுமென்றார் கௌதமர்

அன்புமுனியுரைத்தளவிலொருமொழியங்கரத்திலெழுந்தரியதீர்த்த மொனபதுமவ்விடத்திலவருமவை வருமாறியற்று மெனவுமையும்விரகை,தன்பதும முகநோக்கி யுனதுகைவாளிரந்துகங்கைதருவாயென்றுள, வன்பணிலமெடுத்தாளுந் தொழுதுகைவாணிலத்தெறிந்துவாங்கும் போதில்.

(இ-ள்) மிகவும்பத்தியையுடையகௌதமர்இந்தப்பிரகாரஞ்சொன்ன அளவில் பாவந்தீர ஆடுதற்கு ஒன்பதுதீர்த்தமும்இவ்விடத்தில் வருமபடிச்செய்யென்று ஆகாயத்திலிருந்து ஒருவார்த்தைபிறந்தது அதைகேட்டுபார்வதியும தாமரையினதுமலர்போன்ற முகத்தைப் பார்த்து உன்னுடையகையிலிருக்கிறவாளினாலே பூமியைபிளந்துகங்கைவரும்படிசெயயென்று சொல்ல ஜயசங்கையிரணிதத தாகங்கையும்வண்ணவாளாயுதத்தால்பூமியிலேவீசியெடுத்தபோது-எ-று. (௯௰)

நவநதியுமபிறவுளநனைதிகளுமச சொகந்தீரநல்லதான
சுவையதிகமுதவுபலதடாகங்களுமன கெழுந்தவந்தசுனையினூடே
பவமகலவொருமாதமுழுகியிருந்தாள் கரத்தைப்பமற்றிநீங்காச் [று
சிவவடிவுமகன்றதுதன்னுளமகிழ்ந்து கரையில்வந்தாடேவர்போ

(இ-ள்) ஒன்பதுதீர்த்தங்களும்மற்றுமுள்ளநதிகளும் விடாயாறும்படிஉதவிசெய்யும நலருசியைக்கொடுக்கின்ற அனேகம்தடாகம்உண்டானதுகள் அந்தநதிகளில் ஒருமாதவரைக்கும் அம்மன்குற்றம் நீங்கும்படி ஸ்நானஞ்செய்துக்கொண்டிருந்தாள கையைப்பற்றிக்கொண்டு விடாமலிருந்த லிங்கமுமநீங்கியது அப்போதுதேவர்களபோற்றும்படி மனனதுசந்தோஷித்து அம்மனக்கரையில்வந்துசேர்ந்தாள்-எ-று. (௯௧)

அருவருவாமொருசிவனையதன்கரைமேறபுறத்திருத்தியருச்சித்தாணம்
இருவினையுந்தவிர்ப்பானுக்கென்பாவநீர்த்தானென்றியற்பேரிட்டாள்
திருமருவும்பெருஞ்சுனைக்கு மினியகட்கதீர்த்தமெனத்திரிப்பேரிட்டாள், குருமணியையருணகிரிப்பெருமானைத்தொழக்கனகக்கோயில் சார்ந்தாள்.

(இ-ள்) அருவமாகியும்உருவமாகியும்விளங்குகின்றஅப்பற்றசிவனை அந்தநதிக்கரையிலேஎழுந்தருளச்செய்து அர்ச்சனைசெய்தாள்நம்முடைய

யங்கவினை நீவினை இரண்டையுமறுக்குங்கருணையையுடையவனுமாகிய எனபாலகுந்தீர்த் தானென்றுபேரைத்தரித்த அழகுபொருந்திய அந்தக்கலைக்குக் கட்ட தீர்த்தமென்றுபெயரிட்டாள் நிறம்பொருந்தியமணிமெத்தலை அரு ணைநகரத்தில்எழுந்தளியிருக்கின்றபரமசிவனை வணங்கும்படியாகபொன் னாகியகோவிலுக்குப்போனாள்-எ-று. (௫௨)

முருகுமலரயன்றடத்திற்படிந்துவெண்ணீரணிந்துசெங்கைமுடியிற் கூப்பி, யருகுவருங்கோதமன்சொற்படிதொழுதட்புகுந்துகணநாதமு னைநககண்ணுற், முருகிநிலமுறவிழுந்துபணிந்தெழுந்துபரவசமாயப்பா டியாடி, பருகியுவந்தழுதுயர்த்து வலம்புரிந்து தனதுகுறையுரைத்துப் போற்றி.

(இ-ள்) வாசனைபொருந்தியதாமரைமலரிலிருக்கிறபிரமாவினுடைய தீர்த்தத்தில்முழுகிவிபூதிதரித்துச்சிவந்தகைகளைசிரசில்வைத்துகரும் பிடித்தன்னருங்கவருகிறகௌதமர்சொன்னபிரகாரம உள்ளேபோய்க் குனிச்சிபொருந்தநமஸ்காரஞ்செய்து எழுந்திருந்துபரவசமாகிப்பாடி யாடிஉருக்கமடைந்துகளித்துஆனந்தக்கண்ணீர்பெருகிப்பெருமூச்செ றிந்துவலமாகவந்துதன்னுடையகுறையைசொல்லிவணங்கினாள்-எ-று

கார்த்திகைத்திங்களிற்றிருநாளாக மற்றின்படிநடத்திக்கனற்கன்ணானை தோத்திரம்பண்ணுதலுமொருசுடர்மலைமே லெழுந்தச்சுடரினூடே [த னதரியபலகோடியிரவியெனவொருசோதி யெழுந்துமின்னே வாய்த்தமலைவலமாகநடத்தியெனவுரைத்துடனே மறைந்ததன்றே.

(இ-ள்) கார்த்திகைமாசத்தில் ஆகமப்பிரகாரம்திருநாள்செய்துநெ ருப்புக்கண்களையுடைய சிவனைப்பணிந்தவளவில் மலைமேலேஒருபிரகா சமுண்டாகி அதிலேசொல்லுதற்கரிய பலகோடி சூரியப்பிரகாசமாயசு வாமியெழுந்துபெண்ணேஇந்தமலையைவலமாகநடந்துவாவெனறுசொ ல்லிமறைந்துவிட்டார்-எ-று. (௫௪)

காரிதனைச்சிலையாக்குமுனிவனுமப் படிவலமாநடத்தியென்றான் வாரியெனமறைபுகழ்க் காரிகையுநடந்தண்டன்மலர்க்கைகூப்பி பேரிகையுங்காகளமுஞ் சல்லரியும்மல்லரியும்பெரியவாணி றாயமுகந்துந்துமியுமத்தளமுங் குடமுழவுநதுவைத்தவன்றே.

(இ-ள்) அகலிகையாகியபெண்ணைக்கல்லாகியகௌதமரிஷியும் அம் மாஅப்படியே வலமாகப்போவென்றுசொல்லச் சமுத்திரம்போல்வேத கோஷ்டமுழங்கவும் ஆகாயத்திற்பேரிகை காகளம் சல்லரி மல்லரி மு சு துந்துமி மத்தளம் குடமுழா முதலானவாத்தியங்கள் முழங்கவும்பா ர்வதிஇரண்டுகையுங்கூப்பிக்கொண்டுநடந்தாள்-எ-று. (௫௫)

அரம்பையுருப்பசிமுதலாமகபதிநாட்டரிவையர்க ளாடல்காட்டக் குரும்பையெனநெருங்குமுலை வரையரமங்கையர்மலரின்குப்பைகொட் கரும்புகளிக்குந்தனயமொழிப்புலைாமங்கையரிருட்டுங்கவரியாட்ட[டக் விரும்புயுருக்காட்டுபுரியு மரவமிகுர்மணிவிளக்க மெடுத்துநீட்ட.

(இ-ள்) இந்தப்பிரகாரம்பார்வதியம்மைவரும்போது இரம்பைமுதலிய முதலாகியதெய்வலோகத்துப்பெண்கள் நாட்டியமாடத் தென்னங்குருத்து மையொத்த தனத்தையுடையமலையரமகளிர் அம்மன்கூடவந்து வருந்துபாதம்பூமியிலேபட்டு உறுத்தாமலிருக்கப்புஷ்பங்களைக்குப்பை கொட்டக் கறுப்புஞ்சாறும்போலும் வார்த்தையையுடைய கின்னரர்சாமரம் எடுத்துவீச இரும்புகூடஉருகும்படி கைசெய்கிற நாகலோகத்துப்பெண்கள இரத்தினதீபங் கையிலெடுத்துக்கொண்டுவர-எ-று.

இதுமுதலிரண்டுபாடல் குளகம்

முண்டகமண்டபமயிலும்புலோமிசையுமுறுநதுவளமுளரிமாது
கண்டகமும்வழிபாலுமொழித்துவரவிலகுடன்கைகணிட்ட
அண்டர்குலமடந்தையருமுநிவர்குலநிதையருமருவிப்பூந்தேன்
வண்டவிடுஞ்சேரகமுறி மலரினருந்துகள்சொரிந்துவழிகளாக

(இ-ள்) தாமரைப்புஷ்பமாகியமண்டபத்திலிருக்கிற லட்சுமியும்இந்திராணியும்வெண்டாமரைப்பூவிலிருக்கிறசரஸ்வதியும போகிறவழியிலிருக்கிற முள்ளுகளையும்கல்லுகளையுந்தள்ளிக்கொண்டுவரப் பூமிதேவிகைகளைநீட்டிச் சாக்கிரதையாகத்தாங்க தேவஸ்திரீகளும் முனிவர்களுடையஸ்திரீகளும புஷ்பத்திலிருக்கிற தேனருவியினாலே வழிசேறானதுநீங்கபுஷ்பத்துக்குள்ளேயிருக்கிற பராகபொடிகளைக்கொட்டி நல்லவழியாகச்செய்ய-எ-று. (௫௭)

கன்னிதுன்னிருசரணம்பொருக்கருள்வாயெனவங்கைகங்கைகூப்ப
மன்றனதிசையணுகிபழங்கிரியையெதிர்முகமாவணங்கிபோற்றி [ன்
தென்றிசையுநிருதிபெறுந்திசையினையுங்கடந்துகுடதிசைக்குச்சென்று
குன்றவிலாப்புகழாளுமழவிடைமீதினிற்காட்சிகொடுத்துப்போனான்.

வரங்கொளவணங்குமமரேனார் மகுடகோடிகளிற்றைத்து
விரிந்தசெம்மணிகட்க்கி மிளவுஞ்சிலக்குமாதோ,

(இ-ள்) எப்பொழுதும்தேவர்கள் வணங்கும்பெருமை பொருந்திய அருணாசலத்தைவலஞ்செய்வோர்களுடைய வழியிற்கிடக்கின்றபரற்கல் லுகளையிறித்துச்சிவந்தபாதமபின்புவரத்தைப்பெருகிறதற்கு வணங்கு ந்தேவர்களுடையமகுடகோடிகளிற்பதித்துப்பிரகாசிக்கின்றஇரத்தினங் களதாககிமறுபடியுஞ்சிலக்கும்எ-று. (௰க)

காணைடகொம்ககப்பெற்றன் கரியகண்டெரியப்பெற்றென்
மாளிடப்பிறவியுற்றென் மலைவலம்புரியாமாந்த
ருனுடைப்புழுக்கூடேறிசெகிடைபூசலாடி
தானிடர்ப்படுவதல்லர் ஞயகிலர்சனகவென்றார்

(இ-ள்) அப்படிப்பட்ட அருணாசலத்தைத வலஞ் செய்யாதவர்கள் நால்கால்டையுண்டாயிருந்து திரியப்பெற்றென்ன பிரயோசனம் கறுத்தக ளைகள் நன்றாகத்தெரியப் பெற்றென்ன பிரயோசனம் அரியமானிடப் பிறப்பாகப் பிறந்தென்ன பிரயோசனமு மாமிசம் நிரம்பிய புழுக்களையு

ட்டயதேகத்திலேசேர்ந்து நரகத்திலேவிழுந்து அலைந்து துன்பப்படு வதல்லாமல் விடுக்கமாட்டார்கள் சனகனேமுதலாய பிரமா-எ-று.

வஞ்சியர்புணர்ச்சிவேண்டின் மன்னவர்கைவசமாய்வேண்டி
லஞ்சியபகைகளெல்லா மக்கணத்தகற்றவேண்டிற்
பிஞ்சிளமதிபோனல்ல புதல்வரைப்பெறுதல்வேண்டிற்
சஞ்சிதமுதலாமூன்றுங் கருமமுந்தவிர்க்கவேண்டில்

(இ-ள்) அதுவல்லாமலும் நல்லஸ்திரீகளுடைய போகம்வேண்டினு ல் அரசர்கள்கைவசமாக வேண்டினாலும் அஞ்சத்தகுந்த பகையெல் லாம அக்ஷணத்திலேநீக்கவேண்டினாலும் பாலசந்திரன்போல நல் லபிள்ளைகளைப்பெறவேண்டினாலும் ஆகாமியசஞ்சிதபிராரத்துவமா கியமும்மலங்களையுநீக்கவேண்டினாலும்-எ-று. (௰௮)

முயலகனலகையிற்பூத கணங்களைமுனியவேண்டிற்
றுயருறுபிணியுமாகச் சோகமுந்தவிர்க்கவேண்டி
லியலிசையறியவேண்டின் மலைவலம்புரிகாரவல்லார்
மயலறுபுகழைவேண்டின் மலைவலம்புரிகாரவல்லார்

(இ-ள்) முயலகன்போன்ற இராட்சதரையும பசாசுகளையும் பூதகூட் டங்களையும கோபிக்கவேண்டினாலும் துன்பத்தைச்செய்யும் வியாதியை யும தேகத்தில்வரும் சோகத்தையும் நீக்கவேண்டினாலும் இயலிசைமு தலாகிய கல்வியைவேண்டினாலும் அழகைவேண்டினாலும் குற்றமற்றகீர்த்தி யைவேண்டினாலும் அந்தமலையைவலஞ்செய்வார்பெரியோர்கள்-எ-று.

வரந்தருமருக்கவார மலைவலம்புரிந்தோரெய்யான
தெரிந்தமண்டலத்தைக்கீறிச் சிவபதியாசசேர்வார்
திரந்தருஞ்சோமவாரந் திருமலைவலமாய்வந்தோர்
புரந்தரனெனவேம்பாரும் புரந்தரன்றனமைபூண்பார்

(இ-ள்) சிரேஷ்டமாகிய ஆதிவாரத்தில் அந்தமலையைவலஞ்செய்த வர்கள் சூரியமண்டலத்தைப்பிளந்து சிவபதத்தைச்சேர்வார்கள் ஸ்தி ரமாகியசோமவாரத்தில் வலமாயவந்தவர்கள் தேவேந்திரன்போல எ ழுலகத்தையுமாண்டு சிவசாரூபியத்தையடைவார்கள்-எ-று. (௨௰)

மங்களதினத்திற்சூழ்வோர் கடனுடன்வறுமைநீங்கி
சங்கிலித்தொடராமேழு பிறப்பெயுந்தவிர்ப்பார்புந்திக்
கெவகளுபகரைச்சூழ்வோர் சிறுக்கலைமறைகளாறா
றங்கமுந்தெளிந்துமுத்திக் குருகாரயமாகாவார்

(இ-ள்) மங்களவாரத்தில் கிரியைவலஞ்செய்வோர் தங்களுக்குண் டாகியகடனையும் தரித்திரத்தையுநீங்கிச் சங்கிலிக்கட்டுபோல தம் மைவிடாதஏழுபிறப்பையு நீக்குவார்கள் புதவாரத்தில் சுவாமியைப்பி ரதட்சணஞ்செய்வோர் நாலுவேதங்களும் ஆறுசாஸ்திரங்களும் அறு பத்துநாலுகலைகளும் தெரிந்து முத்திக்கு சொருபனாவராய்த் தெவாக ளாவார்கள்-எ-று. (௨

மாவியாழத்திற்செய்ய மணிவலாவலமாய்ச்சூழ்வோர்
மூவரும்புகழத்தேவர் முனிவர்தங்குரவராவார்
நாவிலாவெள்ளிவாரந்தனில்வலம்புரிந்தோர்கஞ்சப்
பூவையைப்புணரும்பூவைப் புணருமால்புரத்திற்சேர்வார்

(இ-ள்) பெருமைபொருந்திய குருவாரத்திலே அந்தமலையைவலமாய்வந்தவர்கள் திருமூர்த்திகளும் புகழும்படியாகத் தேவர்கள் முனிவர்களுக்குச்சமானராவார்கள் குறைவிலாத சுக்கிரவாரத்தில்வலஞ்செய்தவர்கள் தாமரைமலரிலிருக்கின்ற இலட்சுமியைச்சேரும் காயாமலரைபொத்த விஷ்ணுபதத்தைச்சேர்வார்கள்-எ-று. (௨௨

உதயமேசனிநாட்சூழ்வோர்க் கொண்பதுகிரகநன்றாய்
பதினோராமிடத்திற்றாய பலன்களைப்பலியாநிற்கும்
மதியுனிசிவனிராயு மருடம்வந்துதிக்குநாளும்
அதிகமாமதுமாகு மைப்பசிமுதலாமூன்றும்

(இ-ள்) சனிவாரஉதயத்தில்பிரதட்சணஞ்செய்வோர்களுக்குநவக்கிரகங்களும்பதினோராமிடத்திலிருந்தபலனைக்கொடுப்பார்கள்சிவராத்திரியிலுமவருஷப்பிறப்பினென்றும்ஐப்பசிமுதலாகியமூன்றுமாதமும் வலஞ்செய்தவர்களுக்குமேற்சொன்னபலன்களிலும்அதிகபலன்சித்திக்கும்

அயனசங்கிராமமாசிமகத்திலர்த்தோதயத்தில்
வெயிலுறுங்கதிரைப்பாம்பு விழுங்குநாளவிதிபாதத்திற்
பயனுறவலஞ்செயவோர்க்கும் பலன்களிற்கோடியாகும்
அயர்வறத்தனமுஞ்சூழ்வார பேறறையாரறிபவல்லார்.

(இ-ள்) உத்தராயணத்திலும் தட்சணாயணத்திலும் மாசிமகத்திலும் அர்த்தோதயத்திலும் சூரியகிரண காலத்திலும் விதிபாதத்திலும் இஷ்டசித்தியைஅடையவிரும்பி வலஞ்செய்தவர்களுக்குக்கோடிபங்குஅதிகமாகப் பலன்கிடைக்கும் தளர்ச்சியடையாமல் தினந்தோறுமவலஞ்செய்தவர்களுக்குஉண்டாகும்பலனையார் அறிந்துசொல்லுவதற்குவல்லவர்-எ-று. (௨௪)

காரிகையவரையற்றைக் கனவிலும்புணர்ந்திடாம
லீரினின்மூழ்கிநூய துடுத்தவெண்ணீறுசாத்தி
யாறிடைமுறையேதான மளித்துதாமலைதொள்ளாமப்
பாரிடைநடந்துசூழ்ந்த தேவரைப்பணிந்துபோற்றி.

(இ-ள்) அப்படிப்பட்ட அதிகபலனைத் தாப்படாமல் அருணாசலத்தைவலஞ்செய்யும்விதமெப்படியெனில்பிரதக்ஷணஞ்செய்யும அன்றைக்குப்பெண்களைச்சொற்பனத்திலுமினையாமல்சலத்தில்ஸ்நானஞ் செய்து பரிசுத்தமாகியவஸ்திரத்தையுடுத்திக்கொண்டு விபூதிதரித்து அந்தவிடத்திலே தானந்கிரமமாகக்கொடுத்து தாப் ஒருவரிடத்தில்தானம்வாங்காமல் பூமியிலேகாலினாலேநடந்து கிரியைச்சுற்றியிருக்கிற தேவர்களைப்பணிந்துவணங்கி-எ-று. (௨௫)

கஞ்சுகம்போர்வைநீத்துக் கவிகையுஞ்செருப்புநீத்தே
யஞ்சுதல்வெகுளிசோக மகணைத்தகற்றிவாசி
குஞ்சரமுதலாயுள்ள வாகனக்குறுகிடாமல்
விஞ்சியவடைக்காயுண்டி வழியிடைவெறுப்பதாக்கி.

(இ-ள்) அங்கத்தில் தரிக்குஞ்சட்டையும் போர்வையையும் நீக்கிக்குடைபிடித்துக்கொள்ளாமல் கால்களுக்குச் செருப்புப்போட்டுக்கொள்ளாமல் பயமும் கோபமும் சோபமும் நீக்கிக் குதிரை யானை முதலாகிய வாகனங்களிலேறாமல் தாம்பூலம் தரிக்காமல் போசனத்தையும வெறுத்து-எ-று. (௨௬)

செங்கைவீசாமற்சோரா துவகையாற்சிரத்திற்கூப்பி
மங்கையர்பதிதர்நீச ருறுப்பிளைவழிவுநோக்கா
தங்குறுமடியினோசை செவிப்புமாதரசர்மாதர்
திங்களையிரண்டுசென்று நடந்திடுஞ்செயல்போற்சென்று.

(இ-ள்) கைகளை வீசிக்கொண்டு போகாமல் சோர்வில்லாமல்சந்தோஷத்தொடு சிரசிறகையைவைத்து கூப்பிக்கொண்டு,ஸ்திரீகளையும்பாவிகளையும நீசரையும் அவயவ ஈனரையும் பாராமல்நடக்கிறபோது அடியினுடையசத்தம் காதிற்கேட்காமல் மெள்ள இராஜஸ்திரீகள பத்துமாதத்துக் கருப்பத்தோடு நடக்கிறதுபோலநடந்து-எ-று. (௨௭)

இருவினையகற்றுமந்த மலையையெண் டிசையுமவீழ்ந்து
பரவியங்கதனைச்சூழ்ந்த கடவுளர்பணிந்துபோற்றி
யருவமாய்வலமாஞ்சித்த ரமரரைமனத்தார்போற்று
யுருகியங்கவற்மேற்கையாற் படுமெனவொடுங்கிச்சென்று

(இ-ள்) நலவினை தீவினை இரண்டையுமநீக்கும் அக்கிரியை எட்டுத்திக்கும்வணங்கி அந்தத்திக்கிலிருக்கின்ற சுவாமிகளையும்வணங்கிஉருவந்தெரியாமல்வலஞ்செய்துகொண்டு வருகிறசித்தர்களையும்தேவர்களையும் மனதினால் வந்தனஞ்செய்து அவர்கள்மேல்தங்கள் கைகால்கள் படுமென்றுபயந்து வழியினின்றும் ஒதுங்கிச்சென்று-எ-று. (௨௮)

வானமார்மலையைப்பொன்னிற் படிகசன்மணியாயெண்ணி
மோனமாய்நடக்கவல்ல திறைபுகழ்மொழியைக்கேட்க
வானவிச்செயலிறலே வலஞ்செய்தாலபத்திளண்ணி
யேனமுன்னறியான்றூளைப் பணிந்துதன்னிருக்கையெய்தி.

(இ-ள்) ஆகாயமட்டுமளாவிய அந்தமலையைப் பொன்போலவும் படிகம்போலவும், இரத்தினம்போலவும் நினைந்து மவுனமாய்நடக்கவேண்டியது அல்லது சுவாமியின் ஸ்துதிகளைக்கேட்கவேண்டியது இப்படிப்

பட்ட தன்மையாகவலம்வந்து சேர்பிறுட்சென்றியிலிருக்குறுவாகிய பன்னியறியாத சுவாமியினையமைகளை வணங்கித் தங்கியிருக்குமிடத்துக்குவந்தனள்-எ-று. (உசு)

குன்றெனுங்குணத்தவர்குழ விருந்துமின் கனியாரல்கொள்க
வன்றியேபுலவுநீத்த வடிசிலையுண்க நீதி
நின்றவத்தலத்தோர் செய்யு நிலைமையீதிதாரத்திற்
சென்றவர்வருத்தமாயெவ் வகைவலஞ்செயினுஞ்சீராம்.

(இ-ள்) மலைபோலுயர்ந்தகுணத்தையுடையவராகிய சிவபத்தர்கள்கூடியிருந்து மதுரமாகியபழங்களும் பாலுஞ்சாப்பிடக்கடவர் அப்படியில்லாவிட்டால் மாமிசபதார்த்தமில்லாமல் அன்னத்தைப்புசிக்கக்கடவர் இப்படிப்பட்ட செய்கைகளை நீதிபொருந்திய அந்த ஸ்தலத்திலிருக்கிறவர்கள் செய்யவேண்டியது அதிகதூரத்திலநின்றும வந்தவர்கள தங்களுடையவருத்தத்தினாலேஎவ்விதமாகவலஞ்செய்தாலும்நன்மையாகும

தணடுதலிலாதஞானச் சனகவிசசயிலஞ்சூழ
வெண்டிசைபுரப்போர்தமபே ரின்றசிவவுருவங்கண்டார்
வணடிசைபெருகுமோதி மலைமகண்மலையின்கீழ்பால
கண்டனன்பவளவெறபிற கயிலைவெற்பிறைவன்காட்சி

(இ-ள்) கெடுதலிலலாத ஞானத்தையுடைய சனகரிஷியே இம்மலையினெட்டுதிக்கிலும் திக்குப்பாலகா எட்டுபேரும தங்களபேரினாலே இலிங்கங்களை ஸ்தாபித்துப் பூசித்திருக்கிறார்கள வணடுகளினது ஒலிபொருந்திய கூந்தலையுடைய பாாவதியானவள கிரியின் கிழக்குத்திக்கில் பவளமலைபோல் ஒருலிங்கத்தை ஸ்தாபித்துப்பூசித்தாள-எ-று.

மணிவரையரியிறைசூழ்ந்து வச்சிராங்கதனப்போது
புணர்பலந்தவிர்க்கத்தென்பால புழுகணியிறையைக்கண்டான்
தணிவிலாவினைகணிக்கத் தமியனேன்மலையின்மேறகால்
அணியண்ணாமலையானென்று மருவுருவிறையைக்கண்டேன்

(இ-ள்) அருணாசலத்தினிடத்தில் குதிரையிலேறிக்கொண்டு வந்த வச்சிராங்கதபாண்டியன் அக்காலத்தில் தன்னையுடைந்த பாவத்தைத்தீர்க்கத் தென்திக்கில புழுகணியிறையென்று ஒருலிங்கத்தைஸ்தாபித்துப பூசித்தான் தணியாதபாவங்களை நீக்கிக்கொள்ள நானும அந்தமலையின் மேற்குத்திக்கில் அணியண்ணாமலையானென்கிற பேரிட்டு ஒருலிங்கத்தைஸ்தாபித்துப் பூசைசெய்தேன்-எ-று. (கூஉ)

வாலவெங்கதிர்மேற்சோண வரைகடந்தொருநாட்பாய்ந்து
சாலுமத்துயரந்தீரத் தனதுபேரிறையைக்கண்டா
னலையுமுழுதுந்தேவர் நாகர்நாட்டுறைவோர்சித்தர்
சிலமாமுனிவர்கண்ட சிவனுருத்தெரிக்கொணாதே

(இ-ள்) சூரியனானவன் அருணாசலத்தைத் தாண்டிப்போனதினால் வந்தபாவந்தீரத் தன்பேரிட்டு ஒருலிங்கத்தை ஸ்தாபித்துப் பூசைசெய்தான் அதுவல்லாமல் அந்த மலையிலிருக்கிற கோயில்கள் முழுதும் தேவர்கள் நாகலோகத்தார்கள் முனிவர்கள் இவர்களாலே ஸ்தாபித்துப் பூசைபண்ணப்பட்ட சிவலிங்கங்களை இவ்வளவென்று சொல்லக்கூடாது.

ஈசனார்வடிவமான லிங்கமவ்வெல்லைசூழ
யோசனைமூன்றுஞ்சேர நெருங்கும்வானுடுக்கள்போலப்
பேசவதெவனோவந்த தலத்தினிற்பெருமைவேலன்
நேசுறுங்கவுரியானை முகத்தனுந் தெரிக்கொணாதே.

(இ-ள்) பரமசிவரூபமான அனேக லிங்கங்கள் அவ்வெல்லையைச்சுற்றி மூன்றுகாதவழிமட்டும் ஆகாயத்து நக்ஷத்திரங்களபோல நெருங்கியிருக்கும் அப்படியிருக்கிறபோது அந்தஸ்தலத்தினது பெருமையை சிவசுப்பிரமணியர் பார்வதி விநாயகர் இவர்களாலேயே சொல்லக்கூடாமலிருக்கிறபோது என்னால் சொல்லப்படுமோ-எ-று. (௧௪)

தாதவிழ்மலரோனிவ்வா றுரைத்தலுஞ்சனகன்போற்றி
வேதனேபிறவிதீர்க்கும் விமலனேவிமலனான
வாதியைப்பழித்தோனசெம்பொன் கவர்ந்தபேரடையுந்தீங்கும்
பாதகந்தவிருமாறும் பகரெனப்பதுமன்கூறும்.

(இ-ள்) தாதுவிரிந்த தாமரைமலரிலிருக்கின்ற பிரமமா இந்தப்பிகாரஞ்சொன்னதும், ஜனகரிஷியானவர் வணங்கி வேதமுழுதுங்கர்துணர்ந்தவரே, பிறப்பைநீக்குமபரிசுத்தரே மலரகிதரான சிவனைப்பழித்தவர்களுக்கு வந்தபாவமும் அவர்தனத்தை அபகரித்தவர்களடையும் பாவமும அவைகள்நீங்கும் வகையும் சொல்லுமென்றுகேட்கப் பிரமாசொல்லுகிறார்-எ-று. (௧௫)

ஒன்பதாவது திருமலை வலம்புரிச்சருக்கமுற்றிற்று.
ஆ. திருவிருத்தம் ௫௭௪

௨

பத்தாவது

ஆதித்தச்சருக்கம்.

எழுசீர்க்கழிநெடிலஆசிரியவிருத்தம்

அற்றமற்றமுனிவாகேளு மருணபூதரத்துடன்
மற்றவெறபுமொக்குமென் றிகழுந்துராத்தமனிதர்வாய்

புற்றெழுந்து புகையெழுந்து புழுநெளிந்துபுலவுநீர்
சுற்றெழுந்துபெருகுமண்டு சோரிமாரிசொரியுமே

(இ-ள்) குற்றம்நீங்கிய முனிவர்கள் சூழ்ந்துவருகின்ற அருணாசலமென்னு மலையோடு மற்ற மலைகளையு மொக்குமென்று நிந்தை சொன்னமனிதருடைய வாயிலே புற்றுண்டாகிப் புகைபுகைந்து புழுக்களநெளிந்து புலால்நாற்றம் நாறுகின்ற நீர்சுற்றிபெழுந்து மிகவும இரத்தமாரி சொரியும்-எ-று (க)

அந்தமைந்தர் தம்மையேற்றி யந்தகன்றனேவலாய்
வந்ததூதர்செக்கிலிட் டரைத்தரைத்தெடுப்பர்வாய்
வெந்தவாளிநுறறுப்ப ரெந்தைசோணவெற்பையே
நிந்தைசெய்வையென்றடித்து நெய்யில்வேகவைப்பரே.

(இ-ள்) அருணாசலத்தை நிந்தித்த அந்தமனிதர்களைப் பின்புயமனுடைய ஏவலாய வந்த தூதர்கள செக்கில் அநேகதரமபோட்டு அரைத்து எடுப்பார்கள் அவர்களுடைய வாய்களை நெருப்பிற் போட்டுக் காய்ச்சியகத்தியினுலறுப்பார்களஎங்களாண்டவன்மலையையோநிந்தைசெய்வாயென்று அடித்துநெய்யிலேவேகப்போடுவார்கள்.-எ-று.

பஞ்செழுத்துவைத்தரக் குருக்கிவாய்பரப்பியே
நஞ்சினைப்புகட்டிவெய்ய நரகிலேவிடத்துவார்
அஞ்சியந்தநரகுதானுமருவருந்தலைநிடும்
நெஞ்சகத்திலெண்ணினர் தமக்குமீது நிகழுமே.

(இ-ள்) பின்னும்இந்தஅருணாசலமதை நிந்தித்தவர்களையமதூதர்கள்பஞ்சரகத்துவைத்து அரக்கையுருக்கி வாயிலேவிட்டு நஞ்சைக்குடிப்பித்துத்தீமையாகியநரகிலே தள்ளுவார்கள் அந்நரகமோவென்றால் பயப்பட்டுஇவர்களைத்தாங்குகிறதற்குசசகிக்காமல மிகவும்வருந்தும இப்படிப்பட்டதுன்பம்மனதிலேஇந்தமலையைக் குறைவாக வெண்ணினவாகளுக்குமஉண்டாம்-எ-று. (கூ)

குருக்கடைந்தைதாயராவி கொன்றதீயர்முதலினோ
ரிருக்கும்வெய்யநரகின்மீதி லிட்டபோதிலவர்களும
பெருக்கநொந்துபாவியென்று பேசுவார்கடம்முடன்
சரிக்கொணாதுதள்ளுமென்று தங்கள்கண்புதைப்பரே.

(இ-ள்) ஆசாரிகளையும் தாய்தகப்பன்மாரையும் பிராணன்வாங்கிய தீயபாவிகள்முதலானவர்கள்வாசஞ்செய்யுங்கொடிதாகியநரகத்திலே இந்த அருணாசலத்தைநிந்தித்தவர்களைப் போட்டபோதுஇவாகளைமுன்னமேயிருக்கும் பாவிகள்மிகவும்வருத்தப்பட்டு சுவாமியைநிதநித்தபடியினாலேயிம்மஹாபாவிகளென்று சொல்லிநமமோடேயிவாகளசரியாயிரு

க்கக்கூடாது தள்ளிவிடுமென்று தங்கள்கண்களைப் பொத்திக் கொள்ளு வார்கள்-எ-று. (௪)

என்றுரைத்துநானுமையமேழுமுண்டமாலுமா
யன்றுமின்றுமளவிடாதவருணபூதரத்தையோர்
குன்றமென்றிகழ்ந்துசென்று குன்றிமெய்குறைந்துமுன்
கன்றினனொருதக்னென்று கதைவிளம்பலாயினன்.

(இ-ள்) பிர்மமாவானவர் இப்படியென்றுசனகரிஷிக்குச்சொல்லிப்பி ன்னுஞ்சொல்லுவார் நானும் ஏழுலகத்தையுஞ் சாப்பிட்ட விஷ்ணுவுஞ் சோகது அன்றுமுதலின்றையவரைக்கு மளவிடப்படாத மகிமையுள்ள அருணசலத்தைஒருவன்ஒருமலையென்றிகழ்ச்சிசெய்துபோய்க் குன்று தலைடைந்து தேகங்குறைந்துதுக்கப்பட்டான் முன்காலத்திலேயென்று அக்கதையைசசொல்லத்தொடங்கினர்-எ-று.

உலவுகின்றசோதியாவு முளளின்வைத்திவ்வுலகிலோர்
மலையதாகிநின்றதெய்வமலையைமறறமலைகளபோல
அலகுபெற்றவிரவியெண்ணி யாழியொன்றுலாசியே
மீ ளருதேரம்மலையினுச்சி யெல்லையாய்கடத்தினன்

(இ-ள) நான்குதிக்கிலுஞ்சென்று விளங்குகின்றபிரகாசங்களையெல் லாம தனதுளளத்திலவைத்துக்கொண்டு இத்தப்பூலோகத்தில் ஒப்பற் றமலையுருவங்கொண்ட தெயவீகமாகிய அருணசலத்தை மறறமலைகள போல்நினைத்த ஒருசக்கரமும ஏழுகுதிரையும்பூண்ட தேரை அந்தஅரு ணசலமலையினுச்சிவழியின் எல்லையாகநடததினன்சூரியன்-எ-று. (௫)

முகுந்தர்தேடுமந்தவெறபின்முடியின்மேவுமுன்னமே
மிகுந்தசோதியுள்ளினும வெடித்தெழுந்துவெம்மையாய்
புகைந்துசொல்லவிரகழலவர்புரமெனப்பொரிந்ததே
யுகைந்தபச்சைவாசியோ வுலர்ந்தவாசியானதே,

(இ-ள்) சூரியன்விஷ்ணுவால்தேடப்பட்டஅந்தமலையினது உச்சியி லே போகிறதற்குமுன்னே மிகுந்தபிரகாசமான மலைவெடித்து அந்தவு ள்ளிடத்தில்நின்றுஎழுந்துவெப்பங்கொண்டுபுகைந்துவரத் தேரானது திரிபுரமெரித்த பரமசிவனது நகையாகிய நெருப்பிலேபொரிந்ததுபோ லப் பொரிந்துபோய்விட்டது நடத்தப்பட்டகுதிரைகளோ சீவனில்லாத குதிரைகளானதுகள்-எ-று. (எ)

அறுசீரடி-யாசிரிய-விருத்தம்.

குதிரையுங்கரிகளாகிக் கொடியதேரலகைத்தோய்க்
கதிரையுந்தனதுபாகன் காலெனவிழுந்தடானு
மதியழிந்திருந்தானந்த மலைவலஞ்செய்துஞானக்
கதிபெறசசெல்வேன்கண்டு கதிரவறகினையுணர்த்தேன்.

இ-ள்) அந்தமலையினிடத்திலுதித்தெழுந்தவாரணமயப்பத்தினாலே குதிரைகளேழும் கரிகளாகப்போய்க் கொடியையுடைய தேர் காலல் போலத்தோன்றிய முருக்கில்லாத் தாழ்த்தன்னுடைய பாகனுமவன் காலையிழந்ததுபோலக் கிரணங்களெல்லாவற்றையும் தானிழந்து சூரியனாமதிகெட்டிருந்தான் அந்தமலையைவலஞ்செய்துகொண்டு மேலாகிய திக்கை அடையும்படியாகப்போகாநின்றதைப் பார்த்து அந்தச்சூரியனுக்கு இந்தவார்த்தைகளைச்சொன்னேன்-எ-று. (அ)

ஐயனே மலையென்றெண்ணி யகந்தையாலிகழ்ந்துவீழ்ந்த
கையனேயொருகாலத்துங் கதியிலையுனக்கென்றாலுஞ்
செய்யுமோர்தொழிலினாலே நீக்காலந்தெளிவுளார்க்கு
மெய்யனையருணையானை வலஞ்செயென்றுரைத்துமீண்டேன்.

(இ-ள்) அருணாசலேசுரரை ஒருமலையென்றுநினைத்து அகங்காரத்தினால் நிந்தித்து கீழேவிழுந்து தி-ங்கின்ற ஆயிரங்கிரணங்களையுடைய சூரியனே உனக்குள்ளதவணைகயிலும ஒருகாலத்துமகதிகிடையாதப்படியிருந்தாலும ஒருதொழிலினாலே கிடைக்கலாம அது யாதென்றால் தெளிவுள்ளவருக்கு மெய்மையாகிய அருணாசலத்தை வலஞ்செய்துகொள்வாயென்றுசொல்லத்திருமபினேனென்றான் பிரம்மா-எ-று.(கூ)

ஓதியபடியேசென்று பொன்மலைவலமாய்முன்னஞ்
சாதிதவருக்கனசோணாசலத்தினைவலமாய்வந்தான்
வாதிக்குமழுவினானு மழவிடைமீதிற்கோடி
யாதித்தரெனவேதோன்றி யாதித்தற்கருளிப்போனான்.

(இ-ள்) பிரம்மாவினவா அனுக்கிரகஞ்செய்தபடியே மகாமேருகிரியை முன்னேவலமாகவருகின்ற சூரியன் அருணாசலத்தை வலஞ்செய்துகொண்டேந்தான் அந்தச்சூரியனுக்கெதிரே வாதித்துசசத்துருக்களைகெல்லுகின்ற மழுவையேந்திய பரமசிவன்இளமையாகிய ரிஷபத்திலே கோடிசூரியர்போலத்தோன்றி அனுக்கிரகஞ்செய்து கைலாயத்துக்குளெழுந்தருளினார்-எ-று. (௰)

பன்னிருமாதந்தோறும் பரிதிமுற்பயத்தினாலே
மன்னரியின்வழிவதான மலையினைவலமாய்ச்செல்வான்
சென்னியிளெல்லைசெல்லா னிடப்புறஞ்செல்வானன்றேல்
அங்கிலைவரும்போதேதனி யலாசொரிந்தனுமென்றான்.

(இ-ள்) சித்திரைமுதல்பங்குனியீறாகச்சொல்லப்பட்ட பன்னிரண்டுமாதமும்சூரியன்முன்னேதனக்குண்டானபயத்தினாலே அக்கினிசொ

ரூபமாகியமலையைவலஞ்செய்துகொண்டுபோவான அம்மலையினுடைய உச்சியின்மேலும்போகான் இடப்புறமாகவும்போகான் அந்தமலைக்குச் சமீபத்தில்வரும்போது ஸ்தோத்திரஞ் செய்துபுஷ்பமாரியொழிந்து செலவானென்றுசொன்னார்பிரம்மா-எ-று.

பத்தாவது-ஆதித்தச்-சருக்கம்-முற்றிற்று.

ஆ திருவிருத்தம-ருசுஉ



உ

பதினோராவது.

பிரதத்தச்சருக்கம்.

எழுசீர்க்கழிநெடில்விருத்தம்.

அருணைவாழிறைவன்றிரவியமணுமட்டாயினுங்கரந்தபேருடனே
மரணமாய்நமனுடடழலிலேகுளிப்பர் வசிரவுலக்கையான்மறிவ, ரிரு
ணிறைநரகமிருபத்தெண்கோடியிட்டதிலுமடையிலேயிருப்பா,தரணி
யிற்புழுவாய்ப்பிறப்பர்களவுதனக்கிசைத்தவருமத்தகையர்.

(இ-ள்) அருணாசலேசுரரது திரவியத்தில் அணுவளவாவது திருடினவர்கள உடனேமரணமடைந்து யமலோகத்திற்குப் போய்அக்கினிக்குழியிலேவிழுந்து அவஸ்தைப்படுவார்கள் வசிரத்தினாற்செய்த உலக்கையால் அடிபடுவார்கள் இருள்நிறைந்த இருபத்தெட்டுகோடிநரகங்களிலும் அடைவாகவிருந்து கிடப்பார்கள் மறுபடியும பூமியிலேவந்து புழுவாய்ப்பிறப்பார்கள் அந்தத்திருட்டுக்குடன்பட்டிருந்தவர்களும் அப்படிப்பட்டதுன்பத்தை அடைவார்கள்-எ-று. (க)

ஒவ்வியதரையுளிசைத்தபொன்னெதிரே யுற்றபேருடலையு மொறுக்குங், தேங்கியகருணையருணாயகர்பொற்செய்கையைப்படியினிற்கரந்து,வாங்கியபெயரைக்கிளையுடன்சிதைக்குமலையினுங்கடலினுமொளித்து, நீங்கியபொழுதுந்தொடர்ந்திடும் விடுமோநிழலெனத்தொடருமெந்நிலத்தும்,

(இ-ள்) திருடிபூமியினுள்ளொளித்துவைக்கப்பட்டபொன்னானது அந்த விடத்தின்மேல் தந்தவருடையதேகத்தையும் கண்டிக்கும அப்படிசெய்வது யிருந்தகிருபையை யுடைய அருணாசலேசுருடையதிரவியத்தினது செய்தியாம் அந்தப்பூமியில்லொளித்துவைத்துஎடுத்துக்கொண்டவரையோவென்றால் அவர்களுறவோடுகெடுக்கும் மலையிலும கடலிலுமொளித்துக்கொண்டபொழுதுந் தொடர்ந்தவருத்தம் விடமாட்டாது எவ்விடத்திற்போனாலும் நிழலைப்போலதொடரும-எ-று, (௨)

கடிக்கலாஞ் சிலையைவிழுங்கலாநெருப்பைக் கடுவிடங்குழைத்திழைத்தெடுத்துக், குடிக்கலாமிரும்பை யருந்தலாங்கடுமபாறகொள்ளலாமருந்தினற்குணத்தால். முடிக்கலாம்பகையை யருணாயகாபொன்விழுங்கினல்மிடற்றிலேபிடிக்கும், உடற்குளேகனலும்புகையுமவ்வளவோ வுயிரையுமுளத்தையுமொறுக்கும்.

(இ-ள்) பின்னுஞ்சொல்லுவார் பிர்மா கல்லைக்கடிக்கலாம்நெருப்பையெடுத்துவிழுங்கிவிடலாம விஷத்தோடேகொல்லும்படியான வஸ்துக்களைச்சேர்த்துக் குழைத்தெடுத்துச்சாப்பிடலாம் இரும்பைப் புசிக்கலாம் கள்ளிப்பால்முதலியவற்றையுங் குடிக்கலாம் இவைகள்உபத்திரவஞ் செய்யவொட்டாமல்நல்லமருந்துகளாலே நிவர்த்திபண்ணிக்கொள்ளலாம் அருணாசலேசுரர் திரவியத்தைச்சாப்பிட்டவுடனேதொண்டையைப் பிடித்துக்கொள்ளும்தேகத்துக்குள்ளேநெருப்பாகக்கனற்றும்புகையுண்டாக்குமவ்வளவுதான் செய்யுமோவென்றால் அவர்களுயிரையுங்கொன்று உள்ளத்தையுங்கெடுக்கும்-எ-று. (௩)

முக்கணன்பொருளைக்கவர்ந்தபேரிருக்க முயன்றபேர்நினைத்தபேர்முதலா, யக்கணத்தழிவரவர்களுமிருக்கவடியவர்பொருட்கவர்ந்திலைக்கத்தக்கதுநினைத்தார்கெடுவரொன்றுரைத்துச் சத்தியம்பலபலசாற்றிச்,செக்கருங்கருகவொளிவிடுமணிப்பூண்டிசைமுகனொருகதைசெப்பும்.

(இ-ள்) மூன்று கண்களை யுடைய அருணாசலேசுரரது திரவியத்தைத் திருடின வர்கள் படுகின்றதுன்ப மிப்படிப்பட்டது அது இருக்கட்டும் அந்தப்பொருளைத் திருடுகிற தற்கு முயற்சி செய்தவர்கள் திருடநினைத்தவர்கள் இவர்க ளந்தக் கணத்திலே யழிவார்கள்

அவர்களுமிருக்கட்டும் சிவபக்தர்களுடையபொருளைத் திருடியவர்களை த் துன்பப்படுத்த நினைத்தபேர்களும் கெடுவார்களென்று பலபலசாத்தி யத்தோடேஞ்சொல்லிச் செல்வாளமுன் கருகும்படி ஒளிவிடுகின்ற இட த்திருபாணகளைத்தரித்த பிர்மாவானவர் ஒருகதைசொல்லத்தொடங் கிறார்-எ-று. (௪)

முன்னையேயொருநாள்வடதிசைக்கிறைவன் மூழ்மணிக்கங்கைநீர்த் துறைவன், இக்கிலத்திழிந்தவிந்திரனனையாளுண்மையில் முருகவேணி கர்வாள், மன்னவர்நிறைந்த மகுடகோடிகளின் வயிரநாயகங்களாற்றே ய்ந்த,பொன்னவிர்கழலான் றருமமுன்கழலான்புகழ்பெயர் பிரதத்தனென் பான்.

(இ-ள்) பிர்மாசொல்லுகிறார் முன்காலத்திலே ஒருநாள் வடதேசத் துக்கு இராஜாவாயிருக்கிறவன் விலையுயர்ந்தமுத்துக்களுக் கிருப்பிடமா கியகங்காநதித்துறையையுடையவன் தெய்வலோகத்தினின்று பூமியிலி றங்கிய தேவேந்திரன்போன்றவன் ஆண்மைக்குணத்தில் சிவசுப்பிரம ணியருக்குச் சமானமானவன் இராஜாக்கள்பணியும்போது அவர்களா லே நிரைநிரையாகத்தாழ்த்தப்பட்ட கிரீடகோடிகளில்இழைக்கப்பட்ட வீரகண்டையைத்தரித்தவன் தருமமென்பதை இடைவிடாதுசெய்கிற வன் கீர்த்திபொருந்தியபிரதத்தனென்னும் பெயரையுடையவன்-எ-று.

காலனேர்விழியார்முகமெனவிளங்கிக் களங்குடைத் தொழுக்கியமதி போல், நீலமாமணிக்காம்பினைக்கவெண்கவிகைநெடுநிலப்பரப்பெலாநி கழ்த்தச், சாலவேபணியாவரசர்களிவன்பொற்சரணமே படிந்துயிர்பெ றுமென், றேலவேயழைக்குந்தருமதேவதைபோலிரண்டு சாமரைகளா ர்த்திடவே.

(இ-ள்) யமன்போலக்கொடுமையைச் செய்கின்றகண்களை யுடைய பெண்களதுமுகம்போல விளங்கிக்களங்கத்தையுடைத்தா யொழுகவிட்ட சந்திரன்போல நீலரத்தினமிழைத்திருக்கிற காம்பையுடைய வெள்ளை க்குடையானது நீண்டசக்கிரிகையைப் பூமியின்பரப்பெல்லாம் நிகழ்த் துவும் மிகுந்தவரிசைகளையோடே பணியாத சத்துரு ராஜாக்களைப்பார்த் து இந்திரனுடைய அடியிணைகளை வணங்கி உங்களுயிரை இறக் காமல் பெறுக்கொள்ளுங்களென்று பொருந்த அழைக்குந்தருமதேவ தையைப்போல இரண்டுசாமரங்கள்வீசவும்-எ-று, (௬)

வருணமண்டலத்திற் புரவிபோந்திடக்தமரகதக்குரகதம்வயங்க, அ ருணமண்டலத்தை யனைவிடுங்கொடித்தே ரடவிகள்புடைவினயயடைப்ப க், கிரணசிந்தூரத்துப்புகர்முகக்குப்பிற்கிம்புரிக்கிரிசைகளரத்,துரணி பாதலிங்க மக்கிரிகணத்தோ டெழுநதனன்மண்டயாத்திரையே.

(இ-ள்) வருணமண்டலத்திலே விளங்கும் குதிரைகள்போலுயர்வாகிய மரகதநிறத்தையுடைய குதிரைகள்பிரகாசிக்கவும் சூரிய மண்டலத்தையளாவிய கொடிகள்கட்டியதேர்க்காடுகள் பூமியைப்படைக்கவும் சிரணம்பொருந்திய சிந்தூரந்தீட்டிய புள்ளிகளையுடைய முகத்தையும் பூண்கட்டிய தந்தங்களையுடைய யானைகள் திசைகடோறும் பிரகாசிக்கவும் சத்துருமன்னர் பயப்பட மந்திரி கூட்டத்தோடுஞ் சேனைகளோடும் பிரயாணப்பட்டான் யாத்திரையாகப் பிரதத்தராஜன்-எ-று. (எ)

அங்கர்புற்றேற யவனர்வெற்படைய வவந்தியர்வில்லிருண்கௌவச்
சங்கிலித்தொடக்காய மற்றமன்னவர்கள் தம்மிறைதாங்களேசுமக்க
சிங்கவேறெனவே சோழநாட்டணைவான் றிருநதிகடந்துதென்னருணைக்
கங்கைவார்சடையான்கோயிலிற்புகுந்தான்கங்கையுங்காசியும்புரப்பான்

(இ-ள்) இந்தப்பிரதத்தராசன்பிரயாணப்பட்டபோது அங்கதேசத்தரசர் பயந்து புற்றிலேறிக்கொள்ளவும் யவனதேசத்து இராசர்கள் மலையிலொளித்துக்கொள்ளவும் அவந்திதேசத்தரசர் விலவிருக்கிற காணியைக்கௌவிக்கொள்ளவும் மற்றதேசத்துஇராசர்கள் சங்கிலிபோலத் தொடர்ந்து நின்று தாங்கள் கட்டவேண்டிய கப்பங்களைத்தாங்களே சுமந்துவரவும் ஆண்சிங்கம்போலச் சோழநாட்டுக்கு போகும்படியாக புறப்பட்டுத் திருநதியைக்கடந்து அழகிய அருணாசலஸ்தலத்துக்குவந்து கங்கையைத்தரித்த சடையையுடைய பரமசிவனது கோயிலிற்புகுந்தான் கங்காநதியையும் காசிதேசத்தையும் ஆளுகிற.பிரதத்தராசன்.

அரும்பவிழ்மலர்கொண்டருச்சனைபுரியவருணைநாயகர்திருக்கோயில்
விரும்பியுட்புகுந்து பணியுமவ்விடத்தில்விடத்திலுங் கொடியகூர்விழியாள், இரும்பையு முருக்கையு மிசையினொருத்தியிலங்கிழையாருடனிறையால், கரும்பெனுமொழியார்பாடுதல்கேட்டான் கண்டனன்வளைத்தவேள்கரும்பை.

(இ-ள்) காசிதேசத்து ராஜாவாகிய பிரதத்தன் அரும்புகள் மலர்ந்த புஷ்பங்களைக்கொண்டு அருச்சனைபண்ணுகிறதற்காக அருணாசலேசுரர் வீற்றிருக்கும் திருக்கோயிலுள் பத்தியோடுபோய் வந்தனஞ்செய்யும் போது அவ்விடத்தில் விஷத்திலுங்கொடுமை செய்கின்ற கூர்மையாகிய கண்களையுடையவள் இரும்புகூட உருகும்படிச்செய்யும் சங்கீதவித்தையையுடையவளாகி ஒருதாசிப்பெண்பிரகாசிக்கின்ற ஆபரணங்களைத் தரித்த சிலபெண்களோடு நின்று சுவைநிறைந்தபாலும் கரும்பின்ரசம் போன்ற மொழியினாலே பாடுகிறதைக்கேட்டான் அக்ஷணத்திலே தானேமன்மதன் வளைத்தகருப்புவில்லையுங்கண்டான் காமவிகாரங்கொண்டு பிரதத்தராஜன்-எ-று. (௯)

அன்னமோ கிளியோ வமிர்தமோ திருவே வமிர்தமோ வமரருக்களித்த
வன்னமோ கிளியோ யிரதியோ பிரமன்மனத்தினால்வகுத்தமேனகையோ
என்னமோ கமதாய்த்தனது நாட்டினிற்கொண்டேகுவனினைத்தனனதற்கு
முன்னமேகுரங்கு முகமதாயிருந்தான் முறுவலாயினதேவர்முகமும்.

(இ-ள்) காசிதேசத்துப் பிரதத்தராஜனானவன் அந்தத்தாசிப்பெண்ணைப்பார்த்துச்சொல்லுவான் இவள் அன்னமோ கிளியோ தேவாமிர்தமோ இலட்சுமியோ அசுரரைக்கொன்று அமிர்ததத்தை முன்காலத்தில் தேவருக்குக்கொடுத்த அழகாகிய மோகினியோ இரதிதேவியோ பிரமதேவன்மனத்தினால் சிருஷ்டித்தமேனகையோ என்றுநினைந்து மோகத்தோடு தன்னுடையதேசத்துக்கு அந்தப்பெண்ணைக் கொண்டுபோகிறதற்கு நினைந்தான் அந்தநினைப்பு உண்டாகுமுன்னமேதானே குரங்குமுகத்தையுடையவனாயிருந்தான் அதைக்கண்டு எல்லாரும் நகைத்தார்கள் எ-று. (௰)

மந்திரிக்கிழவராசனை வினவி மன்னவனினைத்தவாறதனால்
வந்தவித்துயர்ந்தவிநநிடமலைமேனமருந்தினைப்பணியெனவவனுஞ்
சிந்துரத்துவங்கனவாம்பரியுஞ் செழுமணிச்சிவிகையுந்தேரும்
சந்தனமணியுந் தனத்தினர்பலருந் தமனியக்கோயின்முன்விடுத்தான்,

(இ-ள்) மந்திரிமார்கள் பிரதத்தராசனைப் பார்த்து குரங்குமுகம் வந்ததற்கு காரணங் கேட்டறிந்து கொண்டு அரசனே நீமையாகிய உமது நினைப்பினால் அடைந்த இத்துன்பம் நீங்கும்படி மலைமேல்மருந்தாகிய அருணாசலேசுரரைவணங்கென்றுசொல்ல அந்தஇராஜனும்மலையையொத்தயானைகளும்வேகமாய்தாவுகின்றகுதிரைகளையும் நல்இரதங்களாலிழைக்கப்பட்டிருக்கிற குதிரைகளையும் தேவர்களையும் சந்தனக்குழம்பைப்பூசுகின்றஸ்தனங்களையுடையபெண்களையும் பொற்பிரகாசம்பொருந்திய அந்தக்கோயிலுக்கு முன் காணிக்கையாகக் கொடுத்துவிட்டான்-எ-று. (௰௧)

பன்னருமக்கபூசனைபுரிந்தான்பரமனுமவற்கருள்புரிந்தான், இன்ன
ரமொழியாள் விருப்பினாலடைந்த இலேசவானரமுகமொழித்தான், நன்
னரமுகம்பெற்றிறையுநாட்டணைந்தானதலாலன்பொருட்கவர, உய்வரிய
பாவம்பதின்மடங்காம்பொன்னுதவினறநவிருமென்றுரைத்தான்.

(இ-ள்) பிரதத்தராஜன்சுவாமிக்குச்சொல்லுதற்கரியஅகந்தமருமையான பூசைகள்செய்தான் அப்பொழுதுசுவாமியும் அந்தஇராஜனுக்குக் கிருபைசெய்தார் வீணையினிசைபோலும் வார்த்தையையுடைய பெண்ணைக்கொண்ட ஆசையினாலடைந்த துன்பம்பொருந்திய குரங்கு முகத்தையொழித்தான் நல்லமானிடமுகத்தையடைந்து அந்தஇராஜன் தன்

னுடைய நாட்டுக்குப்போய்ச்சேர்ந்தான் ஆனபடியினாலே அருணாசலே சருடைய பொருளைத்திருடநினைத்ததனாலுண்டாகிய பாவமும் அப்பொருளுக்கும் பதின்மடங்குதிரவியங்கொடுத்ததால்நீங்கிமுன் னுசொன்னார் பிர்ம்மா.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம். (௯௨)

மாதவனையருணகிரிவளமிதுதானெனத்திருவாய்மலர்ந்தானந்தப
போதனையக்கடிபணிந்துன்போதனையான்மகிழ்ந்தனமிப்புவியின்மீதே,
கோதமுடனறிந்துசெய்தபவந்தவிர்ங்கதையினையுங்கூறுகென்றான்,மூ
தறிவாயினனாலுமுகத்தினுமாயிரமுகமாய்மொழியலுற்றான்.

(இ-ள்) மகத்தாகிய தவத்தையுடையசனகரிஷியே அருணாசலத்தினதுவளம் இதுதானென்றுசொன்னார் அந்தப பிர்ம்மாவை அவ்விடத்திலசனகரிஷியானவர் வந்தனஞ்செய்து உம்முடைய போதனையினாலே ஆநந்தத்தையடைந்தேன் இந்தலோகத்தில்குற்றமாக அறிந்துசெய்தபாவநீங்கும்படியானகதையையும்அருள்செய்யவேண்டுமென்றார் பேரறிவுகொண்ட பிரம்மாவானவர்தம்முடையவாய்நான்கும் ஆயிரம்வாயாகச்சொல்லத்தொடங்கினான்-எ-று. (௯௩)

பதினோராவதுபிரதத்தச்சருக்கம்முற்றிற்று

ஆ திருவிருக்கம்-௩௱௮.



உ

பன்னிரண்டாவது,

பாவந்தீர்த்தச்சருக்கம்.

கலிவிருத்தம்.

வாக்கினால்வடிவினால்மனத்தினாலபவங்
தாககினாருணைமாசயிலனேக்கினு

நீக்கினுமொன்பது நிகழ்த்தினன்மறை
தேசுகினன்சிலகதை செப்பலாயினன்.

(இ-ள்) வாக்கினாலும் தேகத்தினாலும் மனத்தினாலும் தாவிஷ்டங்க ளைச்சொல்லியும் செய்தும் நினைத்தும் பாவத்தையடைந்தவர்கள் திருவண்ணாமலையைத் தரிசனஞ்செய்தால் அப்பொழுதே தங்கள் பாவத்தை நீக்குவார்கள் என்றுசொல்ல நான்குவேதங்களையுந் தன்னிடத்தி லுடையபிரம்மாவானவர் சிலகதைகளைச்சொல்லத்தொடங்கினார்-எ-று, (௧)

அறுசீரடியாசிரியவிருத்தம்.

எம்பெரியசபையிடத்தி லிருநான்குவசுக்களுமமர்ந் திருந்தார்முன் னே, தமபெரியதவத்தினையும் புகழினையும்வியந்துரைத்துநகைமையும் நோக்கிக், கும்பமுனிமுதலவர்களிடையிலுமை வியந்துரைத்த கொம்மையசேல, அம்புவியிலிழைத்ததவமனைத்தினையுமவமாகவிடக்கடவதென்றேன்

(இ-ள்) எனதுடையபெரியசபையினிடத்தில் அஷ்டவசுக்களுமமுன்னொருகாலத்திலவர்கிருந்தார்கள் அப்பொழுதவர்கள்தங்களுடைய தபசின்பெருமையையும் அதனால்வந்தகீர்த்தியையும் கொண்டாடிச்சந்தோஷித்தார்கள் அதைப்பார்த்து அகஸ்தியா முதலானரிஷிகளுக்குமுன் னேயுங்களைநீங்களே புகழ்ந்துசொல்லிய கர்வத்தினாலேயுங்களுக்கு பூமியில்செய்ததவமெல்லாம் அவமாகச்செய்துவிடுமென்றுசொன்னேன், (௪)

உற்றபெருந்தவத்தினையுந்தமதறத்தினலத்தினையு முரைத்தபெரு மற்றொருவர்தமையிகழ்ந்தவருந்துயரக்கடன்முழுகிய நிலைமென்றேன், நற்றவர்களவர்களுக்கிரங்கியிது தீருமகாலஞ்சொற்றருளென நவுரைத்தாரினருளாறதீருமங்கடியோதானென்றேன்

(இ-ள்) பெருமைபொருந்திய தமதுடையதவத்தையும் செய்தருமத்தையும் சொன்னவர்களும்மற்றொருவரை யிகழ்ந்து பேசினவர்களும் துக்கசமுத்திரத்தில்முழுகி மறிபட்டுக்கிடப்பார்களென்றேன் பிற்பாடு அவருடைய அஷ்டவசுக்களும் அந்தவார்த்தையைக்கேட்டு மிகவும் இரக்கமாய் எந்தக்காலத்தில்தீரும் அருள்செய்யவேண்டுமென்று கேட்டார்கள் பரமசிவனருளையுங்களுக்கு என்றைக்குக்கிடைக்கின்றதோ அன்றைக்குத்தீருமென்றேன்-எ-று (௫)

சொல்லுதலுமவசுக்களெலா மெனையகன்றுநெடிய கங்கைத்துறையிலேகி, எல்லையிலாநெடுங்காலமிறையைநினைந்தரியதவமியற்றினார்கள் வல்லியபகலொருநாளின்மழவிடைமேலடைந்து தவமவரமேதென்றான் அல்லிமலரவன்கொடுத்த கொடுஞ்சாபக்கடலிலெடுத்தருளென்றார்.

(இ-ள்) அப்படிச்சொன்னவுடனே வசுக்களெல்லாரும என்னுடைய சபையைவிட்டு நெடுந்தூரஞ்செல்லுகின்ற கங்காநதியின்துறையிலேபி

ற்போய அளவில்லாதகாலம் பரமசிவனைநினைத்து அரிதாகியதவத்தைச்செய்தார்கள் பார்வதியை வாமபாகத்தில் வைத்துக்கொண்ட அந்தச்சுவாமியானவர் ஒருநாளிலிளமையுற்றரிஷபவாகனத்திலெழுந்தருளிவந்து நாமுங்களுக்குக்கொடுக்கவேண்டிய வரமென்னவென்றுகேட்க அருள்செயதார அந்தவசுக்கள இதழினையுடையதாமரைமலரிலிருக்கின்றபிரம்மாவாலவர்கொடுத்தகொடியசாபமாகியகடலிலநின்றும் எங்களையெடுத்தருளவேண்டுமென்றார் எ-று. (௪௫)

கருணைமூர்த்தியின்முகமலர்ந்துவசுக்களுட னுமதுபவங்கடக்கவேண்டில, தரணியிலேபொருநகரந்தலேசகரமென்றிலங்குமந்தத் தலத்தின்மீதே, அருணகிரியெனுமலையாயிருக்குமந்தப் பதியணுகி யசலஞ்சூழ்ந்த,வருணதிசைதொடங்கியெட்டுத திசைகளினுமிருந்துதவ மியற்றுமென்றார

(இ-ள்) கிருபாவருஷத்தைப்பொழிகிறமேகமாகிய பரமசிவனுனவர் திருமுகமலர்ந்து அந்தவசுக்களைப்பார்த்து உங்களுடையபாவத்தைநீங்களகடக்கவேண்டினால்பூமியிலதலேசகரமென்று ஒருதிவ்வியஸ்தலமவிளங்குகின்றது அந்தஸ்தலத்தில் அருணாசலமென்று ஒருமலையிருக்கும அந்தஸ்தலத்தையடைந்து அந்தமலையைசூழ்ந்த மேற்குத திக்குதொடங்கியெட்டுத திக்குகளிலுமிருந்துதவஞ்செய்யுங்களென்றருளிச்செய்தார்-எ-று. (௫)

அன்னவயலருணையிலசேரியதவமியற்றிடு மவ்வளவேயுங்கள்.முன்னரழற்கிரியுமெட்டுமுகமாகவிளங்கிய டமூர்த்தியாகு, மன்னுமுங்களருமபவமுங்கவிருமெனவுரைத்துவெள்ளிமலையிற்சோநதான், தனையுடைநதவர்கள்ளலலாந்தனைப்போலவிருக்கவரந்தருதுவானே.

(இ-ள) அன்னபடசிகள்தங்கிய வயல்சூழ்ந்தஅருணாசல ஸ்தலத்திற்குப்போய் நீங்களஅரியதவத்தைசெய்யுங்கள அப்படிச்செய்த அளவிலே அக்கினிசொருபமாய் விளங்கிய ஒப்பற்றஅந்தமலையானதுஉங்களுக்குமுன்பாக எட்டுமுகமாயகாட்சிகொடுக்கும் அப்போது நிலைபெற்றஉங்களுடையபாவமுமநீங்குமென்றுதிருவாய்மலர்ந்து கைலாயத் திறகுயெழுந்தருளினார் தமமிடத்திலடைந்தவர்க ளெல்லாரையுந் தம்மைப்போல உருவத்தையடைந்திருக்க வரமருளிச்செய்கிறபரமசிவன்எ-று.

முந்தவசுரரையுமலர்புரத்தினையுமெரித்தபிரான்மொழிந்தவாறே
அந்தவசுவனைவருஞ்சென் லருணையிலேயரியதவமியற்றினார்க
ளிந்தவசுமதிகழைக்கலழற்கிரியெட்டுருவாகியிருந்ததங்கே
தந்தவசுநிலைபுகழ்ந்துகொடுஞ்சாபகிரிகளெலாந்தள்ளினார்கள்.

(இ-ள்) முன்பு அசுரர்களையும் அவர்கள் வாசஞ்செய்துக்கொண்டிருந்த திரிபுரங்களையும் நகைத்தெரித்த சுவாமியானவர் அருளிச்செய்த பிரகாரமே அந்த எட்டுவசுக்களும்போய் அருணாசலத்தில் அருமையாகிய தவத்தைசெய்தார்கள் இந்தப் பூமியானது தழைக்கும்படி அக்கினிமலை எட்டுமுகமாய் விளங்கி யிருந்தது முன்னேதங்களுடைய தவத்தைப்புகழ்ந்து சொல்லி யதனால் வந்த கொடியசாபமென்று சொல்லப்பட்ட மலையைத்தாண்டிவிட்டார்கள் எ-று. (௭)

பூதலஞ்சூழ்திசைகளெல்லா மிருந்தஷ்டமூர்த்திதனைப்பூசித்தார்க
ளாதலிறும்பழயபடிதமதுபதவிகளையடைந்தருள்பெற்றாக
ளேதமறுமபடிக்கரிய மறைப்பயனெட்டுருவாகி யிருந்தபோதுஞ்
சீதரனும்பதகிரமத் துடனறியான்முடியெனக்குத்தெரிந்திதின்றே.

(இ-ள்) அந்தமலையைச்சூழ்ந்த எட்டுத்திக்கிலு மிருந்தவசுக்கள் அஷ்ட மூர்த்தமாகிய சுவாமியைப் பூசித்தபடியினாலே பழயபடியேதமது பதவிகளைப்பெற்றுக்கொண்டு சுவாமியினது கிருபையும் பெற்றார்கள் குறைநீங்கும்படி அருமையான வேதப்பொருளாகிய அந்த சுவாமியானவர் எட்டுமுகமாயிருந்தபோதும் விஷ்ணுவும் திருவடியைக்கிரமத்துடனே அறியாமற்போனால் எனக்கும் முடிதெரியவில்லை-எ-று. (௮)

சண்முகனையளித்துலைந்துமுகத்தவனெண்வசுக்கள்செயுந்தவத்தினாலே எண்முகமா யிருந்ததுகண்டொருமுகமாயிமையவர்வாழ் தெடுத்தாவென்று, தண்முகநான்குடையபிரான்சனகமுனிக்குரைத்தருளச்சயிலத்தாலே, பண்முகமாழனையமொழித் திலோத்தமைசேர் கதையினையும்பகரலுற்றான்.

(இ-ள்) சிவசுப்பிரமணியரைப்பெற்ற பரமசிவனானவர் எட்டுவசுக்களுஞ் செய்த தபோபலத்தினாலே எட்டுமுகமாயிருந்ததைப் பார்த்துத் தேவர்களெல்லாம் ஒன்றாய்க் கூடிவணங்கிப் பல்லாண்டு கூறினார்களென்று கருணைபொருந்திய நான்குமுகங்களையுடைய பிரமாவானவர் சனகரிஷிக்குச்சொல்லி அருள்புரிகின்ற அந்தத்திருமலையில் யாழினது இசைபோன்ற வார்த்தையையுடைய திலோத்தமை யென்பவள் அந்தக்கதையையுஞ் சொல்லத்தொடங்கினன்-எ-று. (௯)

கலிவிருத்தம்.

தேவர்கோன்முன்னமென் னிடத்திற்சேர்ந்துதன்
பாவமதிலாப்பெரும்பதவிவேண்டியே
யாவருமருந்தவ மியற்றினாரதற்
காவதுசெய்யென வறைந்துபோயினன்.

(இ-ள்) பிரமர் சொல்லுவார் தேவேந்திரன் முன்னே என்னிடத்தில் வந்து தன்னுடைய பரிசுத்தமான பதவியைச் சிந்தித்து எல்லாரும் அருமையான தவத்தைச் செய்கிறார்கள் அந்தத் தவங் குறைவேறுதபடிக்கு ஏதாவது ஒரு விகினத்தைச் செய்யவேண்டுமென்று சொல்லிவிட்டுப்போனான் -எ-று. (௪௦)

இந்திரன்போனபின் னியக்கமங்கைய
ரந்தரமங்கைய ராவகட்டவர்
சுந்தரச்சுடம்புவித தோனகமர்வரை
மந்தர்பூலைச்சிய ரழகுவாரியே.

(இ-ள்) தேவேந்திரன் போனபிற்பாடு யட்சலோகத்துப்பெண்கள் தேவலோகத்துப்பெண்கள் நாகலோகத்துப்பெண்கள் அழகுபொருந்திய கடல்சூழ்ந்தபூலோகத்திலுள்ளபெண்களை மந்தரகிரிபோன்ற முலைகளையுடைய வரையரமகளிர் இவர்களுடைய அழகுஎடுத்துக்கொண்டு.

வருத்தமில் திலோத் தமையென்னுமவஞ்சியை
யுருத்தனனவனியமன் மதிளையோட்டினன்
திருக்ததோவிஞ்சையிற் புவியின்வேட்டுவ
னைக்துபடவழிந்துட லளிப்பதென்னவே.

(இ-ள்) குளவியானது தன்னிடத்திலுள்ள ஒரு சாமார்த்தியவிசேஷத்தினாலே புழுவினது உடலைக்கெடுத்து அதற்குவேறொருதேகத்தைக் கொடுப்பதுபோலத் திலோத்தமையென்னும் பெண்ணை உண்டாக்கினேன் அப்பெண்மீது அதனைமேற்கொண்ட ஆசையால் என்னுடைய வல்லமையையிழந்தேன் ஞானத்திற்செல்லுகின்ற என்னுடைய புத்தியையுந்துரத்திவிட்டேன் எ-று. (௪௧)

மன்மதன் கணையினான் மயங்கிவாடுமென்
றன்மையையறிந்துநான் றனக்குத்தாதையென்
றென்மனம்பொருந்திலா தெனதுகையுறான்
முன்பினின்றொளிககான் முகமுந்தேடினேன்.

(இ-ள்) மன்மதனுடையபாணத்தினாலே மயக்கத்தையடைந்து வாடுகின்றஎன்னுடைய இயல்பையறிந்துதான்தனக்குத்தகப்பனென்றுஎன் கருத்துக்கு ஒவ்வாதவளாகியும் நான்பிடிக்கும்போது என்கைக்கு அகப்படாதவளாகியும் எனக்குமுன்னின்றும் ஓரிடத்தில் தானறியாதபடி ஒளித்துக்கொள்ள நான்குபக்கங்களிலும் அவளைத்தேடினேன் எ-று. ()

அறுசீரடியாசிரியவிருத்தம்.

கன்னிமானுகச்சென்றாள் கலையதாய்த்தொடர்ந்தேன்பேட்டு
வன்னியாய்ப்பறந்தாளசேவல் வடிவமாய்த்தொடர்ந்தேனமங்கை

பின்னையோர் கதியுங்காணுன் பிறங்கலாமருணைநாதன்
றன்னையேதூரக்கண்டான் சரணமென்றுரைத்துசார்ந்தான்.

(இ-ள்) அப்படிநான்தேடி அவளைக்கண்டுபிடிக்கும்போது பிடிக்கிறத
ற்குமுன்னே பெண்மானுகி ஓடினுள் நான் கலைமானுகத்தொடர்ந்தேன்
அதன்பின் பெண்கிளியாய்ப்பறந்தாள் நான் ஆண்கிளியாயப்பறந்து
தொடர்ந்தேன் அந்தத்திலோத்தமையானவள் பிற்பாடு என்கையிலகப்
படாமலிருக்கிறதற்கு வேறொருகதியுங்காணுமல் வருந்தும்போது மலை
யுருவாகிய அருணசலேசுரரைக் கொஞ்சதூரத்திற்கண்டு நீரேதஞ்ச
மென்றுசொல்லி அடைந்தாள்-எ-று. (௰௪)

மாயவல்விடையின்பாகர் விடிவிலாபுடையின்பாகர்
காயமூலானமெய்யர் கானகத்தாடுமையர்
ஆயுமாரணத்தின்சோதி யடைக்கலமென்றவோயா
சேயிளமழலைபோலத் திருச்செவிசாற்றினுளே.

(இ-ள்) மாயஞ்செய்கின்ற விஷ்ணுவாகிய ரிஷபத்தின்மேல் வருகி
ன்றவரோ தோற்றாத இடையினையுடைய பார்வதியையும பாகத்தில்வை
த்துக்கொண்டிருக்கிறவரோ தகிக்கின்ற அக்கினிசொரூபமானவரோ திரு
வாலங்காட்டினிடத்தில் நடனஞ்செய்த சுவாமியே ஆராய்ந்து தேடுகிற
வேதத்தையுடைய சோதியே நானடைக்கலமென்று சகலரையும் ஆளு
கின்ற பரமசிவனது திருசசெவியிற்சொல்லும்படி குழந்தையினதுஇள
மையாகிய குதலைச் சொல்லைப்போலச் சொன்னுள்-எ-று. (௰௫)

முருகலர்குழலினுடன் முறையிடுமுறைக்கேவலையன்
திருவுருவனைத்துந்தூய செவிகளாயிருந்தபோது
விறைவின்மால்வரையைக்கீறி வேட்டுவனுகினுலு
சுருதியுநாயாகத் தோன்றினன்றேகைபாகன்.

(இ-ள்) வாசனைபொருந்திய புஷ்பமாலையணிந்த கூந்தலை யுடைய
திலோர்த்தமையினது முறையிடுதலுக்கு என்சுவாமியினது அழகிய உ
ருவமெல்லாம் செவிகளாலருந்தன அதனுல் சிகரத்தில் மலையைக்கீறி
அதில்நின்றும் தாம் வேடரூபமாகவும் நாலுவேதங்களும் நாய்களாகவு
ம் தோன்றினுர் பார்வதியை யிடதுபாகத்தில வைத்துக்கொண்டபரமசி
வன்-எ-று. (௰௬)

சூடகச்செங்கைபாகன் சிலையொடுதோன்றும்போதில்
வாடியமருங்குலாண்மேன் மயக்கமும்வருத்தந்தீர்த்தே
ஞடியபெருமானம்மை முனியுமென்றஞ்சித்தாழ்ந்தேன்
வேடனைப்பறவைகண்டால் வெருவுமோவெருவுறுதே.

(இ-ள்) வினைபலைப் பளிக்கு கைகளையுடைய பார்வதியை திருப்பக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கிற பரமசிவன் வேடனாகி வில்லைக்கையிலேந்திக் கொண்டு தோன்றியபோது முன்னை கூனங்கு செய்த் சுவாமியானவர் என்னைக் கோபித்துக் கொள்வாரென்று பயந்து அஞ்சுகின்ற இப்பிள்ளையுடைய நிலோத்தமையின் மேலுண்டாகிய மையலும் அதனாலுண்டாகிய வருத்தத்தையுந்தீர்த்து அந்தச் சுவாமியை வணங்கினேன் வேடனைப்பட்சிகண்டால் பயப்படுமோ பயப்படாதோ-எ-று. (௧௨)

வெறமெனும் புலையாடன்னை விதித்தனீ விரும்புந்திமை
கற்பகோடியினுந்தீரா தாயினுங்கருணையாமித்
தற்பரமலைகண்டாயே யாதலாற்றவிர்த்தோம்போவென்
றற்புதன்மொழிந்துமீளப் புகுந்தனனருணைவெற்பில்.

(இ-ள்) மலைக்குகிகொாகிய ஸ்தலத்தையுடைய நிலோத்தமையைப் பார்த்து நீயே விரும்புதலாலுண்டாகிய பாவமானது கற்பகோடிகாலத்திலுந்தீரமாட்டாது ஆனாலும் அருணருவமாகியும் தானேபரமாகியும் உள்ள இக்கமலையை தரிசித்தாயாதலால் அப்படிப்பட்ட பாவத்தைத் தீர்த்துவிட்டோம உனனிடத்திற்குப் போவென்று திருவாய்மலர்ந்து அம்மலைக்குள் சுவாமியானவர் மறைந்து விட்டார்-எ-று. (௰௩)

கலிவிருத்தம்

தன்னையறியாமல்வினை சாருமுடருனுந்
தென்னருணைசேரிலது தீருவதுதிண்ண
மின்னல்வினையறறதனி லெண்ணியதுபெற்றார்
முன்னமுனைரொன்றயன் முனிக்குமொழிகின்றான்.

(இ-ள்) ஒருவனுக்கு அபுத்தி பூருவமாகவந்த பாவமானது அவன் அழகுபொருந்திய அருணைசலத்தை யடைந்தால் தீரும் அது நிச்சயமே முற்காலத்திலும் அநேகர் தஙகளுடைய வினையை நீக்கி அந்தஸ்தலத்தில் தாங்கள் நினைத்த வரத்தைப்பெற்றுக்கொண்டார்களென்று பிரமானவர்சனகரிஷிக்கு ஒருகதைசொல்லுகிறார்-எ-று (௧௪)

கற்பமுடிவாயிருள் பெயர்த்துபுலர்காலத்
தற்பவிருணின்றதுமுன் னளிறையிருலே
சொற்பரவைமாயனுண ராதுதயில்கொள்ளச்
சிற்பரமயோகியர்கள் செம்மலைநினைந்தார்.

(இ-ள்) முற்காலத்திற் பரமசிவனுடைய திருவிளையாட்டினாலே கற்பகாலமானது முடிவுற்று மகத்தாகிய அந்தகாரமானது நீங்கிவெளிச்சமுண்டாகிறகாலத்தில் அந்த அந்தகாரத்திற்கொஞ்சம் நின்ற அக்காலத்தில் இதனையறியாமல் விஷ்ணுவானவர் சமுத்திரத்தில் நித்திரைசெய்

தூக்கொண்டிருக்க மேன்மைபொருந்திய சின்மயமாகிய யோகியர்கள பரமசிவனை நினைத்தார்கள்-எ-று. (உ௰)

அத்தனடியார்கட மாணவமறுக்குந்
வத்தனுருவாகிச் சோதிவடிவானோ
னெத்தலமுமெத்திசையு மெங்கும்வெளியானோ
னுபத்தமெழிந்தமிழுவா வாயவுலகெல்லாம

(இ-ள்) எல்லாச்சீவராசிகளுக்கும் பிதாவாகியும தமதடியார்களுடைய ஆணவமலத்தைக் கெடுக்கின்ற சுத்தராயு மிருக்கின்ற பரமசிவன் நெருப்புமயமாகிய ஒருசோதிரூபத்தை யடைந்தார் எங்கஸ்தலங்களிலும் எதத்திக்குகளிலும்மற்ற எந்தவிடங்களிலும் ஆகாயமே நமக்குருவமாகிய அந்த சுவாமியானவர் அப்போதுசிந்திய பொறிகளாலே உலகமெல்லாம் உண்டானதுகள-எ-று, (உக)

ஊழிமுடிவாயிருள் புலர்ந்துமுணராதே
யாழிமிசையிற்றுயிலுமச்சுதனையெய்தி
வாழியெனயோகிய ரெழுப்புதலுமாயன்
பாழியிலுநின்றதி பயத்துடனெழுநதான்.

(இ-ள) ஊழிகாலமுடிந்து மகத்தாகிய அந்தகாரம் நீங்கியும் அறியாமல் சமுத்திரத்தில் நித்திரைசெய்கின்ற விஷ்ணுவினிடத்தில்வந்து வாழியென்றுசொல்லி யோகியர்கள் எழுப்புதலும அந்த விஷ்ணுவானவர் சர்ப்பசயனத்தில் நின்றும் அதிகபயத்துடனெழுந்திருந்தார-எ-று. ()

வையகமளிக்கமல ரோனையுதவாதே
பையரவின்மிக்கதுயில் கொண்டபரிசாலே
வெய்யபுன்வினைதொழில் விளைந்தனனெனத்துன்
னையுணர்வுமருகியென வையனைநினைகதான

(இ-ள்) உலகத்தையுண்டாக்கும்பொருட்டு பிர்மாவைச் சிருஷ்டிக்காமல் படத்தையுடைய பாம்பின்மேல் நித்திரைசெய்யத தன்மையினாலே வெம்மையாகிய தீவினையைச் சம்பாதித்துக கொண்டேனென்று ஐம்பொறிகளுங்கலங்கி யென்னுடைய ஆண்டவனாகிய சுவாமியைநினைத்தார்-எ-று. (உ௩)

அன்பாகருதிற்கரிமை யாகியெதிாவநதே
துன்பையகல்விக்குமது தூயதொழிலானுன்
வனபடிகவெற்புமிசை மன்னுசுடாபோலே
மின்படருமேனியுடன் வெள்விடையில்வந்தான்

(இ-ள) அடியார்கள நினைத்தால் சீக்கிரத்தில்தானே அவர்களுக்கு எளிதாகத்தோன்றித் துன்பத்தைநீக்குவதே தமக்குப்பரிசுத்தமாகியதொழிலாகக் கொண்ட பரமசிவனானவர் வன்மையாகிய ஸ்படிகமலையினமே

ல் விளங்குகின்ற சோதிபோல வெண்மையாகிய ரிஷபத்தின்மேல் மி ன்போன்ற சிறத்தோடெழுந்தருளிவந்தார்-எ-று. (௨௪)

பொருக்கெனவெழுந்தடி பணிந்தருள்புகழ்ந்தே
யருக்கியமுதற்புரி யருச்சனையினாலே
யுருக்கியென்வினைத்தொட ரொருத்தருள்கியென்று
னொருக்கணிருவாணிவை யெடுத்துமொழிகின்றான்

(இ-ள்) அப்படி பரமசிவன் ரிஷபவாகனத்தில் எழுந்தருளிவந்தவுடனே விஷ்ணுவானவர் சீக்கிரத்தில் எழுந்து திருவடிக்கமலங்களுக்கு வந்தனஞ்செய்து அவருடைய திவ்வியகிருபையைப்புகழ்ந்து அவருக்கு ஆர்க்கிய முதலிய பூசைகளினாலே சுவாமியினுடைய திருவுள்ளத்தை இளகச்செய்து எனக்கு நிந்தையினால் வந்த வினையைநீக்கி அருள்செய்யவேண்டுமென்று எருக்கம்பூமாலையைத் தரிக்கின்ற சுவாமியானவர் இவைகளைச் சொல்லத்தொடங்கினார்-எ-று. (௨௫)

வாசிமகமேமுதன் மகம்பலசெய்தாலும்
பாசமகலாதவினை பற்றறுதலெண்ணிந்
தேசுமிகுதென்றிசை செறிந்தருணைதன்னிற்
பூசைபுரிவிட்டிவினை போகுமுனையென்றான்.

(இ-ள்) ஒருவன் தனக்குண்டாகிய பாசவினையை நீக்கும்படியாக நினைந்து அஸ்வமேதமுதலிய பலயாகங்களைச்செய்தாலும் அதுபோகாது ஆனபடியினாலே சோதிமயமாகிய தென்திக்குத்திசையில் விளங்காநின்ற அருணாசலத்திலிருந்து செய்கிற பூசைசெய்தால் உனைவிட்டுவினையானது போகுமென்றான் பரமசிவன்-எ-று. (௨௬)

நாறுபொழிலண்ணலரு ணாமும்வடிவொன்றே
வேறலவதன்பெருமை வேதமுணராதல்
நீறுபுனையோகியாக ணீவிரபலதொண்ணூற்
றாறுபிரமாவுமி லருச்சனையுரிந்தீர்.

(இ-ள்) வாசனையுடைய சோலைகள்சூழ்ந்த அந்த அருணாசலத்திற்கும் எனக்கும் வடிவம் ஒன்றுதான் பேதமென்று அதனுடையபெருமையைவேதங்கள்கூட அறியாதுகள் விபூதியை முக்கியமாகத்தரிக்கின்ற யோகியாகளும் விஷ்ணுக்களாகிய நீங்களபலரும் தொண்ணூற்றாறுபிரமாக்களும் அந்தஸ்தலத்தில் பூசைசெய்தீர்கள்-எ-று. (௨௭)

முறைமுறையுரோகிணி முலைகளிடையின்மூழ்கா
மற்றவிருபத்தறுவர் வாழ்வையுமறந்தான்
கறைமதிதக்கனுடல்கன் றுறசபித்தான்
அற்றமதியப்பழியி லத்துயரொழித்தான்.

(இ-ள்) சந்திரனானவன் நன்றாகவேலை தீர்ந்த ஆபரணங்களுடைய ரோகிணியினது ஸ்தனங்களினுடைய போகத்தைவிரும்பி மற்றையிருபத்தாறு நாயகிகளுடைய போகவாழ்வுகளையுமறந்துவிட்டான் அதைமுன்சொன்ன இருபத்தேழு பெண்களுக்குத்தகப்பனாகிய தக்கன்கே

ள்விப்பட்டு எல்லாநாயகிகளில் மிகுதும்விருப்பம் வைக்காது ஒருத்தின்மேல் மாத்திரம் வைத்ததனால் அவனுடல் குன்றிபோகக்கடவதென்று சபித்தான் இந்தச்சாபத்தை யடைந்த சந்திரன் அந்த அருணாசலத்தில் வந்து அந்தத்துன்பத்தை நீக்கிக்கொண்டான்-எ-று. (௨௮)

> வினைப்பளவின்முத்தித்தரு நினைகரமூற்றே
> மாக்குறைதவிர்த்திடு மென்றிறைமுகுந்தா
> னறகிரியைநாடியதி யுத்திசையிலன்னலிச்
> சுனைக்கமலவாசமிகு சோணகிரிகண்டான்.

(இ-ள்) நினைத்தமாத்திரத்தில் முத்தியைக்கொடுக்கின்ற அருணாசலமெனகிற அந்தஸ்தலத்திற்குப்போய் மாக்குறையைநீக்கிகொள்வெயன்று சுவாமிமனையந்தார் விஷ்ணுவானவர் அக்கினிவடிவாகிய மலையைதரியானஞ்செய்து அதுவிளக்குந் தெற்குத்திசையையடைந்து சுனையிலிருக்கிற தாமரைபுஷ்பத்தினது வாசனைமிகுந்த அந்தஸ்தலத்தைக்கண்டார்-எ-று. (௨௯)

> ஈசர்வடிவானமலை கண்டினிதிறைஞ்சித்
> தேசுமிகுநன்னகர் செறிந்துமகிழ்வாகி
> வாசவதடத்திடை மடிந்துவலமாகிப்
> பூசனைபுரிந்துவினை போயமலனானான

(இ-ள்) மலையுருவாகிய சுவாமியைத்தரிசித்து அன்போடுபணிந்து பிரகாசம்பொருந்திய அந்தஸ்தலத்திற்போய்ச சந்தோஷத்தையடைந்து இந்திரதீர்த்தத்தில் முழுகிக் கிரிப்பிரதக்ஷணமவந்து பூசைசெய்து கொண்டிரத் தம்முடைய வினைநீங்கிவிஷ்ணுவானவர்பரிசுத்தனானார்,

> மேவியருணைப்பதியின் மிக்கபுகழ்மாயன்
> பாவமகல்வித்திடு பலத்தினையுரைத்துத்
> தாவியுமைபாகமுறை சோணகிரிநாத
> னாவியின்மகிழ்ச்சியையு நான்முகனுரைப்பான்.

. (இ-ள்) மிகுந்த புகழையுடைய விஷ்ணுவானவர் அருணாசலத்திற்குப்போய்த் தம்முடைய பாவத்தைநீக்கி அவர் அடைந்தபலத்தைப் பிர்மாவானவர் சனகரிஷிகளுக்குச்சொல்லிப் பார்வதியானவளை ஒருபுரத்தில் வாசஞ்செய்கின்ற அருணாசலேசுரர் புழுகுபூனையினாலே அடைந்த சந்தோஷத்தையுஞ் சொல்லத்தொடங்கினார்-எ-று. (௩௧)

பன்னிரண்டாவதுபாவந்தீர்த்தச்சருக்கம் முற்றிற்று.

ஆ திருவிருத்தம் - ௩௰௧.

பதின்மூன்றாவது

புளகாதிபச்சருக்கம்.

(*)

எழுசீரடியாசிரியவிருத்தம்.

உருவுபலவோடுபுனைபுளகனெனு மோரசுரனொருபொழுதுநாவிவடிவா, யருணைகிரிமீதுலவியரிபுழுகேகிதறியதிகபலமாயவளிபோா, யெ

றுமையிணையோர்முனிவ ரொருவதொழியதழியவினைபுரிகையாலவரொ லாம், கருணைமலைபோலிமய மலையமலைபாகருறைகயிலைமலையேயெமொ ழிவார.

(இ-ள்) வினைப்படி வெவ்வேறே உருவங்களை யெடுத்துக்கொள்ள வல்லமைபொருந்திய புளகனென்னும் ஓரசுரன் இருக்கான் புழுகுபூனை உருவத்தை அடைந்து வெவ்வியதிறத்தையுடைய அந்தமலையின் மேல் உலாவிக்கொண்டு புழுகைச்சிதறியபடியாலங்காயிலிருலே அதிகபலத் தைப்பெற்றப பூமியிலுள்ளவர்கள் யாவரும் தேவர்கள் முனிவர்க ளெல்லாரும துன்பப்படவும் துஷ்கிருத்தியஞ்செய்வதிலுலேஅவர்களெ ல்லாம இமயபர்வதராசனுடைய புத்திரியாகியபார்வதியையொருபாகத் திலைவைத்தருளிய கருணைமலைபோன்ற பரமசிவன் எழுந்தருளியிருக்கி ன்ற கைலாயகிரிக்குப்போய்ச்சொல்லுவார்கள்-எ-று. (௧)

புளகனெனுமோரசுரன் மிருகவடிவாகியகை புரியவுல கேழுமுழை யேய், வினையறுமாயினாக ளெனவுரை செய்தாரவர்கள் விமலனவி சோடுபுகல்வா, ளெளிவிலமணமாவபுழுகருணைகிரிமீதுதலியதிகபலமா யமருவின, ளெளிதிலழியானவனு மினியகதியேறவுமையிடரலையிலே தவிடுவோம.

(இ-ள்) புளகனெனும ஒருஅரசுனவன் புழுகுபூனை வடிவங்கொ ண்டு ஏழுலகங்களிலும் முறையேபுகுந்து சிவராசிகளையும்வதைசெய்ய தனுலே யெல்லாரும துன்பத்தை யடைந்தார்களென்று வந்தவர்கள சொலலிக்கொள்ளப் பரமசிவனவா அவர்களோடுதிருவாயமலர்ந்தரு ளுவார மணமவீசுகின்ற அவ்விலவாதபுழுகை நமதுருவமாகிய அருணா சலத்திலசிதறியதனுலே அதிகபலத்தை அடைந்திருக்கிறான் அப்படிப் பட்டவன் எளிதில அழியமாட்டான் ஆனபடியினுலே அவனை மோக்ஷ த்தில் அடைவித்து உங்களைதுக்கசமுத்திரத்தில் நின்றும் கரையேற்று வோம-எ-று. (௨)

போவுமெனவோசுரருடோடுபுளகாதிபனைவேதமுதல்கூவியவுண் டாவிமையவாகியவனுவிடுவாயெனவுரைவிலவடிவாயமொழிகுவான் பாவையொருபாககருணைலயபுராதனபராபரவிலோசனகுளா [தே ஏவலெளியோன்மொழியுமாறுதர வெனவிறைவனீரடியின்மீதுதொழு

(இ-ள்) நீங்கள் உங்களிடத்திற்குப் போய்ச்சேருங்களென்றுவிடை கொடுத்தருளியிருக்கிறபுருமையோடுபுளகனென்னும்அந்த அசுரனைவே தமுதலாகிய பரமசிவன் அழைத்து அசுரனேபுழுகு பூனை வடிவத்தைக் கொண்ட உன்பிராணனைவிடுவென்றுசொல்லியஅளவில்அந்த அசுரன் சொல்லுவான்பார்வதியையொருபாகத்திற்கொண்டருளியவரேஇருபை க்கு இடமாயிருக்கின்றவரேபழமையானவரேபராபரமாகியவரேநெற்றி க்கண்ணையுடையவரேஉமக்குஏவல்செயதற்குரியஎளியேன்கேட்டுக்கொ ள்ளுகிறவரத்தைக்கொடுத்தருளுமென்றுசுவாமியினுடையஇரண்டுதி ருவடிகளுக்கும வந்தனஞ்செயதுசொல்லுவான்-எ-று. (௩)

எனதுவினையாயிருக்க புனைதுதிருமேனிபுகவினியபுழுகாகியொருபே ரனைகவிவைமயேயபாவியுமிவிடனுமாவிக்கி புகுதவிவாறியோ ளருளி

னர், மனமுருகியேமுனிவ ரிமையவர்கண்மானிடர்கள் மகிழ்ந்திடியின் மேலணியுமே, அனவரதமான்மத மூமிசலமுமாலயமருவிமெனவே பெருகுமே.

(இ-ள்) சிவனே தக்ஷஉருவமாகிப் புழுகுப்பூனையினது மரபினால்உண்டாகின்ற புழுகானது உம்முடைய திருமேனி ஏறக்கொள்ளவும் அதனால் புழுகணிபிறைவனென்று ஒருநாமத்தை சீரகரித்துக்கொள்ளவும் அருள்செய்யவேண்டுமென்றுவணங்கி ஈவியுயிர் விட்டவுடனே அந்த அசுரன்கதிசேரும்படி சுவாமிஅனுக்கிரகஞ்செய்தார் அப்படி அவனே யிரட்சித்ததைகண்டு முனிவர்களும் தேவர்களும் மனிதர்களும் மலைவருத்தத்தையடைந்து சந்திரனைத்தரித்த சுவாமியினது சிரசில் புழுகாப் புச்சாத்த எப்போதும் அக்கபுழுகுகனாந்து பனிநீரோடு சுவாமியினுடைய ஆலயமானது அருவியையுடையதாகப்பெருகியோடும்-எ-று. ( )

புழுகுபனிநீர்களப மனுவளவதேனுமிறை புனையும்வகையாலுதவினோர், விழிகுளிரநாடியாரிணையடிகளேபரவி வினைவினாகளவிட்டுபெறுவார், குழைமருவுபாணியினர் சரிதமிதுவாகுமெனவுவகையுடனேயுரைசெய்தான், மொழியுமலராலயனே முனிவருடனேசனக முனிபுகழுவினோடுதொழுதான்.

(இ-ள்) புழுகும், பனிநீரும், கூட்டுவர்க்கச்சந்தனமுமாகிய இவைகளில அனுவளவாவது சுவாமியானவர் ஏற்றுக்கொள்ளும்படி செய்தவர்களும், கண்கள் களிப்படையும்படியாகத் தரிசித்துச் சுவாமியினதுதிருவடிகளை வணங்கி அவர்சரித்திரத்தைக்கேட்டவர்களுமமோக்ஷத்தையடைவார்கள் மானைக்கரத்தில வைத்தருளிய பரமசிவனுடைய திவ்ய சரித்திர மிதுவாகுமென்று சந்தோஷமாய் அநந்தபிரமயானவாசொன்னார், அப்படிச்சொல்லியபிர்மாவைச்சனகரிஷியானவா முனிவர்களோடு தோத்திரஞ்செய்துவணங்கினார்-எ-று. (௫)

கலிவிருத்தம்.

அஞ்செழுத்தும்வாழிவாழிபருணைவாழியருணையான்
கஞ்சமுறறசரணம்வாழி கருணைவாழிகருணைபோன்
மஞ்சுபெற்றவானம்வாழி வையமவாழிவையமேற
றஞ்சமுறறநீறும்வாழி சைவம்வாழிவாழியே.

(இ-ள்) பாவங்களைப்போக்குகிறதற்குக் காரணமாயிருக்கின்றபஞ்சாக்ஷரமானது வாழ்கவாழ்க, அருணாஸ்தலம்வாழ்க, அருணாசலேசுரருடைய தாமரைமலர்போன்றதிருவடிகள்வாழ்க, அந்தசுவாமியினுடைய கிருபையானதுவாழ்க, அக்கருணைபோன்ற அழகாகிய மேகவருஷம்வாழ்க, பூலோகம் வாழ்க, பூமியில் உயிர்களுக்குப் பற்றுக்கோடாகிய திருநீறுவாழ்க, சைவசமயமானதுவாழ்க-எ-று. (௬)

ஞானம்வாழிநன்மைவாழி நாயேராஜநீதிசேர்
தானம்வாழிதர்மம்வாழி சரதவேதமாகமங்
கானம்வாழிகலைவாழி கற்றறிந்தகேள்வியர்
பானபேர்களவாழியீச னடியாவாழிவாழியே.

(இ-ள்) ஞானம்வாழ்க, நன்மையானது வாழ்க, நாடும் இராசனும் அவனுக்குரியநீதியும், கீர்த்தியும், தானமும்வாழ்க, தருமமும்வாழ்க, உண்மையாகியவேதமும், ஆகமங்களும்வாழ்க, சங்கீதம்வாழ்க, மற்றவித்தைகளும்வாழ்க, அவைகளைக்கற்றறிந்தும், கேள்விப்பட்டும், யாவரிடத்தும் அன்புஉண்டானவர்கள்வாழ்க, பரமசிவனது அடியார்கள்வாழ்க வாக-எ-று. (எ)

அறுசீரடியாசிரிய விருத்தம்.

இக்கதைபடித்தோர்கேட்டோரெழுதினோரெழுதிவைத்தோர்
மைக்கடல்சூழ்ந்தவிர்ந்த வையகமுழுதுங்காத்துத்
தக்கசந்தானபோக சௌக்கியந்தழையவாழ்ந்து
இக்கருணேசரன்பாற் சிவபதம்பெறுவர்தாமே.

(இ-ள்) அந்தஅருணசலத்தின் மான்மியத்தைப் படித்தவர்களும் கேட்டவர்களும் எழுதினவர்களும் எழுதிவைத்துக் கொண்டவர்களும் கரியகடல்சூழ்ந்த பூமிமுழுதும காத்துத் தகுந்த புத்திரசம்பத்தும் போகசௌக்கியமும் தழையும்படியாக வாழ்ந்து யாவருக்கும் ஆதாரமாகிய அருணசலேசுரர்கிருபையினாலேசிவபதம் அடைவார்கள்-எ-று.()

பதின்மூன்றாவது

புளகாதிபசருக்கம்—முற்றிற்று.

அருணாசலபுராணம்

மூலமும்-உரையும்.

முற்றிற்று.

பாயிரம்உள்பட ௧௩ சருக்கம் பதினான்குக்கும்
கூடிய திருவிருத்தம—௬௪௭.

திருச்சிற்றம்பலம்.